தமிழ்க் காப்பியங்களில் பெண்ணியம்

(ஐம்பெருங்காப்பியங்கள்)

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக முனைவர் (Ph.D.,)
பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

திரு. **அ. சங்கர்தாஸ்**

(பதிவு எண் : 524)

நெறியாளர்

முனைவர். **மு. பாண்டி**

தமிழ்த்துறைத் தலைவர்,

தமிழ்த்துறை

அழகப்பா பல்கலைக்கழகம்,

காரைக்குடி-3

தமிழ்த்துறை

அழகப்பா பல்கலைக் கழகம்

காரைக்குடி - 3.

நவம்பர் 2006

முனைவர் மு. பாண்டி, எம்.ஏ.,(தமிழ்), எம்.ஏ.,(இதழியல்), எம்.ஃபில்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத்தலைவர்,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி-630 003.

நாள்: 30.11.2006

நெறியாளர் சான்றிதழ்

"**தமிழ்க் காப்பியங்களில் பெண்ணியம்** (ஐம்பெருங் காப்பியங்கள்)" என்னும் தலைப்பில் திரு.அ. சங்கர்தாஸ் அவர்கள் முனைவர் **(Ph.D.,)** பட்டத்திற்காகச் செய்த இந்த ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பெற்றது என்றும், இந்த ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதி கூறுகிறேன்.

(முனைவர்.மு. பாண்டி)
நெறியாளர்

துறைத்தலைவர்
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி-630 003

அ.சங்கர்தாஸ், எம்.ஏ., பி.எட்., எம்.ஃபி ல்,.
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி-630 003.

நாள்: 30.11.2006

ஆய்வாளர் உறுதிமொழி

“தமிழ்க் காப்பியங்களில் பெண்ணியம் (ஐம்பெருங் காப்பியங்கள்)” என்னும் தலைப்பில் முனைவர் (**Ph.D.,**) பட்டத்திற்காக எழுதப் பெற்ற இவ்வாய்வேடு எனது சொந்த முயற்சியால் உருவானதாகும். இவ்வாய்வேடு இதற்குமுன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

அ சங்கர்தாஸ்
(அ. சங்கர்தாஸ்)
ஆய்வாளர்

உறுதிக் கையொப்பம்

முனைவர் மு. பாண்டி, எம்.ஏ.,(தமிழ்), எம்.ஏ.,(இதழியல்), எம்.ஃபில்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி-630 003.

நன்றியுரை

“தமிழ்க் காப்பியங்களில் பெண்ணியம் (ஐம்பெருங் காப்பியங்கள்)” என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ள எனக்கு அனுமதி வழங்கிய பல்கலைக்கழகத் துணைவேந்தர், பதிவாளர் ஆகியோருக்கும் என் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வாளராக என்னை ஏற்று இந்த ஆய்வு செம்மையாக நிகழ்ந்தேற எனக்கு இன்முகத்துடனும், இனிய சொற்களுடனும் நன்னெறி காட்டிப் பல்லாற்றானும் உதவிகள் புரிந்த தமிழ்த்துறைத்தலைவர், எனது ஆய்வு நெறியாளர் **முனைவர் மு.பாண்டி** அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னை வளர்த்து ஆளாக்கிப் படிக்க வைத்த என் மதிப்பிற்கும், வணக்கத்திற்கும் உரிய என் பெற்றோர் திருவடிகளைப் பணிந்து இவ்வாய்வேட்டு மலரைக் காணிக்கையாக்குகிறேன்.

அணுகிய போதெல்லாம் இன்முகத்துடன் ஆய்வு குறித்த சிந்தனைகளை வழங்கிய அன்புத்தம்பி **முனைவர் இரா.குமார்** அவர்களுக்கும், ஆய்வு முன்னேற்றம் குறித்து அவ்வப்போது வினவி என்பால் அன்பு பாராட்டி வருகின்ற தங்கை **முனைவர் க.அமுதா, ஆய்வாளர்கள் கரு.மணிமேகலை, தம்பி சி.சிதம்பரம், முத்துக்கருப்பன்** ஆகியோருக்கும் நன்றியுடையேன்.

ஆய்வு நிறைவேற எனக்குப் பல்லாற்றானும் உதவி புரிந்த எனது அன்பு நண்பன் **தங்கமணிக்கும்**, என் வாழ்க்கைத் துணைவியார் **ச.செல்விக்கும், என் மகள்கள் ச.ராஜி, ச.சூரியா** ஆகியோருக்கும், தங்கை **இரா. குணவதி**, மைத்துனன் **க.பிரேம்குமார், ச.அன்புநாதன்** அவர்களுக்கும் என் பணிவான நன்றிகள் பல.

இவ்வாய்வேட்டைச் செம்மையாகவும், நேர்த்தியாகவும் கணினியில் அச்சாக்கம் செய்த **காரைக்குடி நிதிஷ்பிரபா கம்ப்யூட்டர்ஸ்** நிறுவனத்தாருக்கும், கட்டமைப்புச் செய்த ரவி அச்சகத்தாருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அ.சங்கர்தாஸ்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

உ. ஆ.		உரையாசிரியர்
கழக வெளியீடு	-	திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
களவு	-	களவியல்
கற்பு	-	கற்பியல்
தொ.ஆ	-	தொகுப்பு ஆசிரியர்
ப.ஆ.	-	பதிப்பு ஆசிரியர்
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
பொருள்.	-	பொருளதிகாரம்
மேலது	-	மேலே சொல்லப்பட்ட நூல்
நூ.	-	நூற்பா

பொருளடக்கம்

முன்னுரை

முன்னுரை

காலந்தோறும் பெண்களின் நிலைகளை அவ்வவ்காலங்களில் எழுந்த இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. சங்க காலத்தில் பெண்கள் கல்வியறிவில் மேம்பட்டு விளங்கியதையும், ஆண்களுக்கு நிகராக விளங்கியதையும் அக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. இக்காலகட்டத்தை அடுத்துத் தோற்றம் பெற்ற சிலப்பதிகாரம், மணிமேகலை எனும் இரட்டைக் காப்பியங்களிலும், பிற்கால சோழர் காலத்திலும் விளைந்த சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய மூன்று காப்பியங்களிலும் பெண்ணியக் கருத்தாக்கங்கள் மிகுதியாகப் பேசப்பட்டுள்ளன. அவ்வவ் இலக்கியங்கள் எழுந்த காலச் சூழலுக்கேற்ப பெண்மையின் பண்புகளையும் வரையறுப்பது இன்றியமையாததாகும். பேரரசுகளின் காலத்தில் உருவாக்கம்பெற்ற காப்பிய இலக்கிய வகைகளுள் மையப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனும் நாற்பொருளைச் சுட்ட' பெண்ணியச் சிந்தனைகளும் பின்புலமாக எடுத்தாளப்பட்டுள்ளன. இவற்றைத் தற்காலப் பெண்ணியக் கோட்பாடுகளினடிப்படையில் கண்டறிவதன் வழி காப்பியக் காலப்பெண்ணியச் சிந்தனைகளை வரையறை செய்ய இயலும்.

ஆய்வுத் தலைப்பு

"***தமிழ்க் காப்பியங்களில் பெண்ணியம்***" **(Feminism in Tamil Kappiyam)** என்பது இவ்வாய்வின் தலைப்பாகும்.

ஆய்வின் நோக்கம்

தமிழிலக்கிய வரலாற்றில் மக்கள் வாழ்வியலை விரிவாகச் சுட்டும் இலக்கிய வகை காப்பியமாகும். தன்னிகரில்லாத்தலைவனின் பண்புகளை வெளிக்காட்டும் பொழுது அவனின் உற்ற துணையான பெண்ணின் இயல்புகளும், பெண்களுக்கிருந்த சமூக மதிப்புகளும் இடம் பெறுவது தவிர்க்கவியலாதது. கல்வி, நவீன வேலை வாய்ப்புகளால் வாய்க்கப் பெற்ற பணிச்சூழல், இவற்றால் கிட்டிய பொருளாதாரச் சுதந்திரம், மாறுபட்ட சமூகச் சூழல்களால் எழுந்த சிந்தனைகள் போன்றவற்றால் பெண்கள் நிலை மேம்பட்டு வருகிறது. தற்காலத் தமிழிலக்கியச் சூழலில் பெண்ணியம், தலித்தியம் எனும் கருத்தாடல்கள் விவாதப் பொருள்களாகவுள்ளன. பேரரசுகளின் வரலாறும், பக்திச் சிந்தனைகளும், இலக்கிய வளமையும் கொண்ட இருவேறு அரசுகளின் காலக்கட்டங்களில் எழுந்த காப்பியங்களில் பெண்ணியச் சிந்தனைகளை ஒப்பிட்டுக் காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வின் மூலங்கள்

தமிழிலக்கிய வகைமைகளுள் ஐம்பெருங்காப்பியங்களாக விளங்கும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய நூல்கள் இவ்வாய்வுக்குரிய முதன்மை மூலங்களாகும். இவ்வாய்விற்கு உரையளவில் துணை நின்ற மூலங்களாக,

- **பழைய குறிப்புரைகள்**
- **அடியார்க்கு நல்லார் உரை**
- **உ.வே.சாமிநாதையர்**
- **புலவர் சோமசுந்தரனார்**

ஆகியவை அமைகின்றன. காப்பியத் திறனாய்வு நூல்கள், கட்டுரைகள், இதழ்கள், அகராதிகள், வாழ்வியற் களஞ்சியங்கள் போன்றவை துணைமைச் சான்றாதாரங்களாகும்.

ஆய்வு அணுகுமுறைகள்

ஆய்வின் நிறைவிற்கும், சிறப்பிற்கும் முதற் காரணமாய் அமைவன, அதனை மேற்கொள்ளப் பயன்படுத்தும் ஆய்வு அணுகுமுறைகளாகும் **(Research Methodology).** காப்பியங்களில் பெண்ணியக் கூறுகளைப் பகுத்தாயும் நிலையில் பகுப்பாய்வு அணுகுமுறையும் **(Analytical Approach),** பெண்களின் பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி விளக்கும் சூழலில் விளக்கவியல் அணுகுமுறையும்**(Descriptive Approach),** காப்பியக் காலச் சமுதாயத்தில் பெண்ணியச் சிந்தனைகளைக் காணும் நிலையில் பெண்ணிய அணுகுமுறையும் **(Feministic Approach)** இவ்வாய்விற்குரிய அணுகுமுறைகளாகும்.

முன்னைய ஆய்வுகள்

காப்பியங்களையும், பெண்ணியத்தையும் வைத்துப் பல்வேறு ஆய்வுகள் இதுகாறும் நிகழ்ந்துள்ளன.

பெண்ணியம் (இரா.பிரேமா), பெண்ணிய அணுகுமுறைகள் (இரா.பிரேமா), பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் (முத்துச் சிதம்பரம்), கண்ணகி (மு.வரதராசன்), மாதவி (மு.வரதராசன்), சிலம்போ சிலம்பு, துறவு தந்த காப்பியம், சிலம்பும் சிந்தாமணியும் போன்றவைகளும் தமிழ்க் காப்பியங்களைத் தனித்தும் கோட்பாடுளைப் புகுத்தியும் இளம் முனைவர்

மற்றும் முனைவர்பட்ட ஆய்வுகள் பல நிகழ்ந்துள்ளன. அ. பாண்டுரங்கனின் காப்பிய நோக்கில் கம்பராமாயணம் எனும் ஆய்வும், மு. சுதா அவர்களின் வால்மீகியும் கம்பராமாயணமும் ஒப்பீடு என்ற ஆய்வும் இவ்வாய்வுக்குரிய முன் ஆய்வுகளாக அமைகின்றன.

ஆய்வுப் பகுப்பு

"**தமிழ்க் காப்பியங்களில் பெண்ணியம்**" எனும் இவ்வாய்வானது முன்னுரை, முடிவுரை நீங்கலாகக் கீழ்க்கண்ட நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. அவை,

1. பெண்ணியம் - சொற்பொருள் விளக்கம்
2. பெண் தலைமை மாந்தர்கள்
3. பெண் துணைமை மாந்தர்கள்
4. அறக்கோட்பாடுகளும் பெண்ணியமும்

என்பனவாகும்.

இயல் விளக்கங்கள்

'**பெண்ணியம்- சொற்பொருள் விளக்கம்**' என்னும் முதலாமியலில் பெண்ணியம் சொற்பொருள் விளக்கம், மேல்நாட்டார்களின் பெண்ணியச் சிந்தனைகள், பெண்ணியக் கோட்பாடுகள், தமிழ் இலக்கியங்களில் பெண்ணிய நிலை, இக்காலப் படைப்பாளர்கள் மற்றும் திறனாய்வாளர்களின் பெண்ணியச் சிந்தனைகள் போன்றவை தலைப்பைப் புரிதல் எனும் நிலையில் ஆய்வின் தொடக்க நிலையாக இடம்பெற்றுள்ளன.

'***பெண் தலைமை மாந்தர்கள்***' என்பது இரண்டாமியலாகும். இதில் பெண் தலைமை மாந்தர்களின் பண்புகள், சமூக மதிப்புகள், காதலுணர்வு, கற்புநெறி, விருந்தோம்பல் போன்றவை விளக்கப்படுகின்றன. சமூகத்தின் இயல்புகளுக்கேற்ப பெண்ணியத்தின் போக்கும், யாங்ஙனம் மேம்பாடடைந்துள்ளது என்பதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆண்களின்றும் பெண்கள் அக்காலச் சமூகத்தில் எவ்வெவ் வகையில் மேம்பட்டிருந்தார்கள் என்பதையும் இவ்வியல் சுட்டுகிறது.

'***பெண் துணைமை மாந்தர்கள்***' என்பது மூன்றாவது இயலாகும். பெண் துணை மாந்தர்கள் தலைமை மாந்தருக்குத் துணைநிற்பதும், ஏனைய சமூகப் பெண்களுக்குத் துணை நிற்பதும் விளக்கப்பட்டுள்ளன. துணைமாந்தர்களின் குணநலன்கள் தனித்தனியே சுட்டப்பட்டுள்ளன. துணைமை மாந்தர்களின் வழி காப்பியங்களில் பெண்ணியச் சிந்தனைகள் வெளிப்படுவதும் இங்குத் தெளிவுபடுத்தப் பெற்றுள்ளது.

அறம் வலியுறுத்தல் காப்பியத்தின் மைய நோக்காகும். இவ்வறத்தைக் காப்பியங்களில் பெண்களின் வாயிலாக எவ்வாறு எடுத்துக்காட்டுகின்றனர் என்பது '***அறக்கோட்பாடுகளும் பெண்ணியமும்***' என்ற நான்காமியலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அறப்பண்பினை வளர்க்கப் பெண்கள் எவ்வாறு துணை நின்றனர் என்பதையும், அந்நெறியினைத் தழைத்தோங்கச் செய்ததையும், அதனால் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியதையும் விளக்கப்பட்டுள்ளது. ஆண்களைவிடப் பெண்கள் இந்நெறி நின்று சிறந்துள்ளதையும், அதனால் பெண்மையின் பண்பு உயிர்ப்புப் பெற்றதையும் இவ்வியல் உணர்த்துகிறது.

ஒவ்வோர் இயலின் இறுதியிலும் இயல் கருத்துக்கள் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. அவற்றில் இன்றியமையாதன முடிவுரையில் கூறப்பட்டுள்ளன.

ஒவ்வோர் இயலுக்குப் பின்னரும் சான்றெண் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆய்வேட்டின் இறுதியில் ஆய்வுக்குத் துணை செய்த நூல்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது.

இயல் - 1

பெண்ணியம் சொற்பொருள் விளக்கம்

இயல் - 1

பெண்ணியம் சொற் பொருள் விளக்கம்

மனித எண்ணத்தை வெளியிடுவதற்குரிய கருவியே மொழியாகும். இம்மொழி அமைப்பானது நாட்டிற்கு நாடு வேறுபட்டு அமைகின்றது. மொழியமைப்பால் தமிழ்மொழி தனிப்பெரும் சிறப்புப் பெறுகிறது. ஒவ்வொரு மொழியிலும் பல்வேறு இலக்கியங்கள் காலச்சூழலுக்குத்தக எழுந்துள்ளன. அவை பாடுபொருள் நிலையில் வேறுபட்டும் விளங்குகின்றன. பாடுபொருள் நிலையில் வேறுபட்டு அமையினும், அவை ஆண்,பெண் ஆகிய இருவரின் உணர்வுகளையே பிரதிபலிக்கின்றன. அவ்விருவருள் பெண் வாழ்வில் உயிர்ப்பாகத் திகழ்கிறாள். ஆண் பெண்ணின் இணைவே குடும்பம்.

பெண் இல்லாத வாழ்க்கை மாலுமி இல்லாத மரக்கலம் போன்றதாகும். சமுதாயத்தில் சரிபாதியாகத் திகழும் பெண்கள் காலங்காலமாகச் சமுதாயத் தாக்குதலுக்கு ஆட்பட்டு, உரிமை இழந்து கவைபடு நெஞ்சத்துக்குள்ளாகியுள்ளனர். இந்நிலைகளிலிருந்து மீள விளைந்த பெண்கள் ஏற்படுத்திய கருத்தாக்கமே **பெண்ணியம்** என்பதாகும். இப்பெண்ணியத்தின் தோற்றம், சொற்பொருள் விளக்கம், பெண்ணிய வகைகள், கோட்பாடுகள் நோக்கங்கள், பெண்ணிய இலக்கியத் தத்துவம், பல்வேறு நாடுகளில் பெண்ணியத்தின் நிலைப்பங்கு ஆகியன குறித்து விளக்கிக் கூறுவதே இவ்வியலின் நோக்கமாகும். இவை பெண்ணியம் பற்றிய புரிதலோடு ஆய்வின் உள்ளே செல்லத் துணை நிற்கும்.

பெண்ணியம் சொற்பொருள் விளக்கம்

'Feminism' என்ற ஆங்கிலச் சொல் 'Femina' என்ற இலத்தின் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். 'Femina' என்ற சொல்லுக்குப் பெண்ணின் குணாதிசியங்களைக் கொண்டுள்ளது (heaving the Qualities of Female) என்பது பொருளாகும். இச்சொல் முதலில் பாலியல் குணாதிசியங்களைக் குறிப்பிடவே வழங்கப்பட்டுள்ளது. பின் பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது.

பெண்ணியம் உலகலாவியது. உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் மனித குலத்திலும் ஒவ்வொரு கால கட்டத்திலும் பெண்களின் முன்னேற்றத்தை விமர்சிக்க ஏற்பட்டது. குறிப்பாகப் பெண்களின் சமத்துவத்தையும், முன்னேற்றத்தையும் வலியுறுத்துகிறது. 'Feminism' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு முன்பு 'Womanism' என்ற ஆங்கிலச் சொல் அதே பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

1889 - ஆம் ஆண்டு வரை 'Womanism' என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சனைகளையும், அதனடிப்படையில் போராட்டத்தையும் உணர்த்தப் பயன்படுத்தப்பட்டது.

1890 - ஆம் ஆண்டு 'Womanism' என்ற சொல்லை விடுத்து 'Feminism' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. 1984 - ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் முதன் முதலில் இச்சொல் எடுத்தாளப்பட்டது. 'Feminism' என்ற சொல்லுக்கு அர்த்தம் ஏற்படுத்திக் கொடுத்தவர் ரே ஸ்ரேசே (Ray Strachey) என்ற பெண்மணியாவார்.

சமூகவியல் நோக்கில் 'Feminism' என்ற சொல் "பெண்ணிலையாக்கம், பெண்விடுதலை இயக்கங்கள், பெண் விடுதலை வாதம் ஆகிய பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது"[1] என்பர்.

" 'Feminism' என்ற சொல்லுக்குத் தமிழில் பெண்நிலை வாதம் என்பர். அறிவியல் உலகில் பல்வேறு துறைகளில் முன்னேறும் துடிப்பான பெண்களின் வளர்ச்சி நிலையைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பெண்நிலை வாதம் என்ற சொல் பெண்களை விவாத நோக்கில் பார்க்கிறது"[2] என்பர்.

பெண்ணியம் விளக்கம்

பெண்கள் தங்கள் நிலையிலிருந்து மாறி தங்களுடைய தேவைகளை, உரிமைகளைப் பெற ஏற்படுத்திய ஓர் அமைப்பே 'பெண்ணியம்' என்பதாகும். அது குறித்து ஆக்ஸ்போர்டு அகராதி "பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது (adunoeay of the clains of women)"[3] என்று விளக்கம் தருகிறது. "பெண்ணியம் என்ற கோட்பாடு பெண்களை நவீன மயமாக்கும் சிந்தனையின் எழுச்சியாகும்"[4] என்பர் இரா.பிரேமா.

பெண்ணியம் என்பது "பெண்கள் மீதான வரலாறு. பெண்கள் மீதான ஒழுங்கு முறையின் பல்வேறு பரிணாமங்கள் அதற்கான தீர்வுகள், அதை அடைவதற்கான வழிமுறைகள் இவற்றை ஆய்வதாகும்"[5] என்கிறார் சரசுவதி வேணுகோபால்.

சரளா இராஜகோபாலன் பெண்மை குறித்து "பெண் எந்த ஆணுக்கும் நிகரானவளே. எந்த நிலையிலும் எந்தக் காலத்திலும் அவள்

அடக்கி வைக்கப்படக் கூடாது, தனிமைப்படுத்தி வைக்கக்கூடாது, சார்பு நிலைப்படுத்தக் கூடாது"[6] என விளக்கம் தருகிறார்.

"பெண்ணியம் ஒரு சமூகக் கருத்தாக்கம். இது குறுகிய காலத்திற்குள் சமூக அறிவியலின் அனைத்துத் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், மறுபரிசீலனைக்குட்படுத்தத் தூண்டுகின்ற எழுச்சி மிகுந்த ஆற்றலாகப் பரிணமித்து வருகிறது"[7]என்பர் தி.கமலி.

தமிழகத்தில் பெண் விடுதலைக்காக முதன்முதலில் குரல் கொடுத்தவர் பாரதியே ஆவார். அவர் கவிதைகளில் பெண்மை சிறக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறார். அவர் "துன்பந் தீர்வது பெண்மையினாலடா"[8] என முழங்குகிறார்.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னல எந்த
வகையிலும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வோம் இந்த நாட்டிலே"[9]

என்ற அடிகள் பெண்மை நலத்தை உயர்வு பெறச் செய்யும். ஆண்கள், பெண்களைத் தங்களுக்கு இணையாகக் கருதிடல் வேண்டும். அதனால் நாடு உயர்வு நிலை எய்தும் என்ற நல்லெண்ணத்தை ஆண்களின் மனத்திடை உணர்த்துகின்றார்.

பாரதிக்கு அடுத்த நிலையில் பெண்களுக்காகக் குரல் கொடுத்தவர்களுள் பாரதிதாசன் குறிப்பிடத்தக்கவர். அவர்,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திரு நாட்டில்

மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"[10]

எனப் பெண்ணியச் சிந்தனையை முன்வைக்கிறார்.

பெண்ணியம் குறித்துப் பல்வேறு விளக்கங்கள் அறிஞர்களால் கூறப்பட்டாலும் அவை பெண் விடுதலையையே மையமிட்டு அமைகின்றன.

பெண்ணியத்தின் தோற்றம்

பெண்ணியச் சிந்தனை மனிதனின் பகுத்தறிவுத் தன்மையை மறுபரிசீலனைக்கு உட்படுத்திப் பார்க்க முயல்கிறது. அதன் வாயிலாக மரபு சார்ந்த சிலவற்றைப் புறந்தள்ளிப் புதிய கோட்பாடுகள் உருவாகின்றன. அவற்றுள் பெண்ணியச் சிந்தனையும் ஒன்று. அது கி.பி 18 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது. அக்கருத்தை "18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியச் சமுதாயத்தில் சில மாற்றங்கள் தோன்றின. அம்மாற்றத்தின் விளைவாகப் பெண்ணியம் தோன்றியது. இதற்கு அடிப்படையானவை புதுமைக் கருத்துக்கள். இப்புதுமைக் கருத்துக்களைப் பகுத்தளித்து தெரியும் காலம் என்று அழைக்கின்றனர். உண்மைக்குப் புறம்பானவைகளாகக் கருதப்பட சமத்துவம், தனிமனித சுதந்திரம், குடியாட்சி எல்லோருக்கும் ஒரே நியதி என்ற புதிய சமூக மதிப்புகள் உருவாகத் தொடங்கின"[11] என்ற கருத்து வலியுறுத்தும்.

18 - ஆம் நூற்றாண்டில் சமதர்மச் சமுதாய நோக்கிலும், புதுமையை விரும்பும் போக்கிலும் தனி மனித சுதந்திரத்தைப் போற்றும் நிலையிலும் பெண்ணியச் சிந்தனை தோன்றி வளர்ந்தது எனக் கருத இடமுண்டு.

'Feminism' என்ற ஆங்கிலச்சொல் கி.பி - 19 ஆம் நூற்றாண்டில் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது. 18 - ஆம் நூற்றாண்டிலேயே சில இடங்களில் பெண்ணியச் சிந்தனைகள் எழுச்சி பெற்றிருந்தது என்றாலும் பெண்ணியம் ஒரு தனிக் கோட்பாடாக வலுப்பெற்றது கி.பி 19 ஆம் நூற்றாண்டில் தான். இக்கோட்பாட்டின் தோற்றம் பற்றி இருவேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன.

"ஆண் ஆதிக்கத்திற்கு எதிராகவும், பெண் ஒழுங்கு முறைக்கு எதிராகவும் குரல் எழுப்பப்பட்டது. இது தான் பெண்ணியத்தின் வேர் என்றும் இதிலிருந்து தான் பின்பு பெண்ணியம் ஒரு தனிக் கோட்பாடாக வலுப்பெற்றது"[12] என்பர்.

"19 - ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலை நாடுகளில் பகுத்தறிவின் அடிப்படையில் ஆண்களுக்குச் சமமான உரிமைகள் வேண்டிப் பெண்கள் எழுப்பிய போராட்டம் மூலம் தோற்றம் பெற்றது"[13] என்கிறார். இரா.பிரேமா. இக் கூற்றுகளின் படி பெண்கள் தங்கள் மீது சுமத்தப்படுகின்ற அடக்கு முறைகளுக்கு எதிராக தீர்க்கமாக எழுப்பிய குரல்களே பெண்ணியத் தோற்றத்திற்கு வழிவகுத்தன.

மேலைநாட்டார் கூற்று

பெண்ணியம் என்பது திடீரென்று தோன்றி வளர்ந்த இயக்கம் அன்று. இவ்வியக்கத்தைச் சீர்பட உருவாக்க அயராது உழைத்தவர்களுள் மேரி வோல்ஸ்டன் கிராப்ட், ஜான் ஸ்டுவர்ட்மில், ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

மேரி வோல்ஸ்டன் கிராப்ட் :

பெண்ணியக் கோட்பாட்டாளர்களிடையே காலத்தால் மூத்தவர் மேரி வோல்ஸ்டன் கிராப்ட் என்ற அம்மையார். இவர் 18 - ஆம் நூற்றாண்டிலேயே பெண் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர். கி.பி. 1792இல் 'பெண்ணுரிமைக் கொள்கை' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

பெண்ணியம் சரியாகப் போற்றப்பட வேண்டுமென்றால் "பெண்கள் படிப்பறிவு பெறுவதினால் தகுதியானவர்களாகிறார்கள். தகுதியானவர்களாவதால் நற்குணமுடையவர்களாகிறார்கள். எனவே சமூகம் அனைத்துமே மகிழ்ச்சியாக, நிறைவாக வாழமுடியும். சமூகத்தில் போராட்டத்திற்கு இடம் இருக்காது"[14] என்றார்.

"சமூகத்தில் பெண்கள் நியாயத்திற்குப் புறம்பாக நடத்தப்படுகின்றார்கள். கல்வியின் மட்டுமே இப்போக்கைச் சீர்செய்ய முடியும்"[15] எனக் கூறுகிறார்.

வாழ்ந்த போது போற்றப்படாத இவர், பின் நாட்களில் பெண்ணிய வாதிகளால் போற்றப்பட்டார். மதிக்கப்பட்டார். இவரது கருத்துக்கள் பெண்ணிய இயக்கத்திற்கு முன்னோடியாக அமைந்தன.

ஜான்ஸ்டுவர்ட் மில் :

ஜேம்ஸ் மில் என்ற தத்துவ ஞானியின் மகனான ஜான்ஸ்டுவர்ட் மில் ஆங்கிலத் தத்துவ ஞானியாவார். பெண்ணியத்தை, பெண்ணடிமைத்தனத்தை "ஆண்களின் அரசியல் பங்கே காரணம் என்றும் கருதும் இவர் குடும்ப அமைப்பில் காணப்படும் ஆணாதிக்கத்தை ஒடுக்க வேண்டும் என்றும் அப்படி ஒழித்தால்தான் அதனை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தை மாற்ற முடியும்"[16] என்று கருத்துரைத்துள்ளார். இவரின் கொள்கையைப் பாராட்டி இவரை இங்கிலாந்தின் பாரதி என்று கூறுகின்றனர்.

மேல்நாட்டாரின் பெண்களுக்குக் கல்வி வேண்டும், குடும்ப ஆணாதிக்கச் சமுதாயம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோட்பாடுகள் இந்தியப் பெண்ணியத்திற்கும் பொருத்தமாக உள்ளன.

சார்லிட் பன்ந் :

பெண்ணியம் பற்றி இவர் "பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நிருபிக்க முயல்வதாகும். அதனடிப்படையில் உலகவியல் அரசியலிலும், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்"[17] என்கிறார்.

மனித இனத்தில், எல்லோரும் எல்லார்க்கும் சமம் என்பது எல்லாக் கூற்றாளர்களின் அசைக்க முடியாத கருத்தாக இருக்கிறது. அதனடிப்படையில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக உழைத்துத் தங்கள் விடுதலையை நிலை நாட்ட வேண்டும் என்ற கருத்து நிலவி வருகிறது.

பார்பராஸ்மித் :

பெண்ணியம் என்பது "எல்லாப் பெண்களையும் அரசியல் மற்றும் பிற அடிமைத் தளைகளிலிருந்து விடுவித்தல் என்ற கொள்கை உடையதாகும். இளம்பெண்கள், தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், ஏழைப்பெண்கள், கள்ளினச் சேர்க்கையுடைய பெண்கள் (Lesbians), வயதான மூதாட்டிகள் மற்றும் பொருளாதார நிலையிலும், மரபு மணமுறையிலும் துன்புறும் பெண்கள் இவர்கள் அனைவருக்கும் விடுதலைப் பெற்றுத் தருவதே இதன் இலக்காகும்"[18] என்கிறார்.

அனைத்துப் பெண்களுக்கும் விடுதலை, தன்முயற்சி, தன்னம்பிக்கை, போன்றவற்றில் ஒன்றிணைந்து செயல்பட்டால் பெண்ணியம் தழைக்க வழி பிறக்கும் என்பது இவரது கருத்தாகும். இவையல்லாமல் சற்று இயல்பான குறைவான முயற்சியில் ஈடுபடுவது பெண்ணியப் போராட்டமாகாது எனக் கூறுகிறார்.

பெண்ணியம் பெண்களின் நிலையை மாற்றுகின்ற இயக்கம், பெண்களைச் சமுதாய அளவில் முன்னேற்றுவது என்பது பெண்ணியத்தின் மையச் செயற்பாடாக அமைந்துள்ளது.

டோனா ஹாக் ஸஸ்ட், ஆமாரோ :

இவ்விருவரும் பெண்ணியம் என்பது தீவிர செயல்பாடுடையது என்று கூறுவது முற்கண்ட பார்பரா ஸ்மித்தின் கருத்தோடு ஒத்துச் செல்கிறது. "பெண்ணியம் தனிப்பட்ட முறைகள் மட்டுமின்றி அரசியல்

மற்றும் தத்துவ நிலையானதாகவும் செயல்பட வேண்டியிருப்பதால் அதற்குத் தேவை தீவிர நடைமுறை செயல்பாடுதான். தீவிரம் இல்லாவிட்டால் பெண்ணியம் என்ற சொல் அர்த்தமற்றதாகி இல்லாமல் போய்விடும்”[19] என்கிறார்கள்.

சார்லட் பன்ச் :

இவர் “பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதே பெண்ணியமாகும்”[20] என்கிறார். இவர் பெண்ணியத்தைச் சமூக நிலை மாற்றக் கோட்பாடு என்றும் விளக்குகிறார்.

தெரசாப் ஸிங்டன் :

இவர் “பெண்ணியம் உலகையே மாற்றியமைக்கும் இயக்கம். பெண்கள் நிலையை மாற்றுகின்ற இயக்கம்”[21] எனக் கூறுவர். பெண்களைச் சமுதாய அளவில் முன்னேற்றுவது மையச்செயற்பாடாக அமைந்துள்ளதால் இதனைச் சிறந்த சமுதாய இயக்கமாகக் கருத இடமுண்டு என்கிறார்.

ரேஸ்பான்கி அம்மையார் :

பெண்களின் செயற்பாடுகள் காலச்சூழலுக்கேற்பப் பாகுபாடு அடைகின்றன. காலப்போக்கில் இவ்வாறான மாறுதலே பெரிய இயக்கத்திற்கும் பெண்கள் ஒற்றுமைக்கும் வழிவகை செய்துள்ளன. இவர் “பெண்ணியத்தின் மைய செயற்பாடு சமுதாயத்தில் பெண்களின் நிலையை மாற்றுவதாகும்”[22](அடிமைத்தனத்தைக் களைதல்) என்கிறார்.

பெண்ணியவாதி என்பவர் பெண்களின் போராட்டத்திற்குத் துணைநின்று அவர்களின் அடிமைத் தனத்தைக் களைந்தெரிய உதவுவதோடு; அவரின் மையக் கொள்கை சமுதாயத்தில் பெண்களின் நிலையைமாற்றும் தன்மையுடையவாக இருக்க வேண்டும்.

பெண்ணிய விதிகளை இனம் காட்ட முற்படுகையில் "பெண்ணோ, ஆணோ சமுதாயத்தில் பெண்களின் நிலையை மாற்றப் போராடுவதோடு வகுப்பு வேறுபாடின்றி எல்லா நிலைகளிலும் பெண்களின் உயர்வுக்கு உழைப்பவர்களாக இருக்க வேண்டும்"[23] என்று பெண்களின் நிலைமாற்றம் குறித்துத் தனது ஆழமான கருத்தைக் கூறுகிறார்.

மேற்கூறிய கருத்துக்களின்படி ஓர் இயக்கம் உருவாக வேண்டுமானால் அது அடிப்படையான கோட்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். பெண்ணியக் கோட்பாடுகள், பெண் விடுதலை ஆண்களுக்கு நிகரான சமஉரிமை, சம வாய்ப்பு, சம ஊதியம் இவற்றைப் பெறுதல், காலங்காலமாக இருந்து வந்த ஆணாதிக்கத்தை எதிர்த்தல் போன்றவற்றை வற்புறுத்துவதாகும். இக்கோட்பாடுகளை உருவாக்கித் தந்தவர்கள் பெண்ணிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

மேற்கத்தியப் பெண்ணியம்

பல்வேறு நாடுகளில் பலர் பெண்ணியம் குறித்துச் சிந்தித்துத் தம் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். "ஐரோப்பாவில் அண்மைக் காலத்தில் புரட்சிகரமான மாற்றங்கள் உண்டாயின. இம்மாற்றங்களால் ஏற்பட்ட நவீனச் சிக்கல்களில் ஒன்றாகப் பெண்ணியம் தோற்றம் கொண்டது. சுருங்கக்

கூறினால் வேளாண்மைச் சமூக அமைப்பு மேற்குலகில் தோன்றிய போது பெண்ணியச் சிந்தனை தோன்றியது"[24] என்பர்.

மாற்றங்கள் மனித சமூகத்தின் இயற்கை. மாற்றமே மானிடத் தத்துவம். அவை உயிர்களின் இயற்கையும் கூட, எனினும் பகுத்தறிவு என்பது மனிதனின் தனித்தன்மை. ஒரு சமூக அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் அவர்களின் பண்பாட்டிலும் வாழ்க்கைத் தரத்திலும் மாற்றத்திற்கு வழிவகுக்கும். வேளாண்மைச் சமூக அமைப்புச் சொத்துரிமைக்கு அடிப்படையாவதால் அதுவே மேற்கத்தியப் பெண்ணுரிமைச் சிந்தனைக்குக் கால்கோளிட்டது.

சமூகத்தில் நல்லிணக்க மாற்றங்கள் பல நிகழ்ந்தால் அச்சமூகம் வளர்ச்சி பெறும். சமூக மதிப்பீடுகள் பல சமயச் சார்புடையன. மக்கள் வாழ்க்கையில் சில நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் பின்பற்றப்பட்டு வந்தன. சமூகத்தில் நிலவி வந்த சில தீமைகளுக்கு மதத்தின் அங்கீகாரத்தோடு சமூகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தக் கூடாது என்றும் கூறி வருகின்றனர்.

மேற்கத்திய பெண்ணியம் மிகத் தீவிரமடைந்து பெண்ணிய வாதிகள் மூன்று பிரிவாகப் பிரிந்து போராடினர். "சட்டச் சீர்திருத்தங்கள் வாயிலாகப் பெண்ணுரிமைகளைப் பெறலாமென்று நம்பியவர்கள் மிதவாதப் பெண்ணியவாதிகள், சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு நிலைகளால் பெண்ணடிமைத்தனம் நிலவுவதாக நினைப்பவர்கள் சமதர்ம பெண்ணியவாதிகள். ஆண்களே பெண்களின் காயங்களுக்குக் காரணம்

என நம்பியவர்கள் தீவிரவாதப் பெண்ணியவாதிகள்"[25] என்று அழைக்கப்பட்டனர்.

பெண்ணியம் பெண்கள் உரிமைகளைப் பெற விழைந்த ஓர் உணர்வுப் போராட்டம். பல தளங்களாக அல்லது நோக்கு நிலைக்கேற்ப பல படிநிலைகளாகப் பரிணமித்து வந்துள்ளன. "பொருளாதார, சமூக அமைப்பு மாற வேண்டும் என்பதை மட்டும் வலியுறுத்துவதைக் கோவுலிகப் பெண்ணியம் என்றும், பண்பாட்டுப் பாலுறவுகள் பற்றியும் சமமான அக்கரை பூணுவதைப் பொருள் முதல்வாதப் பெண்ணியம்"[26] என்றும் குறிப்பிடுவர்.

பெண் தனி நிலையில், குடும்பத்தில், பொருளாதாரத்தில், சமூக நிலையில் என எல்லாவற்றிலும் சமமான நிலையைப் பெற எண்ணுகின்ற நிலையைக் காணமுடிகிறது.

அமெரிக்காவில் பெண்ணியம்

1970 ஆம் ஆண்டு முதல் 1985 அம் ஆண்டு வரை பெண்ணியம் பல்வேறு கோணங்களில் அமெரிக்காவில் பரந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளது. கறுப்பின பெண்கள் எய்தும் இன்னல்களை நீக்கி, அவர்கள் வாழ்வில் உயர்ந்த இலக்கை அடையச் செய்வதற்கு இந்நாட்டிலுள்ள பெண்ணிய அமைப்புகள் அயராது போராடின. அவர்கள் "வேலைபார்க்கும் பெண்களின் நிலையை உயர்த்த, மணவிலக்குக் குறித்த சட்டங்களை திருத்த, பெண்கள் அரசியலில் மிகுந்த அளவில் பங்கு பெற கறுப்பு இனப் பெண்களின் நிலையை உயர்த்த"[27] முயன்றனர். அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர்.

ஒரு புறம் பெண்ணியக் கோட்பாடு நாடு முழுவதும் விழிப்புணர்வுக்கு வழிவகுக்க, மறுபுறம் பெண்ணியச் சிந்தனைகள் மக்கள் மனதில் வேரூன்றத் தொடங்கின. குறிப்பாகக் கறுப்பினத்தினரின் உரிமையையும் அடிப்படையாகக் கொண்டு அமெரிக்கப் பெண்ணியம் ஒரு தேசிய இயக்கமாக வளர்ந்து வந்துள்ளது.

இங்கிலாந்தில் பெண்ணியம்

இங்கிலாந்தில் பெண்ணியவாதிகள் சிறுசிறு அமைப்புகளாகச் செயல்பட்டுள்ளனர். அவர்களை ஒன்று திரட்டிச் செயல்பட வைப்பது கடினமான செயலாக இருந்துள்ளது. இதில் வெற்றி பெறாமல் சோர்ந்துபோன அமைப்புகளும் காணாமல் போயின. இந்நாட்டிலுள்ள பெண்ணிய இயக்கங்கள் தொழிற்சங்கங்களுடன் இணைந்து பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக போராடி வருகின்றது. அதனைப் "பெண்ணிய இயக்கங்கள் பெண் தொழிலாளர்களின் சிக்கல்களை வெளிக் கொணர்ந்தன. இதனால் பெண்ணிய இயக்கங்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே நட்புறவு நிலவியது. இவ்வியக்கம் 1975 இல் ஆரம்பித்ததைத் தொடர்ந்து பெண்களுக்குச் சுதந்திரம் கிடைக்க ஆரம்பித்தது. இதே போன்று பெண்கள் தங்கள் குடும்பத்தில் வீட்டு வேலைகளைச் செய்வதற்கு ஊதியம் கொடுக்கப்பட வேண்டும்"[28] என்ற முத்துச் சிதம்பரத்தின் கருத்து புலப்படுத்தும்.

பெண்ணியச் சிந்தனை பெண் தன்னை நிறுத்திக் கொள்ள முயல்வதாக அமைந்துள்ளது. சரியோ, தவறோ, தனது தனித்தன்மையை

நிலைநாட்ட எல்லாச் சுதந்திரமும் வேண்டும் என பெண்கள் எண்ணினர். கட்டுப்பாடில்லாச் சுதந்திரம் சுதந்திரமாகாது. இவ்வாறு தவறான கருத்துக்கள் மூலம் பெண்ணியச் சிந்தனைப் போக்குத் தடைபடத் தொடங்கியது.

கிழக்கத்தியப் பெண்ணியம்

மேற்கத்தியப் பெண்ணியம் பண்பாட்டுச் சூழலால் சமதர்மப் பொருளாதாரம், பாலுறவு என்ற தளங்களில் பெண்ணியச் சிந்தனை தோன்றி வளர்ந்தது. கிழக்கத்திய நாடுகளில் சாதி, மதம் போன்றவையும் பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாயின. “இந்தியப் பெண்ணியம் சாதி மதத்தையும் பார்க்க வேண்டியிருக்கிறது. இதனால் பெண் சிக்கல்கள் சமூகச் சிக்கல்களாகவே மாறுகின்றன”[29] என்பர். க.பரிமளம்.

“சமூகப் பொருளாதாரப் போராட்டங்களில் ஈடுபடுவதோடு மனித உரிமையைப் பாதுகாத்தல் என்கிற நிலையில் இந்தியப் பெண்ணியம் செயல்பட வேண்டிய நிலை இருக்கிறது எனலாம். இந்த இருவிதமான போராட்டங்களும் பால் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட பெண்களுக்கும் பொதுவானவை. இவை தற்போதுள்ள இந்திய நிலையில் பொதுவான போராட்டங்களின் ஊடாகவே, பெண்கள் போராடிப் பெண் விடுதலையைப் பெற வேண்டியிருக்கிறது”[30] என்கிறார்.

இவ்விளக்கம் பெண்ணிய சிந்தனைக்கு வழி கோலாகவும், இந்தியச் சிந்தனையோடு இணைந்தே வளர்ந்தது எனக் கூற முடியும்.

பெண்ணியத்தின் வகைகள்

1. தலைமை வேண்டாப் பெண்ணியம் (Anarcha Femanism)
2. மகளிர் முன்னேற்றப் பெண்ணியம் (Careur Femanism)
3. பண்பாட்டுப் பெண்ணியம் (Cultural Femanism)
4. மனிதவள மேம்பாட்டுப் பெண்ணியம் (Eugenic Femanism)
5. பெண் மையமிட்டப்பெண்ணியம் (Cymucedtric Femanism)
6. மானுட நேயப் பெண்ணியம் (Humanist Femanism)
7. ஏகாதிபத்தியப்பெண்ணியம் (Imperial Femanism)
8. மனிதப் பெண்ணியம் (Individual Femanism)
9. ஓரினக் கலவிப் பெண்ணியம் (Lesbian Femanism)
10. மிதவாதப் பெண்ணியம் (Liperal Femanism)
11. மார்க்சியப் பெண்ணியம் (Marcust Femanism)
12. புதிய பெண்ணியம் (New Femanism)
13. கூட்டுச்சேராப் பெண்ணியம் (non- alighed Femanism)
14. ஆதிகாலப் பெண்ணியம் (Proto Femanism)
15. தீவிரவாதப் பெண்ணியம் (Redical Femanism)
16. திருப்பு முனைப் பெண்ணியம் (Aevisionist Femanism)
17. புரட்சிப் பெண்ணியம் (Revolutionary Femanism)
18. சமதருமப் பெண்ணியம் (Socialist Femanism)
19. ஆன்மீகப் பெண்ணியம் (Spritual Femanism)
20. இந்தியப் பெண்ணியம் (Indian Femanism)

என முறைப்படுத்துகின்றன. இந்த இருபது வகைப்பாடுகளையும் மூன்று நிலைக்குள் அடக்கி விளக்க முடியும். அவை

1. மிதவாதப் பெண்ணியம் அல்லது தாராளப் பெண்ணியம்
2. சமதர்மப் பெண்ணியம்
3. தீவிரவாதப் பெண்ணியம்

என்பனவாகும்.

மிதவாதப் பெண்ணியம்(அல்லது) தாராளப் பெண்ணியம்

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மிதவாதம், தீவிரவாதம் எனும் இரு நிலைகளில் தங்கள் கொள்கைகளை, இலக்கை வெளிக்காட்டினர். மிதவாதம் என்பது அமைதியான அறவழியில் போராடித் தீர்வு காண்பதாகும்.

“சமூகத்தில் காலங்காலமாக நிலைத்துப் போன மரபுவழி நிறுவனங்களையும், மதிப்பீடுகளையும் பெரிய மாறுதலுக்கு உட்படுத்தாமல் அதே வேளையில் பெண்ணின் நிலையிலும் மாற்றத்தை ஏற்ப்படுத்த வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டது மிதவாதப் பெண்ணியம்”[31] என்பர்.

கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மிதவாதப் பெண்ணியக் கொள்கை வேர் ஊன்ற ஆரம்பித்தது. இக்கொள்கை தனி ஒருவன் விடுதலை, மன மகிழ்ச்சி, அரசாங்கத்தாலும், சமூகத்தாலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயரிய நம்பிக்கையுடன் தொடங்கப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஆண் எழுத்தாளர்களே அதிகமாக இருந்தனர்.

பால்வர்க்க மூலமாகப் பெண்ணியச் சிந்தனை அதிகமாக இருந்தது வெளிப்படத் தொடங்கியது.

பெண்ணியக் கருத்து வெளிப்படத் தொடங்கியவுடன் அக்கொள்கைக்குப் பாடுபட்ட பெண்மணிகளில் முதலாவதாக வந்தவர் வோல்ஸ் டோன் கிராப்ட் ஆவார். இவர் 1970 ஆம் காலக்கட்டத்தில் அதிகமாகப் படித்தத் தத்துவவாதியாவார். பெண் விடுதலைப் பற்றிக் கருத்துக்களை எடுத்துக் கூறி தோற்றத்திற்கு வித்திட்டவர். “சமுகத்தில் பெண்களுக்குச் சமஉரிமை, சமவாய்ப்புக்கள் எல்லா நிலைகளிலும் கொடுத்தல் வேண்டும் என்பதே இவரது வாதமாகும்”[32] என்பர். ஆண்கள் தங்களுக்கான உரிமைகளைச் சரிநிகராகப் பெண்களுக்கு விட்டுக்கொடுத்தும் வாழ வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

18 - ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜான் ஸ்வர்ட்மில் எழுதிய ‘பெண் அடக்கு முறை’ என்ற நூல் தாராள வாதத்தின் கருத்தை வளர்த்தது. இவர் “கல்வியறிவு ஒன்றுதான் பெண்களை அடிமைத் தனத்திலிருந்து மீட்க முடியும் என்றும், திருமண ஒப்பந்தம் மாற்றப்பட வேண்டும், பெண்கள் வேலைக்குச் சென்றுகொண்டே குடும்பத்தையும் நிர்வகித்து அதில் ஆணுக்கு நிகரான சமத்துவ இடத்தை நிலை நாட்ட வேண்டும்”[33] என்கிறார்.

தாராளப் பெண்ணியம் “ஏற்கனவே இருக்கும் சமூக அமைப்பை முன்னேற்றித் தேவையான மாறுதல்களைச் செய்து அதன் மூலம் பெண்களுக்குத் தேவையான அளவு விடுதலையும் மதிப்பும் தகுதியும்

பெற்றுத் தர முயன்றது"[34] இக்கருத்தின் மூலம் பெண் பிறப்பதில்லை உருவாக்கப் படுகிறாள் என்ற உண்மை விளங்குகிறது.

தாராளப் பெண்ணியம் புரட்சியின்றிப் பொருளாரத்திலும் சட்டத்திலும் மாறுதலைக் கொண்டுவர முயல்கிறது. அரசியலில் பெண்களின் பங்கு, உயர்கல்வி, மக்கள் தொடர்பு, ஊடகம், சம ஊதியம், பாலியல், சமபங்கு போன்றவைகளை ஆராய்கிறது. பாலியல் என்பது மனிதனால் உருவாக்கப்பட்டது. மனிதராலேயே ஒழுங்குபடுத்த வேண்டும் என்பது தாராளப் பெண்ணிய வாதிகளின் கருத்தாகும்.

19 - ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவில் தாராளப் பெண்ணியம், ஆதாரப் பெண்ணியம் (Mains ream Femanism) என்று அழைக்கப்பட்டது. NOW (National Organisation of Woman) என்ற தேசிய அமைப்பு தாராளப் பெண்ணியத்தை வளர்த்தது. தாராளப் பெண்ணியம் இந்தியாவிலும் தோற்றம் பெற்றது.

சமதர்மப் பெண்ணியம்

சமதர்மப் பெண்ணியம் இனம் மற்றும் பால் வேறுபாட்டை (Class and Gander discrimination) ஒழிப்பதையே அடிப்படை நோக்கமாகக் கொண்ட இயக்கமாகும். கம்யுனிசவாதிகளும், மார்க்கிய வாதிகளும், உழைப்பாளிகளும் சமதர்மப் பெண்ணியத்திற்கு ஊன்று கோலாக இருந்தவர்களாவர். பெண் விடுதலைக் கொள்கை ஆண், பெண் என்று வேறுபடுத்துவோரின் கொள்கைகளைச் சமூக நெறியில் ஒழிப்பதே செயல்பாடாகவும் கொண்டுள்ளது. 'ப்ரேட்ரிக் எங்கல்ஸ்' என்பவருடைய

குடும்பம், தனிச்சொத்து என்ற நூல் இப்பெண்ணியக் கொள்கைக்கு மூலாதாரமாக விளங்குகிறது.

பெண்கள் சமூகத்தில் பிள்ளை பெறும் இயந்திரமாகவும், ஆண்கள் பெண்களைவிட எல்லா நிலைகளிலும் உயர்ந்தவர்களாகவும் செயல்பட்டனர். இதனால் ஆணாதிக்கம் மேன்மையுற்றுப் பெண்கள் அடிமை நிலையிலிருந்தனர். இக்கருத்தினை, "மரபு வழியாகப் பின்பற்றி வந்த கோட்பாடுகளின் வழி நடக்கும் திருமணங்களின் விளைவுகளையும் குடும்ப அமைப்பில் பெண்கள் அடிமைகளாகவும் பிள்ளை பெறும் இயந்திரங்களாகவும் உரிமையற்ற நிலையில் வாழும் நிலை உள்ளது"[35] எனக் கூறுகிறார்.

"ஆண்கள் தந்தை வழிச் சமூக அமைப்பின் தலைவனாகவும், குடும்பத் தலைவனாகவும், முதலாளியாகவும், சொத்துரிமை உடையவனாகவும், வேலை வாங்குபவனாகவும் இருப்பதால் அவர்கள் பெண்களை விட உயர்ந்தவர்களாகச் சமூகத்தில் பங்கு வகிக்கின்றனர்."[36] என்ற கருத்துக்கள் அரண் செய்யும்.

ஆண், பெண் இருவர்களிடையே உள்ள வேறுபாடே தொழில் அடிப்படையில் தான் காணப்படுகின்றது. இதனை ஏங்கல்ஸ் என்பவர் இந்த வேறுபாட்டிற்கு முதலாலித்துவ அமைப்பும், மரபு வழி வந்த அமைப்பும் காரணம் என்று விளக்கியுள்ளார். "ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண அமைப்பு குடும்ப அளவிலும், முதலாளி, தொழிலாளி என்ற அமைப்பு சமூக அளவிலும் பெண்களை அடிமைப்படுத்தியுள்ளது."[37] என்கிறார் ஏ.எம்.சுசீலா

சமதர்மப் பெண்ணியவாதிகள் பாலியலை அடிப்படையாகக் கொண்ட குடும்பம், சமுதாய அமைப்பைப் பொருளாதாரப் புரட்சியின் மூலம் மாற்ற முடியும் என்று நம்பினார். பொருளாதார விடுதலையே பெண்களைத் தன்னுரிமையும் தன்னிறைவும் உள்ளவர்களாக உருவாக்கும் என்று முயற்சி எடுத்தனர்.

பெண்கள் பாலியல் நெறியில் மட்டுமின்றி வயது நிலையிலும், சமூக நிலையிலும், சக்தி அடிப்படையிலும், இன அடிப்படையிலும், தேசிய அடிப்படையிலும் ஒதுக்கப்படுகின்றனர் என்று சமதர்மப் பெண்ணியம் சுட்டிக் காட்டுகிறது.

சமதர்ம பெண்ணியவாதிகள் பெண்கள் பெண்களுக்காகப் பெண்கள் மட்டுமே (Women for women and women only) என்றக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு அனைத்திலும் பெண்கள் (all female political platrom) என்ற கருத்தைப் பரப்ப முற்பட்டனர்.

தீவிரவாதப் பெண்ணியம்

பெண்கள் அமைதியான முறையில் எதிர்ப்புக் காட்டாமல் போராட்டம் எனும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். எதிர்ப்பு மட்டும் என்ற அடிப்படையில் இருந்து வந்த பெண்கள் தங்களுக்கென்று சில அமைப்புகளைத் தோற்றுவித்தனர். பின்னர் பிரச்சனைகளை ஆராய்ந்தனர். "பெண்கள் அடிமைகளாக அன்றி ஓர் உயிரியாகக் கருதப்பட வேண்டும் என்ற கருத்து அவர்களிடையே உருவானது."[38] இக்கருத்து மேலும் வலுப்பெற்று ஆண்கள் எதிர்க்க மற்றும் ஒதுக்கப்பட

வேண்டியவர்கள் என்ற தீவிரவாதப் பெண்ணியக் கொள்கையாகக் காணப்பட்டது.

தீவிரவாதப் பெண்ணியவாதிகள் Radical என்ற சொல்லைத் தங்கள் கொள்கை இயக்கத்திற்கேற்ப பயன்படுத்தினார்கள். இச்சொல்லுக்கு வேர் (root) என்பது பொருள். இது லத்தின் மொழியிலிருந்து உருவானதாகும். சமுதாயத்திலுள்ள பிரச்சனைகளின் காரணங்களை வேரிலிருந்து ஆராய்வது என்பதைக் கருத்தில் கொண்டே pradical என்ற சொல்லைப் பயன்படுத்தினர். இதைத் தமிழில் தீவிரவாதம் என்று மொழிபெயர்த்தனர்.

பெண்ணியக் கொள்கைகள் பாலுறவிலுள்ள பால்பேதத்தை ஆராய்ந்து இயங்கத் தொடங்கின. "மனித சமுதாயத்தின் மறு உற்பத்திக்குக் காரணமான திருமணம் மற்றும் கட்டாய குடும்ப அமைப்பு, தாய்மைப் பேறு போன்றவற்றை ஆராய்ந்து இவையே பெண்களின் அடிமைத் தனத்திற்கு வித்திட்டது என்று கண்டறிந்தனர்"[39]

இப்போக்கை முக்கியப் பிரச்சனையாக எடுத்துக்கொண்டு அதை ஒழிப்பதற்கு முனைப்புடன் பாடுபட்டனர். குழந்தைப்பருவத்திலிருந்தே இவை காணப்பட்டதால் பிரச்சாரம் மூலம் எதிர்க்கத் தொடங்கினர். ஆண்களைத் தங்கள் எதிரிகளாகவே கருதினர்.

ஆண்களை முழுமையாக ஒதுக்கிய சமுதாயத்தை உருவாக்குதல் (Soceity for cutiry up man - Beam) என்ற கோட்பாட்டையும் பரப்பத் தொடங்கினர். லெஸ்பியன் பெமினிசம் (lesbian Femanism) என்ற அமைப்பு தீவிரவாதத்தின் ஒரு முக்கியக் கிளையாக வளரத்

தொடங்கியது. இப்பெண்ணியம் தந்தை வழிச் சமூகம், குடும்ப அமைப்பு, பால் தன்மை போன்றவற்றை உள்ளடக்கமாகக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

தீவிரவாதப் பெண்ணியச் செயற்பாடுகள்

பெண்ணியச் செயற்பாடுகள் புதிதாகவும், மக்களைக் கவர்ந்திழுக்கும் வகையிலும் அமைந்திருந்தன. நடைமுறையில் காணப்படும் ஆணாதிக்கத்திற்கு எதிரான போக்கைக் கடைபிடிக்கத் தொடங்கினர். “தங்கள் எண்ணங்களையும், கருத்துக்களையும், உணர்வுகளையும் எளிதாக இக்குழுக்களில் பரிமாறிக் கொள்ள முடிந்தது”[40] என்று கூறுவர்.

இவ்வியக்க செயல்விதிகள் தங்களுக்குள் தலைமை ஏற்படுத்திக் கொள்ள இயலவில்லை. அனைவரும் சமமதிப்புடன் விடுதலைக்காகச் செயல்பட்டார்கள். இவர்களைத் தலைமை வேண்டாப்பெண்ணிய வாதிகள் (Ancreha femanist) என அழைக்கப்பட்டனர்.

ஆண்களால் அடிப்படையில் அடக்கு முறைக்கு ஆட்பட்டவர்கள். அவர்களை எதிர்க்கும் செயல்பாட்டாளராகக் காணப்பட்டனர். இதனால் தங்கள் அனுபவத்தின் மூலமாகத் தனிப்பட்ட கொள்கையினை வகுத்துக் கொண்டார்கள் என்பதை அறிய முடிகிறது.

இந்தியப் பெண்ணியம்

மேலை நாட்டுப் பெண்ணியம் தனக்கென்று தனித்த வரலாறு உடையது. இந்தியப் பெண்ணியம் மரபு வழியில் அதற்குக் குந்தகம்

விளைவிக்காமல் தொன்மைக்காலம் முதல் செயல்படுவது. அதனை, "இந்தியாவில் தனியுரிமை என்பது ஒரு புதிய கருத்தாகும். தொன்று தொட்டு அண்மைக் காலம்வரை இந்திய ஆணும், பெண்ணும் அதிகாரப்படி நிலை அமைப்பின் கீழ் வாழ்ந்துள்ளனர். தங்கள் தேவைகளை அடக்கிக் கொள்ளவும், தங்கள் உணர்வுகளை மறைத்துக் கொள்ளவும் எல்லாவற்றிலும் தங்களை அர்பணித்துக் கொள்ளவும் பழகியவர்கள் இந்தியப் பெண்கள். இவர்கள் தனியுரிமை என்பது தங்களுக்குத் தேவையில்லை (Self - Demaial) என்று ஒரு தவறான தத்துவத்தின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்."[41] என்ற இரா.பிரேமாவின் கருத்து நிலைநிறுத்தும்.

தனியுரிமைகளின் நல் விளைவுகளைப் பிரிட்டிஷ் ஆட்சியின் மூலமே தெரிந்து கொள்ள முடிந்தது.இந்தியப் பெண்ணியம் மேலை நாட்டுப் பெண்ணியத்திலிருந்து வேறுபட்டதாக அமைந்துள்ளது. இந்தியப் பெண்கள் தங்களின் தனித் தன்மையையும், சிறப்பையும் முழுஅளவில் உணர வேண்டும் என்பதாகும்.

19 - ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியப் பெண்ணியம் தொடங்கியது. தொடக்க காலத்தில் சீர்திருத்த வாதிகள், பெண்களின் பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டனர். "குழந்தை மனம், சாதி, பர்தாமுறை, தேவதாசி முறை போன்றவற்றை ஒழிப்பதே அவர்கள் முன் நிறுத்திய முதன்மை பிரச்சனைகள்"[42] என்பர். ஏ.எம்.சுசீலா. இதன் வழி இந்தியப் பெண்ணியம் வேறூன்ற ஆரம்பித்தது.

“ராஜராம் மோகன்ராய் சாதியை எதிர்த்தும், ஈஸ்வர சந்திர வித்தியாதர் மறுமணத்தை ஆதரித்தும், ராணடே கார்வாப் போன்றவர்கள் பெண்கல்வி வேண்டியும் சீர்திருத்தம் கொண்டு வரமுற்பட்டனர்”[43] என்பர். இவ்வாறான சீர்திருத்த வாதிகள் பொதுவான பெண் அடக்குமுறையை எதிர்த்தலும் பெண்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டியதிலும் குறிப்பிடத்தக்கப் பங்காற்றியுள்ளனர்.

சமூக சீர்திருத்த வாதிகளின் முயற்சியில் தான் 1880 - இல் பெண் அமைப்புகள் தோற்றம் பெற்றன. இதில் ஆண் சீர்திருத்தவாதிகளே தலைமை வகித்தனர். பெண்களாலேயே பெண்களுக்கான அமைப்புகள் தோன்றலாயின. முதன்முதலில் 1886 - இல் கல்கத்தாவில் ‘பிரம்ம சமாஜ்’ என்ற அமைப்பின் முன்னிலையில் சுவர்ண குமாரி என்பவரின் தலைமையில் பெண்கள் கூட்டமைப்புத் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்டதன் நோக்கம் பெண்களிடையே நட்புறவையும், மன வலிமையையும் வளர்ப்பதற்காக காணப்பட்டது.

பண்டித ரமாபாய் சரசுவதி என்பவர் ‘சாரதாசன்’ என்ற பெயரில் பெண்ணிய அமைப்பைத் தொடங்கினார். அதன் நோக்கம் பெண்களுக்குக் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு அளித்தலாகும். சிறிது காலத்திற்குப் பின் கைம்பெண்களுக்கு மறுவாழ்வளிக்கும் நல்ல காரியம் அவ்வமைப்பினால் மேற்கொள்ளப்பட்டது.

இந்திய நாட்டு அறிஞர் கருத்து

பெண்ணியம் குறித்து “19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராஜாராம்

மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்தியாசாகர், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், முன்சீப் வேதநாயகம் பிள்ளை போன்றவர்களும், 20ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மகாத்மா காந்தி, பாரதியார், ஜோதிராவ், பூலே, பெரியார் போன்றோர்களின் பெண் விடுதலைச் செயற்பாடுகளே பெண்ணியமாகும். விடுதலை என்பதை எதிலிருந்து என்ற அடிப்படையில் புரிந்து கொள்ள வேண்டும். விடுதலை என்றால் ஆண்களிடமிருந்து விடுதலை; அர்த்தமற்ற பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலை; ஆணின் செயற்பாடு பெண்ணுக்கு நரகமாகும் போது மட்டுமே அவனிடமிருந்து விடுதலை. இதுவே பெண் விடுதலைப் போக்காகும். ஆனால் ஒட்டுமொத்தமாக ஆண்களிடமிருந்து பெண்கள் விடுதலை பெற நினைத்து, அதற்காகப் போராடுகிறார்கள் என்ற தவறான புரிதல் சமூகத்தில் நிலவுகின்றன"[44] என்று இராம.குருநாதன் குறிப்பிடுகிறார்.

நம் நாட்டு சீர்திருத்தவாதிகள் பெண்களை அடிமைப்படுத்தும் சமூகக் கொடுமையிலிருந்து அவர்களை விடுவித்தவுடன், பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதை வற்புறுத்தத் தொடங்கினர். பெண்ணிற்குக் கல்வி கிடைத்துவிட்டாலே அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி கிடைத்துவிடும் என்பதான கருத்துக்களை முன்வைத்தனர்.

மகாத்மா காந்தி

சுதந்திரம் என்பது எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறைக் காட்டியவர். ஒரு பெண் தன்னந்தனியாக நடு இரவில் யாரும் துணையில்லாமல் சென்று வருகிறாளோ அன்றுதான் முழுச்

சுதந்திரம் கிடைத்ததாக அர்த்தம் கொள்ளலாம் என்றார் காந்தியடிகள். இன்று வயது முதிர்ந்த பெண்கள்கூட தனியாகச் செல்லமுடியாத நிலையைக் காண்கின்றோம். "பெண்களால் அன்பைப் பிரிக்க முடியாது; பெருக்கத்தான் முடியும்"[45] எனக் கூறுகிறார்.

இந்திராகாந்தி

இந்திய தேசத்தின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமைக்குரியவர். இவர், "தங்களிடமுள்ள மூடநம்பிக்கைகளை உடைத்தெறிந்துவிட்டுப் பெண்கள் சமூக சேவைக்கு முன்வரவேண்டும். ஆண்களும் பெண்களும் பங்கு பெற்ற உழைத்தால்தான் நாட்டில் உண்மையான முன்னேற்றம் ஏற்படும்"[46] என்றுரைக்கின்றார்.

ஓஷோ

வாழும் கலைகளைக் கற்றுத்தந்த சிறந்த தத்துவ மேதை. குடும்பத்திலிருந்து பெண்களைப் பிரித்துப் பார்க்க விரும்பாதவர். இல்லறம் நல்லறமாவதற்குப் பெண்ணின் பங்கு முக்கியமானது என்ற கருதுகோளின் மையப் புள்ளி பெண் என்பதை விளக்கியவர். வாழும் கலையில் விலக்கி வைக்க முடியாதவள் பெண் எனக் கூறும் அவர், "இன்று நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயம் பெண்களின் பங்களிப்பில் உண்டானதாகும். ஆண்களால் அல்ல; வீடு என்பதே பெண்ணின் கொடை தான்"[47] எனக் குறிப்பிடுகிறார்.

அபர்ணா மஞ்சுதர்

இந்தியப் பெண்ணியவாதிகளில் குறிப்பிடத்தக்கவர். பெண்களின்

முன்னேற்றத்தில், அவர்களை விழிப்படையச் செய்வதில் பெரும் பங்காற்றியவர். "பெண் நிலை வாதம் என்பது பெண் விடுதலை இயக்கத்தை வழி நடத்திச் செல்லும் தத்துவமும் வாழ்க்கை முறையுமாகும்"[48] என்று கூறுகிறார்.

இந்திய நாட்டு அறிஞர்கள் பெண்களைப் பற்றி தனது கருத்தினைச் செறிவுடன் பெண்களின் உணர்வுகளை மதிக்கும்படியாகவும் கோருகின்றனர்.

இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு

1917 - ஆம் ஆண்டு மே 8 - ஆம் தேதி சென்னை அடையாறில் திருமதி 'டோரதி நினராஜதசா' என்பவரால் தொடங்கப்பட்டது. இவ்வமைப்பின் முதல் தலைவராகச் சுமார் 17 வருடங்கள் ஐரிஸ் நாட்டைச் சேர்ந்த அன்னி பெசண்ட் அம்மையார் விளங்கினார். இந்தியப் பெண்களையெல்லாம் ஒன்றிணைத்து சமுதாயத்திற்கும் வீட்டிற்கும் சுதேச மக்களாலேயே நன்மை செய்ய வேண்டும் என்பது இவ்வமைப்பின் நோக்கமாகும்.

குறிக்கோள்கள்

1. எல்லாப் பெண்களும் இந்தியத் தாயின் மகள்கள் என்ற முறையில் அவர்களுக்கான பொறுப்பை உணர்த்துவது.

2. ஆண், பெண் பாகுபாடின்றி சம உரிமையையும், வாய்ப்புகளையும் அளித்தல் என்ற இரண்டும் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும்.

தாய் அமைப்பாக இவ்வமைப்பு போற்றப்பட்டது. அன்னிபெசன்ட் அம்மையாரின் மறைவுக்குப் பின் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அதன் தலைவராகப் பொறுப்பேற்று பலகாலம் சேவையாற்றினார். இவ்வமைப்பு இருபத்தி மூன்று மையங்களுடன் நாலாயிரம் உறுப்பினர்களைக் கொண்டு சிறப்புறச் செயலாற்றியது.

இந்தியப் பெண்கள் தேசியக் குழு

1925 - இல் இவ்வமைப்பு தொடங்கப்பட்டது. அதே ஆண்டில் அகில உலகப் பெண்கள் அமைப்புத் தலைமையாகக் கொண்டு அதனுடன் சேர்ந்து இவ்வமைப்புச் செயலாற்றத் தொடங்கியது.

“சட்டத்தின் வழி பொருளாதாரம் மற்றும் சமூக நிலைகளில் பெண்களின் சில இயலாமைகளை நீக்கி அவர்களுக்குக் குடியுரிமை, கல்வி போன்றவற்றில் உதவி அளித்து அவர்களின் முன்னேற்றத்திற்கும் வேலைக்கும் வாய்ப்பளித்தல்”[49] என்ற குறிக்கோளுடன் செயல்பட்டது.

செயற்பாடுகள்

பெண் உழைப்பாளிகள், தொழிலாளர்கள், இவர்களுக்குச் ஊதிய உயர்வு, மகப்பேறு கால பணஉதவி, தாசிகளுக்கு வசதிகள், பெண்களுக்கென்று சிறைச்சாலைகளை மாற்றி அமைத்தல் அவற்றில் பெண்காவலர்களை நியமித்தல், குடிசை மாற்று போன்றவற்றைச் செயல்படுத்துவது.

இச்செயற்பாடுகளைக் காணும்போது தற்காலத்தில் உள்ளது போன்று அக்கால கட்டத்தில் பெண்களுக்கென்று தனிச் சிறையில்லை பெண்காவலர்கள் இல்லை என்பதை அறியமுடிகிறது.

பெண்கள் மாநாடு

1926 - ஆம் ஆண்டு ஜூலை 26ந் தேதி நாடு முழுவதும் உள்ள பெண்களுக்கு சுற்றறிக்கையை எம்.இ.சுகினஸ் வெளியிட்டார். அதில் எல்லாப் பெண்களும் தேசிய அளவில் ஒன்று சேர வேண்டும் என வலியுறுத்தினார். பல்வேறு இடங்களில் 22 மாநாடுகளை நடத்தி முடித்தார். இம்மாநாட்டில் பெண்கல்வி நிலை உயர்வு, சமூக நிலை உயர்வு, தொழில் உயர்வு, குழந்தை மணத்தின் பாதிப்பு, பிற்படுத்தப்பட்டோர் நலம், ஊனமுற்ற பெண்களுக்குச் சட்டநலம் போன்றவற்றிற்குத் தீர்வு காண முற்பட்டது.

அகில இந்திய பல்கலைக் கழகப் பெண்கள் ஐக்கிய சங்கம் (Fedaration of univrsity women In India) போன்ற அமைப்பினை உருவாக்கி செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டுத் தொடர்பு

1940 - இல் இவ்வமைப்புகள் வெளிநாட்டு தொடர்பு கொண்டு குழந்தை மணம், கைம்பெண் கொடுமை, தேவதாசி முறை போன்றவற்றிலிருந்து விடுவிக்கவும் முயன்று பாடுபட்டு வந்தன.

செயற்பாடுகளில் திருப்பம்

1960 - இல் இந்தியப் பெண்ணிய போக்கில் மாறுதல் ஏற்பட்டது. பெண் சீர்திருத்தப் பணியில் இருந்து விலகி பெண்களின் உரிமைக்காகப் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கின. மேலை நாட்டுப் பெண்ணியச் சிந்தனைகள் இந்த மாற்றத்திற்கு வழிவகுத்தன.

இப்போராட்ட காலகட்டமே பெண்ணியச் சிந்தனைகளின் எழுச்சி மிக்க காலகட்டம். விபுதிபடேல் என்ற வீராங்கனை முன்நின்று போராடினார். 1996 - இல் இல்புத்துவான் ஜில்லாவில் இவ்வியக்கத்தை அடக்க ராணுவம் அனுப்பப்பட்டது. இராணுவத்தை எதிர்த்து இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் போராடினர். இப் போராட்டத்தில் ஏழு பெண்கள் உயிரிழந்தனர் “இப்பெண்மணிகள் பின் நாட்களில் சப்த கன்னியர் என்று அழைக்கப்பட்டனர். ஏழு தியாகிகள் என்றும் அழைக்கப்பட்டனர்”[50] என்பர்.

இதே காலக்கட்டத்தில் பீகார், மத்தியப்பிரதேசம் மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் பழங்குடி மகளிர் போராட்டத்தில் ஈடுபட்டனர். பணக்காரர்கள் இப்பெண்களைக் கற்பழித்துத் துன்புறுத்தியதை எதிர்த்தும், குடித்து விட்டு ஆண்கள் தங்கள் இல்லப் பெண்களை அடித்துத் துன்புறுத்துவதை எதிர்த்தும் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அச்சூழலில் இப்போராட்டம் நாட்டில் மிக முக்கிமானதாகக் கருதப்பட்டது.

இந்திய மகளிரியல் கல்விக் கூட்டமைப்பு

1981 - இல் இந்திய மகளிரியல் கல்விக் கூட்டமைப்பு (Indian Association and women studies) ஏற்படுத்தப்பட்டது. இது இந்தியப் பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியது. இதன் வழி இயக்கங்கள் பல தோன்ற ஆரம்பித்தன. அவற்றின் மூலம் வரதட்சணைக் கொடுமை, கொலை, கற்பழிப்பு, துப்புரவாளர் மறு வாழ்வு, குடிசை மாற்று போன்ற பெண்கள் தொடர்பான பிரச்சனைகளுக்கு ஓரளவு வெற்றி கிட்டின.

பெண்கள் பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல்

கருவிலிருந்து கல்லறை வரை பெண்கள் பல பிரச்சனைகளை எதிர்கொள்வபவர்களாக உள்ளனர். "ஒரு பெண் பிறந்ததிலிருந்து பூப்படைந்து, திருமணம் நடந்து, தாய்மைப் பேறு பெற்று, வீட்டு வேலைகளையும் வெளி வேலைகளையும் சேர்த்து இரட்டைச் சுமையாய் ஏற்றுக் கவனிப்பது"[51] என்பர். இப்பிரச்சனையின் பிரதிபலிப்பை பெண் இயக்கங்கள், பெண்ணியவாதிகள், தெரு நாடகங்களாக நடத்திக் காட்டினர். மரபு நிலை மாற்றம் ஒரு பெண்ணுக்கு அவசியம் என்பதை எடுத்துரைத்தனர்.

1985 - டிசம்பர் 23 முதல் 26 வரை பம்பாயில் தேசியப் பெண்கள் மாநாட்டில் இந்தியாவில் பெண்களின் விடுதலை உரிமை என்ற கருத்தரங்கு நடைபெற்றது. இதில் நடுத்தர வர்க்கத்துப் பெண்கள் மிகுதியாகப் பங்கேற்றனர். இதன் மூலம் பெண்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படத்

தொடங்கியது. காலப்போக்கில் வளர்ச்சி பெற்று வேறூன்றி தற்காலத்தில் பெண்ணியக் கோட்பாடுகள் அதிக அளவில் வளரத்தொடங்கின.

பெண்ணியக் கோட்பாடுகளின் நோக்கமும் மகளிர் முன்னேற்றமும்

பெண்ணியக் கோட்பாட்டினை "பெண்ணை ஓர் 'உயிரி' எனச் சமூகம் அங்கரித்து அவளுக்கு ஆணுக்குச் சமமான உரிமையும், சுதந்திரமும் கொடுக்கத் தூண்டும் கொள்கையாகும்"[52] என்பர். பெண்ணியம் என்ற கோட்பாடு பெண்களைப் பற்றிய சிந்தனையாகும். பெண்ணியம் பெண்கள் மீதான வரலாறு, அக உண்மை, பெண்கள் மீதான ஒடுக்கு முறையின் பல்வேறு பரிணாமங்கள், அதற்கான தீர்வுகள், அதை அடைவதற்கான வழிமுறைகள் இவற்றை ஆராய்வதாகும்.

"ஆண்கள் எந்த அளவு சமூக அமைப்பிலும், பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஈடுபட்டு உரிமை கொண்டாடுகின்றார்களோ அந்த அளவுக்குப் பெண்களுக்கும் மேற்கூறிய துறைகளில் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று கூறுவதோடு அதனடிப்படையில் நன்கு வரையறுக்கப்பட்ட சமூக அமைப்பை உருவாக்கித் தரவும் முயலுகிறது"[53] என்பதாகும்.

சமூக, அரசியல், பொருளாதார, அலுவலக அமைப்புகளில் ஆண் மேலாதிக்கத்தை இனம் காட்டுவது, சமூகத் தோற்றத்தை ஆராய்வது. தாய்வழிச் சமூக அமைப்பிலிருந்து பின் தந்தை வழிச் சமூக அமைப்புத் தோற்றம் பெற்றதையும், அம்மாற்றத்தின் விளைவுகளையும் எடுத்துரைப்பது. பெண்கள் சமத்துவம், மதிப்பு என்பவற்றை வீட்டுக்குள்ளேயும், வெளியேயும் பெறுவதற்கான போராட்டமாகும்.

இவ்விளக்கங்கள் இன்று பெண்களுக்குச் சமூக அமைப்பில் ஏற்பட்டுள்ள பல்வேறு சிக்கல்கள், அவற்றைக் களைவதற்குக் காணவேண்டிய வழி முறைகளை அடிப்படையாகக் கொண்ட சிந்தனையே பெண்ணியச் சிந்தனை என்பதை எடுத்தியிம்புகின்றது. இயற்கையின் படைப்பில் இருபாலரும் அனைத்து நிலைகளிலும் சமம் என்பது பெண்ணியச் சிந்தனையாக அமைகிறது.

ஆண் - பெண் இருவரும் சம உரிமை பெறும் வழியைக் காணுதல், கல்வி கற்று ஆணுக்குச் சரிநிகராக அலுவல் பார்த்து பொருளீட்டுதல் கடமைகளையும் செயற்படுத்த மட்டுமே உரிமையுள்ளவள் என்ற ஆண் ஆதிக்கச் சமூக அமைப்பை மாற்றுதல் பெண்ணின் தனித்தன்மை. தனிமையான ஆளுமையை வெளிப்படுத்திடவும், தன் திறமைகளை வெளிப்படுத்தவும் குடும்ப சமூக நிறுவன அமைப்புகளில் அவள் பங்குநிலை தடையாவதை எதிர்த்தலும், பெண்ணுக்கு இழைக்கப்படும் சமூகக் கொடுமைகளை எதிர்த்தலும் ஆகியன பெண்ணியத்தின் நோக்கமாக அமைகின்றன.

இந்திய மரபு வழியான பின்னணியில் தமிழ்ச் சமுதாயத்தில் மிகுதியாக அல்லல்களுக்கு ஆளாவதற்குக் காரணமாக அமையும் குடும்ப அமைப்பு கற்புக் கோட்பாடு என்பனவை நெகிழ்ச்சி பெற்று மதிப்பிட்டுக்குள்ளாவதையும், பெண்ணியச் சிந்தனையின் மைய இழைகளாகத் தமிழகத்தில் காண்கிறோம். சமய, பண்பாட்டு மரபுகளில் பெண்கள் இழிவு படுத்தப்படுவதையும் பெண்ணுரிமை இயக்கம் எதிர்க்கிறது. இதனைச் சில வெளிநாட்டுப் பெண்ணியச் சிந்தனையாளர்கள்

வரவேற்றுள்ளனர். அந்தப் போக்கு கிழக்கத்திய நாடுகளிலும் பரவி வருவதை ஊடகங்களில் காணமுடிகிறது.

"பெண்ணுரிமை என்றால் கட்டுப்பாடற்ற வரன் முறையற்ற - பாலுறவுச் சுதந்திர நாட்டமுடையவர்களாகப் பெண்கள் உள்ளனர் என்று காட்டும் போக்குத் தவறானதாகும், பெண்ணுரிமை இயக்கத்தின் நோக்கத்தைக் கொச்சப் படுத்துவதுமாகும்"[54] என்பர்.

பெண்கள் அடிமைத்தனத்தை உதறிவிட்டு, ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி எந்தச் செயல்களையும், எந்தக் கருத்துக்களையும் எவ்விதத் தடையுமின்றி முழுமையாகத் தெரிவிக்கும் உரிமையைப் பெற்றுத் திகழ வேண்டும் என்ற சிந்தனை புலப்படுகின்றது.

பெண்ணிய இயக்கமும் தத்துவமும்

பழங்காலம் தொட்டுப் பெண்கள் ஆண்களைச் சார்ந்து வாழ்ந்து வரும் சூழலே உள்ளது.

"சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை"[55]

என்பது வள்ளுவம். இளமையில் தந்தையும், மணவாழ்வில் மணாளனும், முதுமையில் மகனும் பெண்ணைக் காத்தர்க்குரியவர்காளக இருப்பதைக் காண்கின்றோம். பெண்களின் உரிமைகள் மதிக்கப்படவில்லை, சமமாக நேசிக்கப்படவில்லை. அவற்றை எதிர்நோக்கும் கருவாகப் பெண்ணியத் தத்துவம் காணப்படுகிறது.

பெண்ணிய இயக்கமானது “பெண்கள் தீர்க்க ஆலோசித்து சரியான முடிவெடுத்து அவர்களின் விருப்பப்படி வாழ்க்கையை நடத்திச் சென்று ஒரு சமுதாயத்தை உருவாக்குவதாகும். இது பெண்களிடையே பல மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களின் மேலோங்கிய வாழ்க்கையை அடைய உதவும் புரட்சிகரமான செயலாகும்”[56] என்பர் முத்துச் சிதம்பரம்.

“ஆண் மேலாதிக்கத்தில் வழிவழியாய் வந்த பண்பாட்டின் அடிப்படையில் பெண்கள் தனித்துவம் பெறாமல் வாழ்ந்து கொண்டிருப்பதையும் ஆண்களின் பாலியல் தேவைக்குப் பயன்படு பொருளாகத் தள்ளப்பட்ட விதத்தையும் ஆண்களைச் சார்ந்து அவர்களின் நலம் பேணுவதையே வாழ்வாகக் கொண்டுள்ள நிலையையும் எடுத்துரைக்கின்றது”[57] என்பர். பெண்ணியத் தத்துவம் என்பது ஆண்களின் மேலாதிக்கத் தனித்தத்துவம், பாலியல் தேவை போன்றவைகளிலிருந்து உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகக் காணப்படுகிறது.

தமிழ்ச் சமுதாயத்தில் பெண்ணியம்

தமிழ்ச் சமுதாயம் பெண்களை ‘கற்பைப் போற்று’ ‘கற்புடையவளாக வாழ்வது’ என்று சொல்லிச் சொல்லியே அவர்களை வாழ்வின் மீது மாற்ற இயலாத விருப்பம் உடையவர்களாகத் தயார் படுத்தியது. தன்னைச் சிதைத்தாவது துன்புறுத்தியாவது ‘கற்புக்கரசி’ என்று புகழ் பெறவேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் மனதில் ஏற்படுத்தியது இச்சமூகமேயன்றி வேறில்லை.

காலம் செல்லச் செல்ல உளவியல் சார்ந்ததாக வலுப்பெற்று "தான் மெல்லியாள் கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட வேண்டியவள் வீட்டை விட்டு தனியே வெளியே வரத் தகாதவள், எல்லாப் பருவத்திலும் ஆண்மகன் துணை வேண்டுபவள் என்ற எண்ணத்தைப் பெண்களிடையே ஏற்படுத்தியது"[58] என்பர் இரா.பிரேமா.

தன் தாய், தமக்கையர், சுற்றுப்புறத்துப் பெண்கள் இவர்களின் மேற்கூறிய மனோபாவமும் இயக்கமும் இக்கருத்துக்களுக்கு வலுவூட்டி அதை விட்டு விலகி எண்ணவும் செயல்படவும் நினைக்காதளவிற்கு அவர்களை உருவாக்கி விட்டது.

தமிழ்ச் சமுதாயத்தில் கற்புக் கோட்பாடு வேர் கொண்டதற்கு ஆண் மேலாதிக்க ஆளுமை உணர்வுகளும், தந்தை வழிச் சமூக அமைப்பின் கலாச்சார மரபுகளுமே காரணமாகும். அச்சமுதாயத்தில் ஆண் மேலாண்மை உடையவனாகவும், பெண் அவனுக்கு அடங்கியவளாகவும் கற்பிக்கப்பட்டது. இதனால் சமுதாயத்திலும் குடும்பத்திலும் பெண்கள் இரண்டு நிலைகளைப் பெற்றனர். அவர்களின் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

தந்தை வழிச் சமுதாய அமைப்பில் "பெண்கள் ஆண்களால் நிர்வாகிக்கப்படவேண்டிய உடைமையாகக் கருதப்பட்டனர். ஆண்மகன் தன்னுடைய சொத்தைத் தன் உதிரத்தில் தோன்றிய ஆண் வாரிசே அனுபவிக்க வேண்டும் என்று நினைத்தான். அதைச் செயலாக்கும் பொருட்டு ஒருவனுக்கு ஒருத்தி"[59] என்ற சமுதாயக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினான்.

சொத்துரிமையை முதன்மைப்படுத்தும் நிலையில் சமூக அமைப்பில் ஆண் ஒருவனுக்கு ஒருத்தி என வரையறுத்துக் கொண்டான். அவன் மட்டும் மனம் போல் வாழலாம் எனக் கொள்கை வகுத்தான். இது சமதர்மம் அற்றாத ஒரு சார்புடையதாக அமைந்தது. எனவே சொத்துரிமையையும் தனிமனித மேலாண்மையும் முதன்மைப் படுத்தப்பட்டு பெண் இழிவு படுத்தப்பட்டாள். ஆடவன் ஆதிக்கமுடையவனாக உள்ள நிலை மிகப் பழங்காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது. சமுதாயத்தில் பெண் அடிமையாகவே நடத்தப்பட்டாள் எனக் கருத இடமுண்டு.

தமிழ்ப் பெண்ணியம்

தமிழ் மொழியின் தொன்மை இலக்கண நூலான தொல்காப்பியப் பொருளதிகாரத்தில், மக்களுக்குரிய வாழ்க்கைக்கு இலக்கணம் வகுக்கின்றது. பெண்களை மரபுரிமை வாய்ந்தவர்களாகக் கருதுகின்றது. பெண்களைத் தலைவி, தோழி, செவிலி, நற்றாய், விறலியர், பாடினி, பரத்தை என்ற பல்வேறு பாத்திரங்களாகப் படைத்துக்காட்டுகிறது. தொல்காப்பியத்தில் ஆணுக்குப் பெருமையும் உரனும் என வகுத்து, பெண்ணுக்கு அச்சமும், நாணமும், மடனும் எனப் பண்புநிலைப் பாகுபடுத்துகிறது. திருமணப் பந்தத்தில் ஒப்புமைகள் பத்தும் இருவருக்கும் பொருந்தும் என்றாலும், **'மிக்கோளாயினும் கடிவரை இன்றே'** எனத் தொல்காப்பியர் உரைப்பது பெண்களின் கால்கள் மட்டுமன்று கருத்துக்களும் வாயிற்படி தாண்ட அனுமதிக்கவில்லை என்பது புலனாகிறது.

தலைவியின் பண்புகள்

பெண்கள் களவு, கற்பு என்ற இரு நிலையிலும் சுட்டப்பட்டுள்ளாள். அச்சம், நாணம், மடம் முதலிய பண்புகள் பெண்களுக்குரிய பெரும் பண்புகள் என்பதனை,

"அச்சம் நாணும் மடனும் முற்றுறுதல்
நித்தமும் பெண்பாற் உரிய என்ப"[60]

எனும் நூற்பா மூலம் குறிப்பிடுகின்றார். தலைவியின் அகக் கூறுகளாக நாணமும், மடமும் புறச்செயலாக அச்சம் என்று கூறக் கூடிய நடுக்கம் இவை பெண்ணின் குறை இயல்புகளாகக் கூறுகிறார்.

கற்பு நெறி

'கற்பு' என்பது கல்போன்ற உறுதியான 'பூ'. ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்தல் கணவன் கற்பித்த வழியில் மனைவி நிற்றல் போன்ற திண்மை நெஞ்சுடையவராக இருத்தல் எனப் பொருள் கூறுவர்.

"உயிரினும் சிறந்தன்று நானே நாணினும்
செய்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"[61]

எனும் நூற்பாவில் பெண்கள் உயிரினும் சிறந்தது நாணம் அதனினும் சிறந்தது கற்பு என்கிறார். இக்கற்பினை வள்ளுவர்,

'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்"[62]

எனும் குறளில் இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதி நிலை இருக்கப்

பெற்றால் பெண்ணை விடப் பெருமையுடையவை வேறு என்ன இருக்கிறது எனக் கூறுகிறார்.

தலைவன் பணிவும் தலைவி உயர்வும்

கற்புக் காலத்தில் தலைவன் தலைவி ஊடல் நிகழ்வுகளில் தலைவிக்கு உயர்வு கொடுத்திருக்கிறான் என்பதை,

> ***"மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்***
> ***நினையுங் காலைப் புலவியுள் உரிய"***[63]

எனும் நூற்பா உணர்த்தும். தலைவியின் உயர்வைத் தலைவன் வழிச் சிறப்பித்துள்ளார்.

தோழி

இவள், தலைவன், தலைவியின் களவு, கற்பு வாழ்வில் இன்றியமையாத இடத்தைப் பெறுபவள். செவிலியின் மகளாக விளங்கியவளே தலைவிக்குத் தோழியாக விளங்கியுள்ளதை,

> ***"தோழி தானே செவிலி மகளே"***[64]

என்ற நூற்பா பறைசாற்றும். செவிலியின் மகள் தொல்காப்பியர் காலத்தில் தலைவியின் குண நலங்களையும், தலைவியின் குற்றத்தையும் எடுத்தியம்புவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். இவள் வாயிலாகப் பெண்ணுக்குப் பெண்ணே உதவி செய்யும் தன்மை அச்சமூகத்தில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை உணரமுடியும்.

குண இயல்புகள்

தலைவன் தவறு செய்யும் போது அதை எடுத்துக் கூறுபவளாகக் காணப்படுகிறாள்.

“பரத்தை மறுத்தல் வேண்டியும் கிழவி
மடத்திற்கு கிழமை யுடைமை யானும்
அன்பினை கொடியை என்றலும் உரியர்”[65]

எனும் நூற்பாவில் தலைவன் பரத்தை ஒழுக்கத்தை நாடும் போது அவ்வாறு செய்வது தவறு என்று தோழி சுட்டிக் காட்டுகிறாள். தலைவிக்குத் துன்பம் ஏற்படுகின்ற பொழுது அத்துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்று நடத்தல் வழி பெண்ணுக்குப் பெண் முன்னிற்பது புலப்படுகிறது.

நற்றாய்

இவள் தலைவியைப் பெற்ற தாய். தலைவியின் வாழ்க்கை நலத்தில் மிகுந்த அக்கறை கொண்டவள்.

“தாய்க்கும் உரையாள் உணர்வும் படினே”[66]

என்பதில் தாய் மகளின் மீது கொண்ட ஐயத்தினையும், செவிலியின் மூலம் தன்மகளின் களவொழுக்கத்தினை உணர்த்துகொள்பவள், சினங் கொள்ளமாட்டாள். இவ்வாறு நற்றாயின் குணங்கள் காணப்படுகின்றன.

செவிலி

செவிலி என்பவள் வளர்ப்புத்தாய். தாய் அன்போடு தோழி போலத் துணையாகவும் இருப்பவள். இவள் தலைவியைத் தக்க பருவத்தில் ஆற்றுப்படுத்துபவள். செவிலி நல்லவை உரைத்து அல்லவை கடிந்து நல்வழிப்படுத்தும் திறப்பாடு மிக்கவள். இவளின் இத்திறத்தினைத் தொல்காப்பியர்,

> **"கழவினும் நிகழ்வினும் எதிர்வினும் உழிகொள**
> **நல்லவை யுரைத்தலும் அல்லவை கடிதலும்**
> **செவிலிக்குரிய வாகும் என்ப"[68]**

எனச் சுட்டுவர். செவிலி, தலைவி தலைவனுடன் சென்ற நிலையில் அவளை நினைந்து இரங்குகிறாள். பெற்ற தாயைவிட வளர்ப்புத் தாயான செவிலியே தலைவியிடம் மிகுந்த அன்பு கொண்டுள்ளாள்.

பரத்தை ஒழுக்கம்

தொல்காப்பியர் கூற்றுக்குரியவர்களாகக் கூறும்போது பரத்தை, காமக் கிழத்தி, இருவரையும் தனித்துக் கூறாமல் கற்பில் புல்லுதல் மயக்கம் என்ற நூற்பாவில் சேர்த்துக் குறிப்பிடுகின்றார். பரத்தையர், காதற் பரத்தை, இற்பரத்தை, காமக்கிழத்தி, கணிகையர் இனத்துச் சேரிப்பரத்தையர் என்று பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டுள்ளது புலனாகும். ஆண் இன்புற்று இருப்பதற்கு இப்பரத்தையர் ஒழுக்கம் காணப்பட்டாலும் முறையாகக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டுள்ள பெண்கள் தன் கணவன் பரத்தையிடம் சென்று வருவதை மறுத்துள்ளார்கள். மனித உரிமைகள்

மகளிர்க்கு மறுக்கப்பட்டிருந்தன. அதற்கு வருந்தியதாகத் தெரிகிறது தவிர, யாரும் எதிர்த்து எழவில்லை என்பது தொல்காப்பியக் காலப் பெண்டிரின் நிலையாக உள்ளது.

அழகில் சிறந்த விறலியர் ஆடற்கலைகளிலும், பாடினி பாடுவதிலும் வல்லவர்களாகவும் இருந்துள்ளனர். இவர்கள் மன்னன் போர் வெற்றியைப் புகழ்ந்து பாடுகின்றவர்களாகவும் அப்போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களை இசைபாடி துன்பத்தை மறக்கச் செய்தவர்களாகவும் விளங்குகிறார்கள்.

இவ்வாறு தொல்காப்பியர் காலத்துத் தலைவி, தோழி, நற்றாய், செவிலி, பரத்தையர், விறலியர், பாடினி போன்றவர்கள் தங்களுக்குள்ள பண்புகளுடன் வாழ்ந்துள்ளார்கள். தொல்காப்பியர் காலப் பெண்களுக்குக் குடும்பத்தில் சிறப்புரிமையும், சமூகத்தில் மதிப்பும் இருந்தமையை அறிய முடிகிறது.

சங்க காலம்

சங்க காலத்தைத் தமிழர்களின் பொற்காலம் என்பர். தாய்வழிச் சமூகத்திற்கு முதன்மை தரும் இனக்குழு வாழ்க்கை காலப்போக்கில் மறைந்து, பேரரசுகளும் சிற்றரசுகளும் தோற்றம் பெற ஆரம்பித்தன. அச்சூழலில் தனிச் சொத்துரிமை நோக்கிய மதிப்பீடுகள் வளர ஆரம்பித்தன. பெண்ணிய நிலைமைகளில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. கருத்துக்களுக்குச் செயல்களுக்கு ஒத்துப் போவதாகத்தான் காணப்படுகிறது.

பெண்பாற்புலவர்கள்

சங்ககால ஔவையார்,

> **"எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி**
> **நல்லை வாழிய நிலனே"**[68]

எனும் பாடலடிகளில் ஆணுக்கு முன்னுரிமை வழங்கும் முறையினை மறுக்காது ஏற்கிறார்.

> **"ஈன்று புறந் தருதல் என் தலைக்கடனே**
> **சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"**[69]

என்ற பொன்முடியார் பாடல்வழி ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள கடமைகள் சுட்டப்பட்டுள்ளன. பெண்பாற்புலவர்களின் பாடல்களில் ஆண்களின் செயல்கள் சுட்டப்படுகின்றன. ஆண்களின் உணர்வுகளைப் பெண்கள் ஏற்றுக்கொண்டாலும், அவர்கள் விழிப்புணர்வு குன்றாதிருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. இற்செறிப்பு எனும் கோட்பாடு தொடங்கும் வரை பெண்கள் ஆண்களைப் போல பல இடங்களில் பழகினாள் என்பதைச் சங்கச் செய்யுள்கள் பதிவு செய்கின்றன.

தாய்ப்படிமம்

சங்க காலத்தில் கணவன், மனைவி, மகன், மகள் என்ற உறவுகளில் தாய்ப்படிமம் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் தனித்து இயக்கக் கூடியவளாகத் தாய் விளங்குகிறாள். "பெண்மை இல்லையேல் உலகு இல்லை. உலகத்திற்கும் மக்களுக்கும் அடிப்படை பெண்தான் அதில் முதன்மை பெறுவது தாய்மை"[70] என்பர்.

சங்க இலக்கியங்களில் அகத்திலும் புறத்திலும் சிறப்பிடம் பெறுவது தாய்ப் படிமமாகும். உயிர்களுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர்

"தாய்போல் கழறிக் கழகிக் கோடல்
ஆய்வினைக் கிழகத்திற்கும் உரித்தென மொழிய
கிளவியோடு மயங்கிய காலையான"[71]

என்பது நோக்கத் தக்கது.

குடும்பம்

பெண் குடும்ப அமைப்பில் தன் பிள்ளைகளுக்கு முதன் முதலில் அன்பையும், அறிவையும் கற்றுத்தருபவளாக விளங்குகின்றாள். "தாயின் இதயம் தான் பள்ளி என்ற டீச்சர். கூற்றும், அறிவு மிக்க ஒரு தாய் நான்கு பேராசிரியருக்குச் சமம் என்ற ப்ரோர் கூற்றும்"[72] இதனை உறுதிப்படுத்துகின்றன.

களவுக் காலத்தில் தாயார்

தன் மகள் கனவில் உளறுவதைக் கேட்டவுடன் அதன் உண்மைகளைத் தோழி மூலம் அறிகிறாள். தலைமகளின் பண்புகளை மகிழந்து அத்தலைமகனுக்குத் தன் மகளை மணமுடிக்கத் தெய்வத்தை வணங்குகிறாள். இதனை

"கறிவார் சிலம்பிற் கடவுட் பேணி
அறியா வேலன் வெறி யெனக் கூறும்
அறுமணங் கொள்ளுவை அனையாவாள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோக்கவே"[73]

எனும் பாடல் களவு நிலையில் தாய் எவ்வாறு தன் மகளுடைய வாழ்வில் அக்கறை கொள்ளுகிறாள் என்பதை அறிய முடிகிறது.

சமூகத்தில் சிறப்பிடம்

தாய் தான் பெற்ற மகனை நற்பண்புகளுடனும், வீர உணர்வுடனும் சிறந்த முறையில் வளர்த்ததை,

"ஈன்ற ஞான்றினும் பெரிதும் உவ"[74]

"செருமுகம் நோக்கிச் செல்
தோற்று விளன் மாதோ போர்க்களத்தானே"[75]

எனும் அடிகள் வாயிலாக உணர முடிகிறது.

மகனை நல்ல முறையில் வாழச் செய்வதும் சமூகத்தில் தகுதி வாய்ந்த மகனை உருவாக்குபவளே சிறந்த தாய் என்பதைச் சங்ககாலப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

சமயமரபுப் பெண்கள்

சங்க காலத்தையடுத்து சமய மரபுகளின் தாக்கத்தால் பெண்களுக்குச் சில கொடுமைகள் இழைக்கப்பட்டன. அவ்வகையான கொடுமைகளை எதிர்த்துக் குரல் கொடுக்கவில்லை. ஆணாதிக்கத்தினால் பெண்கள் விழிப்புணர்வு இல்லாமல் இருந்தனர் என்பதை உணர முடிகிறது.

"கொடிய மரபுகளுக்கு எதிர்ப்பாகத் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் செயல் இல்லாமையாலோ அன்றி அவற்றை ஏற்றிப்

பணிதலே பெண்மையின் இலக்கணம் எனக் காலங்காலமாகக் கற்பிக்கப்பட்டதாலேயோ அக்கொடுமைகளுக்கு ஆளாகும் பெண்கள் அவற்றை மறுப்பின்றி ஏற்று உடன்பட்டுப் போவதாகவே அவை சுட்டுகின்றன."[76] என்று எம்.ஏ.சுசீலா குறிப்பிடுகிறார்.

கணவன் இறந்த நிலையில் கைம்மை நோன்பை நோற்ற பெண்களுக்கும், கணவன் இறந்த நிலையில் உடன்கட்டை ஏறத்துணிந்தனரேயன்றி எதிர்த்துக் கூறவில்லை. இதற்கு,

"அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளென் காழ்த்தொடு புளிபெய்து
அட்டவேளை வெந்தையும்"[77]
"சிறு வெண் ஆம்பலும் அல்லியும்"[78]

பரற் பெய் பள்ளியில் பாயின்றி வதியும்"[79]

எனும் அடிகள் மூலம் பெண்கள் அடிபணிந்து அக்கொள்கைகளை ஏற்று நடந்தனர் என்பது வெளிப்படுகின்றன.

விதவைப் பெண்கள்

வீரம், புகழ், கொடை ஆகிய தன்மைகளை விளக்கிக் கூறும் புறநானூற்றில் விதவைப் பெண்களை,

"கலி கால மகளிர்"[80] என்றும்

"உயவற் பெண்டிர்"[81]

எனக் குறிப்பிட்டுள்ளனர். சங்ககாலச் சமுதாயத்தில் இவர்கள் அங்கீகரிக்கப்படாதவர்களாகத் தங்கள் உரிமைக்காகப் போராடாது நலிவுற்றிருந்ததையும் இவ்வடிகள் புலப்படுத்துகின்றன.

கைம் பெண்கள்

கணவனை இழந்த பெண்கள் கைம்பெண்கள் என அழைக்கப்பட்டனர். பெண்களின் கற்புநிலை அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. கற்பை முதல், இடை, கடை, என்று வகைப்படுத்தி கணவன் இறந்தவுடன் அவனுடன் உடன்கட்டை ஏறி உயிர்விடுதலே சிறப்பானது என்ற மனப் போக்குக் காணப்பட்டது.

உரிமை மீறல்கள்

சங்கப் பாடல்களில் திணை - துறைகளுக்கேற்ப காதல் வயப்பட்ட பெண்ணின் நிலைகளையும் உடல் சார்ந்த பசலைத் துன்பங்களையும் புலவர்கள் பாடியுள்ளனர் என்பதை,

> **"அறிந்தோள்ர்தானே நானே**
> **நம்மொடு நனிநிகுழந் தன்று மன்னே**
> **தாங்கும் அளவை தாங்கிக் காமம் நெறிதரக்**
> **கைந்றில்லாவே"**[82]

என்ற வெள்ளிவீதியாரின் பாடல் எடுத்துரைக்கின்றது.

> **"முட்டவேன் சொல்**
> **தாக்குவேன் சொல்**

ஒரேன் யானுமோர் பெற்றிமேலிட்டு

ஆ அ ஒல்லெனக் கூவுவேன்"[83]

எனும் பாடலில் பெண்கள் மனப் போராட்டங்களை வெளிப்படுத்த மரபுகளை மீறிச்செல்கிறார்கள். பாலியல் பிரச்சனைகளையும் அதனால் ஏற்படும் துன்பங்களையும் வெளிப்படையாக எடுத்துரைக்கின்றன.

முதிர் கன்னி நிலைமை

முதிர் கன்னி உள்ளத்திலே ஆயிரம் கனவு விதைகள். தன் வீட்டை இருட்டில் வைத்துவிட்டு யார் வீட்டுக்கோ விளக்கேற்ற அழைத்ததன் விளைவு, அர்ச்சனைக்கு வராத அரளிப்பூக்களாய், வரதட்சணை நாரில் கட்டடப்படாமல் உதிர்ந்துகொண்டே இருக்கிறார்கள். மண்ணில் புதைக்கப்பட்ட பொருள்கள் அழுகி மக்கி போவதைப் போல் பெண்ணின் இளமை அழகுகள் திருமணமாகாமல் மூப்படைவதை,

"கலிமடைக் கள்ளின் காடி அன்னவும்

இள நலம் கற்கடை ஞுழியச்

தேறும் வாழியோ முதிர் சம்பியாமே"[84]

எனும் நற்றிணைப் பாடலில் ஔவையார் இளமை போய் முதிர் கன்னியாகும் நிலையை எடுத்துரைக்கின்றார்.

காப்பியக் காலம்

தமிழ்க் காப்பியக் காலத்தை முற்காலம் (சிலம்பு, மணிமேகலை) என்றும் பிற்காலம் (இராமாயணம், சீவக சிந்தாமணி) எனவும் இரண்டு கால கட்டமாகக் கூறுவர். இலக்கிய வகையுள் காப்பியம் நீண்ட

பாட்டுடைச் செய்யுளாகவும், பாடல்களாகவும் காணப்பட்டன. 'பாவிகம் என்பது காப்பியப் பண்பே' என்பர். இவை ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுங் காப்பியம் எனும் இரு பிரிவில் அடங்கும். இக்காப்பியங்கள் பெண்களைப் பற்றியும், பெண்களிடம் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த ஒரு தூண்டுகோலாக இருந்துள்ளன.

சிலப்பதிகாரம்

அறிஞர்களால் போற்றப்பெறும் முத்தமிழ் காப்பியமே சிலப்பதிகாரமாகும். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உறுத்துவந்தூட்டும் என்ற முப்பெரும் உண்மைகளை விளக்குவதுடன் மூன்று நாடுகளின் வளங்களையும் எடுத்துரைக்கின்றன. இக்காப்பியம் கண்ணகியைத் தலைவியாக்கி பெண்மையைப் போற்றுகின்றது.

கற்பில் கண்ணகி

இவள் தமிழ் கற்பின் அடையாளம். "தன்னேரில்லாத தலைமக்களைப் படைத்துக் காட்டவே காப்பியங்கள் எழுந்தன. சிலப்பதிகாரத்தில் கண்ணகி உலகேத்தும் தலைமகளாய் ஈடு இணையற்று நிற்கிறாள்"[85] என்பர்.

காப்பியத்தில் பெண் தலைமாந்தராக இருப்பவள் கண்ணகி. காப்பிய ஆரம்பத்திலிருந்து முடிவு வரை கண்ணகியை ஒருபத்தினித் தெய்வமாகவே காட்டுகிறார். அத்தெய்வத் தன்மை பொருந்திய கண்ணகியை,

"போதில் ஆர் திருவினாள் புகழ்உடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறம் இவள் திறம் என்றும்
மாதரார் தொழுது ஏற்று வயங்கிய பெருங்குலத்துத்
காதலாள் பெயர் மன்னும் கண்ணகி என்பாற் மன்னோ"[86]

என்று சிறப்பித்துக் கூறுகிறார். வணிகக்குடியில் பிறந்த பெண் தனது கற்பு நிலையில் உயர்ந்தது சுட்டப்பட்டுள்ளாள்.

பண்புகளில் உயர்நிலைப் பெண்கள்

கண்ணகிக்கு அடுத்த படியாகக் காப்பியத்தில் சிறப்பாகப் போற்றக் கூடியவள் மாதவி. இவள் ஆடற்கலையில் வல்லவள். கோவலன் ஒருவனையே தன்மனத்தில் நிறுத்தி அவனுடன் வாழ்ந்து மணிமேகலை என்ற பெண்ணைப் பெற்றெடுத்து இல்வாழ்வில் சிறந்து விளங்குகிறாள். கோவலன் இறந்தவுடன் துறவு வாழ்க்கை மேற்கொள்கிறாள். அவள் துறவு பூண்டதை,

"மங்கல மடந்தை மாதவி தன் னோடு
கைம் பொண் மாறி செய்கையில் பொழிய"[87]

இவ்வாறு குறிப்பிடுகிறார். கணிகையர் குலத்தின் செயற்பாடுகளை விடுத்து, ஒரு சிறந்த பெண் எவ்வாறு இல்வாழ்க்கை வாழ்வாளோ அதே போன்ற வாழ்வினை வாழ்ந்தாக இளங்கோவடிகள் கூறுகிறார். அக்காலப் பெண்ணின் செயல்திறம் எவ்வாறு இருந்துள்ளது என்பதையும் அதைப்பெற எடுத்த முயற்சியும் பெண்களுக்குப் பெருமை சேர்க்கிறது.

தேவந்தி என்பவள் செயல் திறத்தில் கண்ணகிக்கு இணையாகக் கருதப்பட்டதற்கு அவளின் ஒழுக்க நெறியே காரணமாக அமைகிறது.

கவுந்தியடிகள் ஒரு சமணத்துறவி. பிற சமயத்தைச் சார்ந்த கண்ணகி, கோவலனுக்கு அறிவுறைகூறி நல் வழிப்படுத்தும் பெண்ணாக இருப்பது அன்புநெறியை வெளிப்படுத்தும் பாத்திரமாகப் படைக்கப்பட்டதன் நோக்கம் விளங்குகிறது.

சிலம்பில் கண்ணகி கோவலனின் மனைவியாவாள். மாதவி கோவலன் ஒருவனுக்கே மனதைக் கொடுத்து வாழ்ந்தவள். மணிமேகலையைப் பெற்றவள். ஆனால், மணிமேகலையை கண்ணகியின் மகள் என்று மாதவி கூறுகிறாள். இதற்குக் காரணம் பரத்தையருக்குச் சமூகத்தில் மதிக்கத் தகுந்த நிலையில்லை. இதனால் கண்ணகியின் மகள் என்று கூறுகின்றாள். இது பெண்ணியத்திற்குப் புறம்பான ஒன்றாகும். (பரத்தை) மாதவியின் மகள் எனின் கோவலன் தந்தை என்று கூறமுடியாததாலும் பரத்தை குலப் பெண்ணாக கருதுவர் என்பதாலும் மாதவி கூறுகின்றாள். மாதவியின் இக்கருத்து அவளின் புரட்சிகரமான கருத்தாகும். ஆனால் அவளால் பரத்தையர் குல இழிவைப் புறக்கணிக்க முடியவில்லை. இது பரத்தையரின் நிலையைக் காட்டுவதாகவும் அன்றைய பெண்ணிய நிலையைக் கூறுவதாகவும் உள்ளது.

மணிமேகலை

காப்பியத்தில் மணிமேகலை தலைமைப் பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளாள். இவள் மாதவியின் மகளாக இருப்பினும் கண்ணகியின் மகளாகவே தன்னை வெளிப்படுத்துகிறாள். இளம் வயதில் துறவு பூண்டு பல அறச்செயலை மேற்கொண்டவள். பெண்களின்

வளர்ச்சிக்கும், செயலுக்கும் பாடுபட்டவள் இவள். பசிக்கு மருந்தாய் மாறியதற்கு உயிர்களிடத்து அன்பு செலுத்தவேண்டும், பசித்தவர்களுக்கு உணவிடுதல் வேண்டும் என்ற கொள்கையே காரணமாகும். இச்சிறப்பைப் பெற்ற மணிமேகலைக்குப் பெயர்சூட்டும் விழாவில் மாதவியின் கனவில் மணிமேகலா தெய்வம் தோன்றி,

"காமன் கையுறக் கடு நனவயதுக்கும்

மாபெருந் தவக் கொடியின் றனை யென்றே"[88]

என்றுரைத்தது. காப்பியங்கள் குடும்ப வாழ்க்கையை எடுத்து இயம்புகின்றன. சாத்தனார் இளம்பெண் ஒருத்தியின் துறவு நிலைகொண்டு பெருங்காப்பியம் படைத்துள்ளார்.

பெண்களை உயர்வுபடுத்தும் நோக்கம் இளங்கோவிடம் புலப்படுகின்றது. மணிமேகலை மாதவி மகள். இவளுக்குக் கண்ணகியின் மகள் என்ற சிறப்பைக் கொடுப்பதும், மணிமேகலையை உதயணன் என்ற அரசகுல மகன் மணக்க விரும்பிவரும் போது அதனை விடுத்து அறப்பணி செய்ய விழைகிறாள். பரத்தையருக்கேயுரிய ஆடவர் உறவை முற்றிலும் தடுக்கின்றாள். மனிதனின் அத்தியாவசிய தேவை, உணவு, உடை. இதில் உயிர்களுக்கு வாழ அவசியமான உணவை மணிமேகலை வழங்குவதாகப் பாடுவது பெண்ணியத்தின் உயர்வை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

மாதவி தன்மகள் மணிமேகலை தவத்திற்கென்ற பிறந்தவள் என்பதை,

“அருந்தவம் படுத்த வல்ல வதியாவதும்

திருந்தாச் செய்கை தீத் தொழிற்படாஅள்”[89]

எனும் அடிகள் மூலம் மொழிகின்றார்.

சிறைச்சாலைகளை அறச்சாலைகளாக மாற்றுதல்

மணிமேகலை காயசண்டிகை வடிவம் கொண்டு சம்பாபதியின் கோயிலிருந்த அமுத சுரபியைக் கையிலேந்திக் கொண்டுப் பசித்தவர்களுக்கு உணவளிக்க நகரத்தில் உள்ள சிறைச்சாலைக்குச் சென்றாள். அங்குச் சென்று தண்டிக்கப்பட்டு பசியால் வருந்துவோரை அருளுடனும் இன்முகத்துடனும் இனிய மொழிகள் பேசி உணவளித்தாள். இதனைக் கேள்வியுற்ற அரசன் மணிமேகலையை நோக்கி என் மக்களின் பசிக் கொடுமையிலிருந்து காக்க நான் என்ன செய்ய வேண்டும் என்றான். அதற்கு மணிமேகலை சிறைச்சாலையில் உள்ள கைதிகளை விடுவித்து அவ்விடத்தை அறச்சாலையாக மாற்ற வேண்டும் என்று கூறினாள். அரசனும் அவ்விடத்தைப் புண்ணியம் செய்யும் இடமாக மாற்றினான் என்பதை,

“சிறை யோர் கோட்டஞ் சீத்தகு னொஞ்சத்

அறவோர்க் காக்கு மறுவாழிய ரென

கறையோ நில்லாச் சிறையோர் கோட்டம்

அறவோர்க் காக்கின ரைவாள் வேந்தன்”[90]

என்ற அடிகள் வழி அறிய முடிகிறது. இக்காப்பியத்தில் ஒரு பெண் துறவியாகி அறச்செயல்களைச் செய்யும் நிலையில் எவ்வளவு துன்பங்கள்

ஏற்பட்டாலும் அதைத் தாங்கிக் கொண்டு மக்களுக்கு நற்செயல்களைப் புரியும் வகையில் படைக்கப்பட்டுள்ளாள். பெண்ணின் சீறிய செயலுக்கு எடுத்துக்காட்டாய் உள்ளாள் என்பது புலனாகும்.

மணிமேகலை மாதவி மகள். இவளுக்குக் கண்ணகியின் மகள் என்ற சிறப்பைக் கொடுத்தும், மணிமேகலையை உதயணன் என்ற அரசகுல மகன் விரும்பி வந்தபோதும் அதனைவிடுத்து அறப்பணி செய்ய விரும்புகிறாள். கணிகையர் குலத்திற்கே உரிய ஆடவர் உறவை முற்றிலும் தடுக்கின்றாள். மனிதனின் அத்தியாவசிய தேவை உணவு, உடை. உயிர்வாழ அவசியமான உணவை மணிமேலை வழங்குவது பெண்ணியத்தின் உயர்வைக் காட்டுகிறது.

பல்லரிவைக் குடும்பம்

ஒருவன் தன் வீரத்தாலும், நற்செயல்களாலும் எட்டுப் பெண்களை மணக்கிறான். சீவக சிந்தாமணியில் சீவகன் என்பவன் கந்தருவதத்தை, குணமாலை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை, பதுமை ஆகிய எட்டுப் பெண்களை ஒவ்வொரு செயல்களில் மணக்கிறான் என்று காட்டியுள்ளார். இக்காப்பியம் மண நூல் என்று அழைக்கப்படுகிறது. திறமையுள்ள ஆண்மகனை பெண்கள் விரும்புவார்கள். அவனைக் குறை கூறவும் அனுமதிக்கமாட்டார்கள் என்பது புலனாகிறது.

சிந்தாமணியில் சீவகன் எட்டுப் பெண்களை மணப்பதாகக் குறிப்பிடுகிறார். இதில் சீவகனின் வீரத்தைச் சிறப்பிப்பதற்காக உள்ளது. சீவகனின் புகழை விளம்ப அவனின் வீரச் செயல்களைப் போராற்றல்

போன்ற நிலையில் பாடாமல் திருமண நிகழ்வுகளைப் பாடுகின்றது. இக்காப்பியத்தில் பெண்கள் உயர்வுப் பொருளாகவோ சீதை, கண்ணகி, மணிமேகலை போன்ற உயர் காப்பியப் பெண்ணாகவோ யாரையும் பாடவில்லை. பெண்ணைப் போகப் பொருளாகவே கருதியமையால் எட்டுப் பெண்களைத் திருமணம் செய்ததாகப் படைக்கப்பட்டள்ளது. இது பெண்ணியச் சிந்தனைக்குக் குறைவாக மதிக்கப்பட்டதைக் காட்டுகின்றது.

வளையாபதி குண்டலகேசி போன்ற காப்பியங்களில் பெண்கள் தங்களின் நீதிகளையும் உரிமைகளையும் காக்கப் போராடினார்கள் என்பதை எடுத்துக் கூறுகின்றன.

பக்தி இலக்கியக் காலம்

பெண்களின் உயர்வு நிலைகளையும், தெய்வத் தன்மைக்கு ஒப்பாகவும் பக்தி இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. சமயத்தைச் சார்ந்த பெண்கள் தங்கள் மீது திணிக்கப்பட்ட மரபுகளால் பாதிப்புக்குள்ளாகி அவற்றினால் ஏற்படும் வாழ்க்கை அனுபவங்களைத் தங்கள் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆண்டாள்

> **“இறைவனே எவ்வுயிரும் தோற்ற விப்பான் தோற்றி பெண்கள்**
> ....
> ....
> **தன் குணத்தால் என இரங்கும் எங்கள் மேல் வெந்துயம்**
> **வந்தால் அது மாற்று வான்”**[91]

என்பது திருப்பாவைப் பாடல்.

ஆழ்வார்களில் இவர் ஒருவரே பெண்ணாவார். ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் பெண்களுக்கு இதுவரை விதிக்கப்பட்டிருந்த ஒடுக்கு முறைகளையும், தடைகளையும் மீறியமை அறியமுடிகிறது. பாலியல் சார்ந்த அனைத்துக் கலாச்சார கட்டுமானங்களையும் உணர்வுப் பூர்வமாகத் தகர்தெறிந்து தன் எதிர்ப்பைப் பதிவு செய்கிறாள். உண்மையான பக்தியின் மூலம் இறைத்தன்மை அடையலாம் என்ற கொள்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

இக்கால இலக்கியம்

புதினம்

ஒவ்வொரு காலத்திலும் பெண்களை உயர்விக்கக் கவிஞர்களும், சிந்தனையாளர்களும் முயன்றது போல் புதின ஆசிரியர்களும் தங்கள் புதினத்தில் பெண்கள் பிரச்சினைகளை எடுத்தாண்டுள்ளனர்.

“இருபதாம் நூற்றாண்டில் முற்றிலும் மாறுபட்ட சமுதாய பொருளாதாரக் களம், பெண்ணின் அனுபவங்களும், உணர்வுகளும், சிக்கல்களும் விரிவாக எழுத்தாக்கம் பெறத் தக்கதோர் அரங்கினை அமைத்துத் தந்தது”[92]என்பர். இக்காலக்கட்டத்தில் சில எழுத்தாளர்கள் காதலைக் கருப்பொருளாகக் கொண்டு பெண்களின் பல பிரிவினர்களை எடுத்துக்காட்டி வருகின்றனர்.

லெட்சுமி

பெண்களின் மனப் போராட்டங்களையும், சிக்கல்களையும், குழந்தைப் பாசத்தையும், வாழ்வின் மென்மைப் பகுதிகளையும் எடுத்துக்

காட்டுவதில் சிறந்தவர். ஆணுக்குப் பெண் இளைப்பிள்ளை என்பதை உணர்ந்து வெளிக் காட்டுகிறாள். ‘கற்பு’ பெண்ணுக்கு மட்டுமன்று ஆணுக்கும் அது அவசியம் என்பதைப் புதினத்தில் புலப்படுத்துகிறார்.

ராஜம் கிருஷ்ணன்

“பெண் அவள் மாற்றுக் குறைந்தவள் அவள் மெல்லியாள், மலரினும் மென்மையினளாக இருப்பதே அவளுக்குரிய பண்பு. அவள் சுருங்கி, இடைமெலிந்து கொடியாகக் துவள வேண்டும். இரண்டடி வைத்து நடக்குமுன் அவள் செம்பஞ்சுப் பாதங்கள் கொப்புளம் காண வேண்டும் என்ற நடைமுறைக்கு ஒவ்வாத இலட்சிய மரபுகள் பெண்ணின் அறிவு மலர்ச்சியை கவர்ந்து கொண்ட கனத்த இருள்த் திரைகளாக இருந்தன”[93]என்பர். சமுதாயத்தில் பெண்கள் பற்றிய கருத்துக்களையும், பெண்கள் ஆண்டு பற்றிய சிந்தனைகளையும், இழைக்கப்படுகின்ற கொடுமைகளையும் விலங்குகள் எனும் புதினத்தில் எடுத்துக் காட்டுகின்றார்.

இது போன்ற ஜோதிர்லதா, கிரிஷா, சிவசங்கரி போன்றோர் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராகத் தத்தம் புதினத்தில் குரல் கொடுத்தனர்.

ஜானகிராமன்

இலக்கியம் ஆரம்பகால முதல் தாய்மைக்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளது. அப்படிப்பட்ட தாயின் இதயப் போராட்டத்தை ‘அம்மா வந்தாள்’ என்ற புதினத்தில் “நீ வருவே உன் கால்லே விழுந்து

எல்லாத்தையும் எரிச்சிடலாமுன்னு தீர்மானம் பண்ணிட்டேன்"[94] என்று கூறுவதன் வாயிலாக அறிய முடிகிறது.

ஜெயகாந்தன்

இவரின் 'பாரீசுக்குப்போ' 'சில நேரங்களில் சில மனிதர்கள்' ஆகிய புதினங்கள் பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. சு.சமுததிரம் தனது புதினத்தில் இக்கொடுமைகளைக் கூறியுள்ளார்.

இவ்வாறு பெண் எழுத்தாளர்களும், ஆண் எழுத்தாளர்களும் பெண்களுக்குள்ளே துன்பங்களை வெளிப்படுத்தி பெண்ணிய உணர்வுக்கு முன்மாதிரியாகப் புதினத்தைப் படைத்துள்ளார்கள்.

சிறுகதை

தமிழ்ச்சிறுகதையின் முன்னோடி என அழைக்கப்பட்டவர் புதுமைப்பித்தன். இவர் சிறுகதையில் பெண்கள் பிரச்சனைகளையும், பாலியல் பிரச்சனைகளையும் தனது 'துன்பக்கேணி' என்ற சிறுகதையில் கூறுகிறார்.

மு.வரதராசன், ஜெயகாந்தன், மணிக்கொடி காலங்களில் சிறுகதை வளர்ச்சி காணப்பெற்றது. இச்சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

கவிதை

கவிதைத் திறத்தால் சமூகக் கொடுமைகளைச் சாடியவர் பலராவர்.

அவர்களுள் பாரதியார், பாரதிதாசன், கவிமணி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன், வைரமுத்து ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவார்கள்.

பாரதியார்

தமிழ் கவிதை இலக்கியத்தில் பெண்ணிய சிக்கல்கள், பெண் உரிமை, பெண் சுதந்திரம் ஆகியவற்றிற்கு முதல் குரல் கொடுத்தவர் பாரதி. தனக்கென்று தனி நெறியினை ஏற்படுத்திக் கொண்டு பாடுபட்டவர். 'கற்பு' என்று சொன்னால் அதை ஆண், பெண் இரு பாலருக்கும் பொதுவில் வைப்போம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். பாரதி பெண்ணியச் சிந்தனைகளைத் தன்பாடல், கட்டுரை, பேச்சு என்று அனைத்து வடிவத்திலும் வெளியிட்டுச் சமுதாயத்தில் ஓர் எழுச்சியையும் வேகத்தையும் தந்தார்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்"[95]

எனப் பெண்ணியத்தின் வேர்களைத் தொட்டுக் காட்டுகின்ற மகாகவியின் சிந்தனைகள் மிகவும் கூர்ந்து நோக்கத் தக்கது.

பெண்விடுதலை

பெண்ணுக்கு விடுதலை வேண்டும். அடிமைத்தனத்தை ஒழிக்க வேண்டும் என்று முழங்கினான் பாரதி. பெண்ணின் ஒடுக்கு முறைகளைக் கண்ட பாரதி. எதிர்ப்புக் குரல் கொடுக்க ஆரம்பித்தான். அவன்

பெண்ணைப் புதுமைப் பெண்ணாகப் பார்த்தான். அவன் பெண் விடுதலையை

> “போற்றி போற்றிபோராயிரம் போற்றி நிர்
> பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றிதான்
> மாற்றி வையம் புதுமையுறச் செய்து
> மனிதர் தம்மை அமரர்களாகவே
> ஆற்றல் கொண்ட பராசக்தி”[96]

எனப் பெண் இந்த உலகினை மாற்றிமைக்கும் பெரிய சக்தி என்று கூறினார்.

சரிநிகர் சமானம்

ஆண், பெண் இருவரும் சமம். இதில் ஏற்றத்தாழ்வுகள் ஏன் என்று நினைத்தான் “பாரதி காட்டும் பெண் உரிமை பெற்றவள். அறிவில் திளைத்தவள் ஆணுக்கு நிகரானவள் என்றும் ஆணும், பெண்ணும் சேர்ந்ததே மானுடம்”[97] என்பர்.

ஆணும் பெண்ணும் சமம் என்பதனை

> “மாதர் தம்மை இழிவு செய்யும்
> மடமையைக் கொழுத்துவோம்
> வைய வாழ்வு தன்னை எந்த
> வகையிலும் நமக்குள்ளே
> தாதர் என்ற நிலமை மாறி
> ஆண்களோடு பெண்களும்

சரிநிகர் சமானமாக

வாழ்வோம் இந்த நாட்டிலே"[98]

என இப்பாடல் வழி புலப்படுத்துகிறார். பெண்களை இழிவு செய்யும் கொடுமையைக் களைவோம். ஆண், பெண் ஏற்றத்தாழ்வுகள் மாறி சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்று கூறுகிறார் பாரதி.

பெண்ணடிமை

பெண்ணை அடிமைப் படுத்துவதால் அனைத்து மக்களும் அடிமையாகி விடுவோம் என்பதை

"அறிவு கொண்ட மனித உயிர்களை

அடிமையாக்க முயல்வோர் பித்தராம்"[99]

பெண்களை அறிவு கொண்ட மனித உயிர். அவர்களை அடிமை யாக்கினால் அவர்கள் பித்தர்களாவர் என்று குறிப்பிடுகிறார்.

"பெண்ணுக்கு விடுதலை பெற்றிங்கோர் நீதி

பிறப்பித்தேன் அதற்குரிய பெற்றி கேளீர்

மண்ணுக்குள் ளெவ்வுருந் தெய்வமென்றாள்

மனையயநூற் தெய்வமன்றோ மதிகேப்பீரே!"[100]

எனப் பெண்ணுக்கு அடிமை வாழ்வினில் இருந்து விடுதலை யளிக்க பெண்கள் வீட்டில் அடங்கிக் கிடக்காது, தம் திறமையினால் உயர்ந்து சமுதாயத்தில் சூழ்ந்திருக்கும் பண்டைய இகழ்ச்சிகளை ஒழிப்போம் என்று முழங்குகிறார்.

பெண்கல்வி

புதுக்கவிதையின் முன்னோடியான பாரதி பெண்களுக்குக் கல்வி அவசியம் என்பதை,

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"[101]

என்பதை இப்பாடல் மூலம் எடுத்துரைக்கின்றார். பெண்கள் கல்வி பெற்று விட்டார்கள் என்று கனவு கண்டு பாடுகின்றார். பெண்களின் விழிப்புணர்வுக்குப் பாரதியின் கவிதை பெரும்பங்கு வகிக்கின்றது.

பாரதிதாசன்

பாரதிக்கு அடுத்தபடியாக பாரதிதாசன் பெண்ணுக்குப் பெருமை சேர்த்தவன்.

குடும்பம்

குடும்பத்தளத்தில் நிலவும் வேலைப்பங்கீடு இன்றய சூழலில் மறுபார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக பாரதிதாசனின் பெண்ணியக் கோட்பாடு காணப்படுகிறது. சமூக மாற்றத்தை வேண்டி,

"சமைப்பதும் வீட்டு வேலை
சலிப்பின்றிச் செயலும் பெண்கள்
தமக்கே ஆம் என்று கூறல்

சரியில்லை ஆடவர்கள்

நமக்கும் அப்பணிகள் ஏற்கும்

என்றெண்ணம் நன்னாற் காண்போம்"[102]

என்பதைப் புலப்படுத்துகின்றார்.

தாய்மை

பெண்ணுக்குப் பெருமை சேர்ப்பது தாய்மை. "தாய்மை உணர்வும் அதனால் நேரும் நெகிழ்வுகளும், அதன் காரணமாகப் பிறக்கும் துணிவான போக்குகளும் பெண்வாழ்வில் குறிப்பிடத்தக்க இடங்களைப் பெறுவன"[103] என்பர். இவ்வாறான தாய்மையை, தாய் சக்தியாவதை 'வீரத்தாயி'ல் குறிப்பிடுகிறார். பெண்துன்பங்களை

"இப்படியே பெண்ணுலகம் ஆகுநாள்

எந்நாளோ -அந்நாளே துன்பமெல்லாம் போகும் நாள்"[104]

எனும் பாடலடிகள் மூலம் குறிப்பிடுகின்றார்.

கைம்பெண் நிலைமை

பாரதிதாசன் கைம்பெண் நிலமையை,

"கோரிக்கை யற்றுக் கிடக்கு தண்ணே இங்கு

வேரில் பழுத்த பலா - மிகக்

கொடிய தென்று எண்ணிடப்பட்ட தண்ணே

குளிர் வடிகின்ற வட்ட நிலா"[105]

எனும் வரிகள் மூலம் எடுத்துரைக்கின்றார்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

பெண்களின் துன்பங்களையும், அவர்களின் சிறப்புக்களையும் கவிதை மூலம் எடுத்துக் காட்டியவர் இவர். இவர் பெண்ணின் பெருமையை,

"மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல

மாதவஞ் செய்திடல் வேண்டுமம்மா"[106]

என்று குறிப்பிடுகின்றார். பெண்ணாகப் பிறப்பதற்கே பெருந்தவம் செய்திட வேண்டும் என்று பெண்ணின் சிறப்பைக் கூறுகிறார்.

கம்பர்

கவிச்சக்கரவர்த்தி என்ற புகழாரம் கொண்டவர். தனது காப்பியத்தில் கற்பு என்பது ஆண், பெண் என இருபாலருக்கும் பொதுவானது என்ற கருத்துப்பட இராமன், சீதை இருவரையும் கற்பில் சிறந்தோராக படைத்தவர்.

"மாதரார் காட்டும் அன்பில் அறங்கள்

யாவும் தாங்கி நிற்கின்றன"[107]

என்று பெண்ணை உயர்வுபடுத்துகின்றார்.

விவேகானந்தர்

"பெண்மணிகளின் நிலைமை வளர்ச்சியடைந்தாலென்றி உலகம் நலம் பெறுவதற்கு வாய்ப்பே இல்லை"[108] என விவேகானந்தர் உலகம் உய்துப் பெற பெண்களின் நிலை வளர்ச்சியடைய வேண்டும் என்று உரைக்கின்றார்.

திரு.வி. கல்யாண சுந்தரனார்

பெண்களின் உரிமைக்குப் போர்க் குரல் கொடுத்த தமிழ் தென்றல் திரு.வி.க பெண்ணின் பெருமைகளைத் தம் எழுத்தாலும் சொல்லாற்றலாலும் அரண் செய்துள்ளார். "ஆண்மகன் பெண்மகளைத் தமக்குரிய காமப் பொருளாகவும், பணியாளராகவும் கொண்ட நாள் தொட்டுப் பெண்மகள் உரிமை இழக்கலானாள். ஒரு நாட்டின் நாகரிகம் அந்நாட்டின் பெண்மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கின்றதென்பது எவரும் ஏற்கத்தக்க உண்மை"[109] என்பர்.

ஈ.வே.ரா

பெண்களைப் பற்றிய சிந்தனை மிடுக்குடைய இவர், சொற்பொழிவாளராக இருந்தவர். பெண்களின் உரிமைக்காகப் போராடினார். கற்பின் கொள்கையை "ஒரு பிறப்புக் கொரு நீதி நிர்பந்தக் கற்பு முறை ஒழிந்து இரு பிறப்பிற்கும் சமமான சுயேட்சைக் கற்பு முறை ஏற்பட வேண்டும்"[110] என்று குறிப்பிடுகிறார். இருவருக்கும் கற்பு பொது என்ற கருத்தை முன்னுரைக்கிறார். கற்பு சுதந்திரக் கற்பாக இருக்க வேண்டும். பெண்களை ஒடுக்கும் செயலாக இருக்கக் கூடாது என்று எடுத்துரைக்கின்றார்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் திரையுலகில் தனக்கென்று ஒரு முத்திரை பதித்தவர். அவர் பாடல்கள் சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பாடல்களாகும். இவர் கவிதையில் பெண்ணுரிமை பற்றி

"ஆணுக்கும் பெண்கள் அடிமைகள் என்று யாரோ
எழுதி வைச்சாங்க - அதை அமுக்கப் பிடிச்சிக்கிட்டு
விடமாட்டேன்ன ஆண்கள் ஒசந்து போயிட்டாங்க
பெண்கள் ஆமைபோல ஒடுங்கிப் போனாங்க"[111]

எனும் அடிகள் மூலம் பெண்களை ஆண்கள் எவ்வாறு அடக்கி வைத்து ஆமைபோல ஆக்கியுள்ளார்கள் என்பதை வெளிக்காட்டுகிறார்.

வைரமுத்து

தற்காலக் கவிஞர்களுள் சிறந்து விளங்கக் கூடியவர்களில் வைரமுத்துவும் ஒருவர். மனிதச் சுதந்திரவுணர்வு, பெண்ணுரிமை, தனிமனித பிரச்சினைகள், சமூகப்பிரச்சினைகளைக் கவிதையாக்கியுள்ளார். இவர் வரதட்சனைக் கொடுமையைச் சிகரங்களை நோக்கி என்ற கவிதைத் தொகுப்பில்,

"இங்கே ஒவ்வொரு சாப்பாட்டு மேஜையும்
பெண்கள் ரத்தம் தான் முகமாகப்
பரிமாறப்படுகிறது"[112]

எனக் கூறுகின்றார். இவற்றில் பெண்கள் கொடுக்கும் வரதட்சணையை அவர்களது ரத்தம் என்று மறைமுகமாக வெளிக்காட்டுகிறார்.

இருபத்தியோராம் நூற்றாண்டுக் கவிஞர் 'தேவி காந்தன்' பெண் குழந்தைகளின் அவலத்தைக் குறிப்பிடுகின்றார். பெண் பிறந்து வளர்ந்து, பருவமடைந்து, மணமுடித்து ஒரு குழந்தைக்குத் தாயாகும் நிலையில் மீண்டும் அவளுக்குப் பிரச்சனைகள் தொடங்கிவிடுகின்றன என்பதனை,

"பொட்டைக் கழுதைக்குப் படிப்பெதற்கு
பள்ளிக் கூடமும் பகையாய் போனது
வாசல் கூட்டிக் கோலம் போட்டு
பாத்திரம் தேய்த்து சமைக்கக் கற்று
சமைந்து நின்றேன்
அப்பாவுக்கு கவலைத் தொற்றிக் கொண்டது
எனக்கோ
கழுத்தை நீட்டியவள் வயிற்றை நினைத்தால்
பொட்டச்சி பிறப்பாள் ....
இப்போதே பயம் பற்றிக் கொண்டது"[113]

இவ்வரிகள் தற்கால பெண்களின் நிலைகளை எடுத்துக் காட்டுகின்றன. பெண்ணினத்திற்கு இழைக்கப்படும் கொடுமைகள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இந்த அவலங்கள் மாற வேண்டும் என்பதை இக்கால எழுத்தாளர்கள், கவிஞர்கள் தங்கள் படைப்புகளில் பதிவு செய்துள்ளனர்.

தொகுப்புரை

'Femina'என்ற லத்தின் சொல்லிலிருந்து 'Feminism' என்ற ஆங்கிலச் சொல் உருவாகியது. பின் தமிழில் அப்பொருளை விளக்குவதற்காகப் பெண்நிலையாக்கம், பெண்நிலை இயக்கம், பெண்நிலைவாதம், பெண்ணியம் என்ற சொற்கள் உருப்பெற்றன.

ஐரோப்பாவில் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் புதுமையை விரும்பும் நோக்கிலும் தனிமனிதச் சுதந்திரத்தைப் போற்றும் வகையிலும் பெண்ணியம் தோற்றம் பெற்றது.

ஆணாதிக்கத்திற்கு எதிராகவும் பெண் ஒடுக்கு முறைக்கு எதிராகவும் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் பெண்ணியம் ஒரு தனிக் கோட்பாடாக வளர்ச்சி பெற்றது.

பெண்ணிய இயக்கத்தைச் செம்மையுற உருவாக்கித் தந்தவர்களுள் மேரி வொல்ஸ்டன் கிரஸ்ட், ஜான் ஸ்டுவர்ட்மில் ஆகிய இருவர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

பெண்களை அனைத்து அடிமைத் தளைகளிலிருந்தும் விடுவிப்பதே பெண்ணியத்தின் தலையாய நோக்கமாக அமைகிறதென சார்லிட்பன்ஞ், பார்பராஸ் ஸ்மித், டோனா ஹாக் லிஸ்ட், ஆமாரோ ஆகியோர் மொழிந்துள்ள கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவதுடன் சமூக முன்னேற்றத்திற்கும் மாற்றத்திற்கும் பெண்ணிய அமைப்புகள் அயராது பாடுபட வேண்டுமென்பதைத் தெரசாப் ஸிங்டன், ரேஸ்பான்கி அம்மையார் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

ஐரோப்பா, அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் பெண்ணியம் வளர்ச்சி பெற்றது. அவ்வளர்ச்சிக்கு அவ்வவ் நாட்டு பெண்ணிய அமைப்புக்கள் துணை நின்றன.

மிதவாதப் பெண்ணியம், சமதர்மப் பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம் ஆகிய மூன்று பெண்ணியங்களின் நிலைப்பாடுகள் குறித்து விளக்கப்பட்டுள்ளன.

இந்தியப் பெண்ணிய அமைப்புகள் வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டு பெண்களின் முன்னேற்றத்திற்காக அயராது அரும்பணியாற்றியுள்ளமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பெண்ணியக் கோட்பாடுகள், நோக்கம், பெண்ணிய இயக்கம் அதன் தத்துவம் ஆகியன சுட்டப்பட்டுள்ளன.

தமிழ்ச் சமுதாயத்தில் பெண்ணியம் தொல்காப்பியர் காலம் முதல் இன்றுவரை காலநிலைக்கேற்ப மாற்றம் பெற்றுள்ளதும் இங்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

மேற்கண்ட கருத்துக்களின் வழி பெண்ணியம் என்பது ஆண்டாண்டு காலம் சமூகத்தில் ஒடுக்கப்பட்டிருந்த பெண்கள் விழிப்புணர்வு பெற்று, பெண் நிலைகளை விளக்கி ஆணுக்குச் சரிநிகர் சமானமாக அனைத்து நிலைகளிலும் வாழ்தல் என்பது பெறப்படுகிறது.

சான்றெண் விளக்கம்

1. இரா. பிரேமா, பெண்ணியம், ப-6.
2. மேலது, ப-13.
3. ஆக்ஸ்போர்டு தமிழகராதி, ப-27.
4. இரா. பிரோமா, பெண்ணிய அணுகுமுறைகள், ப-33.
5. சரஸ்வதி வேணுகோபால், பெண் படைப்பில் பெண்கள் ப-57.
6. சரளா இராஜகோபாலன், காப்பிய மகளிர் ப-39.
7. தி.கமலி, பெண்ணியக்கலை -67.
8. பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.27.
9. மேலது, பா-28.
10. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், பா.31.
11. அ.முத்துச் சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்,ப-68.
12. க. பரிமளம், இந்துப் பெண்ணியம், ப-17.
13. இரா. பிரேமா, பெண்ணியம், ப-18.
14. தாயம்மாள் அறவாணன், பெண்ணறிவு என்பது, ப-28.
15. ஏ.எம். சசீலா, பெண்-இலக்கியம்-வாசிப்பு, ப-47.
16. இரா. பிரேமா, பெண்ணியம், ப-19.
17. மேலது, ப-21.
18. மேலது, ப-23.
19. மேலது, ப-24.
20. மேலது, ப-25.
21. மேலது, ப-27.

22. இரா. பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள் ப-47.

23. கதிர் மகாதேவன், இரா.மோகன்,(ப.ஆ.) பெண்ணியம், ப-68.

24. க. பரிமளம், இந்துப் பெண்ணியம், ப-39.

25. ஈ.வே. ராமசாமி, பெண் ஏன் அடிமையானாள், ப-27.

26. இரா. பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள், ப-77.

27. இரா. பிரேமா, பெண்ணியம், ப-29.

28. அ. முத்துச் சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்,ப.79.

29. க. பரிமளம், இந்துப் பெண்ணியம், ப-17.

30. இரா. பிரேமா, பெண்ணியம், ப-37.

31. இரா. பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள், ப-28.

32. திருச்சந்திரன், தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு, ப-27.

33. தாயம்மாள் அறவாணன், பெண் பதிவுகள், ப-37.

34. இரா. பிரேமா, பெண்ணியம், ப-39.

35. மேலது, ப-40.

36. மேலது, ப-47.

37. ஏ.எம். சுசிலா, பெண் - இலக்கியம் - வாசிப்பு, ப-67.

38. இரா. பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள் ப-63.

39. சி.இ. மறைமலை, பெண்ணியத் திறனாய்வு, ப-19.

40. மேலது, ப-20.

41. இரா. பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள், ப-58.

42. ஏ.எம். சுசீலா, பெண் - இலக்கியம் - வாசிப்பு, ப-41.

43. இரா. பிரேமா, பெண்ணியம் ப-38.

44. இராம. குருநாதன், பெண்ணியம், பக்-183-184.

45. 21-ஆம் நூற்றாண்டில் பெண்ணியம், (ஆய்வுக்கோவை (இரண்டாம் பகுதி), ப-69.

46. மேலது, ப-69.

47. ஓஷோ, பெண் விடுதலை, ப-69.

48. 21-ஆம் நூற்றாண்டில் பெண்ணியம், (ஆய்வுக்கோவை (இரண்டாம் பகுதி), ப-67.

49. மேலது, ப-40.

50. மேலது, ப-43.

51. தாயம்மாள் அறவாணன், பெண் பதிவுகள், ப-53.

52. இரா. பிரேமா, பெண்ணியம், ப-45.

53. மேலது ப-50.

54. தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள், ப-57.

55. திருக்குறள், 57.

56. அ.முத்துச் சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப-43.

57. பாரதி, பெண் வார்ப்பும், வளர்ப்பும் ப-35.

58. இரா. பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள், ப-63.

59. மேலது, ப-67.

60. தொல்காப்பியம், பொருள். களவு - நூ. 8.

61. மேலது, - நூ. 54.

62. திருக்குறள், - 54.

63. தொல்காப்பியம், பொருள். கற்பு. - நூ. 31.

64. மேலது, - நூ. 78.

65. மேலது, - நூ. 17.

66. மேலது, - நூ. 137.

67. மேலது, - நூ. 12

68. புறநானூறு - 27: 4-5.

69. மேலது, - 33: 7-8.

70. அன்னிதாமசு, (ப.ஆ) சங்க காலப் பெண்மை, ப-13.

71. தொல்காப்பியம், பொருள். கற்பு. - நூ. 119.

72. இரா.பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள், ப.48.

73. ஐங்குறுநூறு - 242

74. புறநானூறு 18: 6.

75. மேலது, - 20: -9-10.

76. எம்.ஏ. சுசீலா, பெண் - இலக்கியம் வாசிப்பு ப-76.

77. புறநானூறு, 78: 12-14.

78. மேலது, 43: 3.

79. மேலது, 77: 3.

80. மேலது, 63: 5.

81. மேலது, 44: 8.

82. மேலது, 57.

83. மேலது, 93:

84. நற்றிணை, 173: 3-5.

85. மு. வரதராசன், கண்ணகி, ப-15.

86. சிலப்பதிகாரம், 1: 25-28.

87. மேலது, 15: 40-41.

88. மணிமேகலை, 10: 4-6.

89. மேலது, 12: 33-37

90. மேலது, 14: 34-39

91. பெரிய திருவாய்மொழி, பா.78.

92. அ. வெங்கடராமன், எண்பதுகளில் புனைகதைகளில் பெண்ணியம். ப-66.

93. ராஜம்கிருஷ்ணன், ராஜம்கிருஷ்ணன் நாவல்கள் - ப.65.

94. ஜானகிராமன், அம்மா வந்தாள் - ப.28.

95. சாமி. பழனியப்பன், பாட்டுக்கொரு புலவன் ப.45.

96. மேலது, -47.

97. இராமசாமி, பெண்ணிய நோக்கில் பாரதி, ப.29.

98. சாமி. பழனியப்பன், பாட்டுக்கொரு புலவன் ப.46.

99. பாரதியார், பாரதியார் பாடல் பா-37.

100. மேலது, பா-22.

101. மேலது, பா-24

102. பாரதிதாசன், பாரதிதாசன் பாடல்கள், ப.

103. அன்னிதாமசு, (ப.ஆ) சங்ககாலப் பெண்மை, ப.38.

104. பாரதிதாசன், பாரதிதாசன் பாடல்கள், ப.38.

105. மேலது, -ப.44.

106. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, பா.57.

107. 21-ஆம் நூற்றாண்டில் பெண்ணியம், (ஆய்வுக்கோவை (இரண்டாம் பகுதி), ப-67.

108. மேலது, ப-67.

109. திரு. வி.கல்யாணசுந்தரனார், பெண்ணின் பெருமை, ப.38.

110. தந்தை பெரியார் - பெண் ஏன் அடிமையானாள் ப.27.

111. கல்யாணசுந்தரம், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பா.47.

112. வைரமுத்து, சிகரங்களை நோக்கி, பா.63.

113. ச. அந்தோணி டேவிட் நாதன், புதுக்கவிதையில் மனிதம், ப.119.

இயல் - 2

பெண் தலைமை மாந்தர்கள்

இயல்-2

பெண் தலைமை மாந்தர்கள்

காப்பிய காலத்தில் பெண்களின் நிலையை ஐம்பெருங்காப்பியங்கள் துணைகொண்டு அறியமுடிகின்றது. ஒவ்வொரு காப்பியமும் தான் எழுந்த காலச் சூழலுக்கேற்பச் சமூக நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளன. அவற்றுள் பெண்களின் நிலையையும் எடுத்துக்காட்டுகின்றன. அந்நாளில் பெண்கள் வாழ்வில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்தன என்பதைக் காப்பிய மாந்தர்களின் பண்பு நலன்களின் வாயிலாக ஆய்ந்து கூறுவதே இவ்வியலின் நோக்கமாகும்.

தலைமைப் பாத்திரம்-விளக்கம்

ஓர் இலக்கியத்தில் அழகு, வீரம், கருணை, தியாகம், பொறுமை போன்ற நற்பண்புகளால் ஏனைய பாத்திரங்களிலிருந்து சிறப்புற்று விளங்கும் பாத்திரம் தலைமைப் பாத்திரமாகும். கண்ணதாசன் "பாத்திரங்கள் காலத்தின் சாத்திரங்கள்"(1) என்பர். இலக்கியம் "ஒரு தேசத்தின், ஒரு நாகரிகத்தின், ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உறைகல்"(2) என்ற கருத்தும் உள.

பல்வேறு நிகழ்வுகளைக் கூறும் இலக்கியங்களில் பல பாத்திரங்கள் இடம்பெறுவது இயல்பு. தமிழ் அக இலக்கியமாயின் பெயர் சூட்டாப் பாத்திரங்களும் புற இலக்கியமாயின் பெயர் சூட்டும் பாத்திரங்களும் வரும். "காப்பியப் பாத்திரங்கள் வரவும், செலவும், உணர்ச்சியும் கொண்ட வாழ்க்கைப் பதிவு"(3) என்பர் சோம இளவரசு. ஒரு தலைமைப் பாத்திரம் இலக்கியத்தில் சிறப்படைவதற்கு ஏனைய துணைப் பாத்திரங்கள் உருவாக்கப்படுகின்றன.

தண்டியலங்காரம் காப்பியத்திற்கு இலக்கணம் கூறும். அதில் பெரும்பான்மை ஆடவரொருவரே காப்பியத் தலைவனாக வருதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை,

"அவற்றுள்

பெருங்காப்பிய நிலை பேசுங்காலை

வாழ்ந்து வணக்கம் வருபொரு ளிவற்றினென்

றேற்புடைத் தாகி முன்வர வியன்று

நாற்பொருள் பயக்கு நடை நெறி தாகித்

தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்

....

....

நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்

கற்றோர் புனையும் பெற்றிய தென்ப"[4]

என்ற பகுதி விளங்கும். இங்கு பெண்கள் காப்பியத்தலைமை மாந்தராக அமைதல் வேண்டுமென அவ்விலக்கண நூல் வலியுறுத்தவில்லை. இருப்பினும் தலைமை மாந்தருக்குரிய தகுதிப்பாடு இருவரில் யாரிடத்தில் மிகுந்திருக்கின்றதோ அவர்களை காப்பியத் தலைமை மாந்தராகக் கொள்வதில் தவறொன்றுமில்லை.

உச்சிமேற் புலவர் நச்சினார்க்கினியர் "தொல்காப்பியர் கூறும் வனப்பு எட்டினுள் 'தொன்மை' என்ற வனப்பிற்கு இலக்கணமாகச் சிலம்பினை எடுத்துக் காட்டுகிறார். மேலுமிவர் சிலப்பதிகாரத்தைப் பாராட்டி வைத்த குறிப்பு என்று தொல்காப்பியர் கூறும் உறைவகை நெறியினுள் அடக்கிக் காட்டுவர்."[5]

சிலம்பு காரணமாக நிகழ்ந்ததை நவில்வது சிலப்பதிகாரம். மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உள்ளடக்கியது. இது உரை கலந்த பாட்டுடைச் செய்யுள் மூவேந்தர்காப்பியம், முதல் தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்று பலவாறு போற்றப்படுகிறது. "சிலம்பு விற்க மதுரை சென்ற கோவலன் கொல்லப்படுவது காப்பியத்தின் திருப்பு முனையாகவும், தொடக்க நிலையாகவும் காணப்படுகிறது. ஆர்த்தெழுந்த கண்ணகி வேந்தனிடம் தன் கணவன் கள்வன் அல்லன் என வழக்காடி வென்றது இடைநிகழ்வாகும். மதுரையை எரித்துக் கண்ணகி விண்ணகம் சென்றது இறுதி நிலையாகும்"[6] என்பர் பெ.சீனிவாசன்.

இலக்கியங்களில் கண்ணகி

சங்க இலக்கியத்தில் கோப்பெரும் பேகனுக்குக் கண்ணகி என்ற பெயருடையவள் மனைவியாக இருந்தாள். பேகன் அவளைத் துறந்தான். அப்போது அவளை ஏற்றுக் கொள்ளுமாறு கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகிய நால்வரும் பேகனை வேண்டிப் பாடல் பாடியுள்ளமையைக் காணமுடிகிறது.

சிலம்பில் கண்ணகி பெறுமிடம்

கண்ணகிக் காப்பிய தொடக்கம் முதல் இறுதி வரை காணப்படுகிறாள். ஒரு பெண் தன் பண்புகளிலும், கற்பு நெறியிலும் தவறாதிருந்தால் எத்துன்பத்தையும் போக்கலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாய் விளங்கிவள். "கண்ணகி சோழ நாட்டுப் புகார் நகரத்தில் பிறந்து, தன் கணவன் கோவலனுடன் பாண்டிய நாட்டு மதுரை நகரத்தே தன் கற்பு நெறியை நிருவி; சேர நாட்டு வஞ்சி நகரத்தே தெய்வமான

மாபெரும் பத்தினியானவள். இவள் தமிழ் மகளாய்த் தோன்றி முத்தமிழ் நாட்டோடு தன் வாழ்வை இணைத்துக் கொண்டு இறுதியில் தெய்வத் தன்மை பெற்றவள்"[7] என்பர். வையகத்துள் வாழ் வாங்கு வாழ்ந்தால் வானுறையும் தெய்வத்துள் அடையலாம் என்பதை மெய்ப்பித்தவள்.

திருமணத்தில் பெண்கள் வாழ்த்து

புகாரில் கோவலனுக்கும், கண்ணகிக்கும் திருமணம் நடக்கின்ற பொழுது பெண்கள் சிலர் பாடிக்கொண்டும், பலர் வெட்கத்தோடு தலை குனிந்தும் வந்து வாழ்த்தியதை,

"விரையினர் மலரினர் விளங்கு மேனியர்
உரையினர் பாட்டின ரொசிந்த நோக்கினர்
....
....
மங்கல நல்லமளி யேற்றினார் தாங்கிய
இப்பா லிமயத் திருத்திய வாள் வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா வெப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒரு தனி யாழி யுருட்டுவோ னெனவே"[8]

என்ற அடிகள் உணர்த்தும். திருமணத்திற்கு வந்திருந்த பெண்கள் கண்ணகியைக் கட்டிய கணவனைப் பிரியாமல் ஒட்டிய கைகளை ஒதுக்காமல், ஒரு குறையுமின்றி நலமாக வாழ்க என்று கூறி வாழ்த்தி அருந்ததி வெண்பாவைக் கூறி; மலர்த்தூவி மகிழ்ந்து திருமணப் பள்ளியறையில் அமர்த்தினர். இவ்வாறு அருந்ததிக்கு இணையான கற்புத்தன்மை கொண்டவள் எனப் பாராட்டுவதன் மூலம் கண்ணகியின் பெண்மைப் பண்பினை அறியமுடிகிறது.

இல்லறம்

திருமணமான ஆண், பெண் இருவரும் தங்கள் இல்லக் கடமைகளைச் செவ்வனே செய்தல் இல்லறமாகும். ஆணும், பெண்ணும் வீட்டில் இருந்து அறவாழ்க்கை மேற்கொள்வதாகும். இதனைச் சமூகவியலார் ‘குடும்பம்’ என்ற சொல்லின் மூலம் விளக்குவர்.

இல்லறம் ஆலமரம் போன்றது

குடும்பம் ஓர் ஆலமரம் போன்றது என்பர். “திருமணம், பிள்ளைப் பேறு, அன்பு, விருந்தோம்பல், ஒழுக்கம், பொறை, ஒப்புரவு, ஈகை, அருள், தவம், வாய்மை, துறவு, மெய்யுணர்வு முதலியன. ஆலமரத்தின் உறுப்புகளாகிய வேர், பட்டை, கவடு, கோடு, விளார், தளிர், இலை, மலர், காய்கள் முதலியன. இவ்வறக் கூறுகள் யாவும் பிறந்து வளர்ந்து பயன் அனுபவிக்க வேண்டிய தாயகம் இல்லறம்”[9] என்று திரு.வி.க. குறிப்பிடுகின்றார்.

திருமணமானவுடன் பெற்றோர் தலைவன், தலைவியைத் தனிக் குடும்பமாக்கி இல்லற வாழ்வினை மேற்கொள்ள வைப்பார்கள் அவ்வாறிருந்த தனிக்குடும்ப நிலையினை வள்ளுவர்,

> **“மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டாள்**
> **வளத்தக்காள் வாழ்க்கைத் துணை”**[10]

என்று சுட்டுகிறார்.

விருந்தோம்பல் நிகழ, சுற்றம் தழுவ, அறவோர்க்களித்தல் ஆகிய இல்லறக் கடமைகளைச் செய்து சிறப்புக்களைப் பெற வேண்டுமென்று கண்ணகியின் தாய் கண்ணகியையும், கோவலனையும் முறைப்படித் தனிக்

குடும்பமாக்கி இல்லற வாழ்க்கையை நடத்த வழிவகை செய்தாள். அவர்கள் இல்லறம் நடத்தத் தொடங்கியதை,

"மறப்பருங் கேண்மையோ டறப்பரி காரமும்
விருந்து புறத்தருஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறு பெறக்காண
உரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க
யாண்டு சில கழிந்தன"[11]

எனும் அடிகள் எடுத்துரைக்கின்றன.

கோவலன் கண்ணகியைப் பாராட்டுதல்

கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் முடிந்து இல்லறம் தொடங்கும் பொழுது கோவலன் காதல் மிகுதியால் கண்ணகியிடம் நயந்து புகழ்ந்த வார்த்தைகள் வெறும் காம மயக்கத்தின் பிதற்றல்களாக அன்றி பாசத்தின் மிகுதியாக வெளிப்படுகிறது. இதனை,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும் பெறற் பாவா யாருயிர் மருந்தே
பெருங்குடி வணிகன் பெருமட மகளே
மலையிடப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ"[12]

என்ற அடிகள் உணர்த்தும். வலம்புரி முத்து என்பது சங்கு வகையில் சிறந்தது. வலம் வெற்றியைக் குறிக்கும் என்பதால் வெற்றி புரிமுத்து என்பதும் பெறப்படும். இதன் வாயிலாக அவள் பாண்டிய மன்னனைப் பின்னால் வெல்லக் கூடியவள் என்று பின் நிகழ்வை முன்பே குறிப்பால்

உணர்த்துகிறார் இளங்கோ. காசறு விரை, கரும்பு, தேன் எனக் கண்ணகியின் உயர்ந்த பண்புகளை அணிகலன்களோடும் உயர்ந்த பொருள்களோடும் ஒப்பு வைத்துக் கூறுவதன் வழி அவள் உயர்வை உணர முடிகிறது.

துணைமைப் பாத்திரங்கள் பாராட்டுதல்

கோவலனும், கண்ணகியும் புகாரிலிருந்து மதுரை நோக்கி நடந்து செல்கிறார்கள். வழியிடையில் கவுந்தியடிகள் என்ற துறவியைக் காணுகிறார்கள். இருவரையும் கவுந்தியடிகள் பார்த்து விட்டு; கண்ணகியை இக்காட்டுப்பாதையில் பருக்கை (உதிரிக்கற்கள்) கற்களில் பாதம் வைத்து நடக்கும் தன்மை இல்லாதவள் என்கிறார். மதுரை சென்று மாதரியிடம் அடைக்கலப்படுத்தும் போது கண்ணகியை,

"வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலாள்"[13]

என்று கூறுகிறார். சமணத்துறவியின் பேச்சு கண்ணகியின் நற்பண்பினை ஓங்கச் செய்யும்.

இளங்கோவடிகள் கண்ணகியைச் சாதாரண மக்களும் தெய்வத்தன்மை பொருந்திய மக்களும் பாராட்டுமாறு படைத்துள்ளார். கோவலன், கண்ணகி இருவரும் மதுரை நோக்கிக் கவுந்தியடிகளுடன் வரும் வழியில் ஐயைக் கோட்டத்தில் தங்கி இருந்தனர். அவ்விடத்தில் சாலினி என்ற பெண்ணிடத்துத் தெய்வம் ஏறி நின்று கண்ணகியைப் பார்த்து,

"இவளோ, கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை! செய்த தவக் கொழுந்

தொருமா மணியா யுலகிற் கோங்கிய

திருமா மணியெனத் தெய்வமுற் நுரைப்ப"[14]

என உரைத்தது. கண்ணகி ஒரு சாதாரண பெண்ணாகயிருந்து உலக வாழ்வினுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் திருமாமணி (தெய்வப் பெண்ணாக) எனப் புகழப் பெறுகிறாள்.

வஞ்சிக்-கண்டத்தில் கண்ணகி தன் கணவன் கோவலனுடன் வானுலகம் சென்றதைக் கண்ட குறவர்கள்,

"**இவள்போலும் நங்குலத்தோர் ஒருதெய்வம் இல்லை**"[15]

எனப் போற்றிப் புகழ்கின்றனர்.

மாடல மறையோன் '**திருத்தரு மாமணிக் கொழுந்து**'[16] என்று பாராட்டுகின்றான். இக்கூற்றுகளால் கண்ணகியின் சிறப்புகளும், பெண்மையும், தலைமையும் வெளிப்படுகின்றன.

பண்புநலன்

காதல் உணர்வு

தலைவனும், தலைவியும் ஒருவர் மீதொருவர் வைக்கும் அன்பிற்குக் காதல் என்று பெயர். இருவருக்கும் ஏற்படும் உள்ளப் புணர்ச்சியின் வழியால் அன்பு வெளிப்படுகிறது. செம்மை நிறம் பொருந்திய மண்ணும், அதனுடன் நீரும் ஒன்று சேர்ந்தால் எவ்வாறு செம்மை நிறம் பிரியாமல் இருக்குமோ அதுபோல அவர்களின் நெஞ்சம் இருக்குமென்பதை,

"**யாயும் ஞாயும் யாரா கியரோ?**

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நியும் அவ்வழி அறிதும்

செம்புலப் பெயநீர் போல

அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"[17]

என்னும் பாடலடிகள் சுட்டுகின்றன. நீரின் வெண்மையை, செம்மண்ணுடன் கலந்த பிறகு மீண்டும் வெண்மையைக் கொண்டுவருதல் இயலாது. அதுபோல கோவலனும் கண்ணகியும் அன்பு வழிப்பட்டதை யாராலும் பிரித்தல் இயலாது.

கோவலனும் கண்ணகியும் வாழ்க்கைப்பட்டவர்கள். கணவன் மாற்று மங்கையுடன் காதல் கொண்டு அவளுடன் வாழத் தலைப்பட்ட போது கண்ணகி கணவனிடம் அவன் செயலைப் பழிக்கவில்லை. அவள் துன்பத்தையும் சுட்டிக் காட்டவில்லை. "மனையுறை மகளிர்க் காடவருயிரே" என்ற பெண்ணாகவே வாழ்கிறாள். எப்போதும் அவன் மீது கொண்ட அன்பில் மாசு காணாத பெண்ணாகத் திகழ்கிறாள். சிலப்பதிகாரத்தின் காப்பியத் தலைவியான கண்ணகி அந்நாளில் இல்லறம் நடத்தும் பெண்கள் கணவனைக் கண்கண்ட தெய்வமாகப் பாவித்த உயரிய பண்பைக் கண்ணகிக்குப் படைத்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

மன்னனிடம் குறை கண்ட போது அவன் செயலைச் சுட்டிக்காட்டி மன்னனையே "தேறா மன்னா" என்று கூறிய கண்ணகி, இல்லற வாழ்வில் கணவனின் வேற்றுப் பெண்ணுறவை அறிந்தும் பேசாமல் இருந்தது அந்நாளில் அந்நிகழ்ச்சிப் பெண்ணியத்திற்குப் புறம்பானதாகக் கருத இடமுளது.

கோவலனும் கண்ணகியும் மதுரையை நோக்கிக் காட்டு வழியில் நடந்து சென்ற போது கண்ணகியின் துன்பத்தைக் கோவலன் நினைத்து உளமுருகி வருந்தியதையும், அவ்வுணர்வு வெளிப்பாட்டை,

"காதலி தன்னோடு கானகம் போந்ததற்

கூறுநலைக் குருகி னுயர்த்தனன் கலங்கி

உட்புலம் புறுதலி னுருவந்! திரியக்"[18]

எனும் இவ்வடிகள் எடுத்துரைக்கின்றன. கண்ணகியின்பால் கோவலன் வைத்திருந்த காதல் உணர்வையும் இப்பாடலடிகள் உணர்த்துகின்றன.

கணவன் தன் நலனுக்காகக் கோவலன் அடைந்த துன்பத்தை நினைந்து வருந்தினாள். கடுங்ஞாயிற்றின் ஒளிக்கு ஆட்பட்டுத் துன்புற்றுவரும் கணவனைக் கண்ணுற்றாள்; வருத்தமிகக் கொண்டாள். நாவு உலரும்படியாக வாடினாள். அவள் எய்திய துன்பங்களை மறந்தாள். இதனை,

"கடுங்கதிர் வெம்மையிற் காதலின் றனக்கு

நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்

தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி"[19]

என்ற அடிகள் உணர்த்தும். கோவலன் கண்ணகிக்காகவும், கண்ணகி கோவலனுக்காகவும் வருந்துவது காதல் உணர்வின் வெளிப்பாடாக இருக்கிறது. கண்ணகி தன் துன்பத்தை மறந்து கணவன் துன்பமே பெரிது என வருந்துவதன் மூலம் பெண்மைப் பண்புகளில் உயர்ந்து நிற்கிறாள்.

தன்னைப் பிரிந்து தவறிழைத்த கணவனின் நலம் பேணுகின்ற மேன்மைக்குரியவளாகக் கண்ணகி விளங்குவது ஈண்டு புலனாகும்.

உயரிய பண்பு

காட்டில் சுயம்பிரபை தவம் செய்து கொண்டிருந்தாள். அனுமனைத் தலைமையாக ஏற்ற வானரர்கள் அவளிடம் வந்து சீதையைத் தேட

வந்துள்ளோம் என்று கூறினார்கள். அவள் என்தவப் பயன் கைகூடியது என மகிழ்ந்து வானரர்களின் கால்களைக் கழுவி அவர்களுக்குப் பணிவிடை செய்து விருந்தளித்தாள். இவ்வாறு செய்தால் வீடுபேறு கிடைக்கும் என்பதனை,

"கேட்டவளும் என்னுடைய கேடில் தவம் இன்னே

....

....

ஊட்டி மனன் உள்குளிர இன்றுரை உரைத்தாள்"[20]

எனக் கம்பர் குறிப்பிடுகிறார்.

கோவலனும், கண்ணகியும் மதுரையை நோக்கி நடந்து செல்கின்ற போது ஓரிடத்தில் இளைப்பாறுகின்றார்கள். அவ்விடத்தில் கோவலன் கால்களை இளஞ்சூடு கலந்த நீரால் கழுவித் தொழுதாள். பின் ஆயமகள் அழகாகப் பின்னிய ஓலைத் தடுக்கில் அமர வைத்தாள். ஈனா வாழையின் குறுத்து இலையை விரித்து அமுது படைத்துக் கணவனுக்கு வழிபாடு நடத்தினாள். இதனை,

"கடிமல ரங்கையின் காதல னடிநீர்
சுடுமண் மண்டையிற் றொழுதுதனண் மாற்றி
மண்கை மடந்தையை மயக்கொழிப் பனள்போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையாற் றடவிக்
குமரி வாழையின் குருந்தகம் விரித்திங்
கமுத முன்க வடிக ளிங்கென"[21]

என மதுரைக்காண்டத்தில் எடுத்துரைக்கின்றார் இளங்கோ. விருந்தினர்களின் காலடி கழுவி, உணவு படைத்து உபசரிப்பது போல

கண்ணகி தன் கணவன் கால்களைக் கழுவி உணவு படைத்துப் பண்புகளில் உயர்ந்தவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

கற்பு விளக்கம்

கற்பு என்ற சொல் தொல்காப்பியர் காலம் முதல் இன்றுவரை பெருவழக்காக வழங்கி வருகிறது. இச்சொல் "பதிவிரதா தர்மம் களவு கூட்டத்திற்குப் பின் தலைவன், தலைவியை விருப்பப்படி மணந்த இல்லறம் புரியும் ஒழுக்கம், கலவி, தியாகம், வேலைப்பாடு, சங்கற்பம், ஆணை, கதி என்ற எட்டுப் பொருள்களில் இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது"[22] என்கிறது தமிழ் லெக்சிகன்.

"கற்பு என்ற சொல்லுக்கு நேரான ஆங்கிலச் சொல்லாக 'Chastity', 'Conjugal Fidelity' போன்ற சொற்கள் அகராதியில் இடம்பெற்றுள்ளன. 'Chastity' என்பதற்குக் கன்னிமை, தூய்மை, தற்கட்டுப்பாடு என்ற பொருள்கள் தரப்படுகின்றன. 'Conjugal Fidelity' என்ற சொல்லுக்கு மணவாழ்வில் கணவன் மனைவி இருவரிடத்தும் ஏற்படும் பற்றுமாறா உறுதிப்பாடு என்ற பொருள் தரப்படுகிறது."[23] கணவன் மனைவியிடத்தும், மனைவி கணவனிடத்தும் பற்று மாறாமல் இருக்கும் தன்மை என்கிறார் இரா.பிரேமா.

சங்க இலக்கியத்தில்

பெண்களின் கற்பைச் சங்க இலக்கியங்கள் பல சுட்டுகின்றன.

"வடமீன் புரையும் கற்பின் மடமொழி அரிவை"[24]

என்று புறநானூறும்,

“பெருநல் வானத்து வடவயின் விளக்கும்

சிறுமின் புரையும் கற்பின் நறுநுதல்”[25]

என்று பெரும்பாணாற்றுப்படையும்,

“அருந்ததி இனைய கற்பின்”[26]

என்று ஐங்குறு நூறும்,

“வடமீனின் போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்”[27]

என்று கலித்தொகையும் குறிப்பிடுகின்றன.

மணிமேகலைக் காப்பியம் புனைந்த சீத்தலைச் சாத்தனார் கற்பு என்பதற்கு,

“மண்திணி ஞாலத்து மழைவளம் தருவும்

பெண்டிராயின் கூறும் பிறர் நெஞ்சு புகார்”[28]

என்று குறிப்பிடுகின்றார்.

இராமாயணத்தில் இராமன் காட்டுக்குச் செல்லும் பொழுது உடன் சீதையும், இலக்குவனும் செல்கின்றனர். இராமனின் திறம், மனவுறுதி, இலக்குவன் வில்லாற்றல் போன்றவை இவர்கள் காட்டுக்குச் செல்வதற்குப் பலம் பொருந்தியனவாகக் காணப்பட்டாலும், எல்லாவற்றிற்கும் மேல் சீதாப்பிராட்டியின் கற்புத் தன்மை இராமனுக்கு முதன்மைத் துணையாக நின்றது என்பதைக் கம்பர்,

“தையறன் கற்பு தன்றகவுத் தம்பியும்

ஐயலும் போயினால்வி னப்பனே”[29]

என வருணிக்கின்றார்.

கற்பென்பது உள்ள மகிழ்ச்சியும் ஊடலும் ஊடலுணர்த்தலும் பிரிவும் பிறவும் பொருந்தியதாகும். இதனை நம்பியகப்பொருள்,

"**பொற்பமை சிறப்பிற் கற்பெனப்படுவது**

மகிழ்வும் ஊடலும் ஊடலுணர்த்தலும்

பிரிவும் பிறவும் மருவியதாகும்"[30]

என்று உரைக்கின்றது.

இவ்வாறு சங்க இலக்கியம், காப்பியம், நம்பியக்பொருள் போன்ற இலக்கியங்கள் கற்பைப் பற்றி விளக்கம் தருகின்றன.

கற்பு நெறி

உலகத்திலுள்ள அனைத்து உயிர்களிலும் சிறந்தது மனித உயிர். பெண்களுக்கு உயிரினும் சிறந்தது நாணம். அதனினும் உயரியது கற்பு. தமிழ்ச் சமுதாயம் பெண்களை வணங்கிப் போற்றக் காரணம் கற்பு என்ற ஓர் ஒப்பற்ற பண்பேயாகும்.

பழந்தமிழரின் அகவாழ்க்கையைக் களவு, கற்பு என்ற இரு நிலைகளில் பகுத்துக் கண்டுள்ளார் தொல்காப்பியர். ஒத்த அன்புடையார் மாட்டு நிகழும் மறையொழுக்கமே அன்பின் ஐந்திணை ஒழுக்கமாகும். அதுவே களவு எனப்பட்டது. களவு வெளிப்பட்டுத் திருமணத்தில் முடிவது கற்பென்பதை,

"**கற்பெனப்படுவது கரணமொடு புணரக்**

கொளக்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"[31]

என்ற நூற்பா குறிப்பிடுகிறது.

"கற்பு என்பது பால் வகை (Gender) அடிப்படையில் பெண்ணுக்கென்று வகுக்கப்பட்ட பண்பாட்டு அடிப்படையிலான சமூகக் கட்டுத் திட்டமாகும்"[32] என்பர் இரா.பிரேமா.

இச் சமூகத்தில் அன்று முதல் இன்றுவரை ஒரு பண்பாட்டுக் கூறாகவே கற்பு அமைந்துள்ளது.

சிலம்பில் தொடக்கம் முதல் கண்ணகியின் கற்பு காணப்பட்டாலும் கோவலன் கொலையுண்டு இறந்தவுடன் மிகுதியாக வெளிப்படுகின்றது.

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறம் இவள் திற மென்றும்
மாதரார் தொழு தேத்து வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ"[33]

எனும் அடிகளின் வழி வடமீனின் (அருந்ததி) கற்புக்கு இணையான கற்பினையுடையவள் கண்ணகி என்பது பெறப்படுகிறது. கோவலன் கொலையுண்டு இறந்தவுடன் கண்ணகியும் இறந்திருந்தால் கோவலனைக் கள்வன் என்றே உலகம் கருதியிருக்கும். கண்ணகி கோபமடைந்து; சிலம்பின் மூலம் பாண்டிய மன்னன் நீதி தவறிவிட்டான் என நிரூபித்து; தன்கணவன் குற்றமற்றவன் என்பதை நிலைநாட்டி அறக்கற்பினளாக இருந்தவள் மறக் கற்பினளாக மாறினாள். இதற்கு

"கணவற் குற்ற கருத்துயிர் பொருள்"[34]

எனும் அடி அரண் செய்யும்.

கற்பின் ஆற்றல்

ஒரு பெண் தன் கற்பு நிலை தவறாமல் இல்வாழ்க்கையை மேற்கொண்டொழுகும் பொழுது ஏற்படும் துன்பத்தினை எதிர்த்து அவளை மேலோங்கச் செய்யும் ஆற்றல் கற்புக்கு உண்டு.

நல்லதங்காள் தன் கணவன் வீட்டில் ஏற்பட்ட பஞ்சம் பொறுக்காமல்

அண்ணன் வீட்டிற்குச் செல்கிறாள். அங்கு அண்ணனின் மனைவி கதவை அடைக்கின்றாள். அப்பொழுது நல்லதங்காள் நான் கற்புக்கரசி என்பது உண்மையானாள் கதவு திறக்கட்டும் என்றவுடன் கதவு திறக்கிறது. இதனை,

> **“பத்தினியும் நானானால் பத்தாவும் அவரானால்**
> **உத்தமியும் நானானால் ஒரு நூல் கழுத்தியானால்**
> **தானே திறக்க வேணும் தாய்வீட்டுப் பொற்கதவு**
> **பத்தினியாள் வாக்குப் பலித்தது தானப் போது**
> **உத்தமியாள் சொல்லையிலே உடனே திறந்தப்போ”[35]**

என்ற அடிகள் சுட்டும். நல்லதங்காளின் கற்புத்திறம் இங்கு முதன்மை பெறுகிறது.

கண்ணகி தன் கணவன் இறந்தவுடன் அதைப் பொறுக்காதவளாய் மணமிகுந்த கூந்தலை விரித்துக் கண்களில் கண்ணீர் பெருக “மார்பகத்தைத் திருகி எரிந்தாள்” கண்ணகியின் பத்தினித் தன்மையால் பெருந்தீ எழுந்தது. பாண்டிய மன்னனின் மூதூராகிய மதுரை அழிந்தது. இதனால் கண்ணகி மாபெரும் பத்தினி, கற்பில் சிறந்தவள் என்பவை வலியுறுத்தப்படுகிறது. கற்பில் சிறந்தவர்கள் என்ன செயல்கள் செய்ய நினைக்கின்றார்களோ அவை நிறைவேறும் என்பது இதன் வழி புலனாகிறது.

கண்ணகியின் சீற்றம்

மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும். கண்ணகி கோவலனைப் பிரிந்திருந்த நேரத்தில் தன் துன்பத்திற்குக் காரணமான மாதவியைப் பழிக்கவில்லை; கோபப்படவில்லை. மதுரை நகரில் கோவலன் கொலையைப் பற்றி அறிந்த பின்பு முன்னைய நிலையிலிருந்து

மாறினாள். முதலில் அழுது புலம்பிய கண்ணகி கணவனைக் கள்வன் எனப் பழி கூறிய கொடுமையை நினைத்து இவள்,

"பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடுஞ் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப வருதாடன் கேள்வனை
எங்கணாஅ வென்னா வினைந்தேங்கி மாழ்குவாள்"[36]

இவ்வாறு சீற்றம் கொண்டாள். கண்ணகியின் கோபத் தீயுடன் கணவன் இறந்ததை நினைத்து கண்கள் சிவக்கப் புலம்பியதைக் கூறுகின்றன.

கோவலனைக் கள்வன் எனக் கூறியவன் மன்னவன். அதனால் நெஞ்சில் பொங்கியெழுந்ததை,

"மன்பதை யலர்தூற்ற மன்னவன் றவறிழைப்ப
அன்பினை யிழந் தேன்யா னவலங்கொண் டழிவளே
நறைமலி வியன் மார்பி னைண்பனை யிழந்தேங்கித்
துறை பல திற மூழ்கித் துயருறு மகளிரைப் போல்
மறனொடு திரியுங்கோன் மன்னவன் றவறிழைப்ப
அறனெறு மடவோயா னவலங் கொண் டழிவலோ
தம்முறு பெருங்கணவன் றழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறை மூழ்குங் கவலைய மகளிரைப் போல்
செம்மையி னிகந்த கோற் றென்னவன் றவறிழைப்ப"[37]

என்ற அவளது துயரம் சீற்றமாகத் தொடங்கியது.

மன்னவன் தவறு செய்ததைக் கண்டும் கைம்மை மகளிரைப்போல் பொறுமையோடு அழுது அழிவது தருமமோ? என்று எண்ணிக் கொதித்தாள். "புகழ் நிறைந்த குடும்பத்துப் பெண்ணாக இருந்தும் அந்த புகழைப் பறிகொடுத்து விட்டு பழியைச் சூடிக்கொண்டு அழிவாளே

அன்று. அவள் பெண்மையின் திண்மையே அவளுடைய பொறுமையை மாற்றி சீற்றம் உண்டாக்கியது”[38] என்பர்.

பாண்டிய மன்னனிடம் சென்று வழக்குரைத்து வென்ற பின்பும் கோப்பெருந்தேவியைப் பார்த்து வஞ்சினத்துடன் “யான் பத்தினியேயானால் அரசரோடு மதுரையையும் அழிப்பேன்”[39] என்றாள்.

“பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாகில்

ஒட்டே ரைசோ டொழிப்பேன் மதுரையுமென்”[40]

என்பதில் கண்ணகியின் சீற்றத்தை அறிய முடிகிறது. ஓர் அரசன் என்றாலும் தன் கணவன் கொலையுண்டதும் மற்ற பெண்களைப் போல கைம்மை நோன்பிருந்து உயிர்விடாமல் சீற்றமெடுத்து அரசனுடன் போராடி தன் கணவன் கள்வனில்லை என நிரூபித்தாள். மன்னனை எதிர்த்த போராட்டவுணர்வு பெண்ணியச் சிந்தனையின் பாற்பட்டதாகும்.

கண்ணகியின் கண்ணீர் ஆற்றல்

ஒரு பெண்ணின் கோபத்தைவிட அவளின் கண்ணீருக்கு ஆற்றல் மிகுதி என்பர்.

“அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே

செல்வத்தைத் தேய்க்கும் படை”[41]

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இவற்றில் ஓர் அரசனுடைய யானை, தேர், குதிரை, காலாள் என்னும் நால்வகைப் படையையும், வில், வாள், வேல் முதலிய கருவிகளோட ஒரு பக்கம் நிறுத்தி, அல்லல் பட்டவள் அழுகும் கண்ணீரை அதன் எதிர் பக்கம் நிறுத்தினால் படைகள் ஏற்படுத்திய அழிவைவிட பெண்ணின் கண்ணீர் ஏற்படுத்திய அழிவு மிகுதி என்கிறார்.

உலகில் பல வல்லரசுகள், பெருமன்னர்கள் அழியக் காரணமாகப் பெண்களின் கண்ணீர் இருந்துள்ளது. அவ்வகையில் கண்ணகி கண்ணீருடன் அழுது புலம்பியதை இளங்கோ,

"அல்லல் உற்று ஆற்றாது அழுவாள்"[42]

எனக் கூறுவர்.

பத்தினிப் பெண்கள் இயற்கையைப் பார்த்து எது கூறினாலும் அது கேட்கும் என்பது நம்பிக்கை. கண்ணகி தீயிடம் மதுரையை எரிக்கச் சொன்னதற்குத் தீயும் எரித்தது போல அரசன் கண்ணகியின் கண்ணீரால் அழிந்தான் என்பதை,

"நீர்வார் கண்ணை எம்முன் வந்தாய் நீயார்"[43]

இவ்வாறு கூறுகிறார் இளங்கோ.

அரசன் கண்ணகியைப் பார்த்து நீ யார்? என வினவினான். அதுகேட்டு கண்ணகி வெகுண்டுரைத்தாள். அவளின் சீற்றத்தைக் கண்டு மன்னன் அஞ்சவில்லை. அவள் கண்ணீரின் கோலத்தைக் கண்டே அஞ்சினான். அதனால் உயிர்விட்டான். இதனை,

"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் றனிச்சிலம்புங் கண்ணீரும் - வையக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றா னுயிர்"[44]

என வழக்குரைக் காதையில் விளக்குகிறார்.

கண்ணகிக்குக் கோயில் எடுத்து வாழ்த்திய வாழ்த்தொலியிலும் இந்தக் கண்ணீர் ஆற்றலே கேட்கிறது.

“தொல்லை வினையால் துயிர் வழந்தாள் கண்ணீன் நீர்
கொல்ல உயிர் கொடுத்த கோவேந்தன் வழியரோ”[45]

எனும் வாழ்த்துச் சான்றாக உள்ளது. பெண்களின் பொறுமை, சீற்றம், கண்ணீர் போன்றவை அரசனையும் வெல்லக் கூடியது இதன் வாயிலாக பெண்மையின் ஆற்றல் வெளிப்படுகிறது.

விருந்தோம்பல்

தமிழ்மக்களின் பண்புகளில் விருந்தோம்பல் சிறப்பிடம் பெறுகிறது. மனையகத்தே இருந்து மனையாளோடு கூடி நல்லற வாழ்வை நடத்துவதே இல்லறம் என்பது தமிழர் கொள்கை. நல்லறமெனச் சான்றோர் கூறுவனவற்றுள் விருந்தோம்பலும் ஒன்றாகும். அஃது இல்லறத்தார் விரும்பி மேற்கொள்ள வேண்டியதாகும். “துணைவியையும் துன்னிய சுற்றத்தையும் விடுத்துத் துறவறம் பூண்டு காட்டிற்கே போகாமல் வீட்டிலிருந்து இல்லறம் நடத்துவது, வருகின்ற விருந்தினரை வரவேற்று ஓம்புதற்கே என்பது சான்றோர் கருத்து. இல்லறத்தே வாழ்வோர் செல் விருந்தோம்பி, வருவிருந்து பார்த்திருக்க வேண்டும்”[46] என்பர்.

சங்ககால மகளிர் விருந்தினர் நள்ளிரவில் வந்தாலும் முகம் மாறாது அவர்களை எதிர்கொண்டு வரவேற்று மகிழ்ச்சியுடன் விருந்து உபசரித்ததை,

“அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்று கற்பின்
மெல்லிய குறுமகள்”[47]

எனும் நற்றிணைப் பாடல் குறிப்பிடுகிறது. கண்ணகி இப்பண்புகளைப் பெற்று அக்காலப் பெண்களுள் தனித்துவம் வாய்ந்தவளாகக் காணப்படுகின்றாள்.

பெண்மை என்றாலே மென்மை, தாய்மை என்பது பொருள். பெண்கள் பொறுமையின் இருப்பிடம். மென்மை குணத்தாலே அவர்களுக்குப் எண்ணற்ற பெயர் வந்தது. கண்ணகி இறுதிவரையில் கணவன் தனக்குத் துன்பம் ஏற்படுத்தியதாகக் கருதவில்லை. தான் துன்புற்றதாகவும் கூறவில்லை. தான் இல்லறக் கடமைகளைச் செய்யத் தவறியதை,

"அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னைநும்"[48]

இவ்வடிகள் எடுத்துரைக்கின்றன. இல்லறக் கடமைகளைத் தன் கணவருடன் இருந்து செய்ய இயலவில்லையே என வருந்தினாள். தன் துன்பத்தை நினைக்காது கணவன் துன்பத்தையே பெரிதாக நினைக்கும் இவளது பண்பு சிறப்பிற்குரியது. இச்சிறப்பால் ஏனைய பாத்திரங்களிலிருந்து உயர்ந்துள்ளாள்.

பெண்ணை உயர்த்திக் காட்டுவது மென்மையாகும். 'பெண்மை' அது பெண்களின் பண்பு, செயற்பாடுகள் போன்றவற்றை வைத்தே ஆராயப்படும். இதில் கண்ணகி முதன்மை பெறுகிறாள்.

கோவலனுக்கும் கண்ணகியும் மதுரையை நோக்கி செல்லும் பொழுது தன் கணவனோடு இணைந்து செல்வது பெரும்பேறு எனக் கருதினாள். அவ்வாறு செல்லும்போது ஒரு காதம் தொலைவு கடந்தவுடனே கண்ணகி கோவலனைப் பார்த்து மதுரை இன்னும் எவ்வளவு தொலைவிலுள்ளது என வினவுகிறாள். அதற்குக் கோவலன் அரைக்காதம் தொலைவிலுள்ளது என்று கூறுகிறான்.

"இறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து
முதிராக் கிளவியின் முள்ளெயி றலங்க
மதுரை மூதூர் யாதென வினவ
ஆறைங் காதநம் மகனாட் டும்பர்
நாறைங் கூந்த னணித்தென நக்குத்
தேமொழி தன்னொடுஞ் சிறையகத் திருந்த"[49]

என்ற அடிகள் உணர்த்துகின்றன. நெருப்பாற்றில் நீந்த நேர்ந்தாலும் இராமன் இருக்குமிடமே சீதைக்கு அயோத்தி. சீதையின் எண்ணம்போல கண்ணகியின் எண்ணமும் கணவனிடத்து உயிர்ப்புடன் அமைந்திருந்தது. கணவனுடன் இணைந்தே துன்புற்று வாழ்தலும் நலம் பயக்குமென எண்ணுகிறாள்.

பெண்ணுக்குப் பெண் பெருமை சேர்த்தல்

பெண்ணுக்குப் பெண் உதவி செய்வது அக்காலம் முதல் இக்காலம் வரைக் காணப்படுகிறது. பெண்களின் செயல்களை பெண்களே எடுத்துக் கூறி அவர்களுக்குப் பெருமை சேர்க்கின்றனர். "பெருந்தன்மையும் குணத்தால் மென்மையையும், கொள்கையால் திண்மையும் உடையவர்களே உலகில் செயற்கரிய செயல்களைச் செய்கின்றார்கள்"[50] என்கிறார் தாயம்மாள் அறவாணன். அச்செயலைத் திருக்குறள்,

"உற்ற நோய் நோன்றல் உயிருக்கு உறுகண் செய்யாமை
அற்ற தவத்திற்கு உரு"[51]

இவ்வாறு எடுத்துரைக்கிறது. தவம் புரிபவர் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாது நற்செயல் புரிவதனை இக்கருத்து வலியுறுத்தும்.

கண்ணகியின் வாழ்க்கைத் துன்பத்திற்குக் காரணமாக இருந்தவள் மாதவி. அத்தகைய மாதவியை கண்ணகி ஒரு போதும் பழிக்கவில்லை அவள் மீது கோபம் கொள்ளவுமில்லை. இச்செயலால் மற்ற பெண்களை விட இவள் பண்பால் உயர்ந்தவள் என்பதைப் பறை சாற்றும். கோவலன் மாதவியை,

"மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள்"[52]

என்றும்

"சலம்புணர் கொள்கைச் சலதி"[53]

எனப் பழித்துக் கூறினான். அதைக் கேட்டபோதும் கண்ணகி, மாதவியைப் பற்றி மறுமொழி கூறாது இருந்தாள். இக்குணத்தால் இவள் மேன்மையுற்றவளாக விளங்கினாள்.

கோவிலுக்குச் சென்று வழிபடும் கண்ணகியைச் செவிலித்தாய்

"மடம்படு சாயலாண் மாதவி தன்னைக்
கடம்படா காதற் கணவன் கைபற்றிக்
குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
தடம்பெருங் கண்ணிக்குத் தாயர் நான் கண்டீர்
தண் புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர்"[54]

என உரைக்கின்றாள். கண்ணகியின் பெருந்தன்மையையும், பெண்ணுக்குப் பெண் பெருமை சேர்ப்பதையும் இக்கருத்து உணர்த்துகிறது.

கடவுற் கொள்கை

தமிழ்ப் பெண்கள் கணவனைத் தெய்வமாக வணங்குதல் மரபு. கணவனைத்தொழும் பெண்கள் மழை பெய் என்றால் பெய்யும் என்பதை வள்ளுவர்,

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை”[55]

என்பர்.

“மனைவிக்குக் கணவன் தான் உலகம். ஒரு பெண்ணுக்குத் திருமணமான பிறகு கணவன் தான் தெய்வம் என்ற படிப்பினையைச் இச்சமூகம் அவளுக்குக் காலம் காலமாகக் கூறி கற்பித்து வருகின்றது. இந்தக் கற்பித்தலிலிருந்து தப்ப இயலாதவளாகவும் தன்னைக் கற்புக்கரசி என்று ஆக்கிக் கொள்ளவும், வாய்பேசாமல் கணவனையே தெய்வமாக நினைத்துத் தன் வாழ்க்கையைக் கழிக்கின்றார்கள்”[56] என்பர் இரா. பிரேமா.

கண்ணகி புதிய கனவொன்று கண்டு அச்சப்படுகிறாள். அதனைத் தன் தோழியான தேவந்தியிடம் கூறுகிறாள். அதற்குத் தேவந்தி நீ ‘சோமகுண்டம்’ சூரியகுண்டம் சென்று தொழுது வழிபட்டால் நீ கணவனிடம் இருந்து பிரியமாட்டாய் எனக் கூறுகிறாள். அதற்குக் கண்ணகி உடன்படவில்லை மாறாக அவள் கணவனைத் தொழுதால் எல்லாப் பயனும் கிட்டும் என நம்பினாள். கணவனையே கண்கண்ட தெய்வமாக ஏற்றொழுதினாள். அதுவே அவளின் கடவுற் கொள்கையாக அமைந்தது.

‘தெய்வம் தொழாஅள்’ என்ற குறளுக்கு எடுத்துக் காட்டாக அவளது வாழ்வும், கடவுற் கொள்கையும் காணப்பட்டது என்பதை இளங்கோ,

“தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்

தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால் தெய்வமாய்

மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி

விண்ணகமா தர்க்கு விருந்து”[57]

என மதுரைக் காண்டத்தில் குறிப்பிடுகின்றார். இதனால் கணவனைத் தொழுதால் எத்தீய வினையும் வராது. கணவனைத் தொழுத கண்ணகியின் கடவுற் கொள்கை பெண்ணிற்குப் பெருமை சேர்க்கும் செயலாகவும் இருப்பதை உணரமுடிகிறது.

கண்ணகி தொடக்க நிலையில் அடக்கம், பணிவு, பொறுமை, போன்ற பண்புகளால் மிதவாதப் பெண்ணியவாதியாக இருந்து இடையில் விருந்தோம்பல், அன்பு, அறம் போன்றவற்றால் சமதர்ம பெண்ணியமாக வாழ்ந்து, கணவன் இறந்தவுடன் கோபமுற்று, அரசனை வாதாடி வென்று, மதுரையை எரிக்கின்ற பொழுது தீவிரவாதப் பெண்ணியமாக மாறுகிறாள். இது சூழலுக்குத் தகுந்த பெண்ணிய வளர்ச்சி நிலையாகும்.

மணிமேகலை

ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரத்திற்கு அடுத்தது மணிமேகலையாகும். இவ்விரண்டும் இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்பெறும். இக்காப்பியங்கள் சங்க காலத்திற்குப் பிற்பட்டவை. மணிமேகலையில் காட்சி, மக்கள், ஒழுக்கம், பழக்க வழக்கங்கள், பெண்டிர் நிலை, பண்பாடு, அரசியல், சமூக நீதி, தொழில்கள், கலை பிறநாட்டு உறவுகள், கொள்கைகள் போன்றவை சிறப்பித்துக் கூறப்படுகின்றன. காப்பியத் தலைவியான மணிமேகலை பண்புகளிலும் செயல்களிலும், பெண்மைத் தன்மையிலும், தலைமை மாந்தராக எவ்வாறு விளங்குகிறாள் என்பது இங்கு ஆராயப்படுகிறது.

மணிமேகலையில் முதற்காதை ‘விழாவரைக் காதை’. இது காப்பிய நிகழ்வுக்கு அடிப்படையான காதை. இதில் மணிமேகலை பற்றிய குறிப்பில்லை. ஊரலருரைத்தக் காதை எனும் இரண்டாவது

காதையில் மணிமேகலை அறிமுகப்படுத்தப்படுகிறாள். பளிக்கறைபுக்கக் காதை எனும் நான்காம் காதையில் பேசும் பாத்திரமாக வருகிறாள். சக்கரவளக்கோட்டைக் காதை, பாத்திரம் பெற்ற காதை, ஆபுத்திரனின்றிறம் அறிவித்த காதை, பாத்திர மரபுக்குரிய காதை, ஆதிரை பிச்சை இட்ட காதை, சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை போன்ற காதைகள் சிறப்புத் தருவதாக அமைகின்றன.

காதல் மனம்

உலகத்து உயிர்கள் காதலென்னும் தன்மைக்குள் அகப்பட்டு வாழ்கின்றன. இது குறித்துத் தொல்காப்பியர், பாரதியார், பாரதிதாசன், வ.சு.ப. மாணிக்கனார் ஆகியோர் முறையே,

"எல்லா வுயிர்க்கும் இன்ப மென்பது
கானமர்ந்து உருவம் மூவற்றாகும்"[58]

"காதல், காதல், காதல்
காதல் போயின் சாதல் சாதல்"[59]

"காதலடைதல் உயிரியற்கை"[60]

காதலென்பது உடற்பசி, உள்ளப்பசி, உயிர்ப்பசி, பிறவிப்பசி[61] என வெளிப்படுத்தியுள்ளனர்.

காதல் உயிர்ப்பு மிக்கது என்பதனை, பெத்தரண் ரசல் என்ற மேல்நாட்டு அறிஞர் "மனித வாழ்க்கையில் காதலை இன்றியமையாதவற்றுள் ஒன்றாக நான் கருதுகிறேன். அதன் இயல்பான போக்கில் தேவையின்றிக் குறுக்கிடும் அமைப்பு எதனையும் நான் வெறுக்கிறேன்"[62] எனக் கூறுகிறார்.

அந்தந்தக் குறிப்பிட்ட நிலத்து ஆண், பெண்களிடையே ஏற்பட்ட காதலையே அகப்பொருள் இலக்கியம் பாடுகிறது.

ஆண், பெண் இரு உள்ளங்களின் இன்ப வெளிப்பாடு காதல். இது உணர்வுகளில் உயர்ந்ததாகக் காணப்படுகிறது. மணிமேகலை உதயகுமாரன் தன் மீது காதல் கொள்கிறான் என்பதைத் தனது தோழியான சுதமதி வழியறிகிறாள். மேகலைக்குக் காதல் வெளிப்பட்டது. இதனை,

"கற்புத் தானில ணற்றவ வுணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள் விலை யாட்டியென்
நிகழ்ந்தன னாகி நயந்தோ னென்னாது
புதுவோன் பின்றைப் போனதென் னெஞ்ச
மிதுவோ வன்னாய் காமத் தியற்கை"[63]

என்று கூறுகிறாள். தான் விரும்பியவன் காதலனாக அமையும் போது நெஞ்சம் பின் தொடர்கிறது. இதுதான் காமத்தியற்கை என்கிறாள். இங்கு மணிமேகலையின் காதலுணர்வு வெளிப்படுகிறது.

மணிமேகலை புத்த பீடிகையைக் கண்டு பிறப்புணர்ந்தாள், முற்பிறப்பு வாழ்க்கையைப் பிரமதருமன் வழி அறிகிறாள். இதனை,

"சாதுயர் கேட்டுத் தளர்ந்துகு மனந்தேன்
காதலன் பிறப்புங் காட்டா யோவென"[64]

என்ற அடிகள் சுட்டுகின்றன. தன் பிறப்பை உணர்ந்து கொண்ட மணிமேகலை உதயகுமாரன் பிறப்பையும் அறிந்துகொள்ள வேண்டுமென எண்ணுகிறாள். முற்பிறப்பைக் கூறிய தெய்வம் திரும்ப வாராதோ என ஏங்குகிறாள். இதன் வழி காதலுணர்வு எத்தன்மை வாய்ந்தது என்பதை மணிமேகலை வழி உணரமுடிகிறது. அவற்றில் இருந்து மீண்டுகாட்டுவது பெண்மைத் தன்மையை உயர்த்திக்காட்டுகிறது.

துறவு

மனிதனைத் தன்னிலைப்படுத்திக் காட்டுவது துறவு. "மனிதப் பண்புகளில் தன் இன்பத்தைப் பெரிதாக நினைக்காமல் மனதைத் துறந்து ஆற்றுதல் துறவாகும். மற்றவர்களிடம் அன்பு காட்டுதல், இழி குணத்தை அகற்றுதல், உலகத்தோடு ஒட்டுதல், இரக்கம் காட்டுதல், வாய்மை பேசுதல் போன்றவை துறவின் செயலாகும்."[65] என்பர்.

மணிமேகலை பிறந்தவுடன் கணிகையர் பலர் கூடி அவளுக்குப் பெயரிட வேண்டும் என்று மாதவியிடம் கூறினர். மாதவி கோவலனிடம் கேட்க அதற்கு என் குலதெய்வம் பெயரிடுக என்றான். அவ்வாறே மணிமேகலா என்பதை வைத்து மணிமேகலையென்று பெயர் சூட்டினார்கள். அன்று நள்ளிரவில் மணிமேகலா தெய்வம் மாதவியின் கனவில் தோன்றி,

"காமன் கைகறக் கருநவை யறுக்கும்
மாபெருந் தவக் கொடியின்றனை யென்றே"[66]

என்றுரைத்தது. இவ்வடியில் 'தவக் கொடியென்றனை' என்பதில் இவள் பிறப்பிலேயே துறவு நிலையைக் காட்டுகிறது.

தன் மகள் மணிமேகலை தவத்திற்கின்றே பிறந்தவள் என்பதை மாதவி,

"அருந்தவப் படுத்த வல்லவதியாவதும்
திருந்தாச் செய்கை தீத் தொழிற்படா அள்"[67]

என்று குறிப்பிடுவதன் வழி அறிய முடிகிறது. இளம் வயதில் துறவு பூண்டு அறச்செயல்களைச் செய்வதன் வாயிலாக பெண்ணின் சிறப்பு மேலோங்குகிறது.

நிலையாமை

சங்ககாலச் சான்றோர்களின் அனுபவ உண்மைகளையே பிற்காலப் புலவர்கள் நீதிக் கருத்துக்களாகப் போற்றினர். மக்கள் வாழ்வை வளப்படுத்துவதிலும் நீதிகளைக் கூறுவதிலும் இலக்கியங்கள் பெறும் பங்கு வகிக்கின்றன.

> **"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே**
> **பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்**
> **நில்லா உலகம் புல்லிய நெறித்தே"**[68]

என்று தொல்காப்பியர் காஞ்சித் திணையில் நிலையாமையினை எடுத்துரைத்துள்ளார்.

நல்லறிவாளர் நரை வருமென்றெண்ணிக் குழவிப் பருவத்திலேயே துறவு மேற்கொள்வர். நிலையற்ற இளமைக் காலத்தில் மகிழ்ந்திருப்பவர் முதுமைக்காலத்தில் கோலூன்றி தள்ளாடி எழுந்திருப்பார். இவ்வாறு இளமை நிலையாமையை,

> **"சொல் தளர்ந்து கோல் ஊன்றிச் சோர்ந்த நடையினராய்ப்**
> **பல் கழன்று பண்டம் பழிகாலும் - இல்செறிந்து**
> **காம நெறிபடமுங் கண்ணிகார்க்கு இல்லையே**
> **ஏம நெறிபடும் ஆறு"**[69]

என்று மக்கள் முதியவராவதையும், இளமை நிலையில்லாததையும் திருமந்திரம் குறிப்பிடுகின்றது.

மணிமேகலை, உதயகுமாரனைப் பார்த்து ஒரு வயதான மூதாட்டியை காண்பித்து செழுங்கழுநீர் போன்ற கண்களில் நீர்

சொரிந்தன. இலவம் இதழைப் போன்று சிவந்திருந்த வாய் இப்பொழுது துறுநாற்றம் வீசக் கூடியதாக உள்ளது. முத்துப் போன்ற பற்கள் இப்பொழுது சுரை விதையைப் போல் மாறி அழகிழந்து காணப்படுகின்றன.

வழுவழுப்பும் திரட்சியும் சுமைந்திருந்த தோள்கள் ஒடிந்து தாழ்ந்து தொங்குகின்ற தென்னை மட்டை போலச் சுருங்கி அழகிழந்தன. விரல்கள் நரம்பு, தோள்கள், நகங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி தனித்தனியே காணும்படி சுருங்கி வற்றிப்போயின. தொடை, கணைக்கால், பாதம் இளமையில் இருப்பதுபோல முதுமையில் இருக்காது என்பதை எடுத்துக் கூறுகிறாள். இதனை,

"நரைமூ தாட்டி யொருத்தியைக் காட்டித்
தண்ணறல் வண்ணந் திரிந்துவே றாகி
....
....
கழுநீர் கண்காண் வழுநீர் சுமந்தன
நிரைமுத் தனைய நகையுங் காணாய்
சுரைவித் தேய்ப்பப் பிறழ்ந்துவே றாயின
....
....
தூசினு மணியினுந் தொல்லோர் வகுத்த
வஞ்சந் தெரியாய் மன்னவன் மகனென"[70]

எனும் பாடலடிகள் வாயிலாக அறிய முடிகின்றன. முதுமைத் தன்மையினை இங்கு எடுத்துரைக்கிறாள்.

யாக்கை நிலையாமை

மனிதன் பிறக்கும்போதும் இறக்கும் போதும் முறையே எதையும் கொண்டுவருவதில்லை; கொண்டுபோவதில்லை. பிறந்த நிலையில் உள்ளதுபோல இறந்தபோது உடல் வளமை இருப்பதில்லை. இதன் நிலை குறித்துத் திருமந்திரம் தெளிவுபடுத்துகிறது.

வாழ்வே துன்பமயமானது. பிறவித் துன்பத்திற்குக் காரணமானது உடம்பு, அதை உணர்ந்து அறச் செயல்கள் செய்ய வேண்டும். 'புல்நுனி மீது நிற்கும் நீர்த்துளி போன்றது யாக்கை' ஏனெனில் இப்போதுதான் நின்றான், இருந்தான், கிடந்தான், அலறச் சென்றான் என்பது உலக இயல்பாக உள்ளது எனக் கூறுகிறது. இதனை,

"சென்றே அறிய ஒரு கால் இதுவரை
நின்றே எறிய பறையினை - நன்றே தாண்
முக்காலைக் கொட்டினுள் முடித்துக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து"[71]

எனக் கூறுகிறது. செத்தாரைச் சாவார் சுமந்து கொண்டு செல்கின்ற உடம்பு நிலையில்லாதது என்று கூறுகிறார்.

ஒரு மனிதனின் உடம்பு அவன் செய்த வினையால் வந்தது என்பது சமய நம்பிக்கை. நன்மை, தீமை செய்வதற்குக் காரணமாக இருப்பதும் மூப்பு, சாக்காடு மற்றும் கொடிய நோய்களுக்கு உறைவிடமாக இருப்பதும் உடம்பு. ஆசை, குற்றங்கள் நிறைந்தது உடம்பு. அவ்வாறான உடம்பு நிலையில்லாததை,

"வினையின் வந்தது வினைக்கு விளை வாயது

புனைவன நீங்கிற் புலால்புறந் திடுவது

மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை

பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்

புற்றடங் கரவிற் சேற்றச் சேக்கை

யவலக் கவலை கையா றழுங்க

றவலா வுள்ளந் தன்பா லுடையது

மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து"[72]

இவ்வாறு எடுத்துரைக்கின்றாள்.

பிறப்பதும், வயது முதிர்ந்து கிழப்பருவம் அடைவதும், நோய் வாய்ப்பட்டு வருந்துவதும் இறுதியில் இறப்பதும் இவ்வுடலின் இயல்பு என்பர். இவ்வுடம்பு துன்பங்கள் எல்லாம் நிறைந்திருக்கும் ஒரு பாண்டம். நோய்வாய்ப்பட்டு இறந்த மனிதவுடம்பை,

"பிறத்தலும், மூத்தலும், பிணிபட்டு இரங்கலும்

இறத்தவம் உடையது இடும்பை கொள்கலம்

மக்கள் யாக்கை இது"[73]

என உடம்பின் நிலையற்ற தன்மையை எடுத்துக் கூறுகிறாள். இக்கூற்றின் வாயிலாக நிலையில்லாததை விரும்புவதைவிட நிலையான அறத்தைச் செய்ய வேண்டும் என்பது பெறப்படுகிறது. மணிமேகலை நிலையாமையைக் கூறி மக்களை அறவழிப்படுத்துகிறாள். சமத்துவ பெண்ணியக் கோட்பாட்டை வலியுறுத்தும் பெண்ணாக இருந்துள்ளாள் என்பது இதன் வழி அறிய முடிகிறது.

உயிருகளுக்கெல்லாம் உணவு

பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்பது பழமொழி. “மனிதன் பசிக் கொடுமை காரணமாக எதையும் செய்யத் தொடங்குவான். பசிக்கொடுமையில் எந்த நிலைக்கும் மக்கள் இறங்கி விடுவார்கள்”[74] என்பர் சாமி சிதம்பரனார்.

கௌசிகன் நாட்டில் பல்லாண்டுகள் மழை பெய்யவில்லை. அங்கே வெப்பம் எழுந்ததால் உலகத்து உயிர்கள் பல பட்டினியால் மடிந்தன. அரசாட்சியைத் துறந்து தவம் புரிந்து அந்தணனாக மாறிய கௌசிக (விசுவாமித்திரன்) முனிவனும் பசியால் வாடினான். தன் பசியைப் போக்க நாயொன்றினைக் கொன்றான். கொன்ற நாயினை உண்ணத் தொடங்குமுன் இந்திரனுக்குப் பலியிட்டான். அப்பொழுது அவன் முன் இந்திரன் தோன்றி நாட்டில் மழை பெய்யும்படி செய்தான். அதனால் நாடு செழித்தது, பஞ்சம் பறந்து மக்கள் உணவுண்டு இன்பமாக வாழ்ந்தார்கள் என்று மணிமேகலை கூறினாள். இதனை,

“புன்மரம் புகையப் புகையழற் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலின்
அரசுதலை நீங்கிய வருமையற யந்தணன்
இருநில மருங்கின் யாங்கணுந் திரிவோன்
அரும்பசி களைய வாற்றுவது காணான்
திருந்தா நாயூன் றின்னுத லுறுவோன்
இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை

மழைவளந் தருதலின் மன்னுயி ரேங்கிப்

மழையா விளையுலும் பெருகிய தன்றோ"[75]

என்ற அடிகள் விளக்கும்.

மணிமேகலை புண்ணியரசன் என்பவனிடம் நீங்கள் ஒருவர் மட்டும் அருளறத்தைச் செய்தால் உலகில் உள்ள குற்றமெல்லாம் அழிந்து விடுமா? விடாது. அறமெனப்படுவது யாதெனின் உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் உணவு, உடை, இருப்பிடம் இவைகளைக் கொடுத்து உதவுவதுதான் அறம். இதைவிடச் சிறந்த அறம் இருப்பதாக நான் அறிந்ததில்லை என்பதை,

"கறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்

மறவா திதுகேண் மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியு முடையு முறையுலு மல்லது

கண்ட தில்லெனக் காவல லுரைக்கும்"[76]

என்று கூறினாள். உணவு, உடை, இருப்பிடம் கொடுப்பதே அறத்திலே சிறந்ததாகும். இங்கு அறத்தின் சிறப்பைப் பெண் வழிக் கூறி பெண்மையை உயர்த்திக் காட்டுகிறார் சாத்தனார்.

உணவறம்

மனித உயிர்களுக்கெல்லாம் உணவளிப்பது எவ்வுயிரும் பட்டினியில் மடியாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்துவதாகும். பண்டை நூல்களும் இதை எடுத்தியம்புகின்றன. மணிமேகலை தன் ஆயுள் முழுவதும் அக்கடமையை ஆற்றிவந்தாள்.

"மக்களுக்கு உணவளிப்பதே சிறந்த தர்மம், உயர்ந்த சமூக ஊதியம், தேசத்தொண்டு மக்கள் சமூகத்தை அமைதியுடன் வாழச் செய்யும்."[77]

“அணுக்களின் நெருக்கத்தால் தோன்றியது இவ்வுலகம். அவ்வுலகில் வாழும் மக்கள் அனைவரும் இவ்வுலக மக்கள் பட்டினியால் வருந்திச் சாகாமல் உணவளிக்க வேண்டும். அவ்வாறு உணவளிப்பவர்களும் மக்களுக்காக உயிர் கொடுத்துக் காப்போர் ஆவர்”[78] என்பர் சாமி சிதம்பரனார்.

‘**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**’[79] என்று புறநானூறும் குறிப்பிடுகிறது.

உணவினால் தான் உயிர்வாழ முடியும். உணவில்லையேல் உயிர்வாழ முடியாது. உணவு கொடுப்போர் உயிர் காப்போராவர். இதனை,

“**மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”[80]

என்ற அடிகள் சுட்டும். பசிப்பினி நீக்குதலே உலகின் தலையாய அறம் என்ற கருத்து இங்கு உணர்த்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளை அறச்சாலைகளாக மாற்றுதல்

மணிமேகலை காயசண்டிகை வடிவம்கொண்டு சம்பாபதியின் கோயிலிருந்த அமுதசுரபியைக் கையிலெந்திக் கொண்டுப் பசித்தவர்க்கு உணவளித்துச் சென்றாள். இந்நிகழ்வைப் பார்த்த அந்நகர அரசன் என் மக்கள் பசியைப் போக்க நான் என்ன செய்ய வேண்டும என்றான். இந்நாட்டிலுள்ள சிறைச் சாலைகளை அறச்சாலைகளாக மாற்ற வேண்டும் என்றாள். அதுகேட்ட அரசன் அவ்வாறே செய்து இன்புற்றதை,

"சிறையோர் கோட்டஞ் சீத்தகு ஏணாஞ்சத்

அறவோர்க் காக்கு மதுவா ழியரென

....

அறவோர்க் காக்கின னரவாள் வேந்தன்"[81]

என்று சாத்தனார் குறிப்பிடுகிறார். தன் கடமைகளைச் செய்வதில் பெண்கள் அக்காலத்தில் நிகரற்று திகழ்ந்துள்ளார்கள் என்பதையும் பெண்ணின் பெருமைகளையும் மேகலை வழி உணரமுடிகிறது.

சீர்திருந்தி சீர்திருத்தி

மாதவி மகள் மணிமேகலை இவள் சீர்திருந்தியும் சீர்திருத்தியும் ஆவாள். இவள் தானே திருந்தியவள் என்பதும் பிறரைத் திருத்தியவள் என்பதும் பெறப்படும்.

தன் மனம் காதல் வயப்பட்ட போதும் தான் ஒரு துறவியென்பதை உணர்ந்தாள். பிறர்க்கு முந்தையோர் கூறிய அறக்கருத்துக்களை எடுத்துரைத்தாள். இதனால் இவள் சீர்திருந்தியாகவும் சீர்திருத்தியாகவும் செயல்பட்டமைப் புலனாகும்.

புத்தமதக் கொள்கைகள்

இவ்வுலகத்தில் உள்ளோர்க்குத் துன்பம் தருவன கள்ளுண்டல், காமம், கொலை, பொய், களவு எனும் ஐந்தேயாகுமென மணிமேகலை இராசமாதேவியிடம் உரைக்கிறாள். இவற்றை யார் துறந்தாரோ அவரே இவ்வுலகில் இன்பமடைவார். இதனை,

"கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும்

உள்ளக் களவுமென் லுரவோர் துறந்தவை"[82]

"சென்றஞ் செலுத்தோர் முற்ற வுணர்ந்தோர்

மல்லன்மா ஞாலத்து வாழ்வோரென்போர்

....

....

மகன் துயர் நெருப்பா மனம் வறதாக

அகஞ்சுடு வெந்தீ யாயிழை யவிப்பத்"[83]

இப்பாடலடிகள் குறிப்பிடுகின்றன. வாழ்வில் துன்பம் இல்லாமல் சிறப்புற்று வாழ மேற்கூறியவற்றை யெல்லாம் துறந்து வாழ வேண்டும் என்று புத்தமதக் கொள்கையை மணிமேகலை வழி கூறுகிறார்.

சீவக சிந்தாமணி

மானிட வாழ்வில் பெண் இல்லையென்றால் அவ்வாழ்க்கை உயிரற்றதாகக் கருதப்படும். பெண் இல்லாத மனித வாழ்க்கை 'மாலுமி இல்லாத மரக்கலம்' போன்றது. சமுதாயத்தின் சரிபாதி அங்கமாகப் பெண்கள் விளங்குகிறாள். அவ்வாறானப் பெண்கள் சிலர் தங்கள் பண்புகளால் தலைமை மாந்தராகப் பெருங்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளனர். அப்பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணியில் பெண்கள் தங்கள் பண்புகளால் உயர்ந்துள்ளார்கள் என்பது பெண்ணிய நோக்கில் ஆராயப்படுகிறது.

காந்தருவதத்தை

கலுழவேகனென அழைக்கப்படும் விஞ்சையன் மகள். இவள் திருமணத்திற்காக இராசமாபுரத்துச் சீத்தன் பால் அடைக்கலப் படுத்தப்பட்டவள். இவள் அழகு, இசை, காதலுணர்வு, சிறந்த பண்பு

நலன் போன்றவற்றில் உயர்ந்து நிற்கிறாள். இத்திறமைக்கு இவள் வரலாறு போதிய சான்று பகர்கின்றது.

இசை

பெண்கள் மென்மைத் தன்மையுடையன போல் இவர்களிடத்து இசையும் இயற்கையாக உண்டு. அதனால் இசை இவர்களிடத்து உயிர்ப்புப் பெற்ற வளர்ந்தது. தாலாட்டுப் பாடல் தாய்மார் வளர்த்த இயலிசைத் தமிழ் இலக்கியமாகும். யானை முதலிய காட்டு விலங்குகளும் மற்றவர்களின் இசைக்கு வயப்பட்டுத் தன் கொடூரத் தன்மையை மறந்து நின்றதனை,

“ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை”[84]

எனப் பொருநாராற்றுப் படை குறிப்பிடுகிறது. இசைக்கு விலங்குகளும் வயப்படும் என்பது புலனாகிறது.

காந்தருவத்தை இசை நலம்முடையவளாகக் காணப்பட்டாள். இசைப்போட்டியில் ஏனைய அரசரை வென்றுள்ளாள் என்பதை,

“மாதர் யாழ் தைவர வந்த மைந்தர் கைந்
கீதத்தால் மீண்டன கேள்விக் இன்னரம்
போதரப் பாடினாள் புகுந்த; போயின
காதலர் தாரினார் தாங்கள் பாடவே”[85]

என இப்பாடல் சுட்டுகிறது. இசையால் யாரை வேண்டுமானாலும் வெல்லக் கூடியவள் என்பது புலனாகிறது.

தேவரும் வியத்தல்

காந்தருவத்தை பாட்டிசைத்த நலத்தையும், இசைத் தன்மையும் தேவர்கள் வியந்து,

> **“கருங்கொடிப் புருவம் ஒரு கயல் நெடுகங் கண்ணும் ஆடா**
> **அருங்கொடி மிடநும் விம்மாது, அணி மணி அமினும் தோன்ரு**
> **இருங்கடற் பவளச் செவ்வாய் திருத்தியவள் பாடினளோ**
> **நரும் பொரு வீணை நாவின் நவின்றதோ என்றுரைத்தாள்”**[86]

எனப் பாராட்டுகின்றனர். புருவம், விழி, உருவத்தோற்றம், வாய் ஆகிய உறுப்புகள் அனைத்தும் ஒருங்கே அமைந்துள்ள அழகு பொருந்தியவள். நல்ல வீணை இசைத்து நாநவின்று பாடினாள். தேவர்களும் பெண்ணின் இசைத்திறனைப் போற்றியுள்ளனர் என்பதின் வழி பெண்மைக்கு கொடுத்துள்ள உயர்வுத் தன்மையை உணரமுடிகிறது.

காதலுணர்வு

காந்தருவத்தைச் சீவகனைக் கண்டதும், அவன் அழகில் மயங்கி தன் உள்ளத்தை இழந்து; அவனை மாலை சூட்டி மணக்கும் என்னமுடையவளாய் காணப்படுகிறாள். இக்காதல் உணர்வை, “**நின்னையும் மாலையாலே தேவரிற் செறியாய் பெண் இறுதினப்படுக**” என்றும்,

> **“கழித்த வேலது பெற்ற கட்த்தியைப் பிணையின் மாழ்கி**
> **விழித்து வெய் துயர்த்து மெல்ல நடுங்கி”**[87]

குறிப்பிடுகின்றாள். சீவகனைப் பார்த்து அவன் செயலில் மயங்கி உடல்மெலிந்து காணப்படுகிறாள்.

காந்தருவதத்தை யாழ் வாசிப்பதில் வல்லவள். காப்பிய காலத்தில் பெண்கள் இயல், இசை, நடனம் என்ற பலவற்றிலும் திறம் பெற்று விளங்கியுள்ளனர். இசை இசைக்கப்படும் போது அதை யாரிடமிருந்து (ஆணா? பெண்ணா?) வருகின்றது என்ற யாரும் பார்ப்பதில்லை. இசையின் சிறப்பு விஞ்சி நிற்கும். யாழினை மீட்டும் திறமும், பாடல் பாடும் திறமும் காந்தருவதத்தைப் பெற்றிருந்ததால் தேவரும் இவளின் திறம் கண்ட பாராட்டியதாக ஆசிரியர் வரைகிறார். இதன்மூலம் அந்நாளில் பெண்கள் இசைக்கருவிகளை மீட்கும் திறம் பெற்றிருந்ததையும், பாடல் பாடும் திறம் பெற்றிருந்ததையும் அறிய முடிகிறது. இதில் பெண்ணிய நோக்கில் பெண்ணின் திறமையைப் பெண் வெளிப்படுத்த சமூகம் இடமளித்ததையும், பெண்மை போற்றப்பட்டதையும் அறியமுடிகிறது.

சீவகனுக்கும் காந்தருவத்தைக்கும் இசைப்போட்டி நிகழ்ந்தது, அதில் நாம் வெற்றி பெற்றுவிட்டால் சீவகன் நமக்குக் கிடைக்காமல் போய் விடுவானே என்று நினைத்து தோற்பதென முடிவெடுக்கிறாள் இதனை,

"பாட்டும் ....

என்றெண்ணி வீணைதான் தோற்பான் இருந்தாள்"[88]

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

இருவருக்கும் போட்டி தொடங்குகிறது. யாழிசைக்கும் போது பண் இசை ஒன்றைப் பாடாது விடுகின்றாள். அதனால் அவள் தோற்கிறாள். தனது காதலுணர்வால் சீவகனை அடைந்தாக வேண்டும் என்பதற்காகத் தனது திறமையை விட்டுக் கொடுக்கின்றாள். இதன்

வாயிலாக இயல்பான பெண்ணின் நிலையிலிருந்து காதலுணர்வால் மனதில் நினைத்தவனைக் கைபிடிக்க வேண்டும் என்ற உறுதியான மனநிலையுடையவளாகி இருப்பதைக் காணமுடிகிறது.

திருமணம்

திருமணமென்பது ஆண், பெண் இருவரையும் சேர்க்கக் கூடிய ஒரு சடங்கு. ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் அன்பு தலைப்பட்ட பின்னரே திருமணம் நடைபெறுகிறது. இத்திருமணம் குறித்து தொல்காப்பியர் நவின்றுள்ளார்.

தலைவன், தலைவி களவு வெளிப்பட்ட பின்பே தலைவியின் தமர் உடன்பட்டுக் கொடுத்தலே முற்காலத்தில் பெருவழக்காக இருந்ததென்பதை,

'**மறை வெளிப்படுத்தும் தமரிற் பெறுதலும்**'[89] என்ற தொல்காப்பியர் கூற்றால் அறிய முடிகிறது.

காந்தருவதத்தையின் திருமண நிகழ்வைத் திருத்தக்கத் தேவர் குறிப்பிடுகிறார். இசைப் போட்டியில் காந்தருவதத்தை தோற்றவுடன் இருவருக்கும் திருமணம் நடக்கிறது. தத்தை திருமணமாலையை எடுத்து சீவகனுக்குச் சூட்டியதை,

"**ஒல்லென் உயிர் தவமே செய்மின் உலகத்தீர்**
எல்லோரும் என்பாள் போல் ஏந்தல் மேல் வீழ்ந்தனரே"[90]

என எடுத்துக் கூறுகிறாள்.

மாண்பு

கட்டியங்காரன் ஏவலால் வீரர்கள் சீவகனைக் கைப்பற்றிக் கொண்டு செல்கின்றனர். தத்தை இதை மாடியில் இருந்து பார்க்கிறாள். அவள் மனதிலுள்ள கோபத்தீ கண்களில் தெரிகிறது. இதனைக் கண்ட சீவகன் நந்தத்தனிடம்,

> **"கேடலும் வாளேடேந்திக் கெடுக இந்நகரம் என்னா**
> **மாடத்தின் உச்சி நின்ற மலைமகள் தம்மைக்கண்டே**
> **ஆடவர்க்கு உருவை யொப்பாய் அஞ்சினேன் அதண்கண்"**[91]

என்று குறிப்பிடுகிறான். தன் கணவனுக்குத் தீங்கு ஏற்படுமென நினைத்து சினங்கொள்ளும் பெண்மகளாக உள்ளாள் என்பது ஆண் மகன் வழி அறியமுடிகிறது.

தத்தையிடமிருந்து சீவகன் பிரிந்து செல்கிறான். சீவகன் பல இடங்களுக்குச் சென்று பல பெண்களைத் திருமணம் செய்துகொள்வான் என்று தனது மந்திரத்திறனால் அறிந்து கொள்கிறாள். அதனால் தன் கணவன் பிரிவுத் துன்பத்தை நினைத்து மனதைத் தன்னலப்படுத்திக் கொள்கிறாள். இவள் துன்பமில்லாமல் இருப்பதைப் பார்த்த நந்தட்டன் கேட்கிறான் தத்தையிடம். அதற்குத் தத்தை,

> **"குரிசிலோ நம்மையுள்ளான விதிமுக மணங்கள் எய்தி**
> **வீற்றிருந்து இன்பம் உய்ப்ப மதிமுகம் அறியும் நாமே வாடுவ**
> **தென்ன"**[92]

எனக் கூறுகிறாள். பிரிவுத் துன்பத்தைத் தன்னலப்படுத்தி இருக்கும் பெண்ணின் மன உறுதி வெளிப்படும் பாங்கை அறிய முடிகிறது.

மானவுணர்வு

சீவகன் பகைவரின் வசம் அகப்பட்டுக் கொண்டான் என்ற செய்தி அறிந்தும் அவள் மனம் தளராமல் இருந்தாள். அவன் பகைவரிடம் அவ்வாறு இருப்பது தனக்கும், தன் மலைநாட்டிற்கும் இழிவு எனக் கருதினாள். அதிலிருந்து அவனை விடுவித்து பழியைப் போக்க முயல்கிறாள். இதனை,

"பட்ட பழி வெள்ளிமலை மேற்பரத்த லஞ்சித்
தொட்டு விடுத்தேன் அவனை பிறா சொல்லி
பட்டபழி காத்துப் புகழே பரப்பினல்லால்
விட்டலர்ந்த கோதையவ ரால் விளைவதுண்டோ"[93]

என்ற அடிகள் சுட்டுகின்றன. பழிதீர்த்துப் புகழ் பரப்புவது தகுதியல்ல. பெண்கள் பலரை மணந்து போதல் விருப்பமென்று என அவள் கூறும் சொல்லால் மானவுணர்வுடன் காணப்படும் பெண்ணாக இருந்துள்ளாள் என்பது புலனாகும்.

மனத்தோடு ஒன்றுதல்

சீவகன் பதுமையை மணந்து பிரிந்து வருகின்ற வேளையில் ஏமாபுரத்தை அடைந்து சோலையொன்றை அணுகிய போது; அங்கு ஒரு பொய்கையைக் காணுகின்றாள். அவ்விடத்தில் பேடையொன்று சேவலோடு கூடுதலைக் கண்டு உணர்ச்சிக்குள்ளாகிறான். அத்தருணத்தில் அவன் மனதில் தத்தையைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் நினைக்கவில்லை. தம்பிரிவு தாங்காமல் இறந்து விடுவாளோ என்று

"பிரிவுற்றற் பயனின்றியும் பார்வை மார்
முரிவுற் ரூர்களின் மூர்ச்சவனை செய்பவால்
பிரிவில் தோன்றிய பேரன் யெனப்படும்
எரியின் மூழ்கி இறந்து படுங் கொலோ"[94]

என வருந்துகிறான். எச் சூழ்நிலையாக இருந்தாலும் சீவகன் மனத்தில் பெண் என்றவுடன் தத்தை நினைவுக்கு வருவதால் தன் செயலால் கணவன் மீது அன்பு கொண்டவளாய் இருந்துள்ளாள் என்பது புலப்படும்.

ஆண்மனம் புரிந்து நடத்தல்

ஒரு முறை சீவகன் தத்தையின் மென்மையறியாது குணமாலையை, யானையிடம் இருந்து காத்து அவள் மீது காமவுணர்வு கொண்டு இன்புறுகிறான். தத்தை அவன் செயலையறிந்துக் கோபப்படுகின்றாள். கோபம் கொண்டாலும் தன் நிலைமை உணர்ந்து குணமாலையை விட்டுப் பிரிந்து தன்னை நினைப்பான் என்று கூறினாள். அதுபோலவே சீவகன் குணமாலையிடம் தத்தையின் பிரிவுத் துயரத்தை நினைத்து கூறுகிறான். இதன் வழி பெண் ஆண்மகன் மனமுணர்ந்து செயல்படக் கூடியவள் என்பது பெறப்படுகிறது.

இல்லறம்

மனையகத்தே இருந்து மனையாளோடு கூடி, நல்லற வாழ்வை நடத்துவதே இல்லறம். சீவகன் அரசனாகிறான். தத்தை அரசமாதேவியாகிறாள். இருவருக்கும் சச்சந்தான் எனும் மகன் பிறந்தான். சீவகனுக்குப் பின் இவன் அரசனாக்கப்படுகிறான். இவ்வாறு இவர்களின் இல்லறம் காணப்படுகிறது.

தத்தை இசைமீது மட்டுமின்றி சீவகன் மீதும் பெரும் நாட்டமுடையவள். தன் கணவன் துன்பத்தில் பங்கெடுத்து இல்லறச் சிறப்புப் பெறுபவளாக விளங்கினாள்.

"இல்லாள் நல்வாழ்வு நலம்பயக்கும் என்திறத்தான்"[95]

எனும் அடி உணர்த்தும். இவ்வாறு தத்தை தனது பண்புகளாலும், செயற்பாட்டாலும் பெண்மைத் தன்மையிலும் உயர்ந்து தலைமை மாந்தராக விளங்குகிறாள்.

குணமாலை

குணமாலை தன் பெயருக்கேற்ப உயரிய குணம் படைத்தவள் மிகுந்த அறிவுடையவள் பழியஞ்சும் பண்பு மிக்கவள். செயலில் செம்மை, தூய்மை, துணிச்சல், போன்ற குணங்களையுடையவள். இவளது தந்தை குபேரமித்திரன் தாய் வியைமாலை ஆவார்.

குணமாலை, சுரமஞ்சரி பிரிவு

குணமாலையும், சுரமஞ்சரியும் இணைபிரியாத தோழிகள். வேனிற்காலத்தில் தாங்கள் செய்த சுண்ணப் பொடிகளை உற்று நோக்கும் போது சுரமஞ்சரி தன்னுடைய சுண்ணப் பொடி சிறந்தது குணமாலையுடையது தீதுயென்று குறிப்பிடுகிறாள். இருவருடைய சுண்ணப் பொடிகளும் சீவகனுக்கு அனுப்பப்பட்டன. அவன் பார்த்துவிட்டு குணமாலையுடையது சிறந்ததென்று மெய்பித்துக் காட்டுகிறான். குணமாலை தன் சுண்ணம் சிறந்தது என்று கூறினாலும் சுரமஞ்சரியிடம் ஏதும் கூறாமல் அடக்கத்துடன் காணப்பட்டாள். இந்நிகழ்வை,

"பைம் பொன் நீணுலகின்றிப் பார்மிசை

இன்பர் என் கண்ணம் ஏய்ப் பவுள எனின்

செம் பொற் பாவை யன்னாய் செப்பு நீ"[96]

எனும் பாடலடிகள் சுட்டுகின்றன. குணமாலை அடக்கத்துடன் மென்மையாக இருந்தாலும் இதை ஏற்காத சுரமஞ்சரி குணமாலையை விட்டு பிரிகிறாள்.

திருமணத்தை மறுத்தல்

சீவகனை மனதில் தன் கணவனாக நினைத்தால் குணமாலை. குணமாலையை மாமன் மகனுக்குத் திருமணம் செய்து தரப் பெற்றோர் நினைக்கின்றனர். அதனையறிந்த அவள்,

"மணிமதக் களிறு வென்ருன் வருந்தச் சொற்கூலியாக

அணிமதக் களிறனனுக்கு அடிப்பணி செய்வதல்லால் ஈரல்

துணிவதென்? அருசொல் வாளால் செவிமுதல்"[97]

என்று மறுத்துக் கூறுகிறாள். தன் பெற்றோர் திருமணம் ஏற்பாடு செய்த செய்திகேட்டு; அவர்களிடம் சென்று எனக்குத் திருமணம் செய்ய முயன்றால் நான் இறந்துபடுவேன் என்றாள். இதன் வாயிலாகப் பெண்கள் தாம் எடுத்த கொள்கையிலிருந்தும் முடிவுகளிலும் தான் பெற்றோர் எடுத்த முடிவாயினும் மாறமாட்டார்கள் என்பது வெளிப்படுகிறது.

மனவுணர்வு

குணமாலையுடன் சீவகனிருக்கும் வேளையில் கட்டியங்காரன் வீரர்கள் சீவகனைச் சிறைபிடித்துச் செல்வது கண்டு மனம் பொறுக்காது,

"ஏலாது ஏலாது எம் பெருமானுக்கு இஃது"[98]

என்று புலம்புவதும்,

"அடிகளை இன்றி நீரே உண்ணவும் வல்ல ரானீர்"[99]

என்று கூறுவதும் சீவகன் சிறைப்பட்டவுடன் அவள் மனம் படுகின்ற உணர்ச்சிப் போராட்டத்திலும் பெண்மைப் பண்பு வெளிப்படுகிறது.

சீவகனை வணங்குதல்

சீவகன் சுரமஞ்சரியை மணந்து அவள் மனைக்கு வருகின்றான். அவள் மனையிலிருந்த போது காவலரிடம் சீவகன் பிடிபட்டான். அப்போது அவள் அவர் என்னை விரும்பி மணந்திருக்காமல் இருந்தால் அவருக்குத் இத் துன்பம் நேர்ந்திருக்காது என்கிறாள். அதனை,

"தீவினையுடைய யென்னை தீண்டாள் பின்அமகள்
வேண்டா பாவியேன் ...."[100]

என்ற அடிகள் நவிலும். துன்பத்திலிருந்து விடுபட இறைவனைத் தொழாவிட்டாலும் கணவனைத் தொழுதால் அனைத்தும் நடக்கும் என்பது கற்பு நெறி. இதன் வாயிலாக இல்லறத்தில் கணவனைத் தொழுது வாழ்வது பெண்ணின் பெருந்தக்க வாழ்வாக அமைகிறது.

பதுமை

இவள் தளபதியென்னும் வேந்தன் மகள். பாம்பு தீண்டப்பெற்று அறிவு சோர்ந்து பின்பு சீவகனால் நலம் செய்யப்பட்டவள். அதனால் சீவகன் மீது காதல் கொள்கிறாள். ஒரு நாள் தனது காமநோய் பொறுக்காமல் சோலைக்குச் செல்கிறாள். சீவகனும் அச்சோலைக்கு வருகிறான். தனிமையில் இருக்கும் பதுமையிடம் கூடி இன்புறுகிறாள். இவ்வாறு இருவருக்கும் உறவு ஏற்படுகிறது.

மென்மை

பெண்மை என்றாலே மென்மையென்பது பொருள். அவற்றின் இலக்கணப்படி பதுமை காணப்பட்டாள். சீவகன், பதுமை இருவரும் சோலையை விட்டு வெளியே சென்று சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, பதுமை தனித்து இருக்கையில் அவளிடம் எதுவும் கூறாமல் பிரிந்து செல்கிறான். பதுமை பிரிவு தாங்காமல் துன்புறுகிறாள். அத்துன்பத்தையும் அவன் தனித்து இருக்கும்போது கூறிய இன்மொழிகளால் மென்மையாக்கிக் கொள்கிறாள். இக்கூற்றினை,

"மிக வயதோர் மீளிமை செய்தனனோ
உக வாவுன துள்ள முவர்த்தவ வோ
இக வாவிடர் என்வயி னத்திட நீ
தகவா தகவல்லது செய்தனையே"[101]

என்ற பாடலடிகள் எடுத்தியம்புகிறது. இதன் வழி பிரிவுத் துன்பத்தையும் பெண்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதை உணரமுடிகிறது.

கேமசரி

இவள் தக்கநாட்டுக் கேமாபுரத்துச் சுபத்திரன் என்னும் வணிகன்மகள். இவளுக்குத் திருமண வயது வந்ததும் மணத்திற்குரிய ஆண்மகன் வரவு நோக்கிப் பெற்றோரும் அவளும் இருக்கின்றனர். இந்நிலையில் வீட்டிற்கு நாள்தோறும் வருகின்றவர்களுக்கு விருந்து செய்கின்றனர். விருந்துக்கு வருகின்ற ஆடவர் அனைவரும் ஆடவராகத் தோன்றவில்லை. இச் சூழலில் ஒரு நாள் சீவகன் வருகின்ற போது அவன் தோற்றப் பொழிலைக் கண்டு விருப்பமுற்றாள். விருப்பமுற்றதால் பெற்றோர் இருவருக்கும் மணமுடித்தனர்.

காதலுணர்வு

காதல் மனித உணர்வுகளில் முதன்மை பெறுகிறது. இதை இலக்கியங்கள் காலந்தோறும் எடுத்துக் கூறுகின்றன. இக்காதல் நிலையைத் திரு.வி.க. "தலைவி தலைவனைக் கடவுளாகக் கோடலும் தலைவன் தலைவியைக் கடவுளாகக் கோடலும் காதலாகும்"[102] என்கிறார்.

காதலுணர்வு வழி பெண்ணின் மென்மை வெளிப்பட்டு பெண்ணியச் சிந்தனைக்கு வழிகோலுகிறது. இவ்வுணர்வு சிந்தாமணியில் கேமசரி வழிக் கூறப்படுகிறது.

சீவகனைக் காண்பதற்கு முன்னால் கேமசரி அருக தேவனைப் பாடிக் கொண்டிருக்கின்றாள். தாயும் அவளுடன் சேர்ந்து தன் மகளுக்கு நல்ல கணவன் வேண்டிப் பாடுகிறாள். அந்நிலையில் கேமசரி கண்களில் சீவகனும், சீவகன் கண்களில் கேமசரியும் என இருவரும் நோக்குகிறார்கள். இருவர் கண்களிலும் காதலுணர்வு,

"கொடியான ஏழை நோக்கமும்
உறுவலி நோக்கும் ஒத்தவே"[103]

என வெளிப்படுகிறது. இதனால் தனக்குப் பிடித்த கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருந்துள்ளது என்பதும், பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது.

பிரிவுத் துன்பம்

சீவகன் கேமசரியிடம் எதுவும் சொல்லாமல் பிரிந்து செல்கிறான். அவளும் பலவாறு நினைத்துப் புலம்புகிறாள். அவன் கூறிய இனிய சொற்களை நினைத்துப் பார்த்து மனத்தைத் தேற்றிக் கொள்கிறாள்.

இதனை,

> "வாசமிக்குடைய தாரான் வண்டினுக்குரைத்த லாலும் மாற்றப்
> பாசத் தாளாக்கப்பட்ட ஆவியள் சுல்லாதல் பேசினாள்
> பினையில் மாலை பிசைந்திடப்பட்ட தொத்தாள்"[104]

என்ற அடிகள் சுட்டுகின்றன. வாசமுடைய பூவினுள் வண்டினம் வந்து தேனருந்தும். வண்டும் தேனும் போல நாமிருவரும் இணைபிரியாது இருப்போம் என்று கூறிய சொற்களை நினைத்து மனத்தைத் தன்னிலைப் படுத்திக் கொண்டாள். இவ்வாறு இனியசொற்கள் கூறியவன் திரும்பி வந்து விடுவான் என்ற நம்பிக்கை அவளிடம் அவளிடம் இருப்பதனைக் கொண்டு பெண்ணின் அழுத்தமான நம்பிக்கை மற்றும் மன வலிமையை அறிய முடிகிறது.

கனகமாலை

இவள் ஏமத்திய நாட்டு ஏமமாபுரத்து அரசன் தடமித்தனின் மகள். இந்நாட்டு மக்களுக்குப் படைப் பயிற்சி சொல்லிக் கொடுக்கும் ஆசிரியராய் சீவகனிருந்தான். சீவகன் சோலையில் பூத்த பலவகை மலர்களைக் கொண்டு பாசுரமாலை தொடுக்கிறான். கனகமாலை தோழி கூனி அவளிடமிருந்து அந்த மாலையைப் பெறுகிறாள். அம்மாலையின் அழகைப் பார்த்த கனகமாலை அவன் மீது காதல் வயப்படுகிறாள்.

காதலுணர்வு

காதலுணர்வு என்பது ஆண், பெண் இருபாலருக்குரியதாகும். இவ்வுணர்வுகள் பல்வேறு நிலைகளில் வெளிப்படுகின்றன. "தலைவன் தலைவியைக் காதலோள் என்றும் தலைவி தலைவனைக் காதலர் என்றும்

உரிமையோடு அழைத்தல் இலக்கியமரபு. காதலி அன்புடையவள் அல்லது அன்பிற்குரியவள். இருவரின் மனவுணர்வு காதலாகும்"[105] என்பர்.

தலைவன் தலைவியிடையிலான காதலைப் பிற உணர்வுகளிலிருந்து நுட்பமாக வெளிக்காட்டுவதை,

"பல்கிளைக் குறவர் அல்கயர் முன்றில்
குடக்காய் ஆசினிப் படப்பை நீடிய
பன்மர உயிர்சினை மின்மினி விளக்கத்துச்
செல்மழை யியாக்கங் காணும்
நன்மலை நாடன் காதன் மகளே"[106]

என்ற பெருங்கௌசிகனார் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

கனகமாலை காதல் வேட்கை காரணமாக மனம் மருண்டுரைப்பதை,

"வருந்தி ஈன்றாள் மறந்தொழிந்தாள்
வளர்ந்தாள் சொல் கேட்டு இல் கடிந்தாள்
மருந்தின் காநும் தழையை
முனிவர் நின்னை யென் முனிவார்
பொருந்திற் றன்னால் இது என்னாய், என்னாய்
பொன்னும் அரித்து இவ்வுயிர் என்னாய்
திருந்து சோலைக் கருங்குயிலே
சிலம்ப இருந்து கூவுகியால்"[107]

இப்பாடல் கூறுகின்றது. குயிற்பேடை தன் முட்டையைக் காக்கையின் கூட்டில் இட்டு வைக்கும். காக்கை அதனை அடைகாத்து குஞ்சு பொறிக்கும். குயில் குஞ்சு காக்கைக் கூட்டிலிருந்து குரல் எழுப்பியதும் காக்கை அதனை விரட்டுகிறது. விரட்டும் போது குயில்க்குஞ்சு மீண்டும்

குரல் எழுப்புகிறது. தன் தாய் தன் பிரிவைத் தாளாது திரும்பி வாராதா? என நினைத்துக் கூவும். அதுபோல கணவன் தன் பிரிவு தாங்காது மீண்டும் வருவானென் மனதைத் தேற்றுகிறாள். பிரிவில் இருந்தாலும் மனத் தேற்றலில் பெண்மை வெளிப்படுகிறது.

விருந்தோம்பல்

இல்லற வாழ்வில் ஒரு நன் நிகழ்ச்சி விருந்தோம்பலாகும். தம் இல்லத்திற்கு வருகின்றவர்களை அன்புடன் உபசரித்து, மனமகிழ்ச்சியுடன் விருந்து கொடுத்து மகிழ்வர். இவ்விருந்தோம்பலில் தலைவன் தலைவி இணைந்து தரும் விருந்து சிறப்பிடம் பெறுகிறது. இதனைச் சங்க இலக்கியம்,

“அல்லிலாயினும் கற்பினும் மெல்லியற் குறுமகள்
முல்லை சான்ற கற்பின் மெல்லிய குறுமகள்”[108]

எனக் கூறுகின்றது.

கனகமாலையைச் சீவகனுக்குப் பெற்றோர் திருமணம் செய்து முடிக்கின்றனர். இவர்கள் இல்லறம் சிறக்க நடந்து கொண்டிருக்கும்பொழுது நந்தட்டன் காந்தருவதத்தையுடன் அங்கு வருகின்றான். இருவரையும்,

“எழுமையும் பெறுக இன்ன இளங்கிளைச் சுற்றம்”[109]

என்று மகிழ்ந்து கூறி வரவேற்று விருந்து செய்கின்றனர்.

பதுமுகன் மற்றும் தோழர் எல்லோரும் சென்று சீவகனைப் பார்க்கையில் அவர்களின் குறிப்புணர்ந்து விருந்து செய்ததை,

"தொழுங் கொண்ட கள்வர் இவரோ எனச்செய்

நாகாங்கு ஒதுக்கப்படுவர் சுங்கு அசகியடி"[110]

என்ற அடிகள் சுட்டும்.

கனகமாலை தனது காதலுணர்வாலும், விருந்தோம்பல் பண்பினாலும் பெண்மைக்குரிய சிறப்பினை அடைகிறாள். ஒரு பெண் தன் மனது எந்தச் செயலைச் செய்ய நினைக்கிறதோ அதைச் சுதந்திரமாக விருப்பப்படி செயலாற்ற அக்காலச் சமூகம் இடமளித்துள்ளது.

விமலை

இவள் இராசாபுரத்துச் சாகரதத்தன் என்றும் வணிகன் மகள் சீவகன் தன் தோழர்களிடம் இவளை,

"வீடு பெற்ற வரும் விமலை"[111]

என்றும்

"ஊடினம் புணர்ந்த கொத்தினியவள்"[112]

என்று பாராட்டி உரைக்கின்றான். பெண்மையை ஆண்மகன் சிறப்பித்துக் கூறுவதில் பெண்மையின் சிறப்பு வெளிப்படுகிறது.

காதலுணர்வு

தலைமக்கள் இருவரும் இருதலைப்புள்ளின் ஓருயிராய் இறுதிவரை நிலைத்து நின்று அன்பு காட்டுதல் தூய்மையான காதலாகும். இதனை,

"இம்மை மாறி மறுமை யாயினும்

நீயா கியரென் கணவனை

யானா கியர்நின் நெஞ்சு நேர்பவளே"[113]

என்று குறுந்தொகை குறிப்பிடுகிறது.

சீவகன் வேற்று வடிவங்கொண்டு நகரத்திற்குள் சென்று சாகரத்தன் என்பவனிடம் தங்கியிருக்கிறான். அப்பொழுது அங்குப் பந்தாடிக் கொண்டிருக்கும் விமலையைக் காண்கிறான். விமலை சீவகனைக் கண்டதும்,

"இதுபோலும் இவ்வேட்கை வண்ணம்
சென்றே படினும் சிறந்தார்க்கும் உரைக்கலாவது
அன்றாய், அரிதாய் அகத்தே சுட்டு உருக்கும் வெந்தீ
ஒன்றே உலகத்து உறுநோய் மருந்து இல்லாது"[114]

இவ்வாறு என் அகத்தில் சுட்டுகின்ற காதல் நோய் உலகத்திலுள்ள அனைத்து ஊர்களுக்கும் வரும்நோய். அந்த நோயைத் தீர்க்கும் மருந்தாக நான் சீவகனைக் கருதுகிறேன் என்றாள்.

காமம் எல்லாவுயிர்களுக்கும் பொதுவானது. இதில் இன்பம், துன்பம் பிற நிகழ்வுகள் மாறிமாறி நடக்கும். உணர்வுச் சூழலில் ஒன்று குறைந்தாலும் அது காமமில்லை. தன் காதலும் அவ்வாறான உணர்வு போன்றது என்பதை,

"நிறையாதுமில்லை, நெருப்பின் கடுங்காமம்
உண்டேல் குறையா நிறையின் ஒரு குன்றியும்
காமம் இல்லை பறையாய் அறையும் பசப்பு"[115]

என எடுத்துரைக்கின்றாள்.

சீவகசிந்தாமணியில் பெண்கள் இசைத் திறனும்,(காந்தருவதத்தை) பந்தாடலில் (விமலை) பெண்ணின் நுணுக்கத்தையும், கலையுணர்வில் பெண்கள் (சுரமஞ்சரி, குணமாலை, கனகமாலை) சிறப்புற்றிருந்ததையும் அறிய முடிகிறது.

பெண்மை

பெண்களுக்கென்று தனித்த சில குணங்களுண்டு. "பெண்மையென்றாலே மென்மையானவள். தான் எடுத்த ஒவ்வொரு செயல்களிலும் மென்மையான வழியில் அதைச் செயல்பெற முனைவாள் பெண்ணிற்குப் பெருமை சேர்ப்பது அவளுடைய ஆளுமை கொண்ட மென்மையான குணம்தான்"[116] என்பர்.

சீவகன் விமலையிடம் இன்பம் துய்க்கிறான். அவ்வின்பத்தை விமர்சிக்கிறான். ஒருநாள் பூம்பள்ளியில் இருவரும் தனிமையில் இருக்கையில் 'நீ கங்கில் பால் புகுந்த கள்வன்' என்று விமலை கூறுகிறாள். அவ்வரிகளைக் கேட்ட சீவகன் பதிலுக்கு 'நங்கை யான் பசித்து வந்தேன்' என்று கூறுகிறான். விமலை இவ்வாறு கூறியதன் பொருளென்ன என்று கேட்கிறாள். அதற்குச் சீவகன் அங்கலுள்ள மேனியாய் நின் அணி நல அமிழ்தம் என்று கூறுகிறான். இவ்வரிகளைக் கேட்ட விமலை காமவுணர்ச்சிக்கு மட்டுமே வந்ததாகக் கூறுவதைக் கண்டு, அவளின் கண்கள் சிவந்து கடுங்கோபம் கொள்கிறாள். இதனை,

> "**அயிர்ப்பது என்? பணி செய்வேனுக்கு**
>
> **அருளீற்றுப் பொருள்** ...."[117]

இவ்வாறு கூறுகிறாள். பெண்மையின் நலத்திற்குக் குந்தகம் விளைவிப்பவர் கணவனேயாயினும் கோபம் கொள்வது பெண்மையின் பண்பாக இருந்துள்ளது.

சுரமஞ்சரி

இவள் இராசமாபுரத்தில் வாழ்ந்த குபேரதத்தன் என்றும் வணிகனின் மகள் பேரழகு படைத்தவள். பெருஞ்செல்வம் நிறைந்தவள்.

இசையார்வம் மிக்கவள். பிடிவாத குணம் அதிகமுடையவள். பின் விளைவுகளைச் சிந்திக்காமல் செயல்படக் கூடியவள்.

மனவுறுதி

குணமாலையின் தோழியான இவள் தான் செய்த சுண்ணப் பொடி தரம் குறைந்ததென்று சீவகன் கூறியதைக் கேட்டு அவன்மீது கோபங்கொண்டு,

“ஏற்ற சுண்ணத்தை ஏற்பில என்ற சொல் தோற்று
வந்து என் சிலம்படி கைதொழ நோற்பேன்”[118]

இவ்வாறு கூறினாள். தான் செய்த சுண்ணத்தைச் சரியில்லை என்று கூறிய சீவகன் என்னிடம் வந்து தான் அவ்வாறு கூறியது தவறென்று கைதொழுது வணங்கும் வரை நோன்பு நோற்பேன் என்று கூறுகிறாள். தன்னைக் குறைத்து மதிப்பிட்டதை நினைத்துக் கோபமுற்று நோன்பு நோர்தலின் வழி அவளின் மனவுறுதியை உணரமுடிகிறது.

இரக்கவுணர்வு

மனிதப் பண்பை உயர்த்திக் காட்டுவது இரக்கவுணர்வு. அவ்விரக்கவுணர்வில் ஆண்களை விட பெண்களே விஞ்சி நிற்பர். “ஒரு மனிதன் மற்றவர்களிடம் இரக்கம் காட்டுதல் வேண்டும். அவர்களின் துன்பத்தைப் போக்க தான் துன்பப்பட்டாலும் பெரிதாக நினைக்காமல் செயல்பட வேண்டும்”[119] என்பர்.

சீவகன் வயது முதிர்ந்த வேதியர் உருவம் பூணுகின்றான். சுரமஞ்சரியும் அம்முதியவரைக் காணுகிறாள். அவனின் முதுமைகண்டு இரக்கம் கொள்கிறாள். அவனை நோக்கி நீ எதற்காக வந்தாய் என்று

வினவுகிறாள். என் சிந்தையிலேயிருந்து என்னை வாட்டுகின்ற ஒரு குமரியைக் கை கூடவும், சித்தத்தைத் தெளிய வைக்கின்ற குமரியாற்றில் மூழ்கிடவும் வந்தேன் என்று கூறுகின்றான். அதனால் ஏற்படும் பயனென்ன என்று கேட்கிறாள். அதற்கு, "**முந்தி நலகின்ற முது மூப்பொழியும்**"[120] என்று கூறுகிறான். பெண்மை நலம் துய்த்த பின்னர் முக்தியடைய விளையும் அவனின் எண்ணத்திற்கு இவள் தடையேதும் விதிக்கவில்லை என்பது இதனால் புலனாகும். குமரியாற்றில் நீராடினால் முத்தி பெறும் என்ற கூற்றினிற்கினங்க இன்னும் சில பேர்களை அவ்வாறு செய்யப் பணிக்கிறாள். இதன் வழி எல்லோரும் நன்முறையில் முத்தியடைய வேண்டும் என்ற இரக்கவுணர்வு பெண்மையினை ஓங்கச் செய்கிறது.

திருமணம்

சீவகன் முதியோர் வடிவங்கொண்டிருக்கையில் காமன் கோயிலுக்கு அழைத்துச் செல்கிறாள். சீவகனை ஒரு புறத்தே இருக்கச் செய்துவிட்டு உள்ளே சென்று தனக்கு விருப்பமுடைய கணவன் கிடைக்க வேண்டுமென்று அக்கடவுளிடம்,

> "**தாமரைச் செங்கண் செவ்வாய் தமனியக் குழை ஞர்யினாய்**
> **காமங் குடையேன் காளை சீவகன் அகலம் சேர்த்தின்**
> **மாமணி மகரம் அன்பு வண்சிலைக் கரும்புமான் தேர்**
> **பூமலி மார்ப ஈவல் ஊரோடும் பொழிய**"[121]

என வேண்டுகிறாள். இவ்வாறு நடக்குமென்பதையறிந்த தன் தோழன் புத்தி சேசனை முன் கூட்டியே காமக்கடவுள் சிலைக்குப் பின்னே நிறுத்தி காமக்கடவுள் கூறியது போல,

"நின் மணம் மகிழ் காதலனை நீ பெற்றாய்"[122]

எனக் கூறினான். அதனைக் காமன் கூற்றாகவே கருதி சுரமஞ்சரியும் திருமணம் செய்ய சம்மதிக்கின்றாள். இதனையறிந்த சீவகன் முதியோர் வடிவங் களைந்து இளமையோடு முன் நின்றான். இருவருக்கும் திருமணம் நடக்கிறது. இதன் வழி கடவுட் கொள்கையில் பெண்கள் திண்ணமாக இருந்துள்ளது புலனாகும்.

கற்பு நிலை

பெண்கள் நிலைகளில் முதன்மை பெறுவது கற்பு நிலை. அதனைப் போற்றுதற்குரியதாகச் சமுதாயத்தில் கூறுகின்றனர்.

"களவு வாழ்க்கையில் கற்பு பேசப்பட்டாலும் அது தலைவனோடு இணைந்து இருக்கும் பொழுது பேசப்படுகிறது. கற்பு என்பது தலைவனைப் பேணுதல், அவனை மதித்தல், அவனை வழிபடுதல் என்பதை விளக்கி நிற்கிறது"[123] என்பர் இரா. பிரேமா.

சீவகனுக்கும், சுரமஞ்சரிக்கும் திருமணம் நிகழ்ந்த பின்பு சுரமஞ்சரி நற்பண்புகளை உடையவளாகின்றாள். அத்தருணத்தில் விந்தைய நாட்டிற்குச் செல்ல நேரிட்டது. தன்பிரிவைச் சுரமஞ்சரியிடம் கூறுகின்றான். அவள் நீங்கள் கவலைகொள்ள வேண்டாம் என் கற்பின்திண்மை நாம் இருவரையும் காக்குமென்பதை,

"பெருமநீ வேண்டிற் றல்லால்
வேண்டுவ பிறிதொன் றுண்டோ
ஒருமை நின் மனத்திற் சென்றேன்
உவப்பதே உவப்பது"[124]

எனக் குறிப்பிடுகின்றாள். இருவரும் ஒருமனதாகயிருக்கும் போது பிரிவென்பது இடைக்காலத்தில் நேர்வது, நிரந்தரமல்ல. என் கற்பு நெறி உன்னைக் காக்கும் எனக் கூறுவதன் வழி மனைவியின் கற்பு நெறியால் கணவன் துன்பத்திலிருந்து காக்கப்படுவான் என்பது திண்ணம்.

பண்பு நலன்

ஒரு நாள் இரவு பள்ளியறையில் சுரமஞ்சரி நிற்கிறாள். அருகே இருப்பது பளிங்குச் சுவர். அதனுள் சுரமஞ்சரியின் அழகுடைய வடிவம் தோன்றுகிறது. அவ்வழகை இமை மாறாது பார்க்கிறான், சீவகன். அவன் அவள் மீது புலவி தீர்க்க முயல்கிறான். அந்த நேரத்தில் அவள் முகஞ்சிவந்து வாயிதழ் துடிப்ப புருவம் நெறித்து,

> **"கிழவனைப் பாடி வந்தேன் இழ்சிறையிருப்பக் கண்டேன்**
> **எழுதிய பாவை நோக்கி இமைய வித்திருப்பக் கண்டேன்**
> **ஒழிக இக்காமம்; ஒரூர் இரண்ட; அம் ஆமிற்று என்றாங்கு"**[125]

எனக் கூறி அழத் தொடங்குகிறாள். இதனைக் கண்ட சீவகன் மனம் வருந்தி அடிவீழ்ந்து வணங்கி தான் செய்த தீமைச் செயலைப் பொறுக்க வேண்டுமென்றான். கணவன் தன் குற்றத்திற்காகக் காலடி வீழ்ந்து வணங்குகிற தருணத்தில் அவர்களை அவர்களது மனைவியர் மன்னித்து ஏற்றுக் கொண்டுள்ளமையை இதனால் உணரமுடியும்.

இலக்கணை

இவள் கோவிந்தராசன் எனும் அரசனின் மகள். உறவு முறையில் சீவகனுக்கு மாமன் மகள். பேரழகும், நுண்ணறிவும் கொண்டவள். சீவகன் மீது அன்பு செலுத்தக் கூடியவளாகக் காணப்பட்டாள். இருவருக்கும் நடந்த திருமணத்தை வியந்த ஏனைய வேந்தர்கள்,

“நோற்ற முன் திருக்குலாய்க் கிடந்த மார்பின் சீவகன்

நாங்களெல்லாம் தரித்திலோம் தவத்தை”[126]

என்று தம்முள்ளே வியந்து பாராட்டிக் கொள்கிறார்கள். வேந்தர்கள் பாராட்டும் வகையில் நிகழ்வு நடந்தது பண்பின் அடையாளமாகக் காணப்படுகிறது.

சீவகன் ஒவ்வொரு பெண்ணையும் மணந்து அவளை விட்டு மற்றொரு பெண்ணையும் மணக்கும் போது பெண்களில் யாரும் சீவகன் தங்களுடன் வாழா நிலையை எடுத்துக்காட்டுகிறது. பல்வேறு திறன்களைப் பெற்றிருந்தபோதும் பெண் திருமணம் என்ற நிலையில் தலைவன் திருமணம் முன்பே முடிந்தவனா? என்ற எண்ணம் வெளிப்படவில்லை. சீவகனின் திறமை என்றவுடனே திருமணம் என்ற கருத்தே வெளிப்படுகிறது. இந்தளவில் சீவகசிந்தாமணியில் பெண்களின் கருத்துக்கள், சில பண்புகள் வெளிப்படுத்தப்பட்டாலும் பெண்ணியத்திற்குப் பெருமை சேர்க்கும் கருத்து வெளிப்படவில்லை என்பதை அறியமுடிகிறது.

வளையாபதி

வடமொழியில் தோன்றிய ரகுவம்சம், குமாரசம்பவம், சிசுபாலவதம் அல்லது மாகூம், இராதார் ஜீனியம், நைடதம் ஆகிய ஐந்து நூல்களைப் பஞ்ச காவியம் என்றழைப்பர். அதுபோல தமிழில் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்து நூல்கள் ஐம்பெருங்காப்பியங்கள் என அழைக்கப்படுகின்றன.

வளையாபதி நூலினைத் தொகுத்தவர் யாரென்று தெரியவில்லை. வரலாறு, கதையாதென அறிந்து கொள்ள வழியில்லை. கிடைத்திருக்கும் செய்யுள்களை ஆராயும் பொழுது அதனை இயற்றியவர் புலமையும், பண்பு மிக்க நல்லிசைப் புலவர் என்பதை அறிய முடிகிறது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இளம்பூரணர் 407வது நூற்பாவிற்கு உரை எழுதுகின்ற பொழுது, "இவ்வுலகம் என்றியான்" என்று வளையாபதிச் செய்யுளை எடுத்துக் கூறுகிறார். யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர், "நீல நிறத்தவனாய் நெஞ்சே" என்றும் 'வித்தன் நெஞ்சே' என்றும் வளையாபதிச் செய்யுள்களைக் கையாண்டுள்ளார்.

ஒட்டக்கூத்தர் 'கவியழகு வேண்டி' என்ற வளையாபதி செய்யுள் வாக்கியத்தைக் கையாண்டுள்ளார். திருக்குறள் உரையாசிரியரான பரிமேலழகர்,

"சினம் பொன்றின மல்லார் கேண்மை மகளிர்
மனம் போல வேறுபடும்"[127]

என்னும் குறளுக்கு விளக்கவுரையில் அவர்மனம் வேறுபடுதல் பெண்மனம் பேதின் நெருப்படுப்பே என்றும் எண்ணிலேருவன் என்ற வளையாபதிச் செய்யுளை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் இவ்வளையாபதிச் செய்யுளை ஐந்திடங்களில் குறிப்பிடுகின்றார். அரும்பத வுரையாசிரியர் கானல்வரி காதைக்கு உரைக்குறிப்பிடும் போது,

"நீள் கடலிடை யலவன் வழியுழவா"[128]

என்றும் வளையாபதியிலுள்ள பாடல்வரியைக் கூறியுள்ளார்.

இலக்கியத் தொடக்கமுதல் சிறந்து விளங்கிய புலவர்கள் உரையாசிரியர்கள் இவ்வளையாபதிச் செய்யுள் வரிகளை பயன் படுத்தியுள்ளமையால் இந்நூல் மற்றும் புலவரின் திறம் போன்றவற்றை உணரமுடிகிறது.

தலைமை மாந்தராக வளையாபதி

பெண் பெருமைக்குரியவள். அப்படிப்பட்ட பெண் மனஇயல்பு சீராகவும் சமுதாயத்தில் போற்றுகின்ற வகையிலும் இருக்க வேண்டும். பெண்ணின் இயல்பை பாரதிதாசன்,

“வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மை யினால் உண்டென்று”[130]

என்று குறிப்பிடுகிறார். மண்ணில் வாழுகின்ற மனிதர்களின் நலமெல்லாம் பெண்மையினால் உண்டானது என்கிறார். பல்வேறு பெருமைக்குரியவளாகவும், பண்புகளில் சிறந்தவர்களாகவும் வளையாபதி காணப்படுகிறாள்.

பண்பு

பெண்ணின் மனமானது எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைப் வளையாபதிச் செய்யுள் பள்ளமான நீர்ப் பொய்கையில் வாழுகின்ற மீன்கள் திடீரென புதுவெள்ளம் போவதைக் கண்டால் அதற்குள் போவதற்குப் பெரிதும் விரும்பும். அதுபோல கணவனோடு இருக்கின்ற சில பெண்கள் தங்கள் இல்லறம் சிறப்பாக இருக்கும் பொழுது புதிய ஆடவர்களைக் கண்டால் அவர்களைத் தழுவ மனம்விரும்பும். இந்த மனநிலையில்லாத பெண்ணை மனம் முடித்தல் வேண்டும். அவ்வாறான பெண் வளையாபதி என்பதனை,

"**பள்ள முது நீர்ப பழகினு மீனினம்**

வெள்ளம் புதியது காணின் விரும்ப நூவங்

கள்ள விழ் கோதையர் காமனே டாயினு

முள்ளம் பிளிதா யுருகருங் தொண்ணி"[130]

இப்பாடல் விளக்குகிறது. திருமணமான பெண்கள் அக்காலத்தில் பிறிதொரு ஆடவரை விரும்பி ஏற்றுக்கொள்ளாமை இதனால் தெரிகிறது.

பெண்ணின் மனது மாறும் இயல்புடையது. அவ்வாறு மாறும்போது முறையான மனமாற்றமாக இருக்க வேண்டுமென்பதை,

"**மாரியுங் திருவு மகளிர் மனமுந்**

தீக்குழி நில்லாது பட்டுழிப் படும்"[131]

என்று பெருங்கதைக் குறிப்பிடுகின்றது. பெண்மனம் இயல்பாகவே பன்முகப்பட்டுச் செல்வதாகும். அதனை ஒருமுகப்படுத்த முயலுதல் என்பது கடினம். நீரில் விட்ட எண்ணெய் திசையெல்லாம் சிதறும். அதை ஒன்று கூட்டுதல் என்பது இயலாத காரியம். அதுபோல பெண்ணின் மனது மாறினால் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பாது. இதனை,

"**தெண்ணீர் பரந்து திசை தோறும் போய்கேட்ட**

....

....

மெண்ணி லொருபவ யென்று மாறே"[132]

என்ற பாடலடிகள் சுட்டும். ஒரு பெண்ணின் மனம் மாற்றம் பெறாமல், உறுதி நிலையுடன் இருக்கவேண்டுமென்கிறார் ஆசிரியர்.

கற்பு நெறி

பெண்ணைப் போற்றுவதும், சிறப்பிப்பதும் அதே சமயத்தில் பெண்ணின் நடத்தைக்கு இலக்கணம் வருப்பதும் தமிழர் மரபு. தமிழ்ச் சமுதாயம் ஆண்களை விடப் பெண்களுக்கே அதிகக் கட்டுப் பாடுகளையும், நடத்தை முறைகளையும் விதித்துள்ளது. அவற்றில் கற்பு என்பது முதன்மை பெறும். "கற்பு என்ற ஒழுக்கநெறி பெண்களிடையே இருந்து வந்த ஓர் ஒப்பற்ற பண்பாகும். அச்செயல்பாட்டின் மூலம் சமுதாயத்தில் பெண்ணின் மதிப்பை அறியலாம்"[133] என்பர்.

ஆணும் பெண்ணும் அன்பால் இணைந்து வாழுகின்ற வாழ்க்கை இல்வாழ்க்கையாகும். நாடும், ஊரும் புகழ் பெற வேண்டுமாயின் அங்கு வாழும் பெண்களின் சிறப்புக்களைப் பொருந்ததாகும். கற்புடைய மகளிர் எது கூறினாலும் அதை இயற்கை செய்து விடும். மழை பெய் என்றால் பெய்யும். இச்சிறப்பினை,

"நாடு மூரு நனிபுகழ்ந் தேத்தலும்
பீடு நும்மழை பெய்யெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்காற்
பாடு தான்மிகு பத்தினிக் காவதே"[134]

என்று எடுத்துரைக்கின்றன. பெண்கள் தங்கள் ஒழுக்க நெறியின் உயர்ந்த பண்பான கற்பில் சிறப்பிடம் பெற்று பெண்மைக்குப் பெருமை சேர்ப்பது பண்பில் உயர்ந்ததாகும்.

இல்லறம் - மக்கட்பேறு

ஆணும், பெண்ணும் தங்கள் வாழ்க்கையில் இன்பம், துன்பம் இரண்டிலும் கலந்து வாழ்கின்ற வாழ்க்கை இல்வாழ்க்கையாகும். இதனைச்

சமூகவியலார் குடும்பம் என்பர். இல்லறம், சிறந்த மக்கட்பேறு, சுற்றம் தழுவுதல் அறநெறியாளரை ஓம்பல், விருந்தினரைப் பேணுதல் ஆகியவை இல்லறம் சார்ந்த பெண்ணிய நெறிகளாககும்.

தலைவன் தலைவி இல்லறம் சிறக்க மக்கட்பேறு இன்றியமையாததாகும். இம்மக்கட் பேற்றினை,

"படைப்பு பல படைத்துப் பலரோடுண்ணும்

....

....

பயக்குறை யில்லைத் தாம் வாழுநாளோ"[135]

என்று புறநானூறு சிறப்பித்துக் கூறுகிறது.

வளையாபதி பொறுமை இல்லாதவருடைய தவ அறிவும், இன்பம் தர இயலாத பருவம், இறங்குவதற்குத் துறையில்லாதத் தாமரைக் குளம், தூய தன்மையும் மனமில்லாத மலர்மாலையும், நூல்கள் பலகற்றும் புலமை இல்லாதவரும், நல்ல நீர் நிலைகளில்லாத நகரமும் போன்று மக்கட்பேறு இல்லாதவருடைய நிலைக்காணப்படும். பெண்மையை உயர்த்திக்காட்டுவது மக்கட்பேறு என்பதை இச்செய்தி வழி அறியமுடிகிறது.

விருந்தோம்பல்

மனிதப் பண்புகளில் விருந்தோம்பல் போற்றத்தக்கது. அவற்றில் பெண்கள் பங்கு இன்றியமையாததாகும். பெண்களின் குணங்களைச் சமூகத்தில் உயர்த்திக் காட்டுவது விருந்தோம்பலாகும். இல்லற வாழ்வின் அடிப்படை நிகழ்வாகவும் காணப்படுகிறது. சங்ககால மகளிர் இப்பண்பில் சிறந்து விளங்கினர்.

இரவுக்காலத்தில் விருந்தினர் வந்தவுடன் மேலும் எவரேனும் வருகின்றார்களா என அவ்வீட்டுப் பெண்கள் வேலையாட்களை வாயிற்கதவில் பார்த்து வரச் சொல்வார்கள். இதனை,

"................ .... மாலை
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ வெனவும்
வாரார் தோழி"[136]

என்று குறுந்தொகைப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

உலகத்து உயிர்களுக்கு உணவு அவசியம். அத்தன்மையை "மக்களுக்கு உணவளிப்பதே சிறந்த தர்மம், உயர்ந்த சமூக ஊதியம், தேசத்தொண்டு, இப்பண்பு சமூகத்தையும், மக்களையும் அனுமதியுடன் வாழச் செய்யும். இப்பண்பில் இலக்கியங்கள் பெண்ணுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளன"[137] என்பர்.

துறவிகள் தட்டில் உணவு மிஞ்சும் வேளையில் அத்துறவி ஏனைய துறவிகளுக்கு வழங்கும் குணமுடையோனாகத் திகழ வேண்டும். இந்நிகழ்வை,

"ஐயக் கடிஞை கையி னேந்தி
மையது சிறப்பின் மனை தொறு மறுகிக்
யுண்டொழி மிச்சிலுண் டோடுதலை மருத்துக்
கண்படை கொள்ளுங் காவலன் ருனென்"[138]

என்று உண்டி கொடுத்தல் சிறப்பினை ஆபுத்திரன் வரலாறு கூறுகிறது.

ஒரு துறவி உணவினைக் கையில் கொண்டு வருகிறான். உணவு

மிஞ்சுகிறது; மிஞ்சியதை மற்றவர்களுக்குக் கொடுக்கிறான். நல்லமனம் படைத்தவர்கள் பொருட்கள் கொடுப்பதைவிட உணவு கொடுத்தலே மேலானது என்கிறாள் வளையாபதி. அதனை,

“தூற்றூலா வாகத் தொடுத்து விரல் வைத்த
தெற்றுக் கஃதென்னி னிறுவதன் காரணம்
ஆற்றமில் தாண மெனளைப்பல வாயினும்
தூற்ற வீழ் ஏவ்வாத் துணி வென்று மாறே”[139]

எனும் பாடல் கருத்து வலியுறுத்தும். குணத்தால், செயலால், இறைப்பண்பினால், விருந்தோம்பலினால் வளையாபதி சிறந்து விளங்கி பெண்மை நிலையில் உயர்வடைகிறாள்.

குண்டலகேசி

ஐம்பெருங்காப்பியங்களுள் குண்டலகேசியும் ஒன்று. பௌத்த சமயத்தைச் சார்ந்தது. நீலகேசி உரையில் குண்டலகேசி எனும் பெண் ஆவணம் என்னும் நகரில் சமண ஆசிரியரான நாகுத்தானனை வாதிட்டு வெற்றி பெற்றாள் எனும் செய்தி காணப்படுகிறது.

குண்டலகேசி ஒரு வணிகப் பெண். களவுத் தொழில் செய்யும் தாளன் என்பவனைக் காதலித்து மணக்கிறாள். ஊடற்காலத்தில் கணவனைக் கள்வனென இகழ்ந்துரைத்தாள். சினங்கொண்ட கணவன் அவளைக் கொல்ல மலையுச்சிக்கு அழைத்துச் செல்கிறான். கணவனின் வஞ்சகத்தையுணர்ந்த குண்டலகேசி ஒரு தந்திரம் செய்கிறாள். தன் கணவன் தாளனிடம் தங்களை வலம் வந்து இறக்க விரும்புவதாகக் கூறினாள். அவனும் அதற்கு இசைந்தான். கணவனைச் சுற்றி வருகையில் மலையுச்சியிலிருந்து கணவனைத் தள்ளி விடுகிறாள்.

பின்பு வாழ்க்கையில் வெறுப்புற்ற குண்டலகேசி உஞ்ஞை நகர் சென்று பௌத்த சமயத் துறவியிடம் உபதேசம் பெற்று புத்தரின் பெருமைகளையறிந்து அவர்புகழ் எங்கும் பரவச் செய்தாள். பல சமயவாதிகளுடன் வாதிட்டுப் பௌத்த சமயப் பெருமையை நிலைநாட்டினாள்.

பௌத்த சமயக் கருத்துக்கள், நிலையாமை, துறவு போன்றவை காணப்படுகின்றன. தன் உயிரை எடுப்பது கணவனாகயிருந்தாலும் அவனுயிரையும் எடுப்பேன் என்ற தீவிரவாதப் பெண்ணியக் கோட்பாடு காணப்படுகிறது.

தொகுப்புரை

கற்பு நெறி பிறழாதப் பெண்கள் சிலப்பதிகார கால கட்டத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதற்குக் கண்ணகியின் கற்புத்தன்மையே சான்றாக அமைகிறது.

கண்ணகி சமணத்துறவியாலும் தெய்வம் ஏறிய சாலினியாலும் மலைவாழ் குறவர்களாலும், அந்தண குலத்தைச் சேர்ந்த மாடலமறையோனினாலும் புகழ்ந்துரைக்கப்படுகிறாள். எல்லா இன மக்களாலும் கண்ணகி போற்றப்பெற்றுள்ளாள்.

கோவலனும் கண்ணகியும் அன்பு வயப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் ஒருவர் துன்பத்தை ஒருவர் பகிர்ந்துகொண்டு மதுரைக்குப் பயணம் செய்த பொழுது கணவன் எய்தும் துன்பத்தில் மனைவி பங்குகொள்ள வேண்டும் என்ற கருத்து கண்ணகியின் வாயிலாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளது. அக்காலப் பெண்கள் இத் தன்மைக்கேற்ப வாழ்ந்துள்ளமையும் இதனால் புலனாகிறது.

கண்ணகி தன் கணவனின் கால்களைக் கழுவி அமுது படைத்தாள் என்ற கூற்று அக்காலப் பெண்கள் கணவனைக் கண்கண்ட தெய்வமாக ஏற்று நடந்தமையைச் சுட்டுகிறது.

பிற தெய்வங்களை உளப்பூர்வமாக ஏற்காது கணவனையே தெய்வமாகக் கண்ணகி ஏற்றாள். இக்கருத்தால் அக்காலப் பெண்கள் கணவனைத் தெய்வமெனப் போற்றியுள்ளமையை அறிய முடிகிறது.

கண்ணகி அறத்தை நிலை நிறுத்துவதற்காகப் பாண்டிய மன்னன் முன்னர் வெகுண்டெழுந்தாள். பெண்களுக்கு அநீதி நேர்ந்த பொழுது அதுகண்டு அவர்கள் சினந்தெழ வேண்டும் என்ற கருத்தை இங்கு வலியுறுத்தியுள்ளார்.

கணவன் இறந்ததும் கைம்மை நோன்பு நோற்று உயிர்விடாமல் மன்னனிடம் வாதாடி, நீதிக்காக எதிர்கொள்ளும் துணிவு அக்காலப் பெண்களிடம் இருந்ததை இக்கருத்து பறைசாற்றும்.

கணவனுடன் இருந்து விருந்தினருக்கு விருந்துபேண முடியவில்லை எனக் கண்ணகி வருந்துகிறாள். அக்காலத்தில் விருந்து பேணும் பண்பினராகப் பெண்கள் விளங்கியதை இக்கருத்து தெளிவுபடுத்துகிறது.

தன் வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவித்த மாதவியைக் கண்ணகி ஒருபோதும் பழிக்கவில்லை; மாதவியின் பண்பை கோவலன் இழிவு செய்த போதும் கண்ணகி அதற்கு மறுப்புரை எதுவும் வழங்கவில்லை. இதனால் ஒரு பெண் மற்றொரு பெண்ணை இழிவுபடுத்தி உரைப்பதில்லை என்ற தன்மை அக்காலச் சமூகத்தில் வழக்கில் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

காதலுணர்வு தன்னை உந்தியபோதும் அவ்வுணர்வுக்கு ஆட்படாது கைகொண்ட நெறியிலேயே வழுவாது மணிமேகலை ஒழுகினாள். இது அவளின் திண்மையுள்ளத்தை எடுத்துரைக்கிறது.

மணிமேகலை இளமையிலேயே முதுமைக்குரிய அறிவையும் அனுபவத்தையும் பெற்றிருந்தாள்; சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றிய பண்பினள் என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இசை மேம்பாடுடையவளாக காந்தருவதத்தை விளங்கினாள். அவளது இசைத் திறத்தைத் தேவர்கள் வியந்து போற்றினர் என்ற கருத்து ஆய்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அக்காலப் பெண்கள் இசையால் தேர்ந்துள்ளதை இக்கருத்துப் புலப்படுத்தும்.

காந்தருவத்தை மனவுறுதி உடையவளாகவும், மானத்திற்கு அஞ்சுபவளாகவும், கணவன் மீது அன்பு கொண்டவளாகவும், இல்லறத்தை செம்மையுற நடத்துபவளாகவும் உள்ளாள். அக்காலப் பெண்கள் மனவுறுதி, மானம்பேணுதல், கணவனிடத்து அன்பு கொண்டிருத்தல் ஆகிய நெறிகளைக் கைக்கொண்டிருந்தமை இதனால் புலனாகிறது.

கணவனைத் தொழுபவளாகச் சுரமஞ்சரியும் மென்மைத் தன்மையுடையவளாகப் பதுமையும்; தனக்குரிய கணவனைத் தேர்ந்தெடுக்கும் பணியினை கேமசரியும், பிரிந்த கணவரிடத்து அன்பு பாராட்டுவதில் கனகமாலையும் மேம்பட்டு விளங்குகின்றனர். இவை பெண்மையின் சிறப்புக்களை வெள்ளிடைமலையாக விளங்கச் செய்துள்ளன.

பெண்மை நலனுக்குக் குந்தகம் விளைவிப்பவர் கணவராக இருந்தாலும் அவரை வெகுண்டுரைப்பது என்ற பண்பு அக்காலச் சமூகத்தில் இருந்துள்ளது. இதனை விமலையின் கூற்று மெய்ப்படுத்துகின்றது.

ஆடவர் தவறுகளைப் பெண்கள் பொறுத்துக் கொண்டுள்ளமையைச் சுரமஞ்சரியின் செயல் எடுத்துரைக்கிறது.

கணவனை விடுத்து பிறிதொரு ஆடவரைத் தன்வயப்படுத்திக் கொள்ளுகின்ற (Passitive Nature) பண்பு வளையாபதி காலகட்டத்தில் நிகழ்ந்துள்ளமை பெண்மைக்கு இச்செயல் இழிவு தருவதாக அமைந்துள்ளமை சுட்டப்பெற்றுள்ளது.

தன்னுயிருக்கு இன்னலை ஏற்படுத்துகிறவர் கணவராக இருந்தாலும் அவரைக் கொல்வதற்குப் பெண்கள் ஒரு போதும் தயங்கவில்லை என்பதைக் குண்டலகேசியின் வாயிலாக அறியமுடிகிறது. இவ்விலக்கிய காலகட்டத்தில் பெண்கள் இத்தன்மையுடன் வாழ்ந்துள்ளமையை இக்கருத்து நவில்கிறது.

சான்றெண் விளக்கம்

1. கண்ணதாசன், கண்ணதாசன் கவிதைகள், தொகுதி நான்கு, ப.28.
2. ம.இராமலிங்கம், நாவல் இலக்கியம், ப.31.
3. சோம.இளவரசு, பெண்கள் படைப்புத்திறன், ப.77.
4. தண்டியலங்காரம் - 10.
5. நச்சினார்க்கினியர்,(உ.ஆ), தொல்காப்பிய பொருளதிகார உரை, ப.73.
6. பெ.சீனிவாசன், இளங்கோவின் பாத்திரப்படைப்பு, ப.38.
7. மேலது, ப.39.
8. சிலப்பதிகாரம் 1:54-68.
9. திரு.வி.கல்யாணசுந்தரனார், பெண்ணின் பெருமை, ப.53.
10. திருக்குறள், 118.
11. சிலப்பதிகாரம் 1 : 54-68.
12. மேலது, 2 : 73-78.
13. மேலது, 15 : 138.
14. மேலது, 12 : 47-50.
15. மேலது, 13 : 54.
16. மேலது, 14 : 58.
17. குறுந். பா.40.
18. சிலப்பதிகாரம், 13 : 44-46.
19. மேலது, 14 : 74-76.
20. கம்பராமாயணம், பா.1123.
21. சிலப்பதிகாரம், 17 : 37.

22. தமிழ் லெக்சிகன், ப.39.

23. இரா.பிரேமா, பெண்ணியம், ப.10.

24. புறநானூறு, 18 : 3.

25. பெரும்பாணாற்றுப்படை, 20 : 4-5.

26. ஐங்குறுநூறு, 70 : 3.

27. கலித்தொகை, 47 : 7.

28. மணிமேகலை, 13 : 7-10.

29. கம்பராமாயணம், 1128: 4-5.

30. நம்பியகப்பொருள், 200.

31. தொல்காப்பியம், பொருள். கற்பு. நூ.3.

32. இரா.பிரேமா, கற்புக்கலாச்சாரம், ப.18.

33. சிலப்பதிகாரம், 1 : 26-29.

34. மேலது, 2 : 17.

35. நல்லதங்காள், பா.57.

36. சிலப்பதிகாரம், 18 : 30-33.

37. மேலது, 18 : 36-44.

38. மு.வரதராசன், கண்ணகி, ப.18.

39. மேலது, ப.19.

40. சிலப்பதிகாரம், 21 : 36-37.

41. திருக்குறள், 271.

42. சிலப்பதிகாரம், 21 : 36.

43. மேலது, 18 : 27.

44. மேலது, 20 : 91-94.

45. மேலது, 20 : 44-45.

46. அ.ந.சொக்கலிங்கம், குறள் கூறும் வாழ்க்கை நெறி, ப.58.

47. நற்றிணை, 142 : 9-11.

48. சிலப்பதிகாரம், 16 : 71-73.

49. மேலது, 10 : 38-44.

50. தாயம்மாள் அறவாணன், பெண் பதிவுகள், ப.73.

51. திருக்குறள், 261.

52. சிலப்பதிகாரம், 10 : 72.

53. மேலது, 10 : 77.

54. மேலது, 29 : 6-10.

55. திருக்குறள், 55.

56. இரா.பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள், ப.53.

57. சிலப்பதிகாரம், 23 : 201-204.

58. தொல்காப்பியம், பொருள். கற்பு. நூ.38.

59. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.33.

60. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப.27.

61. இரா.பிரேமா, பெண்ணியம், ப.44.

62. தி. பாக்கியமுத்து, இலக்கியத்தில் பெண்கள், ப.48.

63. மணிமேகலை, 5 : 86-90.

64. மேலது, 9 : 65-66.

65. அன்னிதாமசு,(ப.ஆ.) மகளிரியல், ப.57.

66. மணிமேகலை, 18 : 39-40.

67. மேலது, 9 : 38-39.

68. தொல்காப்பியம், பொருள். கற்பு, நூ.37.

69. திருமந்திரம், பா.18.

70. மணிமேகலை, 18 : 40-69.

71. திருமந்திரம், பா.12.

72. மணிமேகலை, 4 : 113-120.

73. மேலது, 15 : 33-37.

74. சாமிசிதம்பரனார், மணிமேகலை காட்டும் மனித வாழ்வு, ப.35.

75. மணிமேகலை, 11 : 82-91.

76. மேலது, 25 : 228-231.

77. அ.ந.சொக்கலிங்கம், குறள் கூறும் வாழ்க்கை நெறி, ப.55.

78. சாமிசிதம்பரனார், மணிமேகலை காட்டும் மனித வாழ்வு, ப.39.

79. புறநானூறு, 57 : 38.

80. மணிமேகலை, 18 : 20-21.

81. மேலது, 18 : 17-19.

82. மேலது, 24 : 77-78.

83. மேலது, 24 : 80-81.

84. பொருநராற்றுப்படை, 13 : 21-22.

85. சீவகசிந்தாமணி, பா.664.

86. மேலது, பா.337.

87. மேலது, பா.742.

88. மேலது, பா.247.

89. தொல்காப்பியம், பொருள். கற்பு, நூ.247.

90. சீவகசிந்தாமணி, பா.757.

91. மேலது, பா.973.

92. மேலது, பா.748.

93. மேலது, பா.663.

94. மேலது, பா.683.

95. மேலது, பா.283 : 8.

96. மேலது, பா.886.

97. மேலது, பா.1003.

98. மேலது, பா.548 : 3.

99. மேலது, பா.587 : 4.

100. மேலது, பா.643 : 2-3.

101. மேலது, பா.513.

102. அன்னிதாமசு (ப.ஆ.), சங்ககாலப் பெண்மை, ப.78.

103. சீவகசிந்தாமணி, 218 : 4-5.

104. மேலது, 1478 : 3-5.

105. திரு.வி.கல்யாணசுந்தரனார், திரு.வி.க. பெண்ணின் பெருமை வாழ்க்கைத் துணை, ப.58.

106. நற்றிணை, பா.44.

107. சீவகசிந்தாமணி, பா. 1418.

108. புறநானூறு, 118 : 4-5.

109. சீவகசிந்தாமணி, 1519 : 5.

110. மேலது, 1484 : 4 - 5.

111. மேலது, 2003 : 3.

112. மேலது, 2004 : 4.

113. குறுந்தொகை, 49.

114. சீவகசிந்தாமணி, பா. 1970.

115. மேலது, 1318.

116. தாயம்மாள் அறவாணன், பெண் பதிவுகள், ப.57.

117. சீவகசிந்தாமணி, பா. 1999 : 4 - 5.

118. மேலது, 2313 : 1 - 2.

119. ஏ.எம்.சுசிலா, பெண் இலக்கியம் வாசிப்பு, ப.47.

120. சீவகசிந்தாமணி, பா. 2012.

121. மேலது, 2066.

122. மேலது, 2100 : 4.

123. இரா.பிரேமா, கற்புக்கலாச்சாரம், ப.73.

124. சீவகசிந்தாமணி, பா. 2012.

125. மேலது, 2096.

126. மேலது, 2468 : 4 - 5.

127. திருக்குறள், 743.

128. வளையாபதி, பா.5 : 3.

129. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப.27.

130. வளையாபதி, பா.7.

131. பொ.வே. சோமசுந்தரனார், (உ.ஆ) பெருங்கதை. 3 : 5 - 6.

132. வளையாபதி, பா. 13.

133. இரா.பிரேமா, கற்புக்கலாச்சாரம், ப.29.

134. வளையாபதி, பா.18.

135. புறநானூறு, 245.

136. குறுந்தொகை, பா.53.

137. அ.ந. சொக்கலிங்கம், குறள் கூறும் வாழ்க்கை நெறி, ப.28.

138. நா. பாக்கியமுத்து, (தொ.ஆ) ஆபுத்திரன் வரலாறு, ப.16.

139. வளையாபதி பா.23.

இயல் - 3

பெண் துணைமை மாந்தர்கள்

இயல்-3

பெண் துணைமை மாந்தர்கள்

இலக்கியங்களை அவற்றின் பாடுபொருள் கருதி வகைப்படுத்தும் போக்கு தொல்காப்பியர் காலத்திலேயே உண்டு. காதல் வாழ்வினை கூறும்பாடல்களை அகப்பாடல்களென்றும், காதலல்லாத பிற வாழ்வியல் செய்திகளைக் கூறும் பாடல்களைப் புறப்பாடல்களென்றும் தொல்காப்பியம் பகுத்துணர்த்தும். தொல்காப்பியருக்குப் பின்னர் அறம், பக்தி, முதலியவற்றைப் பாடுபொருளாகக் கொண்டு பல்வேறு இலக்கியங்கள் எழுந்தன. அவற்றுள் ஐம்பெருங்காப்பியங்கள் தலையாய இடத்தைப் பெறுகின்றன. இக்காப்பியங்களில் முதன்மை, துணைமை மாந்தர்கள் கருத்துக்களை விளக்குவதற்காகப் படைக்கப்பட்டுள்ளனர். அவ்விரு மாந்தர்களுள் துணைமை மாந்தர்கள் குறிக்கத் தக்கவர்கள். இவர்களில் இருபாலரும் இடம் பெற்றிருப்பினும் ஆய்வு முதன்மை கருதி இங்கு பெண்பாலர் மட்டும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவர்களின் பெண்மையுணர்வுகளை ஆய்ந்து விளக்குமுகமாக இவ்வியல் அமைகிறது.

துணைமை மாந்தர்கள்

இலக்கியத்தில் தலைவன், தலைவி இருவரும் தலைமை மாந்தராக இருப்பதற்கு, அவர்களின் சிறப்பை எடுத்துக் கூறுவதற்குத் துணைமை மாந்தர்கள் படைக்கப்படுகின்றார்கள். ஒவ்வொரு தலைமைப் பாத்திரத்தின், பெருமையையும், உயர்வையும், கூறுவதற்கும் காப்பிய நிகழ்வுக்கும் துணைமை மாந்தர்கள் இன்றியமையாதவர்கள். “பல பெரும் பூசல்களும், விளைவுகளும் நடக்கும் காப்பியத்திற்கு ஒரு தனித்தலைவன் இல்லாவிட்டால் காப்பியம் நிகழ்வுப் பாதையிலிருந்து விலகிச் செல்லும்.

காப்பியத்திற்கு அச்செயல் உறுதுணையாக இராது. அவ்வாறு நிகழாமலிருக்க தலைமை மாந்தர்களின் செயல்களை அடுக்கிக் கூறுவதற்கு துணைமை மாந்தர்கள் வேண்டும்”(1) என்பர்.

துணைமை மாந்தர்கள் காப்பியத்தில் அமைந்து அவற்றின் இயல்புக்கேற்றவாறு ஒழுகிச் சென்று படிப்பவர் மனதைக் கவர வேண்டும். இம்மாந்தர்கள் காப்பியத்தில் கதை நிகழ்வோடு தொடர்புள்ளவர்களாகக் இருத்தல் வேண்டும். அவ்வாறான துணைமை மாந்தர்கள் தலைமை மாந்தர்களை மேம்படுத்தும் பாத்திரமாகவும், பண்பை வெளிப்படுத்துவர்களாகவும் அமைய வேண்டுமென்பதைக் கம்பராமாயணம்,

> ***“இராமற் குற்ற சுக்கீரிவன் போற்***
> ***றலை வனிற் சிறிது தாழ்த்தனன் மையனாய்த்***
> ***தலை வனைச் சார்ந்த வினை பலவற்றினும்***
> ***வருவோன் பீடமர்ந்த என்ப”(2)***

எனக் குறிப்பிடுகின்றது.

துணைமை மாந்தர்களின் இயல்பு

ஒரு காப்பியத்தில் ஒரு தலைமை மாந்தர்தான் இருக்க வேண்டும். இவ்விதி துணைமை மாந்தருக்குப் பொருந்தாது. எத்துணை துணைமை மாந்தர்கள் வேண்டுனாமாலும் இருக்கலாம். அவ்வனைத்து மாந்தர்களும் தலைமை மாந்தரையும் காப்பியத்தின் மையத்தையும் நோக்கிச் சுற்றி சுழல்பவர்களாக அமைதல் வேண்டும்.

“காப்பியத்தில் துணைமை மாந்தர்கள் பலரும் வருவர். அவர்கள் காப்பியத்துடன் ஒருங்கிணைந்து விட வேண்டும். உடலிலுள்ள உறுப்புக்கள் போன்று அமைதல் வேண்டும். கதைக்குக் காலாகவும், கண்ணாகவும், காதாகவும், கையாகவும் அமைதல் வேண்டும்”(3) என்பர்.

பாத்திரப் படைப்பின் நுட்பத்தினைத் துணைமை மாந்தர்களின் வழி நன்கு காணமுடியும். இம்மாந்தர்கள் கதையோடு கதையாகக் கரைந்து கலந்து, இனிக்க வேண்டும். “சிறந்த காப்பிய ஆசிரியன் மாந்தர்களின் அடிப்படையான சிறப்பியல்புகளைச் செயலாலும், பேச்சாலும் வெளிக்காட்டுவதே சிறந்த துணைமையாம்”(4) என்பர். காப்பிய மாந்தர்களில் சிறுமாந்தர்களும் காணப்படுவதுண்டு. காப்பியத்தில் தோன்றும் சிறுமாந்தர்கள் என்பது “சில பேசுவன, சில பேசாதன, சில மாந்தர்களோடு மாந்தராய் தோன்றுவன”(5) என்பர்.

துணைமை மாந்தர்கள் தங்களின் பண்புகளால், உணர்வுகளால், செயல்களால், பெருங்காப்பியத்தில்

- ❄ மாதவி
- ❄ தேவந்தி
- ❄ கவுந்தியடிகள்
- ❄ மாதரி
- ❄ வயந்தமாலை
- ❄ சாலினி,
- ❄ கோப்பெருந்தேவி
- ❄ சுதமதி
- ❄ வேண்மாள்

- ❇ காயசண்டிகை
- ❇ கூனி
- ❇ ஆதிரை
- ❇ இராசமாதேவி
- ❇ சித்திராபதி
- ❇ விசையை
- ❇ கோவிந்தையார்
- ❇ ஆதிமந்தி

ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்கள் வாயிலாகப் பெண்மையின் பண்புகள் வெளிப்படுவதால் இவர்களின் பண்பு நலன்கள் இங்கு ஆராயப்படுகின்றன.

மாதவி

பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம் முதன்மை பெறுகிறது. அக்காப்பியத்தில் மாதவி கண்ணகிக்கு இணையாகக் கற்பிலும், ஒழுக்கத்திலும், பண்பிலும், துறவு நிலையிலும் சிறந்து விளங்கியவள். தன் ஆடல், பாடல், அழகு ஆகியவற்றால் கோவலனைக் கவர்ந்து ஈர்த்துக் கொண்டவள். மன்னன் எதிரில் ஆடல் புனைந்து 'தலைக் கோல்' பட்டம் பெற்றவள். கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி கோவலன் ஒருவனையே இறுதிவரையில் கணவனாக நினைத்து வாழ்ந்தவள். கோவலன் இறந்த பின்பு துறவு வாழ்வு மேற்கொண்டு பெண்மையைப் போற்றியவள். மணிமேகலை என்ற குறிக்கோள் மகளைப் பெற்றவள்.

பிறப்பு

'குலவிச்சை கல்லாமற் பாகம்படும்' என்பதைப் போல மாதவியின்

ஆடற்கலை வழிவழியாக வந்த குடும்பக் கலை. அகத்திய முனிவர் வீற்றிருக்கும் சபையில் இந்திரன் மகளான உருபசி இசையோடு நடனமாடுகின்றாள். அச்சபையில் தலைமையாக அகத்திய முனிவரும் வீற்றிருக்கிறார். உருப்பசி இந்திரன் மகன் சயந்தனைக் கண்டு காதல் கொண்டு ஆடுகிறாள். இருவரின் போக்கைக் கண்டு அகத்திய முனிவர் சாபம் இடுகிறார். இட்ட சாபத்தால் சயந்தன் விந்திய மலையில் மூங்கிலாகவும், உருப்பசி காஞ்சி நகரத்தில் தேவ கணிகையாகத் தோன்றுவாளென்றும் கூறினார். அவ் உருப்பசிப் பரம்பரையில் தோன்றியவள் மாதவி என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். மாதவி உருப்பசியின் பரம்பரையில் தோன்றியவள் என்பதால் இப்பெயர் பெற்றிருக்கக் கூடும் என்பது சிலர் கருத்து. மாதவியின் பெயர் ஒரு கொடியின் பெயராக இருக்கக்கூடும் என்றும் சிலர் கருதுகின்றனர். கொடியின் பெயரைப் பெண்களுக்கு இடுதல் மரபாக இருத்தலின் இது கொடிப் பெயராக இருக்கக் வாய்ப்புள்ளது. குருக்கத்திக்கு மாதவி என்னும் ஒரு பெயரும் வழங்கப்பெறும். பூங்கொடி, அல்லி செந்தாமரை முல்லை முதலிய பூவின் பெயர்களைப் பெண் பெயராகப் பயன்படுத்துதலை வழக்கில் காணமுடிகிறது.

“கோவலன் பிரிய கொழுந்துயர் எய்திய

வருந்தினை போது நீ மாதவி

“கோதை மாதவி கொடுங் கொடி எடுப்ப”(6)

என்னும் பாடலடிகள் மாதவியின் பிறப்பை உணர்த்தும்.

கலை

கலைகள் பல வகைப்படும். அதில் ஒன்று இலக்கியக் கலை.

புலன்களின் உணர்வு குறைவாய், அறிவின் தெளிவே மிகுதியாய் அமைந்தது இலக்கியக் கலை. கலையென்ற சொல் பெண்பாற்குரியது. பெண்கள் கலையின் அம்சமாகவும், நடனக் கலையைத் தொடங்குபவராகவும் கூறுவர். அப்படிப்பட்ட "கலையே குறிக்கோளாய், கலையே வாழ்வாய், கலைத்துறையில் காலம் கழிப்பவர்கள் ஒழுக்கத்தோடு வாழ்தல் நிகழ்வு அருமையாக உள்ளது"(7) என்று மு.வ. குறிப்பிடுகின்றார்.

மாதவி தனது ஐந்தாமாண்டில் ஆடற்கலையைக் கற்கத் தொடங்கி பதினோறாவது வயதில் நடனமாடத் தொடங்கினாள். நடனம், அழகு, இசைக் கலையென்று கலையுணர்வை வளர்த்துக் கொண்டாள். தன் கலை வண்ணத்தை மன்னருக்கும், மக்களுக்கும், உலகிற்கும் காட்ட வேண்டுமெனக் கருதி அரங்கேற்றி நின்ற நிலையை,

"ஏழாண் டியற்றியோ ரீரா றாண்டிற்
சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி"(8)

எனும் இவ்வரிகள் சுட்டும்.

மாதவி தன் கலைத்திறனை மன்னனுக்குக் காட்ட விரும்பி ஆடற்கலை முறையில் ஒன்றும் பிழையாது ஆடிக்காட்டினாள். அரங்கேற்றம் முறையாக அமைக்கப்பட்ட நடன மேடையில் வலக்காலை முன் வைத்து உலகம் நன்மை பெருகவும், தீமை அகலவும் தெய்வப்பாடல் பாடி ஆடினாள் என்பதை,

"வலக்கான் முன்மிதிற் தேறி யரங்கத்து
***வலத்தூண் சேர்தல் வழக்கெனப் பொருந்தி*"(9)**

எனும் அடிகள் வாயிலாக அறியப்படும்.

மாதவி ஆடற்கலையில் சிறந்து விளங்கினாள் என்பதற்கு அவள் ஆடிய பதினோராடல்களும் சான்றாகும். சோழவேந்தன் ஆடற்கலையைக் கண்டு இன்புற்றுச் சிறந்த பரிசும், தலைக்கோல் பட்டமும் வழங்கினான் என்பதை,

"திரிபுர மெரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம் பேவல் கேட்ப
....
....
வயலுழை நின்று வடக்கு வாயினுள்
ஆயிராணி மடந்தை யாடிய கடையமும்"(10)

எனும் அடிகள் வெளிக்காட்டுகின்றன.

கடற்கரை நிகழ்வு

நகர மக்கள் காணுமாறு கோவலனும், மாதவியும் கடற்கரைக்குச் சென்றார்கள். அவ்விடம் திருவிழா நடக்குமிடம் போல் விளக்கியது. அங்குள்ள மேடையில் இசை வாசிப்பவர்கள், ஆடல் மகளிரும் காணப்பட்டார்கள். இருவரும் அங்குள்ள கட்டிலில் அமர்ந்தார்கள். அவ்வாறு அமர்ந்த மாதவியின் அழகினைச் "சித்திரம் வரைந்த ஆடை அணிந்து கோட்டுமலர் புணர்ந்து மணமகள் போல் அழகாக விளங்கினாள் மாதவி"(11) என்பர் மு.வரதராசனார்.

மாதவி காந்தள் மலர் போன்ற மெல்லிய விரல்களால் யாழினை மீட்டினாள். கோவலனிடம் தாளத்தைச் சொல்லச் சொன்னாள். கோவலனும் கானல்வரி பாட ஆரம்பித்தான். அவன் பாடிய பாடல் "காதலலொருவன் தன் காதலியை நினைத்தும், நோக்கியும் கூறுவனவாகக்

காணப்பட்டதென்றும், காதல் கருத்துக்களை அமைத்துக் கூறுவன போன்றும் இருந்தது. இப்பாடல் கருத்துக்களைக் கேட்ட மாதவி அவன் உள்ளத்தில் வேறொரு காதல் குறிப்பு இருப்பதாக உணர்ந்து, யாழினை எடுத்து மீட்கும் போது தான் காதல் குறிப்பு உடையவள் போல் கருத்துக்களை அமைத்துப் பாடினாள். இதனை,

> **"கானல்வரிப் பாடல் கேட்டமானெடுங்கண் மாதவியும்**
> **மன்றுமோர் குறிப்புண்டிவன் தன்னிலை மயங்கினா னெனக்**
> **கலவியான் மகிழ்ந்தாள் போற் புலவியால் யாழ்வாங்கித்**
> **தானுமோர் குறிப்பினாள் போற் கானல்வரிப் பாடற்பாணி**
> **நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழக்**
> **கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தாற் பாடத்தொடங்குமுண்"(12)**

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. மாதவி காதலி ஒருத்தி காதலன் பிரிவாற்றாமல் வருந்துபவளாகக் கருத்தமைந்த பாடல்களாகப் பாடினாள். இதைக் கேட்ட கோவலன் இவள் பொய் மனம் கொண்ட மாய வாழ்க்கை வாழ்பவளென நினைத்து அவளிடமிருந்து பிரிகிறான். பிரிவு தாளாமல் மாதவி துன்புறுகிறாள். தன் குலப் பண்பறிந்தும் அதிலிருந்து மாறுபட்டு கோவலனைத் தன் கணவனென நினைத்து வாழ்கிறாள். பெண்ணுக்கு அவள் சார்ந்த குலத்தை வைத்து உயர்வில்லை. அவளது செயலை வைத்தே உயர்வு என்பதை சிலம்பு உணர்த்துதலை அறியமுடிகிறது.

அறிவுக் கூர்மையான கடிதங்கள்

கோவலன் பிரிந்து சென்றவுடன் மாதவி துன்பந் தாளாது கடிதம் எழுதுகிறாள். உலகத்திலுள்ள எல்லா உயிர்களையும் தம்தம் துணையோடு சேர்த்து மகிழ்விக்கும் இளவேனில் காலம். கூடியவர்

பிரிந்தாலும், பிரிந்தவர் மறந்தாலும் மன ஒற்றுமையுடன் உயிர்வாழும் நிலையுள்ளது. இதை எனக்கருள வேண்டுமென கடிதத்தில் கூறுகிறாள்.

துருந்தனமென்னும் வடமொழி நாடகத்தில் சாகுந்தலை துசியந்தனக்குப் பிரிவுத் துன்பத்தை உணர்த்தும் வகையில்

“நின்னுடைய உள்ள நிலையறியேன் நின்பாலே
மன்னுடைய வேட்கை மலிவுற்ற என்று நட்பைக்
காமன் இரவும் பகலும் கனற்றுகின்றான்
உமவருளில்லா யாவன”(13)

எனக் கடிதம் அனுப்புகிறாள்.

பிரிவுத்துன்பம் எப்படிப்பட்டது என்பதை பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், “பிரிவு என்பது மனித உணர்வுகளை பரிசோதிப்பது. உள்ள உணர்வுகளை வெளிக்கொணர்வது. அவரின் நற்செயல்களை ஆராய்வது”(14) என்று கூறுகிறார்.

மாதவி தன் உள்ளத்தில் நினைத்த காதற் குறிப்பின் உள்ளுணர்வு எவ்வகையிலிருந்தது என்பதை,

“மன்னுயி ரெல்லா மகிழ்ந்துணை புணர்க்கும்
இன்னிள வேனி லிளவர சாளன்
அந்திப் போதகக் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்க டந்துணை மறப்பினும்
நறுப்பூ வாளியி னல்லுயிர் மறப்பினும்
இறும்பூ தன்றிஃ தறிந்தீ மின்னென”(15)

எனக் கடிதம் வழிக் குறிப்பிடுகின்றாள். இனிய இளவேனிலாகிய இளவரசன் உயிர்களையெல்லாம் அந்திப்பொழுதாகிய அரும்பிடர்த் தோன்றிய திங்கட் செல்வன், செவ்வியின் அல்லன். கூடியவர்களிடையே ஊடலும், பிரிந்தோர் தன் துணையை மறந்தாலும் மன்மதன் தனக்குரிய மலரம்புகளால் உயிரை மாய்க்குவான். இஃது அவனுடைய வழக்கம். இது அவனுக்குப் புதிதன்று. அவ்வாறான செயலை நீர் அறிவீர் என்று மாதவி தான் எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறாள். கடிதத்தில் அறிவுத் திறனுடன் காதலுணர்வை வெளிப்படுத்துகிறாள்.

பண்பு

மனிதர்களை உயர்த்திக் காட்டுவது அவர்களது பண்புகள். அப்பண்பின் மூலம் மனிதனின் உள்ளம் எப்படிப்பட்டதென்றும் அறியமுடியும். தலைவன், தலைவி, பண்பில் ஊடல், கூடல் முக்கிய நிகழ்வுகளாகும். ஊடலும், கூடலும் நிறைந்தது மனித வாழ்க்கை. ஊடல் காதல் வாழ்க்கையில் அதிகமாகக் காணப்படுகிறது. ஊடலைப் பற்றித் தொல்காப்பியமும், வள்ளுவமும்,

> ***"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்***
> ***கடிவரை யிலபுறத்து என்மனார் புலவர்"***(16)

> ***"இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்***
> ***வல்லது அவர் அளிக்குமாறு"***(17)

என தெளிவாகப் புலப்படுத்தியுள்ளன.

கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து மாதவியிடம் இன்பம் துய்த்தவன். அவர்களுக்கிடையில் ஊடல் நிகழ்வுகள் காணப்பட்டன.

கலையிலும், வாழ்விலும் மயங்கிய கோவலனிடம் ஊடினாள். அந்த ஊடலை,

> **“நிலவுப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்துக்**
> **கலவியும் புலவியும் காதலற் களித்தாங்**
> **கார்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்**
> **கோலங் கொண்ட மாதவி யன்றியும்”**(18)

என்று கூறுகிறாள். மாதவி ஊடல் வாயிலாக அவனிடம் ஒரு பரத்தையாக வாழவில்லை. கோவலனைத் தன் காதலனாகக் கருதியே வாழ்ந்தாள். ஊடல் மூலம் கணிகையாகப் பிறந்தாலும் ஊடல், கூடல் என கோவலனின் காதல் மனைவியாக வாழ்ந்த வாழ்க்கை மூலம் மாதவியின் உயர்ந்த காதல் பண்பு வெளிப்படுகிறது.

பிரிவுத் துயரம்

அன்பான வாழ்க்கையில் பிரிவும் ஏற்படும். அத்துன்பம் மற்ற எந்தச் செயலையும் செய்ய விடாது. அத்துன்பத்தை வள்ளுவர்,

> “**பெரிது பெரிது போறையார் கேண்மை பிரிவின்கண்**
> **பீழை தருவதொன்று இல்**”(19)

எனக் குறிப்பிடுகின்றார்.

கானல்வரிப் பாட்டால் கோவலன் மனம் மாறி மாதவியை விட்டுப் பிரிந்து சென்ற போது அவள் செயலற்று வருந்தினாள். வருந்திய நெஞ்சத்தோடு வீடு திரும்புகிறாள். அத்துன்பத்தை,

> “**மான் அமர் நோக்கியும் வையகப் ஏறி**”(20)

எனும் இவ்வடிச் சுட்டும். “காதலரைப் பிரிந்த மகளிர்க்கு மனதளவில்

நேரும் துயரம் உள்ளத்துயரம் மட்டுமன்று, உடல் மெலிவும், நிற வேறுபாடும் உண்டு"(21) என்பர். இப்பசலை நோயினைத் திருக்குறள்,

"சாயலும் நாணும் அவர் கொண்டார் கைம்மாறா

நோயும் பசலையும் தந்து"(22)

எனக் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியப் பரணர்

"ஊரு காண் கேணி வன் துறைத் தொக்க

பாசி அற்றே பசலை; காதலர்

தொடுவுளத் தொடுவழி நீங்கி

விடுவழி விடுவழிப் பரத்தலானே"(23)

என இந்நோயினை உவமையாகக் கூறியுள்ளார். கோவலனைப் பிரிந்த மாதவி பசலையுற்றாள். அப்பசலை மேனியோடு வருந்தியதை,

"பசந்த மேனியாள் படர் வறுமாலை"(24)

எனும் அடியும்,

கோவலன் மதுரைக்குச் சென்று உற்ற கொடுமையைக் கேட்டுப் பெருந்துயர் அடைந்தபோதும் வருந்தியதை,

"வசந்த மாலை வாய்ப் மாதவி கேட்டுப்

பசந்த மேனியாள் படர் நோய் உற்று

நெடுநிலை மாடத்து இடை நிலத்து அங்கு ஓர்

படை சுமை சேக்கைப் பள்ளியுள் வீழ்த்தும்"(25)

இவ்வடிகள் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார் இளங்கோவடிகள். இதன்வழி இயல்பான பெண்ணுக்குரிய பண்புகள் மாதவியிடமிருப்பதை அறியமுடிகிறது.

காதல் நெஞ்சம்

காதல் மனிதன் மற்றும் பிற உயிர்களுக்கும் ஓர் உயரிய பண்பு. தலைவி தலைவனிடத்துத் தான் கொண்ட காதலின் ஆழத்தை அளக்க முற்படுகிறாள். அக்காதலில் இந்நிலப்பரப்பைக் காட்டிலும் பெரியதாகவும், வானத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவும், கருதுகிறாள். இதனை,

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவின்றே - சாரல்
கருங்கோட் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"[(26)]

என்னும் பாடல் புலப்படுத்துகின்றது. அக்காதல் நெஞ்சத்துடன் மாதவி இருந்தாள். கோவலன் தன் மனைவியான கண்ணகியோடு காவிரிப் பூம்பட்டினத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்ற செய்தியைக் கேள்வியுற்று வருந்தி கோசிகனிடம் கூறுகையில்

"கண்மணி யனையாற்குக் காட்டுக வென்றே
மண்ணுடை முடங்கன் மாதவி யீத்ததும்"[(27)]

என தான் கோவலன் மீது கொண்ட காதலுணர்வை வெளிப்படுத்துகிறாள்.

வயந்தமாலையின் வாயிலாக காதலன் உற்ற கடுந்துயரைக் கேட்டவுடன் உயிர் துறக்காது, மனதைத் தேற்றிக் கொண்டு குறிக்கோளுக்காக கல் நெஞ்சத்தோடு வாழ்ந்தவள். இதனை,

"காதல னுற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா வுயிரோடு நின்றே

பொற்கொடி மூதூர்ப் பொருளுரையிழந்து

நற்றொடி நங்காய் நாணுந் துறந்தேன்"(28)

எனும் பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது.

துறவு

மனிதன் தன்னலத்தை விடுத்துப் பிறர் நலத்திலும் நாட்டம் உடையவனாக இருக்க வேண்டும். பிறர் நலத்தில் நாட்டம் கொள்ளுதற்கு இல்லற வாழ்க்கையை விட்டுத் துறவு வாழ்க்கையை மேற்கொள்ளல் நன்று.

மாதவி 'கோவலன் தன்னை மறந்தாலும் அவனை யான் மறவேன்' என்று யாழ் எடுத்துப்பாடினாள். கணவன் இறந்தவுடன் தானும் இறக்க வேண்டும் என்று வாழ்ந்த மகளிரின் மனப்பான்மைக்கு எதிராகக் கணிகையர் குலத்தில் அவனை மட்டுமே நினைத்து வாழ்ந்து காட்டிய கற்புக்கரசியாவாள். தமிழருக்கு உரித்தான பண்பாட்டுடன் வாழ்ந்துள்ளாள்.

கோவலன் கொலை செய்யப்பட்ட பின்பு மாதவி தன்குல வழக்கப்படி விருப்பம் போல் உலக இன்பங்கள் அனைத்தையும் பெற்று வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவள் வாழ்ந்த வாழ்வு போற்றுதற்குரியது.

"**மங்கல மடந்தை மாதவி தன்னோடு**

கைம் பெண் மாறி செய்கையில் பொழிய"(29)

எனும் அடிகள் மாதவி துறவு வாழ்வினை மேற்கொண்டதை உணர்த்துகின்றது. தான் பிறந்த குலத்தின் செயற்பாடுகளை விட்டு ஒரு சிறந்த பெண்ணாக இருப்பவள் எவ்வாறு வாழ்வளோ அவ்வாழ்வினை மேற்கொண்டாள். கணவன் இறந்தவுடன் துறவு பூண்டு வாழ்வதின் மூலம் இவளின் பெண்மைப் பண்பு வெளிப்படுகிறது.

இத்தகைய பெருஞ்சிறப்பிற்குரிய மாதவி தான் ஈன்ற மணிமேகலையைத் தூயவளாய் வளர்த்துத் துறவு பூண வைத்தாள். இதனை,

"நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேள்
மணிமேகலையை வான்துயர் உலுக்கும்
கணிகையர் கோலம் காருது ஒழிக எனக்
கோதைத் தாமம் குழலோடு களைந்து
போதித் தானம் புரிந்து அறம் கொள்க"(30)

எனும் அடிகள் எடுத்துக் கூறுகின்றன.

மாதவியின் மன உறுதி

கணிகையர் குலத்தில் தோன்றிய மாதவி பெண்ணியப் புரட்சி செய்தாள். பெற்ற தாய் கூறியதைப் பொருட்படுத்தாத மாதவி தான் நன்னெறிப்பட்டும் தன் மகள் மணிமேகலையும் நன்னெறிப்பட்டும் வாழ வேண்டுமென எண்ணியதை,

"ஆங்கது கேட்ட வரசனு நகரமும்
ஓங்கிய நன்மணி யுறுகடல் வீழ்ந்தோர்
தம்மிற் றுன்பந் தாநனி யெய்த"(31)

எனும் அடிகள் சுட்டுகின்றன. தன் ஆற்றலாலும் பண்பாலும் சமுதாயத்தை எதிர்த்து வெல்கின்றாள். கணிகையரும் கற்பொழுக்கத்தோடு வாழ முடியும் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டுகிறாள். இதன் வழி பெண் மனவுறுதியுடன் போராடினால் வெற்றிபெற முடியும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

கோவலன் கொலையுண்டான் என்பதை அறிந்த மாதவி தன் கோலத்தை மாற்றிக் கொண்டு துறவு நிலைக்குள் மனத்தை ஒரு நிலைப்படுத்தி கைம்மை ஏற்றதை,

"போதியின் கீழ் மாதவர் முன் புண்ணியதா கைம்புரிந்த
மாதவி தன்னுறவுங் கேட்டாயோ தோழி"[32]

என்ற அடிகள் சுட்டும். இதனால் மாதவியின் மனவுறுதி விளங்கும்.

மணிமேகலையை அறநெறியில் செல்ல வைத்தல்

மாதவி தன் மகளையும் அறநெறியில் செலுத்திக் காக்க முனைந்தாள். மணிமேகலையை மாதவி "மாபெரும் பத்தினியாகிய கண்ணகியின் மகள் என்று கூறினாள். மேலும்

"மாபெரும் பத்தினிமகள் மணிமேகலையை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத் தொழிற் படாஅள்"[33]

என என் நடனத் தொழிலுக்கு வரமாட்டாள் என அறுதியிட்டு உரைக்கிறாள். மாதவியின் இத்தகைய உறுதியும், உயர்வும் பெண்மைப் பண்புக்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குவதை அறிய முடிகிறது.

தேவந்தி

தேவந்தி ஒரு பார்ப்பனப் பெண். சாத்தன் என்பவனை மணந்து வாழ்க்கை நடத்தி வந்தவள். சாத்தன் பிறப்புப்பற்றி ஒரு கதை கூறப்படுகிறது.

சாத்தன் பிறப்பு

ஒரு பார்ப்பனன் இரு மகளிரை மணந்து வாழ்க்கை நடத்தி வந்தான். இருவரில் ஒருத்திக்கு ஒரே பிள்ளை இருந்தது. ஒரு நாள் அக்குழந்தை அழும் போது அக்குழந்தையின் தாய் வெளியே சென்றிருந்தாள். மற்றொருத்தி அக்குழந்தைக்குப் பாலூட்டினாள். புரை ஏறி இறந்துவிட்டது. அவள் குழந்தையைப் பிழைக்க வைக்க கோயிலுக்குச் சென்றாள். வழியில் நான் பிழைக்க வைக்கிறேன் என்று கூறி குழந்தையை பேய்வாங்கித் தின்று விடுகிறது. அவள் துன்பத்தில் மேலும் உழலுகின்றாள். இதனைப் பொறுக்காது சாத்தனென்னும் தெய்வம் குழந்தை வடிவமாகத் தோன்றியது. குழந்தையை வீட்டில் வந்துத் தூங்கவைத்தாள். தெய்வக் குழந்தை என்பதை யாரும் அறியவில்லை. குழந்தை வளர்ந்து திருமண வயதுடையவனானான். இல்லற வாழ்க்கை இனிதே நடத்தினான். சாத்தன் தன் உண்மை வரலாற்றினைக் கூறி இளமையான தோற்றத்தைத் தேவந்திக்குக் காட்டிவிட்டுத் தன் கோட்டத்திற்கு வருமாறு சொல்லிவிட்டு மறைந்தான். தேவந்தி அவனைப் பெறுவதற்காக நோன்பு நோற்றாள்.

பண்பு

மனிதர்களின் குணங்களையும்,, செயற்பாடுகளையும் வைத்து அவர்களின் பண்புகளை மதிப்பிடுகிறோம். ஒரு பெண்ணுக்குக் கணவனின் அன்பே முதன்மையானது என்பதும், அப்பெண்ணே அவ்வாண்மகனின் வாழ்க்கையைச் சரியாக நடத்த உதவுபவள் என்பதையும்,

"உவந்தொருவன் வாழ்க்கையைச் சரியாய் நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்
அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்"(34)

என்ற அடிகள் சுட்டுகின்றன. குடும்பத்திற்கு இலக்கணமாய் விளங்குபவள் மனைவி என்கிறார் பாரதிதாசன்.

தேவந்தி, கணவன் பிரிவால் துன்பம் நிறைந்தவளாகின்றாள். சாத்தனை வணங்கிவிட்டு கண்ணகியிடம் சென்று தோழியாகின்றாள். இவள் கற்பு, அறம், ஒழுக்கம், தெய்வப்பண்பு போன்ற நிலைகளில் சிறப்புக்குரியவளாகின்றாள்.

கண்ணகி தான் கண்ட கனவைக் கூற தேவந்தியிடம் சென்றாள். தேவந்தி 'பெறுக கணவனோடு என வாழ்த்தி வரவேற்கிறாள்.' "கணவனை விட்டு வேறு எவரையும், எத்தெய்வத்தையும் வழிபடாத வாழ்வே கற்புடைய வாழ்வாகும் என்பது அக்காலத்தவர் கொள்கை"(35) என்பர் மு. வரதராசன்.

கண்ணகி தான் கண்ட கனவை தேவந்தியிடம் கூறுகின்றாள். அதற்குத் தேவந்தி, நீ பழம் பிறப்பில் ஒரு நோன்பு பிழைத்தாய். அதனால் துன்புறுகிறாய், கணவனால் நீ வெறுக்கப்படவில்லை. ஆகையால் இதற்கு நீ சோம குண்டம், சூரிய குண்டம் எனும் புண்ணிய தீர்த்தத்தில் குளித்து காமவேள் கோட்டம் சென்று தொழுதால், உன் அச்சம் நீங்கி கணவனைப் பெறலாம். இதனை,

"நற்றிறங் கேட்கி னகையாரும் பொற்றொடீஇ
கைத்தாயு மல்லை கணவன் தொழுநோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பிற் போய்க்கெடுக வுய்த்து"(36)

என்று ஆற்றுப்படுத்தி அமைதிப்படுத்துகின்றாள். கணவனைத் தொழுவது ஒழுக்க நெறியாக பின்பற்றப்பட்டாலும், அக்கணவனால் பிரிவு வருகின்ற பொழுது நோன்பிருந்து சேரவேண்டும் என்ற பண்பு நெறியை உணர்த்துகின்றாள். இதன்வழி இம்மாந்தர் படைப்பில் தன்னைப் போலவே பிறரை எண்ணி நல்வழிப்படுத்தும் பெண்மைக்குரியச் சிறப்புப் பண்பு உணர்த்தப்படுகிறது.

பெண்ணுக்குப் பெண் வேண்டுதல்

பெண் பிரிவுத் துன்பத்தில் இருக்கின்ற போது அவள் கணவனை நினைத்து தொழுதால் போதும், இருவரும் இன்பமாக சேர்ந்து வாழ்வார்கள் என்பதை பட்டினப்பாலையில்

"*இரு காமத்தினை யேறி*"(37)

இவ்வடி சுட்டுகிறது.

கண்ணகி, தேவந்தி கூறியதுபோல் சோம குண்டம், சூரிய குண்டம் சென்று வணங்க வில்லை. கணவனையே வணங்கினாள். கண்ணகி புண்ணிய தீர்த்தத்தை வணங்கவில்லையென்றாலும் அவளுக்காகத் தேவந்தி வணங்கினாள்.

"கடுக்குமென் னெஞ்சங் கனவினா லென்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டேம்
பட்ட பதியிற் படாத தொருவார்த்தை
இட்டன ரூரா ரிடுதேளிட் டென்றன்மேல்
....
....

உற்றேனா டுற்ற வுறுவனோ டியானுற்ற"(38)

எனக் கண்ணகி தான் கண்ட கனவை மட்டும் நினைத்து வருந்திக் கொண்டிருந்தாள். இதன் வாயிலாக கண்ணகி மீது தேவந்தி கொண்ட ஈடுபாடும் பெண்ணுக்குத் துன்பம் நேரும்போது பெண்னே துணையாக நிற்கிறாள் என்பதையும் அறிய முடிகிறது.

கண்ணகியின் துன்பத்தில் பங்கெடுத்தல்

தேவந்தி தன் செயலால் மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என நினைக்கின்றாள். தன் துன்பத்தைப் பெரிதாக நினைக்காது கண்ணகியின் துன்பத்தையே பெரிதாக நினைத்து வருந்தி இறைவனிடம்,

"**தெய்வம் இல்லாதேன் தீக்கனாக் கேட்ட நான்**
எய்த உணரா திருந்தேன் மற்று என் செய்தேன்"(39)

என வேண்டுகிறாள். இதில் மனதளவில் அவள்படும் துயரமும், கண்ணகி துன்பத்தில் பங்கெடுப்பதையும் உணரமுடிகிறது. ஒரு பெண் துன்பத்திலிருந்தாலும் மற்றொரு பெண் துன்பப்படும் போது இரக்கவுணர்வு கொண்டு அத்துன்பத்தையும் போக்க வேண்டும் என்ற பெண்மையின் சிறப்புப் புலப்படுத்தப்படுகிறது.

தேவந்தி ஐயையை அறிமுகப்படுத்துதல்

கண்ணகியைக் காண வஞ்சி சென்ற போது மதுரை ஆயர்பாடியில் ஐயையை கண்ணகிக்கு அறிமுகப்படுத்துகின்றாள் தேவந்தி. ஐயையின் நற்செயலைக் கூறி அவள் உனக்கு எந்நேரத்திலும் உறுதுணையாக இருப்பாள்.

"செய்யாக் கோலமொடு வந்தீர்க் கென்மகள்

ஐயை காணீ ரடித் தொழி லாட்டி"(40)

என்கிறாள். மாதரியின் மகளான ஐயையை அவளின் ஒப்புதலோடு உதவிக்காக அறிமுகப்படுத்தி பெண்ணாகிய அவளே மற்றொரு பெண்மைக்குப் பெருமை சேர்க்கிறாள்.

கண்ணகிக்காக உயிர்துறந்த தலைமைப் பண்புடையவள் மாதரி. இவள் வாழும் இடத்தே கண்ணகி சமைக்க அடுப்பு மூட்டுகிறாள். அப்போது புகை எழுந்து கண்ணகியின் கண்களைச் சிவக்கச் செய்கிறது. அது கண்ட ஐயை வைக்கோல் கொண்டு வந்து அடுப்பு எரியவைத்து கண்ணகிக்குத் துணை நின்று உதவுகிறாள். தாயும், மகளும் கண்ணகியிடத்து அன்பு காட்டியது இதனால் விளங்கும். இவ்விருவரும் அன்பு காட்டியது போல் தான் கண்ணகி மீது அன்பு காட்ட இயலவில்லை என வருந்துகிறாள் தேவந்தி. பெண்களின் நிலைக்காகப் பெண்கள் இரங்குகின்ற தன்மை, ஈண்டு வெளிப்படுகிறது. இது பெண்களின் ஒருமைப்பாட்டிற்குச் சான்றாகும்.

ஐயை தன் தாயை இழந்தாலும் கண்ணகிமேல் வைத்திருந்த அன்பு காரணமாக எதுவும் பேசாது நாணி வெம்பி நின்றாள் அந்நிலையில் அவளைப்பற்றி கண்ணகியிடம்,

"அவ்வை மகள் இவள்தான் அம்மணம் பிட்புலா

வையெயிற்று ஐயையைக் கண்டாயோ தோழி

மாமி மடமகளைக் கண்டாயோ தோழி"(41)

எனக் கூறினாள். ஐயைக் இளம் பெண்ணாகயிருந்தாலும் கண்ணகிக்காகத் தனது கட்டுப்பாடுகளைக் களைந்து, குடிப்பண்பாலும், பழக்கத்தாலும்

பெண்களின் பண்பு மாறாமல் இருப்பதைப் பாராட்டினாள் தேவந்தி. இளம் பெண் மூத்த பெண் வழி நடந்து பெண்ணியப் போக்கிற்கு வழி வகுக்கின்றாள்.

கண்ணகி தன் வடிவம் காட்டுதல்

கண்ணகி மீது கொண்ட மரியாதையின் காரணமாகச் செங்குட்டுவன் கல்லெடுத்துக் கோயில் அமைத்தான். அப்பொழுது தோன்றாத கண்ணகி தேவந்தி அழுது புலம்பியது கேட்டு தெய்வத் தன்மை பொருந்திய வடிவத்தைக் காட்டுகிறாள். அவள் வடிவத்தைக் கண்டு செங்குட்டுவன்,

"என்னேயிஃ தென்னேயிஃ தென்னேயிஃ தென்னேகொல்
பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலைவளைக்கை
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசோ
மின்னுக் கொடியென்று மீவிசும்பிற் றோன்றுமால்"(42)

என்று வியந்து கூறுகிறான். சிலை எழுப்பிக் கோயில் கட்டிய நம் முன்னால் தோன்றாமல் தேவந்தி அழுது புலம்பிய போது தோன்றியது மன மகிழ்ச்சியாகயுள்ளது என்கின்றான். ஓர் அரசன் பெண்ணின் சிறப்பை எடுத்துக் கூறுவதும், பெண்கள் துன்பத்தில் பெண்கள் பங்கெடுப்பார்கள் என்ற பெண்ணியப் பண்பும் காணப்படுகிறது.

தேவந்தி, மறையோன் வடிவில் வந்த சாத்தனோடு தொடர்பு கொண்டவள். புகார் நகரிலே மாடல மறையோன் போன்ற பெரியவர்களால் மதிக்கப் பெற்றவள். இப்பெருமையையுடைய ஒருத்தி பத்தினிக் கோட்டத்திலிருக்கக் கூடிய கண்ணகிக்குப் பூவும், பூசையும் செய்யக் கூடியவள் என்று அச்செயல் புரிய விடுகிறான் செங்குட்டுவன். இவன் பெண்களுக்குத் தெய்வ நிலையில் முன்னுரிமை கொடுத்து

சிறப்பித்துள்ளான். பெண்கள் தங்கள் நற் செயல்பாடுகளால் தெய்வ நிலைக்கும் செல்ல முடியுமென்ற கருத்து வெளிப்படுகிறது.

கண்ணகி கோட்டத்தைக் கண்டு வழிபட்ட செங்குட்டுவனும் மற்ற வேந்தர்களும்,

"எந்நாட் டாங்க ணிமைய வரம்பனின்

நன்னாட் செய்த நாளணி வேள்வியில்"(43)

என்ற அடிகளில் இந்நாட்டிற்குப் பெருமை செய்தது போல் எங்கள் நாட்டிற்கும் வந்து வரம் தர வேண்டுமென்று கூறினர். அப்போது கண்ணகி சிலையிலிருந்து **'தந்தேன் வரம்'** எனும் ஓர் ஒலி வெளிப்பட்டு எல்லோரையும் இன்பத்தில் ஆழ்த்தியது. அங்குத் தேவந்தி மேல் கண்ணகித் தெய்வம் வெளிப்பட்டது என்றும் கூறுகின்றனர்.

ஒரு பார்ப்பனப் பெண்ணாகப் பிறந்து, சாத்தனுக்கு மனைவியாகி, தெய்வநிலைப் பெண்ணாக மாறி, கண்ணகி கோயிலுக்குப் பூசை செய்யக் கூடியவளாகயிருந்து, தம் பழம்பிறப்பையும் உணர்த்திக் கண்ணகிக்கு நிகரானவளாகவும் பெண்ணியத்திற்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கியுள்ளாள்.

கவுந்தியடிகள்

கவுந்தியடிகள் சமண சமயப் பெண் துறவி. புகார் நகரத்திற்கு மேற்கே சற்றுத் தொலைவிலிருந்த கவுந்திப் பள்ளி எனுமிடத்தில் தங்கியிருந்து சமணக் கொள்கைகளைப் போதித்தவர். ஆணாயினும், பெண்ணாயினும் உயர்ந்தவர்களை அடிகள் என்று சொல்வது அக்கால மரபு. கோவலனும், கண்ணகியும் யாருக்கும் தெரியாமல் இரவுப் பொழுது புகாரை விட்டு மதுரைக்குச் சென்றார்கள். முப்பது காதத் தொலைவு

வந்தவுடன் அவர்களுக்கு அவ்விடத்தில் கிடைத்த அரிய பெருந்துணை கவுந்தியடிகள்.

கவுந்தியடிகள் காப்பிய துணைமை மாந்தர்களில் ஒருவர். புகாரின் புற நகரில் தோன்றி மதுரைப் புறநகரில் தலைமை மாந்தர்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கின்ற துணைமை மாந்தராகப் படைக்கப்பட்டுள்ளார். இறுதியில் உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்தார். அம்மையாரின் இயற்பெயர் ஐயை. இவருடைய வாழ்க்கையைப் பற்றி ஒரு குறிப்புமில்லை எனத் திவாகரம் குறிப்பிடுகிறது.

புகாரின் புறநகரிலிருந்த கவுந்தியைப் புகாரை விட்டு வந்த கோவலனும் கண்ணகியும் கண்டு அடி தொழுதனர். சமண சமயப் பெண்துறவி இவரென்பதும், தோற்றத்திலேயே வணங்கத் தக்கப் பெருமையைத் தன்பால் கொண்டிருந்தவர் என்பதும் அறிமுகப் படுத்தும் போது வெளிப்படுகின்றன. மனிதர்களுக்கு மதிப்புக் கொடுப்பவர் என்பதைக் கண்ணகியை முதலில் பார்த்து,

"உருவங் குலனு முயர்பே ரொழுக்கமும்
பெருமகன் றிருமொழி பிறழா நோன்பும்
உடையரென்னோ ...."(44)

என்று அழைப்பதிலிருந்து அறிய முடிகிறது.

துறவு

உலக வாழ்விலிருக்கும் இன்பங்களைத் துறந்து நல்லொழுக்கங்களையும், நற்செயல்களையும் போதிக்கக் கூடியவர்கள் துறவிகளாவர். "ஐம்புலன்களையும் வென்றவராதல் இருக்க வேண்டும். துன்பத்தைக் கண்டு துவண்டு போகாமல், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் பற்பல நோன்புகளை மேற்கொண்டு ஒழுகுதல் துறவிகளுக்கே"(45) என்பர்.

கண்ணகியைத் துறவியான இளங்கோவடிகள் "போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்" எனக் கூறுகிறார். இவ்வடிவமுடைய கண்ணகி கவுந்தியடிகளின் எதிர்பட்டபோது மனமுறுகி வாடிய மேனியைப் பார்த்து,

"இறுங்கொடி நுசுப்போடு இணைந்தடி வருந்தி

....

....

***முதிராக் கிளவியின் முன் எயிறுஇலங்க*"[46]**

என்று கூறுகிறார். மூவரும் புகார் நகரை விட்டுக் கடந்த மறுகனமே கண்ணகி மதுரை மூதூர் எது? என்று கேட்கும் உலகமறியா நங்கையாக இருக்கிறாள். பெண்ணின் அறியாத் தன்மையை அறிந்து கவுந்தியடிகள் வருந்துவதில் துறவியின் பெண்மைப் பண்பு காணப்படுகிறது.

அருளறம்

துறவிகள் முதற்கண் ஆற்ற வேண்டிய அறம் அருளாகும். அருளை அன்பின் குழவி என்று கூறுவர். அன்பின் வழிப்பிறக்கும் அருள், துறவிகள் போற்றிக் காக்க வேண்டிய முதலறமாகும். இதனை வள்ளுவர்,

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள்சேர்ந்த

இன்னா உலகம் புகல்"[47]

எனக் குறிப்பிடுகிறார்.

"தன்னுயிர் போல் மண்ணுயிரையும் எண்ண வேண்டும்"[48] என்று பழமொழி குறிப்பிடுகிறது.

கவுந்தியடிகள் கோவலனையும், கண்ணகியையும் செவ்வனே கூட்டிச்

சென்று மதுரையில் அடைக்கலப் படுத்த வேண்டும் என்பதில் கருத்தாகயிருந்தார். தவத்தோடு நிற்றல், உயிர்களிடத்து அன்பு காட்டுதல், இவற்றின் வழி நடக்கும் போது நேரும் இன்னல்களை எடுத்துரைக்கும் மாந்தராகப் படைக்கப்பட்டுள்ளார்.

கவுந்தியடிகள் வழி அருளறமே சிறந்தது என்பதும் அது சமணத்திற்கு உரித்தானது என்பதும் தெளிவு படுத்தப் படுகிறது. மூவரும் மதுரையை நோக்கி புறப்படுகின்ற பொழுது அடிகளின் புறத்தோற்றத்தை,

"தோமறு கடிஞையுஞ் அவன்மே லறுவையும்
காவுந்தி யையைகைப் பீலியுங் கொண்டு
மொழிப் பொருட் டெய்வம் வழித்துணை யாகெனப்"(49)

என்று அருளறமிக்க தோற்றமாகக் கூறுகிறார் இளங்கோ.

கவுந்தியடிகள் கோவலனை நோக்கி நீயும் உன் மனைவியும் மதுரை செல்லக் காரணம் யாது? எனக் கேட்டாள். அதற்குச் சற்று தயங்கிய நிலையில் செய்த பிழையினை,

"நெறியி னீங்கியோர் நீர்மையோனாகி
நறுமலர் மேனி நடுங்குதுய செய்த
அறியாத் தேய்த் தாரிடை யுழந்து
சிறுமையுற்றேன் செய்தவத் தீர்யான்"(50)

என உரைக்கின்றான். கவுந்தியடிகள் தன் நூண்மாண் நுழைபுலம் தோன்ற இராமன், நளன் போன்றவர்களின் கதைகளைக் கூறி அவர்கள் பட்ட துன்பம் எத்தனை பெரியதென எடுத்துரைக்கின்றார். இதனில் துன்பத்திலிருந்து விடுபட வேண்டிய திறத்தைப் பண்புடன் கூறுவதில் அருள் நிறைப் பண்பு காணப்படுகிறது. பெண் துறவியாகயிருந்து

கொண்டு ஆண், பெண் இருவருக்கும் வாழ்வில் வழிகாட்டியாக இருப்பது பெண்ணின் சீறிய பண்பை உணர்த்துவதாக அமைகிறது.

கவுந்தியடிகளின் திறமும் கண்ணகியின் மாண்பும்

மனம், மெய்யை அடக்கி வாழ்வது திறம். அவற்றைத் தீய வழியில் செல்லாமல் அதை தன்னகத்தே வைத்துச் செயல்படுத்துவது மாண்பாகும். மற்றவர்களிடம் அன்பு காட்டுதல், இழி குணத்தை ஓட்டுதல், உலகத்தோடு ஒட்டுதல், இரக்கம் காட்டுதல், வாய்மை பேசுதல் ஆகியன சான்றோர்க்குரிய குண நலங்களாகும். இத் திறத்தினையும் மாண்பினையும் வலியுறுத்துவதற்குக் கவுந்தியடிகள் படைக்கப் பெற்றுள்ளாள். மதுரைக்குச் செல்கின்ற பொழுது மாதரி என்ற ஆயமுது மகள் எதிர்படுகின்றாள். கவுந்தியடிகள் அவளிடம் கோவலன், கண்ணகி இருவரையும் அடைக்கலப்படுத்தும் போது அவ்வடைக்கலத்தை மாதரி ஏற்றுக் கொள்ளும் வகையில் தாம் கற்ற கல்வி, அறிவு, அனுபவம் போன்றவற்றைப் பயன்படுத்தி அடைக்கலப் படுத்துகின்றார். கண்ணகியுடன் சில நாள்கள் பழகியவர் என்பதால் அவளுடைய பண்புகளான கற்பு மேம்பாடு, அமைதி, அடக்கம், தெய்வத் தன்மை போன்றவற்றை எடுத்துரைக்கின்றார். இச்செய்தியை,

> **"டொருமுன் றவித்தோ னோதிய ஞானத்**
> **திருமொழிக் கல்லதென் செவியகத் திறவா"**(51)

இப்பாடல் உணர்த்துகின்றது.

கண்ணகியின் மனவுறுதியை அடிகள்,

"காமனை வென்றோ னாயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னா"(52)

எனும் அடிகள் மூலம் சுட்டுகிறார். பெண்களின் மனவுறுதி எப்படிப் பட்டது என்பதைப் புலப்படுத்துகின்றாள்.

ஆயமகள் மாதரியிடம் கண்ணகியைப் பற்றி கவுந்தியடிகள்,

"கென்னோடு போந்த விளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மக ளறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் வாடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக் கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண்டிலாமல்"(53)

எனக் குறிப்பிடுகிறார். கண்ணகியின் பாதத்தைப் பூமி அறிந்ததில்லை. கற்புத் தன்மை பொருந்திய தெய்வம் போன்றுள்ளாள். இத்தெய்வம் போல் நான் கண்டதில்லை, இப்பத்தினிப் பெண்டிர் வாழும் நாட்டில் வானம் பொய்க்காது, வளம் குறையாது. கொற்றம் சிதையாது எனக் கூறுகிறார். பெண்மையின் தன்மையினை கவுந்தி உயர்த்திருப்பது ஈண்டு புலனாகும்.

கண்ணகி ஆயர்பாடியில் இருக்கும் பொழுது கோவலன் கள்வன் எனக் குற்றம் சாற்றப் பெற்றுக் கொலையுண்டான். இச்செய்தி கேட்டு வருந்தினாள் கண்ணகி. அவள் ஆயமகளிர் உள்ளிட்டோரிடம்,

"**பாய்திரை வேலிப் படுபொரு ணீயறிதி**

காய்கதிர்ச் செல்வனே கள்வனோ வென்கணவன்"(54)

எனக் கதிரவனை முன்னிறுத்தி உரைக்கிறாள். அதற்குக் கதிரவன் அல்லன் என்றுரைக்கிறது. அத்தருணம் அங்கு வந்த கவுந்தி தம் மனம் பாராட்ட, கை குவியா என்று கண்ணகியின் தன்மையைக் கண்டு வியக்கிறார். தன் கணவனைக் கள்வன் எனக் கூறியதாலே முன்னைப் பண்பிலிருந்து மாற்றம் பெறுகிறாள் கண்ணகி. இம்மாற்றத்தின் விளைவில் ஏற்பட்ட நிலையே கவுந்தியடிகளை கூறியவாறு புகழ்ந்துரைக்க வைத்த இப்புகழுரையைத் தனிமனிதப் பெண்ணியத்திற்குள் அடக்கிப்பார்க்க வாய்ப்புண்டு.

கண்ணகியின் தெய்வ நிலையைக் கூறுதல்

கண்ணகி தன் கணவன் கள்வன் இல்லையென்று மெய்ப்பித்த சில நாட்களுக்குப்பின் இருவரும் விண்ணகம் செல்கின்றனர். அறத்தெய்வமாயிருந்து மறத்தெய்வமாய் மாறி குன்றக் குறவர்களுக்குக் குல தெய்வமாய் காட்சி தருகிறாள். அக் கண்ணகியைக் குறவர்கள்,

"........... **வானவரும் நெடுமாரி மலர் பொழிந்து**

இவள் போலும் நம்குலக்கோர் இருந்தெய்வம் இல்லை"(55)

எனக் கூறுகின்றார்கள். தெய்வத்தை மலையாகவும், இயற்கையாகவும், முருகனாகவும் கண்ட குறவர்கள் கண்ணகியைத் தெய்மாக வழிபட்டனர். மனித வடிவில் வந்து வானவர் போன்ற விண்ணகம் சென்றாள். இப்பேற்பட்ட தெய்வம் போல் தம்குலத்திற்கு ஒரு தெய்வமில்லையே என வருத்தப்பட்டார்கள். இச்செய்தியை கவுந்தியடிகள் வழி கண்ணகியின் பெண்மைப் பண்பை போற்றுவதாகக் கூறப்பட்டுள்ளது.

மாதரி

மாதரி ஆயர் குலத்தைச் சார்ந்த வைணவப் பெண். மதுரைப் புறநகரில் பூங்கண் இயக்கியப் பால்மடை கொடுத்து வருகின்ற குணங்கள் கொண்டவள். ஒரு நாள் அவ்வேலையை முடித்துவிட்டு வரும் வழியில் முதுமகளாகிய மாதரி, கவுந்தியடிகளைக் கண்டு அடி தொழுதாள். அவள் வைணவப் பெண்ணாகயிருந்தாலும் மதக் காழ்ப்பற்றவள். அறவோரை வணங்க வேண்டுமென்ற கொள்கையுடையவள். மாதரி வணங்கும் போது கவுந்தி அவளைப் பற்றி மனதில், தீதிலள், செவ்வியள், அணியளென எண்ணுகிறாள். இவளிடம் கண்ணகியை அடைக்கலப்படுத்த கவுந்தியடிகளின் மனம் முடிவு செய்கிறது.

பண்புகள்

கண்ணகியை, மாதரி அடைக்கலமேற்றது செல்வந்தர் மகளென்பதினாலல்ல. அது எனக்குப் பெருமையுமன்று. தவத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் கவுந்தியின் கூற்றிற்கிணங்க அடைக்கலம் செய்கிறேன் என்கிறாள். இவற்றில் தவத்திற்கும், துறவுக்கும் அவள் கொடுத்துள்ள உயர்வை உணரமுடிகிறது.

பேணுதல்

ஒருவரை ஒழுக்க நெறியுடன் பேணுவது சிறந்த பண்பாகும். பெண்ணென்றாலே பெண்மைக்குரிய இயல்புகள் உடையவளென்பது பொருள். இதனைத் தொல்காப்பியம்,

> **“செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்**
> **அறிவும் அருமையும் பெண்பாலான”**(56)

எனக் கூறும். இதில் பேணுதல் என்பதை ஒருவகைப் பண்பாகாக் குறிப்பிடுகிறார்.

மாதரியிடம் கோவலன், கண்ணகியை எவ்வாறு பேணுதல் வேண்டும் என்பதைக் கவுந்தியடிகள் கூறியதை,

“மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கய னெடுங்க ணஞ்சனந் தீட்டிக்
தேமென் கூந்தள் சின்மலர் பெய்து
தூமடி யுடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமுங் காவது மாயிழை தனக்குத்
தாயு நீயே யாகித் தாங்கீங்”(57)

எனும் அடிகள் சுட்டுகின்றன. கண்ணகியின் மனம் நெகிழும் தன்மையுடையதென்றும், இதனைப் புரிந்து கொண்டு ஒரு செவிலியாக, நற்றாயாக நடக்க வேண்டுமென்றும் கூறுகிறார். மாதரியின் செயற்பாடுகள் பெண்மையைப் போற்றுவதாகவும், பெண்ணியத்திற்கு எடுத்துக்காட்டாகவும் இருக்க வேண்டுமென்பதை இக் கூற்று வழி அறியமுடிகிறது.

கண்ணகியின் சிறப்பை மாதரி கூறுதல்

மாதிரியைக் கண்ணகிக்குத் தாயாகயிருந்து செயல்பட வேண்டுமென்று கவுந்தியடிகள் கூறினார். கண்ணகி நன்னீராடி அணிகலன்களை அணிந்து பேரழகு கொண்டவளாகக் காட்சி தருகிறாள். அதனைக் கண்டு மாதரி வியந்து,

"**மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி**

....

நோதக வுண்டோ நும்மகனர்க்கினி"(58)

என்று குறிப்பிடுகிறாள். கோவலனுக்கு ஒரு தீங்கும் வாராது என்பதைக் கவுந்தியடிகள் இருவரின் மனத்தை வைத்துக் கூறியதை எடுத்துக் கொண்டு மாதரி ஆறுதல் கூறினாள். இதன் வழி மாதரியின் நுண்ணறிவும், பெண்மைத் தன்மையும் வெளிப்படுகின்றன.

பண்பு

பெண்களின் செயற்பாடுகள், பண்புகள், நற் குணங்கள் போன்றவை அவர்களின் உயர்வுக்கு வழிவகுக்கின்றன. மாதரியின் பண்புகள் சமயத்தை அடிப்படையாகக் கொண்டவை. மாதரி இடைக்குல மடந்தையென்பதால் திருமாலை வணங்குகின்றாள். கோவலன், கண்ணகி இருவரும் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் வெவ்வேறு சமயமாகயிருந்தாலும் மாதரி இருவரையும் அழைத்து விருந்து கொடுத்தும், தனி மனையமைத்தும், தன் மகளைத் துணைக்கு வைத்தும் சிறப்புப் செய்கின்றாள். பக்கத்திலிருக்கும் ஆயர்குல மகளிரை அழைத்துப் பணிகள் சிலவற்றை இருவருக்கும் செய்து கொடுக்குமாறு பணிக்கிறாள். ஆயர்குல மகளிரும் அவ்வாறே தங்களிடமிருக்கும் பொருள்களைக் கொடுத்து உதவியதை,

"**மடைக்கலந் தன்னொடு மாண்புடை மரபிற்**

கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காய்

....

சாலி யரிசி தம்மாற் பயனொடு"(59)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. மாதரி வேறு சமயக் கொள்கையைப் பின்பற்றுகின்றவள் என்றாலும் வேற்று சமயத்தைச் சார்ந்த இருவரையும் தாயைப் போல பேணிக் காக்கின்றாள். இதன் வழி சமயப் பொறையற்றவள் என்ற பண்பு வெளிப்படுகிறது. காப்பியங்கள் பெண்களைச் சிறப்பிப்பதோடு சமயத்தைத் தழுவி வாழுகின்ற பெண்களை விழிப்புணர்வு மிக்க பெண்களாகவும் மாற்றும் முயற்சி இங்குக் காணப்படுகிறது.

மாதரி, கண்ணகியைத் தெய்வமாகக் கருதுதல்

"கண்ணனுக்கு யமுனை ஆற்றில் வந்த தீங்கொன்றை நப்பின்னை எவ்வாறு தன் துயர் காணாது தீர்த்தாளோ?" அதுபோலக் கண்ணகி மாதரி உதவியுடன் விரல் சிவப்பாகும் வரைச் சமைத்து வாழைக் குறுத்திட்டு உணவு பறிமாறிய காட்சியைக் காணுகிறாள். கண்ணகி தன் கணவன் துயரைப் போக்குவதைக் கண்டு மாதரி,

> "**தொழுனை யாற்றினுட் டுமணி வண்ணனை**
>
> **விழுமந் தீர்த்த விளங்குக் கொல்லென**"(60)

என்று கூறுகிறாள். கண்ணகியின் செயலையும், கவுந்தியடிகள் கூறிய கூற்றையும் நினைவிற் கொண்டு கண்ணகியைத் தெய்வமாகவே காணுகிறாள். ஒரு பெண்ணை மற்றொரு பெண் தெய்வ நிலையில் வைத்துப் பார்ப்பதில் பெண்மையின் பண்பு, அதனால் ஏற்படும் சிறப்பு போன்றவற்றை அறிய முடிகிறது. அக் காலகட்டத்தில் பெண்ணிற்குக் கொடுத்துள்ள மதிப்பும் அதைப் பெண்கள் எவ்வாறு பயன்படுத்தியுள்ளார்கள் என்ற பெண்ணிய நிலையும் இதில் வெளிப்படுகின்றன.

மாதரியின் சிறப்பு

சிலம்பு விற்க மதுரை நகருக்குள் செல்லும் கோவலன் பொற்கொல்லன் சூழ்ச்சியால் இறக்கின்றான். இதையறிந்த மாதரியின் மனம் வேதனைக்குள்ளாகியது. கவுந்தியடிகளும் தாய்க்குத் தாயாக இருப்பாயாக என்று கூறிவிட்டுச் சென்றுள்ளாரே. இவர்களை எப்படி ஒப்படைப்பேன், கிடைத்தற்கரிய பொருள் கிடைத்தும் அதன் மதிப்பு அறிதற்கு முன்னர் இழந்து விட்டேனே! என்று புலம்பி இவர்களைக் காக்க முடியவில்லையே என்று தீ மூட்டி இறக்கின்றாள். ஒரு பெண்ணுக்கு அடைக்கலப் பண்பு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மாதரி வழி ஆசிரியர் உணர்த்துகிறார்.

மறுபிறப்பு

மாதரி கண்ணகியிடம் கொண்ட பற்றாலும், வெளிஉருவத் தோற்றக் காட்சியைப் பெற்றதாலும் இறந்த பின்பு சேடங் குடும்பிக்கு மகளாகப் பிறக்கிறாள். கண்ணகியின் சிலை நடுவிழா நடக்கிறது. அவ்விழாவிற்கு அரட்டன் செட்டிக்கு மகளிராய் பிறந்த கோவலன் தாயாரும், கண்ணகி தாயாரும் குழந்தை வடிவில் வந்து நின்றார்கள். அவ்வேளையில் தேவந்திமேல் தெய்வம் வந்து ஆடியது. பாசண்டச் சாத்தான் என்பவன் மாடல மறையோனிடம் கட்டளையிடுகிறான். உடனே மறையோன் கமண்டல நீரைத் தருகிறான். அந்நீர் குழந்தை வடிவிலிருக்கும் மூவர் மூதும் தெளிக்கப்படுகிறது. அப்பொழுது அவர்கள் தம் பழம்பிறப்பை உணர்கின்றார்கள். இதனை,

"வருபுனல் வையை வான்றுறைப் பெயர்ந்தேன்
உருகெழு மூதூ ரூர்க்குறு மாக்களின்

வந்தேன் கேட்டேன் மனையிற் றாணேன்

எந்தா யிளையா யெங்கொளித் தாயோ"[61]

எனும் அடிகள் நவிலும். மாதரி இறந்து மறுபிறப்பினை அடைவதன் வழி பெண்கள் தங்கள் குணத்தால், செயலால், சிறந்து விளங்கினால் அவர்களுக்கு மறுபிறப்புண்டு என்ற சமயக் கோட்பாடு சுட்டப் பெறுகிறது. பெண்கள் இவ்வாறு விளங்க வேண்டும் என்ற பெண்ணிய நோக்கும் வலியுறுத்தப்படுகிறது.

வயந்தமாலை

இவள் மாதவியின் தோழி. பல் வகைகளில் மாதவிக்குத் துணையாக வாழ்ந்தவள். கோவலனிடம் மாதவியின் இயல்புகளைக் கூறியவள். கோவலன் கானல்வரி பாடிய வேளையில் மாதவியைப் பிரிகின்றான். பிரிவின் துயரால் மாதவி வருந்திக் கடிதம் வரைகிறாள். வரைந்த கடிதத்தை வயந்தமாலை வாயிலாகக் கோவலனுக்கு அனுப்புகிறாள். கடிதம் பெற்றுச் சென்ற வயந்தமாலை தோல்வியுடன் திரும்புகிறாள். இந்நிகழ்ச்சி நிகழ்ந்தேறக் காரணமாக அமைந்த கோவலனும், மாதவியும் இந்நிகழ்ச்சிக்குத் துணை நின்ற வயந்தமாலையும் கடலாடு காதையில் தோன்றுகின்றனர். அதனை,

"வருந்து பூ நின்ற வசந்த மாலைகைத்

திருந்து கோல் நல்லியாழ் செவ்வனம் வாங்கிக்

கோவலன் தன்னெடுங் கொள்கையினி ருந்தனள்

மாமலர் நெடுங்கண் மாதவி தானென"[62]

என்ற பகுதி மெய்ப்பிக்கும். வயந்தமாலை மாதவிக்கு யாழ் எடுத்துக் கொடுக்கும் பணிப் பெண்ணாக ஈண்டு விளங்குவது கண்கூடு.

இவ்விருவரின் உறவுகளை மணிமேகலை,

"தத்தரி நெடுங்கண் தம்மகள் தோழி
வயந்தமாலை"(63)

எனச் சுட்டும்.

மாதவியின் தாய் சித்திராபதி பயங்கெழு மாநகரில் எழுந்த அலரை மாதவியிடம் உரைக்க வயந்தமாலையைப் பயன்படுத்துவதன் வாயிலாக இவர்களின் தோழமை புலனாகும். மாதவியையும் வயந்த மாலையையும் "இருதலைப் புள்ளின் ஓர் உயிர்"(64) என்பர்.

நல்லழகும், சொல்வன்மையுடைய வயந்தமாலை காப்பியக் களத்தில் தோன்றும் போதெல்லாம் வருத்தம் பொருந்தியவளாகவே வெளிப்படுகிறாள். இதனை,

"புன்னை நிழற் புதுமணற் பரப்பில்
ஓவிய எழினி ஆழவுடன் போக்கி
விதானித்துப் படுத்த வெண்கால் அமளிமிசை
விருந்து பூ நின்ற வயந்தமாலை"(65)

என்று குறிப்பிடுகிறார் இளங்கோ. பூவையுடைய கையதாள் சிறையாகக் சூழப்பட்ட நடுவனுளாகிய புன்னை நிழலில் அழுக்கற்ற மணல் பரந்த நிலத்தே சித்திரத் திரையை வளர்த்து மேற்கட்டுங் கட்டியிடப்பட்ட வெண்கால் அமரிமிசை வருந்தி நின்றாள் வயந்தமாலை.

தலைவியின் உயிர்த் தோழியாகச் செயற்படுபவள் தோழி. இவள் தலைவியின் துன்பத்தினைத் தன் துன்பமாக ஏற்றொழுகுபவள். தலைவியை இல்லற நெறிக்குள் செம்மைப்படுத்த பல்லாற்றானும் துணை நிற்பவள். இவளின் இயல்பை,

"யான்நின் கொடுமை கூற நினைபு ஆங்கு

இனையில் வாழி தோழி நத்துறந்தவர்

....

துஞ்சா துறைவி இவளது வந்ததுவே"(66)

என்ற அகப்பாடல் உணர்த்தும்.

மாதவி எழுதிய கடிதத்தைக் கோவலனிடம் கொடுக்கையில் 'மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்' என்று கூறுகிறான். அதுகேட்ட வயந்தமாலை,

"முயற்சிக் காலத்து அகற்பட நாடிப்

புணர்தல் ஆற்றலும் அவள் வாயின"(67)

என்று ஊடலும், கூடலும் காதலற்குப் பெரிதென்று எனத் தோழிக்கு இயைபாகக் கூறுவது இங்குப் புலனாகும். ஒரு பெண் துன்பத்தில் இருக்கும் வேளையில் தோழியானவள் அத்துன்பத்தைப் போக்க எடுக்கும் முயற்சிகள் பெண்ணிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளன.

வயந்தமாலை கோவலனை விரும்புதல்

கோவலனுடைய பண்புகளையும், கலை ஈடுபாட்டையும் பார்த்து தன் மனத்தைப் பறிகொடுத்தவள்; அதைக் கோவலனிடம் கூற இயலவில்லை. கோவலன் மாதவியுடன் ஊடலோடு இருப்பதைக் கண்டு அவள் மனம் தாங்க முடியவில்லையென்பதை,

"மண்தேய்ந்த புகழினள் மதிமுக மடவர்தம்

பிண் தேய்த்த மொழியினார் அயர்த்தூர்ப் பாராட்டிக்

கண்டேத்தும் செவ்வேள்"(68)

எனக் குறிப்பிடுகிறாள். நல்லழகு, நற்பண்புகளைக் கொண்ட ஆடவனைக் கண்டால் பெண் காதல் வயப்படுவது இயல்பு. அந்த ஆடவன் வேறொரு பெண்ணை விரும்பி ஊடலுடன் இருக்கிறான் என்றால் அந்தப் பெண்ணின் துன்பத்தைப் போக்க வேண்டும் என்ற எண்ணம் ஆடவனை விரும்பும் பெண்ணிடம் இருக்கிறது. இப்பண்பு பெண்ணின் உணர்வுக்குப் பெண் மதிப்பு கொடுத்தலையும், தனிமனித பெண்ணியத்திற்கு வித்தாகவும் அமைந்துள்ளதைக் காட்டுகின்றது.

கோவலன் ஊடல் காரணமாக மாதவியை விட்டுப் பிரிகின்றான். மாதவி குற்றமற்றவள் என்பதை மெய்ப்பிக்கும் மாந்தராக வயந்தமாலை படைக்கப்பட்டுள்ளாள். மாதவி எழுதிய கடிதத்தைக் கோவலனிடம் வயந்தமாலை கொடுக்கையில் அதனைப் பெற்று படித்த பின்பு,

> **“தன் தீதிலன் எனத் தளர்ச்சி நீங்கி**
> **என் தீது என்றே”**(69)

என்று கூறி அவளைக் குற்றமற்றவளாக அறிகிறான். இங்ஙனம் மாதவி மாசற்றவள் என்றும் அவன் பிரிந்ததற்கு அவனே பொறுப்பாவான் என்றும் வயந்தமாலையைத் தூதாக வைத்து விளக்குகிறார் இளங்கோவடிகள்.

காப்பியத்தில் மாதவியின் தோழியாகயிருந்து தோழிக்குரிய பண்பு பிறழாமல் மாதவி குற்றமற்றவள் என்பதை நிரூபிக்கும் மாந்தராகவும் உள்ளார். பெண் துன்ப நிலையில் பெண்ணே உதவி செய்தல் பெண்மைப் பண்பாகும். இதன் வாயிலாக அக்காலப் பெண்கள் பற்றி பெண்ணிய நோக்குடன் கூறியிருப்பது புலனாகிறது.

சாலினி

இவள் ஒரு வேட்டுவப் பெண். தெய்வத்திற்கு வழிபாடு செய்யும் உரிமையுடையவள். இவள்மேல் தெய்வமுற்று ஐயைக் கோட்டத்தில் ஆடுகிறாள். அப்பொழுது கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள் மூவரும் அங்கு வருகின்றார்கள். முன்பின் அறியாத கண்ணகியைப் பார்த்த சாலினி,

"இவளோ
கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
தொருமா மணியா யுலகிற் கோங்கிய
திருமா மணியெனத் தெய்வமுற்றுரைப்ப"[70]

என்று புகழ்ந்துரைக்கின்றாள். ஒரு பெண் மீது தெய்வம் ஏறிப் பேசுதலை அக்கால மக்கள் ஏற்றுப் பாராட்டி மகிழ்ந்தனர். கொற்றவை, சாலினியின் வழியாகக் கண்ணகிக்குப் பின்னால் நடக்கப் போவதை முன் கூட்டிக் கூறுவதை அறியமுடிகிறது.

இச்சொற்களைக் கேட்ட கண்ணகி ஒன்றுமறியாத பாவைபோல் இருந்தாள். இதனைக் கண்ட சாலினி வியப்புற்றாள். அவ்வேளையில் சாலினியைக் கண்ணகி 'மூதறிவாட்டி' என்றும் குறிப்பிடுகிறாள். இதன்வழி சாலினியின் நுண்ணறிவு வெளிப்படுகிறது. கொற்றவையின் தோற்றம், தெய்வத்தின் நம்பிக்கை, வேட்டுவர் முறை, அவர்கள் பயன்படுத்தும் அணிகலன்கள் ஆகியவை சாலினி வாயிலாக வெளிப்படுகின்றன. கண்ணகி வாழ்க்கைக்காக மதுரை நோக்கிச் செல்லும் போது உதவும் துணைமை மாந்தராகப் படைக்கப்பட்டுள்ளாள். வணிகக் குடியில் பிறந்த

பெண்ணைத் தெய்வ நிலையில் வைத்துப் போற்றப்படுவதை ஆசிரியர் படைத்துள்ளார். இக் கூற்றின் வாயிலாகப் பெண்மைக்குக் கொடுத்துள்ள தன்மை, பெண்ணியப் போக்கு போன்றவை புலப்படுகின்றன.

கோப்பெருந்தேவி

தென்னவன் பாண்டிய நெடுஞ்செழியனின் காதல் மனைவி கோப்பெருந்தேவி. அக்காலத்தில் கணவன் இறந்தவுடன் மனைவியும் இறத்தல் தலைக்கற்பாகப் போற்றப்பட்ட கோப்பெருந்தேவி அச்செயலுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவள். தலைக்கற்புச் செயலால் காப்பியத் தலைவிக்கு நிகராகக் கருதப்படுபவள். கற்புடைய பெண்டிர் தெய்வம் தொழாமல் கொழுநனைத் தொழுவார் எனத் தமிழ்மறை கூறுகிறது.

கோவலன், கண்ணகி இருவருக்காக உயிர்துறந்த மாதரி போன்று தன் கணவனுக்காக உயிர் துறந்தவள். இருவரையும் "ஒன்றில் சாலை அன்றில் போல" எனக்கூறுவர்.

கோப்பெருந்தேவியின் ஊடல்

பாண்டிய மன்னன் ஆடல் மகளிர் மேல் கலையுணர்வு ஈடுபாட்டுடன் காணப்பட்டான். இதனைக் கண்ட தேவி பொறுமை தாங்காமல் எனக்குத் தலை வலிக்கிறது என்று கூறி அவ்விடத்தை விட்டு அகலுவதை,

"கூடன் மகளி ராடற் தோற்றமும்
பாடற்பகுதியும் பண்ணின் பயன்களும்
....
....

கோப்பெருந்தேவி கோயி னோக்கிக்

காப்புடை வாயிற் கடைகா ணகவையின்"(71)

எனும் அடிகள் குறிப்பிடுகின்றன. தன்னை மறந்து ஆடல் மகளிரின் மேல் நாட்டம் கொண்ட அரசன் மீது கோபப்படாமல் தலைவலிக்கிறது என்று அவள் செல்வது அவையடக்கத்தையும் மீறி நடந்தால் தன் கணவனுக்கு இழுக்கென்று உணர்ந்து செயல்பட்டாள் என்பதைக் காட்டுகிறது. இச்செயல் கணவன் மீது அவள் வைத்திருந்த ஈடுபாட்டையும் கணவனை மதித்தல் என்ற பெண்மைப் பண்பையும் காட்டுகிறது.

கோப்பெருந்தேவியின் கனவு

கனவு மக்களின் நம்பிக்கையில் ஒன்று. நிறைவேறாத எண்ணங்களே பகலில் கனவு என்பர். இரவில் காணும் கனவு பழிக்குமென்ற கருத்துமுண்டு. பொற்கொல்லன் செய்த தவறால் கோவலன் கொலை செய்யப்படுகிறான். கோவலன் இறப்பதற்கு மன்னன் கூறிய தண்டனையும் ஒரு காரணமாகும். அவன் இறந்த அன்று இரவில் தேவியின் கனவில் கொடிய நிகழ்ச்சிகள் தோன்றுவதை,

"**குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும்**

கடைமணி யின்குரல் காண்பென்கா ணெல்லா

....

....

கடுங்கதிர் மீனிவை காண்பெண்கா ணெல்லா

கருப்பம் செங்கோலும் வெண்குடையும்

செறிநிலத்து மறிந்து விழ்தரும்

....

வருவதோர் துன்பமுண்டு

மன்னவற்கியா முரைத்துமென"(72)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

இக்கனவைக் கேட்ட மற்ற மகளிரும் மக்களுக்கும், மதுரைக்கும் என்ன தீங்கு நேருமோயென அஞ்சினர். அவ்வாறு எதுவும் நடக்காமலிருக்க மகளிர் அனைவரும்,

" .... **குழையாண்**

ஆடி ஏந்தினர் கலன் ஏற்றினர் அவிர்ந்து விளங்கும்

இயர்பலர் வாழ்த்திட

நரைவிரை இய நறுங் கூந்தலர் உரைவிரை"(73)

என குறிப்பிடுகின்றனர். மகளிர் கைநீட்டி விளக்கேற்றி இறைவனை வேண்டினார்கள். கனவுக்குப் பெண்கள் தரும் முக்கியத்துவம் இங்கு வெளிப்படுகிறது. பெண்கள் நாட்டிற்கும் நாட்டுமக்களுக்கும் தீங்கு வராமல் எடுக்கும் முயற்சிகளாலும் பெண்களின் பண்புகளாலும் உயர்வு பெறுகின்றனர்.

கோப்பெருந்தேவி தன் கணவனுடன் உயிர் துறத்தல்

தேவியும், மன்னனும் இருபாற்பட்ட குணத்திலிருக்கும் வேளையில் வாயிற் காவலன் கண்ணகியின் வரவைக் கூறுகிறான். கண்ணகியைக் கண்ட அரசன் நீ யார்? என்றான். அதற்கு அவள்,

"**தேரா மன்னா செப்புவதுடையேன்**"(74)

நான் கூறுவதைக் கேள். என் பெயர் கண்ணகி. என் கணவன்

குற்றமற்றவன் என்று மன்னனிடம் கூறி ஆதாரமாகக் கையில் கொண்டு வந்த சிலம்பை உடைத்து மெய்ப்பிக்கின்றாள். அதிலிருந்து பறந்த மாணிக்கப் பரல்களால் மன்னன் நீதி தவறி விட்டோமென்று உயிர் துறக்கிறான். தேவி கண்ணகியைப் பார்த்து நீயும் கணவனை இழந்து விட்டாய், நானும் இழந்துவிட்டேன். இதற்கு எதுவும் பரிகாரமாகாது. அதனால் உன் திருவடியை வணங்கி உயிர் விடுகிறேன் என்று உயிர் துறக்கின்றாள். இந்நிகழ்வு கற்பு நிலையில் முதன்மைக் கற்பாகப் போற்றப்படுகிறது.

கற்பின் திறம்

தமிழ்க் கலாச்சாரத்தில் பெண்களுக்குரிய உயர் பண்புகளில் முதலாவதாகப் போற்றப்படுவது கற்பு. இது மனைவி கணவனிடத்துச் செலுத்தும் பற்றுமாறா உறுதிப்பாடு என்ற நிலையில் எடுத்தாளப்பட்டுள்ளது. சங்க இலக்கியப் புலவரான கபிலர், சோழன் நலங்கிள்ளியை வஞ்சினம் கூறும்போது,

“தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயங்கிடை குழைக என்காரே”[(75)]

என நவில்கிறார். அக்காலத்துப் பெண்ணின் உயரிய கற்பொழுக்கத்தை இதனால் உணரமுடியும். “கற்புடைய பெண்கள் கணவன் இறந்தவுடன் உயிர் துறக்க வேண்டுமென்றும், அவ்வாறு உயிர் துறந்தவர்கள் சுவர்க்கம் புகுவார்கள் என்ற நம்பிக்கையும் இருந்தது”[(76)] என்பர்.

இக்கூற்றிற்கிணங்க கண்ணகி தன் கணவன் குற்றமற்றவன் என்று நிலைநாட்டியிருக்கும் வேளையில் பாண்டிமாதேவி, பக்கத்திலிருந்த

கணவன் பாண்டிய மன்னன் இறந்துபட்டதைப் பார்த்து உடனே உயிர் துறக்கிறாள். இந்நிகழ்வை,

"மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந்தேவி குலைந்தன ணடுங்கிக்
....
கண்டளவே தோற்றானக் காரிகை தன் சொற்செவியில்
உண்டளவே தோற்றானுயிர்"(77)

என வெளிப்படுத்துகிறது. இவர்களின் வாயிலாகப் பெண்கள் கற்பைப் போற்றியமையை அறியமுடிகிறது. கற்பு என்ற நெறி பெண்களின் ஒழுக்கத்திற்குக் கவசமாக விளங்கியுள்ளதை ஈண்டு உணரமுடியும்.

வேண்மாள்

இவள் சேரன் செங்குட்டுவனின் அரசமாதேவியாவாள். செங்குட்டுவனும், வேண்மாளும் பல திறப்பட்ட பூக்களையுடைய காடுகள் சூழ்ந்த பெரியாற்றங்கரைக்குச் சென்றார்கள். இம்மன்னன் நாட்டு வளம் பார்க்கச் செல்லும் போது கண்ணகி விண்ணகம் சென்ற கதையைக் குறவர்கள் மன்னனிடம்,

"கான வேங்கைக் கீழோர் காரிகை
தான் முலை யிழந்து தனித்துயர் எய்தி
வானவர் போற்ற மன்னொருங்கடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்"(78)

எனக் கூறினர். அதுகேட்ட அரசன் சோழ நாட்டில் பிறந்த கண்ணகிக்கு இமயத்தில் கல்லெடுத்து அவளுருவம் செய்து கோயில் எழுப்பித்தான்.

வேண்மாள், கண்ணகி, கோப்பெருந்தேவி கற்பு

குன்றக் குறவர்கள் செங்குட்டுவனிடம் கண்ணகி, கோப்பெருந்தேவி வரலாற்றைக் கூறுகின்றனர். செங்குட்டுவன், வேண்மாளிடம் இருவரில் யார் மேம்பட்டவர்கள்? என்று கேட்கிறான். அதற்கு வேண்மாள்,

> **"உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினம்**
> **செயிருடன் வந்த இச்செயிழை தன்னினுப்ப**
> **நன்னுதல் வியக்கும் நலத்தொரியா ரென**
> **மன்னவன் உரைப்ப"(79)**

என்று கூறுகிறாள். கணவன் இறந்த பண்பு தன்னுயிர் நீக்கும் பண்பு தனக்குமுண்டு. அது கற்புடைய பெண்டிரின் செயலுமாகும். பாண்டிமாதேவி செய்தது எளிய செயலாக இருந்தாலும் வானத்துப் பெருமகள் என்பதில் ஐயமில்லை. என் போன்றோரும், பாண்டிமாதேவியும் எம்முயிர் கொடுத்து கணவன் நெறி காத்தவர்கள். அவ்வாறு கணவன் இறந்தவுடன் கண்ணகி செய்யாது கடுஞ்சினம் கொண்டு என் கணவன் கள்வன் அல்ல என்று நிலைநாட்டி பின்பு கணவனிடம் விண்ணகத்தில் கை கூடுவேன் என்று கூறும் உறுதிப்பாடு மேன்மையுடையது. அதை நிறைவேற்றி கணவனுடன் விண்ணகம் சென்றவள். இதனால் அவள் எம்மிலும் மேம்பட்டவள் என்று கூறுகிறாள்.

இச்செய்தி வழி வேண்மாள் கண்ணகியைப் பத்தினிப் பெண்டியருள் ஒருத்தியாகக் கருதாமல் பத்தினியர் வழிபாட்டிற்குரிய கடவுளாகப் போற்ற வேண்டுமென்று கூறுகிறாள். அவ்வாறு கூறுவதால் வேண்மாளுக்கு அமைந்திருந்த கற்பின் திறமும், அறிவின் அழகும், பெண்மைச் சிறப்பும் வெளிப்படுகின்றன.

ஆதிமந்தி

கற்பென்பது பெண்களுக்குரிய மாண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. "தலைவனைக் கற்புடைய மனைவியின் கணவனென்று பாராட்டும் முறை இருந்திருக்கிறது. அக வாழ்வில் ஒருவனின் பெறுதற்கரிய பேறு கற்புடைய மனைவியைப் பெறுவதுதான் என்று ஒரு பெண்ணின் தந்தை பாராட்டுகின்ற போது மனைவியின் கற்பில் கணவன் சிறப்பதும், பெண்மையை முன்மதிக்கும் போக்கு தாய்வழிச் சமுதாய நிலையின் எச்சத்தைக் காட்டி நிற்கிறது"(80) என்பர். இக்கருத்திற்கேற்ப ஆதிமந்தி திகழ்கிறாள். இவள் பல்புகழ் நிலை நிறுத்திய கரிகால் வளவனின் மகளாவாள். வஞ்சி நகரத்துத் தலைவனான ஆட்டனத்தியைக் கணவனாகக் கொண்டவள்.

ஒருமுறை ஆட்டனத்தியும், ஆதிமந்தியும் புனலாடும் போது காவிரியாற்றில் பெரு வெள்ளம் வந்து ஆட்டனத்தியை இழுத்துச் சென்றது. அக்கரையில் தொடர்ந்தோடி இறைவனைப் பார்த்து மலையொத்த தோள்களையுடைய எம்பெருமானே என்று வணங்குகிறாள். அவள் அழுது புலம்பியதைக் கேட்ட வெள்ளம் அவளது கற்பின் திறத்தையறிந்து ஆட்டனத்தியைக் கரைசேர்க்கிறது. அவள், அவனைத் தழுவிக் கொண்டு திரும்பி வந்தாள். இதனை,

> "**மன்னன் கரிகால் வளவன் வஞ்சிக் கோன் பின்னொறு**
> **தன்னைப் புனல் கொள்ளத் தான் புனலின்**
> **கன்னாவில் தோளாயோ என்னக் கடல் வந்து**
> **முன்னிறுத்திக் கொடிபோலப் போதந்தாள்; மன்னி**"(81)

எனும் அடிகள் புலப்படுத்தும்.

கண்ணகி, ஆதிமந்தியைப் பற்றிக் கூறுதல்

புகார் நகரச் சிறந்த பெண்மணிகளின் வரிசையில் ஆதிமந்தியைப் பற்றியும் கண்ணகி கூறுகிறாள். காப்பியத் தலைவியை மட்டும் கற்புக்கு எடுத்துக்காட்டாய் கூறுவதை வழக்கில் காணுகிறோம். கற்பில் சிறந்த கண்ணகியே ஆதிமந்தி போன்ற பெண்மணிகளின் சிறப்பைக் கூறும் வகையில் பெண்மைப் பண்பையும், பெண்ணியத்தை வளர்க்கும் நிலையையும் அறிய முடிகிறது.

கூனி

கம்பராமாயணத்தின் கதைத் திருப்பத்திற்கு மந்தரை எனும் கூனி போல சிலம்பில் கதைத் திருப்பத்திற்குக் காரணமானவள். பசும்பொன் மாலையைத் தெருவிற்குக் கொண்டுவந்து கோவலனிடம் விற்றவள். கோவலன் கண்ணகியை விட்டு மாதவியிடம் வாழத் தொடங்குவது இந்நிகழ்வுக்குப் பின்புதான். இச் செய்தியை,

"வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை
மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென
மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகிற்
பகர்வனர் போல் வதோர் பான்மையா னிறுத்த
மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன் னொடு
மணமனை புக்கு"(82)

எனும் பகுதி காட்டுகிறது. கூனி மாதவி கொடுத்த மாலையைக் கோவலனிடம் விற்று மாதவியுடன் வாழ்க்கை தொடங்குவதற்குக்

காரணமான திருப்புமுனைப் பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளாள். பெண்ணின் இன்ப, துன்பங்களில் பங்கெடுத்துப் பெண்மையைப் போற்றுதற்குக் காரணமாய் இருந்துள்ளாள் என்பதும் புலனாகிறது.

சுதமதி

சுதமதி சம்பை நகரத்துக் கௌசிகன் எனும் பார்ப்பனனின் மகள். இளமையிலேயே தாயை இழந்து, தந்தையினால் வளர்க்கப்பட்டவள். ஒருமுறை சோலையில் தனிமையாக இருக்கும் போது மருத வேகனென்று அழைக்கப்படும் விஞ்சையனால் கவர்ந்து சென்று, கற்பிழந்து காவிரிப்பூம்பட்டினத்தை விட்டு வெளியேறியவள். பின்பு விஞ்சையன் சுதமதியைத் தேடி அழைகின்றான். அவ்வாறு தேடுகின்ற பொழுது பசு ஒன்று அவனை முட்டி வயிற்றைக் கிழித்து குடலைச் சரித்தது. அந்நிலையில் அவனைச் சுதமதி ஆதரித்தாள். அதனைச் சமணர் கூட்டம் வருந்தி மறுத்தது. அவர்களுடன் சேர்ந்து சுதமதியும் வருந்தமுற்றாள். சங்கத் தருமனென்னும் புத்த முனிவரால் விஞ்சையன் ஆதரிக்கப் பெற்று உடல் நலமாகி புத்தமதத்தைத் தழுவினான். இவள் அறத்தைத் தழுவி மாதவியுடன் இருந்ததோடு மட்டுமல்லாமல் மணிமேகலைக்கும் தோழியாக இருந்தாள்.

பண்புகள்

சுதமதி சொல்வன்மையும், இடமறிந்தொழுகும் தன்மைமுடையவள். மணிமேகலை மலர்வனத்திற்குத் தனியாகச் செல்வதைக் கண்ட மாதவி சுதமதியை துணைக்கு அனுப்புகிறாள். அப்போது சுதமதியிடம் மணிமேகலையை எந்த ஆடவர் கண்களில் படாமல் இருப்பதற்கு உன்னை நான் அனுப்புகிறேன். ஆடவர் கண்களில் அழகுடன் இருக்கும்

பெண்கள் காணப்பட்டாள் துன்பம் நேரிடும் என்றும் அறிவுறுத்துகிறாள். அதன்படி சுதமதி மணிமேகலைக்கு அடைக்கலம் காப்பவளாகவும், தோழியாகவும் இருக்கிறாள். இதனை,

"ஆடவர் கண்டால் அகறலு முண்போ பேடியரன்றோ
பெற்றியின் நின்றிடில்"(83)

என்ற அடிகள் உணர்த்தும். இதிலிருந்து பெண்கள் சமுதாயத்தில் எவ்வாறு ஒருவருக்கொருவர் துணைபுரிந்து வாழவேண்டும் என்ற பண்பைச் சுதமதி வழி உணர்த்துவது புலனாகும்.

நா நலம் காத்தல்

மனிதனின் மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து உறுப்புக்களில் 'வாய்' என்று கூறக்கூடிய நாவை காத்தல் வேண்டும். இதனை வள்ளுவர்,

"நா நலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யா நலத்து உள்ளதூஉம் அன்று"(84)

என்று குறிப்பிடுகிறார்.

ஒருநாள் மணிமேகலையை உதயகுமரன் பார்க்கிறான். அவளிடத்துக் காதல் கொள்கிறான். அவளைத் தேடி பளிக்கறைக்கு வருகிறான். சுதமதி அவனைக் கண்டு நடுக்கமுறுகிறாள். உதயகுமரன் அவளிடம் வந்து மணிமேகலை எங்கே என்று கேட்கிறான். அதற்குச் சுதமதி,

"இளமை நாணி முதுமை யெய்தி
உணர முடிவு காட்டிய வரவோன் மருகற்கு
அறிவும் சால்பும் அரசியல் வழக்கும்

செறிவான மகளிர் செப்பவ முண்டோ

அணைய தாயினும் யானென்று இடுப்பில்”[85]

எனக் கூறுகிறாள். இளமை நிலையில்லாதது, முதுமையடையக் கூடிய இந்த அழகை அடைய எண்ணாதே. இது பண்பன்று என மணிமேகலையைக் காக்க ‘நா’ பிறழாமல் கூறுகிறாள் சுதமதி. தனது சொல்வன்மையால் மணிமேகலைக்கேற்படும் துன்பத்தைப் போக்குகிறாள். பெண்கள் நாவன்மை மிக்கவர்கள், அதனால் நற்செயல் பல புரிபவர்கள் என்பதை இக்கருத்து வலியுறுத்தும்.

தவம்

மணிமேகலை எத்திறத்தினள் என வினவும் உதயகுமரனிடம் அவன் மனம் வருந்தாமல் அவள் நலத்தை,

“**முருகு பெயர்க்குன்றம் கொன்றேன் அன்னநின்**

முருகக் செல்வி”[86]

என்று நன்மனம், நுண்ணறிவு, நல்லழகு போன்றவற்றைக் கொண்டவள் என்று கூறுகிறாள். மேலும் மணிமேகலையின் தவநிலையை,

“**நின் முருகச் செவ்வி முகந்து தன் கண்ணால்**

பருகள்; ஆயின் பைந்தொடி நங்கை

வாழ்தரு தவத்தாள் சபாசரத்தி

காமற் கடந்த வாய்மையாள்”[87]

என்று கூறுகிறாள். முருகச் செவ்வி, பைந்தொடி நங்கை, ஊழை அகற்றுகின்ற தவத்தினையுடையவள், காமத்தினைக் கடந்தவள், வாய்மையாள், தூய்மையானவளென்று பலவாறு கூறுகிறாள். இவ்வாறான பண்புகளால் தவ வாழ்க்கை மேற்கொண்டு பெண்மைக்குப் பெருமை

சேர்த்துள்ளாள். இவளின் செயலால் பெண்மைப் போற்றப்பட்டு, பெண்ணிய நோக்கிற்கு வழிவகுத்துள்ளது.

நிலையாமை

உதயகுமரன் சுதமதியிடம் மணிமேகலையின் வரலாற்றைக் கேட்கின்றான். அவனிடம் அவள் வரலாற்றைக் கூறுமுன் தன் வரலாற்றைக் கூறினாள். உதயகுமரனிடம் உள்ளக் காமக் கிளர்ச்சியால் தனக்கேதேனும் துன்பம் ஏற்படுமோயென அஞ்சி முன்னதாகவே,

"வார்கழல் வேந்தே வாழ்க நின் கண்ணகி
தீ நெறிப் படரா நெஞ்சினை யாருமதி"(88)

எனக் கூறி தனக்குத் தற்காப்பினை ஏற்படுத்திக் கொள்கிறாள்.

இவ்வுலக வாழ்வு நிலையில்லாதது. மனிதன் அதைப் புரிந்து கொள்ளாமல் துன்பத்தைத் தேடுகிறான். இறுதியில் நிலையாமை உணர்கிறான். அதனை,

"ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண் பொருளைக்
காத்தது மாங்கே கடுந்துன்பம் - காத்தல்
குறைபடின் துன்பம் கெடின் துன்பம் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்"(89)

என்ற அடிகள் விளக்கும். அவ்வகைப்பட்ட நிலையாமையை,

"தனக்கென வாழாப் பிறர்குரிய யாள
ணின்பச் செல்வி மன்மதை யெய்த
வருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையி
னறக்கதி ராழி திறம்பட உருட்டிக்
காமற் கடந்த வாமன் பாதந்

தகையா ராட்டுத லல்ல தியாவது

மிகைநா வில்லேன் வேந்தே வாழ்கென"(90)

எனும் பாடலடிகள் வாயிலாக வெளிப்படுத்துகின்றாள். தனக்கென்று வாழாமல் பிறருக்காக வாழுகின்றவள். அருளறம் கொண்டவள். காமத்தினைக் கடந்தவள். இவள் செய்கின்ற செயல் நிலையானதாகும். நிலையாமையை உணர்ந்து நிலையானதை வளர்த்து வருவதில் பெண்கள் சிறப்பிடம் பெற்றுள்ளார்கள் என்பதும், அதன் வழி பெண்மையும் போற்றப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது.

காய சண்டிகை

இவள் காஞ்சனன் என்னும் விஞ்சையனின் மனைவி. இருவரும் காட்டாற்றிக்கு அருகே நடந்து செல்லும் போது கௌசிக முனிவன் உண்பதற்கு வைத்திருந்த நாவற்கனியைக் காலால் காய சண்டிகை சிதைத்து விடுகிறாள். கௌசிக முனிவன் சாபமிடுகிறார். இட்ட சாபத்தால் வானோடு செல்லும் மந்திரம் மறந்து, யானைத் தீ எனும் நோயுடன் வருந்துகிறாள். அந்நோய் காவரிப்பூம்பட்டினத்திற்குப் பசிப்பிணியைப் போக்க வரும் கற்புக்கரசி, துறவு வாழ்வினை மேற்கொண்டு வரும் மணிமேகலை என்பவளாள் நீங்கும் என்றுரைக்கிறார் முனிவர்.

மணிமேகலை அமுதசுரபியைப் பெற்றுக் கொண்டு காவிரிப் பூம்பட்டினத்தில் உறையும் ஆதிரையின் வீட்டிற்குச் சென்று வருகிறாள். ஆதிரையின் பண்பு வரலாற்றைக் கூறுகின்றவளும் இவளே. மணிமேகலையின் சிறப்புகளைக் கூறி அவளை உலக அறவாழ்விற்குச் செல்க என்று கூறுகிறாள். இவ்வாறான சிறப்புகளை உடையவள் என்பதை

"**துக்கம் துடைக்கும் துகளது மாதவர்**
சக்கர வளக் கோட்டமுன்(டு) ஆங்கு அதில்
பலர் புகழ் திறந்த பகுவாய் வாயில்
உலக வறவியென் றுண்டு; அதனிடை
....
....
இருவோர்த் தேர்ந்தாங்கு இருப்போப் பலரால்
வருவாழ் கூந்தல் அதன் பாற்போக"(91)

இவ்வடிகள் வெளிப்படுத்துகின்றன.

யானைத் தீயின் கொடுமை

கௌசீகமுனிவனிட்ட சாபத்தால் யானைத்தீயின் நோயினால் வாடுவதை,

"**நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி**
அடலரு முன்நிரை அடைந்த ஞான்று
....
....
இட்டது ஆற்றாங் கட்டழற் கடுபசிப்
பட்டேன் என்றன் பழவினைப் பயத்தால்"(92)

எனும் அடிகள் விளக்குகின்றன. பழவினையின் காரணமாக இக்கொடுமையை அனுபவிக்கின்றேன் என்று கூறும்போது அதன் கொடுமையை உணரமுடிகிறது.

துன்பத்திலிருந்த காயசண்டிகை செல்லும் வழியில் நந்தா கடிகை என்பவளின் வயிற்றில் பட்டு இறந்துபோகிறாள். உதயகுமரனுக்கு அஞ்சி

மணிமேகலை இறந்த காயசண்டிகையின் வடிவம் கொண்டு வந்தாள். காஞ்சினன் என்பவன் உதயகுமாரன் மீது கோபம் கொண்டு கொலை புரிகின்றான். இதனை உணர்ந்த மணிமேகலை காயசண்டிகை வடிவித்திலிருந்து தன்வுருவத்திற்கு வருகிறாள். அறம் செய்வதற்கு ஆண்கள் தடையாகயிருந்தாலும் அதனைக் கடந்து வேற்று வடிவம் கொண்டு அவ்வறத்தினைச் செய்து முடிப்பவர்கள் பெண்கள் என்பதை அறியமுடிகிறது.

ஆதிரை

ஆதிரையின் கணவன் சாதுவன் என்பவனாவான். இவன் நல்லொழுக்கமில்லாதவன். அழகுடைய ஆதிரையைவிட்டு கணிகையொருத்தியிடம் சென்று பொருளை இழந்தான். பொருள் சேர்ப்பதற்குக் கடல் கடந்து வணிகர்களுடன் சென்றான். கடலில் செல்லும் போது பலத்த காற்றடித்து மரக்கலத்தினைச் சாய்த்தது. மரத்துண்டினைப் பற்றிக்கொண்டு அலைகள் அடிக்கும் பக்கம் சென்று நாகனக்காரர்கள் வாழும் மலைப்பக்கத்தை அடைந்தான். நாகர்களின் மொழி சாதுவனுக்குத் தெரிந்ததால், அவனுக்கு நாகர்கள் அடைக்கலம் கொடுத்தனர். மரக்கலத்தில் உடன் சென்றவர்கள் ஆதிரையிடம் வந்து சாதுவன் இறந்து விட்டான் என்று கூறினர். இத்துன்ப செய்தி கேட்டு ஆதிரை,

> "***மிக்க என் கணவன் வினைப்பயன் உய்ப்பப்***
> ***புக்குழிப் புகுவேன்***"(93)

என்று கூறி விறகுகளால் தீ மூட்டி தீவினையென்னும் வினைப் பயனால் என் கணவர் உயிர் பிரிந்த கணமே யானும் உயிர் வாழேன் என்று

கூறியபடி தீயில் இறங்கினாள். அத்தீயானது அவளைத் தீண்டவில்லை. கற்பின் திறத்தால் கணவனைப் பற்றிய செய்தியை அறிகிறாள்.

கற்பின் திறன்

உலகத்திலுள்ள அனைத்து உயிர்களிலும் சிறந்தது மனித உயிர். பெண்களுக்கு அந்த உயிரினும் சிறந்தது நாணம். அதனினும் உயரியது கற்பு. கற்பு என்பது பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் ஓர் அணியாகவும் உயர் பண்பாகவும் விளங்குகிறது.

"கற்புடைய பெண்கள் கணவனைப் பிரிந்து வாழ இயலாதவர்கள். கொண்டவனைப் பிரியாது வாழ்தல் அறமாகக் கருதப்பட்டது."(94) கணவனைப் பிரிந்த கணத்தில் உயிர்துறக்கத் தீயும் தீண்டப் படவில்லையேயென வருந்தி,

"***தீயினாலும் தீண்டப்படாத நான் தீவினை உடையோள்***"(95)

எனக் கூறினாள். அத்தருணத்தில் வானில் தோன்றிய 'அசரீரி' ஆதிரையே கேட்பாயாக! உன் கணவன் நாகனர்கள் வாழும் மலைப்பக்கத்தை அடைந்துள்ளான். சில ஆண்டுகளில் சத்திரதத்தன் எனும் வணிகனது மரக்கலத்தோடு வருவான். ஆதலின் உனது பெருந்துன்பத்தைப் போக்குக! என்று கூற ஆதிரை அத்துன்பத்திலிருந்து நீங்கினாள். அக்கணம் முதல் வழுவாது அறம் புரிந்தாள் கற்பிற் சிறந்த பிற மகளிரும் வியந்து விரும்பி வணங்கும் தன்மையுடையவளாக விளங்கினாள், கற்பின் திறன் அதைப் பெண்கள் எவ்வாறு போற்றியுள்ளார்கள் என்பதும் பெண்ணிய வளர்ச்சிக்கு இம்மாந்தர் துணை நின்றுள்ளார்கள் என்பதும் பெறப்படுகின்றன.

அறம்

பண்புகளில் ஓர் உயர்ந்த பண்பாகக் கருதப்படுவது அறமாகும் "பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் உறங்குவதும் உறங்கி விழிப்பதும் மனிதனின் நடைமுறை நிகழ்வுகள். இவற்றில் நல்ல அறங்களைச் செய்கின்றவர்கள் மேலுலகம் அடைதலும் தீமை செய்கின்றவர்கள் துன்பமுடைய நரகத்தை அடைதலும் உண்மை."(96)

சாதுவன் புகார் நகரம் வந்தடைந்தான். ஆதிரையுடன், தீய எண்ணங்களை ஒழித்து நல்லொழுக்கம் உடையவனாகக் வாழத் தொடங்கினான். இருவரும் சேர்ந்து அறங்களைச் செய்தனர். இவ்வாறு தனது கற்பின் திறத்தாலும், அறம் செய்யும் குணத்தாலும் சிறப்புப் பெற்று விளங்கிய ஆதிரையின் கையில் அமுத சுரபியில் முதல் தானத்தை வாங்கினால் பசிப்பிணி எனும் பாவி நீங்கும் என்று ஆதிரையின் சிறப்பைக் காயசண்டிகை இவ்வாறு

"புனையா ஓவியம் போல் நிற்றலும்
தொழுது வலம் கொண்டு துயர் அது கிளவியோடு
அமுத சுரபியின் அதன் சுரை நிறைதர
பார் அகம் அடங்கலும் பசிப்பிணி அறுக என
ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து என்"(97)

கூறுகிறாள். பெண்கள் அறச்செயல், கற்பின் ஆற்றலை வைத்து பசிப்பிணியை போக்கும் அறத்தை மேற்கொண்டு பெண்மையை வளர்த்துள்ளார்கள்.

இராசமாதேவி

இவள் கீர்த்தி என்ற இயற்பெயர் பெற்ற சோழன் மாவண்

கிள்ளியின் மனைவி. உதயகுமரனைப் பெற்ற தாய். உதயகுமரன் இறந்து விட்டான் எனும் செய்தி கேட்டுத் துன்பமடைகிறாள். இதற்குக் காரணம் மணிமேகலை என சினம் கொண்டு சூழ்ச்சியின் காரணமாக

"தன்னோடு இருப்பினும் இருக்க இவ் இளங்கொடி

தன்ஒரு எடுப்பினும் தனக்கு நர்இல்"[98]

இவ்வாறு பழி வாங்க எண்ணுகிறாள்.

மணிமேகலையுடன் நன்றாகப் பேசி மனைக்கு அழைத்துச் செல்லுகிறாள். அங்கு அவளுக்கு மயக்க மருந்து கொடுத்துத் தீயயொழுக்கம் நிறைந்த ஒருவனை அழைத்துக் கற்பழிக்க முற்படுகிறாள். அவற்றிலிருந்து மணிமேகலா தெய்வ உதவியுடன் மேனி வருந்தாது மீளுகிறாள். இந்நிகழ்வை இராசமாதேவி பார்த்து அவளின் கற்பின் ஆற்றலை உணர்ந்து பயந்து, செய்த செயல் தவறென்று மனந்திருந்துகிறாள். இச்செயலை,

"செய்தவத் தாட்டியைச் சிறுமை செய்தேன்

என் மகற்கு உற்ற இடுங்கண் பொழுது

பொன்னே ரனையாய்! பொறுக்க"[99]

என இவ்வடிகள் சுட்டுகின்றன. தெய்வத் தன்மையுடையவளே என்மகன் மேலுள்ள பாசத்தினாள் உனக்குத் தீங்கிழைத்து விட்டேன் என்னைப் பொறுப்பாயாக என்று வேண்டுகிறாள். மேகலை இராசமாதேவியை அடிபணிந்து வணங்குகிறாள். பெண்கள் தீயவழியில் சென்றாலும் பெண்களே அவர்களை நல்வழிப்படுத்தி வயதில் முதிர்ந்தவர்களாக இருந்தால் கூட அவர்களை வணங்கி பெண்மையைப் போற்றியுள்ளனர்.

பண்பு

சித்திராபதி மணிமேகலையைத் தன்பாலிருக்க வேண்டுமென்று இராசமாதேவியிடம் வேண்டுகிறாள். அதற்கு இராசமாதேவி,

> "**கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்**
> **உள்ளக் களவுமென்பது உரவோர் துறந்தவை**
> **தலைமையாக் கொண்ட நின் தலைமையால் வாழ்க**
> **புலமையென் றஞ்சிப் போந்த பூங்கொடி**
> **நின்னோடு போந்து நின்மனைப் புகுந்தாள்**
> **என்னோடு இருக்கும்**"(100)

என்று கூறுகிறாள். கள்ளுண்ணுதல், பொய், காமம், கொலை போன்றவற்றை விடுகின்றவர்கள் நல்வழியில் வாழுகின்றவர்கள். அதனினும் துறவு நிலை செல்லும் இப்பூங்கொடி மிகவும் சிறப்பிற்குரியவள். பெண்மைக்கு இலக்கணமாக விளங்கக் கூடிய இவள் என்னுடன் இருக்கட்டுமென்று கூறுகிறாள். இதன் வழி தாய்ப் பண்பு வெளிப்படுகிறது.

சித்திராபதி

இவள் மாதவியின் தாய். நாடகக் கணிகையருக்குள்ள குணங்களைக் கொண்டவள். மாதவியும் மணிமேகலையும் புத்த சமயத்தை வலியுறுத்தி வாழ்வதில் விருப்பமில்லாதவள். அதனை நினைத்து வருந்தியதை,

> "***தீவகச் சாந்தி செய்தரு நன்னாற்***
> ***மணிமேகலை யோடு மாதவி வாராத்***
> ***தனியாத் துன்பம் தலைத் தலைமேல்வர***"(101)

எனக் கூறுகிறாள்.

மணிமேகலை அமுதசுரபி பாத்திரத்தைக் கையில் ஏந்திக் கொண்டு நகருக்குள் செல்கிறாள் என்ற செய்திகேட்டு சித்திராபதி கடுஞ்சினம் கொள்கிறாள். இவளை அறவழியில் செல்ல விடக்கூடாது என்று நினைத்து கணிகையர் குல இயல்பை அவளிடம வலியுறுத்துகிறாள். உதயகுமரன், மணிமேகலையை விரும்பிய செய்திகேட்டு இருவரையும் சேர்த்துவைக்க சூழ்ச்சியும் செய்கிறாள். மேகலையை உதயகுமரன் தேர்மீது அமரச் செய்து கொண்டு வரவேண்டுமென்று நினைக்கின்றாள். இதனை,

"அடுமணி ஏற்றி அரங்கு சூற்போகி
வருவொரு வாழும் மடைந்தையர் தம்மோர்
அனையயானாகி அரங்கத் கூத்தியர்
மனையகம் புகா மரபினன்"(102)

எனக் கூறுகின்றாள்.

உதயகுமரன் இறந்ததையும் மணிமேகலை சிறை செய்யப்பட்டதையும் கேள்வியுற்று அச்சமுறுகிறாள். அவ்வேளையிலும் மணிமேகலையைத் தன்பால் அழைத்துச் செல்ல வேண்டுமென நினைக்கின்றாள். அதற்கு அவள் அரசமாதேவியிடம் மணிமேகலையால் இப்பட்டினத்திற்குத் தீங்கு நேரிடுமென்று கூறி மனதைமாற்றி தன் கருத்தை உண்மையென நிருபிக்க முயல்கிறாள்.

நெடுமுடிகிள்ளி பிலிவளையைத் தேடிச் சென்றபோது மணிமேகலையால் விஞ்சை நகரிற்குத் தீங்கு உண்டாகும் என்பதறிந்தான். அவ்விடம் வந்த சாரணன் இந்நகரத்தில் இனி இந்திர விழா நிகழாது. இது மணிமேகலா தெய்வம் கூறிய சாபம் இது என்று கூறினாள். இச்செய்தியை சித்திராபதி தனக்குச் சாதகமாகப் பயனப்படுத்திக்

கொண்டுள்ளாள். இதனால் நகருக்கு தீங்கு வந்துவிடும் என உரைத்தது கேட்டு,

"தன் பெயர் மடந்தை துயருறு மாயின்
மன் பெருந் தெய்வம் வருதறு முண்டென
அஞ்சினேன் அரசன் தேவி"(103)

அஞ்சுகிறேன் எனக் கூறி தேவியை வணங்குகிறாள். சித்திராபதி அதனை அறிந்தும் பதில் எதுவும் கூறவில்லை. மேலும் மணிமேகலையை சித்திராபதியிடம்,

"நன்மனம் பிறந்த நாடகக் கணிகையை
என் மனதைத் தருக"(104)

என்று நாடகக் கணிகையர் குலத்தில் பிறந்தவளை என்னுடன் அனுப்பி வைக்க வேண்டுமென்று தேவியிடம் வேண்டுகிறாள். சித்திராபதி மனதில் மணிமேகலை துறவு மகளென்று தோன்றவில்லை. நாடகக் கணிகையென்றே தோன்றியது. இந்நிகழ்வையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த தேவி மணிமேகலையை அனுப்பி வைக்க மறுக்கிறாள். சித்திராபதி மனம் நொந்து மொழிகின்றாள். பின்பு செய்த தவற்றை நினைத்து வருந்துகிறாள். பெண் தவறு செய்தால் தவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும். சித்திராபதி பெண்களின் குணத்தால் மாறு விளங்கினாலும், பெண்களே தவறுகளை அறிவுறுத்தி நல்வழிக்கு முயற்சிப்பது, பெண்ணிய வளர்ச்சிக்கு வித்திட்டது.

விசையை

இவள் சச்சந்தன் மனைவி. இளமையிலேயே அறிவு நூல்கள் பல கற்றவள். சமண சமயத்தை அறிந்தவள். அழகு, அறிவு, பொறுமை

மூன்றையும் பெற்றவள். சச்சந்தன் இவள் செயல்பாடுகளில் தோய்ந்து கிடந்தான். கட்டியங்காரன் நாட்டைச் சூழ்ந்து கொள்கிறான். அச்சூழலில் விசையை மயிற்பொறி வாகனத்தின் மூலம் நாட்டை விட்டு வெளியேறி சுடுகாட்டை அடைகின்றாள். கர்ப்பிணியாகயிருந்து அவ்விடத்தில் பல இன்னல்களை அனுபவிக்கிறாள். அவளடைந்த இன்னல்களை,

"வெவ்வா யோரி முழவாக விளிந்தோ ரீமம் விளக்காக போலாட
ஒவ்வாச் சுடுகாட்டு யரங்கின் நிழல்போல் துடங்கி
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் உகை ருழறிப் பாராட்ட
இவ்வறாகிப் பிறப்பதோ? இதுவோ மன்னர் இயலவேந்தே"(105)

என்று ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். ஒருபுறம் நரியின் குரல். மறுபுறம் பிணம் சுடும் தீ, ஆங்காங்கே பேய்கள் கூத்தாடுகின்றன. இந்நிகழ்வுகளைச் சுடுகாட்டில் காணும்போது கணவனைப் பிரிந்த கர்ப்பிணிப் பெண்ணின் துயரம் வெளிப்படுகிறது. இவள் மூலம் பெண்கள் துன்பமான சூழலிலும் எப்படியெல்லாம் நடந்துகொள்வார்கள் என்பதை அறியமுடிகிறது.

தாய்மையுணர்வு

விசையைத் தண்டாரளித்துத் தவப்பள்ளியில் இருக்கிறாள். கட்டியங்காரன் மகளிர் வருந்தும் வண்ணம் சீவகனைக் கொல்ல முயல்கிறான். இந்தச் செய்தியைக் கேட்டு விசயைத் தன் மகன் இறந்து விட்டானென புலம்புகிறாள். அத்தாய்மையுணர்வை,

"தோவமா வாகிக்குடி யோம்பி நின் குடைக்கிழ்ப்
பாவமே செய்தேன் பரிவெ வலாம் நீங்கினால்
போ அம்மா என்றுரைப்ப போவேன் முன்போயினால்

ஆ அம்மா என் அம்மா அகன்றனையே"[106]

என வெளிப்படுத்துகின்றாள். தன் மகனை வளர்த்த நிலையைத் தவப்பள்ளியில் இருக்கும்போது நினைத்துப் புலம்புகிறாள். இதனில் பெண்மைக் குணம் வெளிப்படுகிறது.

தான் பெற்ற மகன் சீவகனை நீண்டகாலம் கழித்து நேரில் காணுகையில் இளைஞனாக இருந்த அவன் விசயையின் கண்களுக்குக் குழந்தையாகத் தெரிகிறான். இதனை,

"**சிறுவனைக் கண்டபோதே உருபனி சுமந்த வாட்கண்**

வனமுலை மொழிந்த தீம்பால் . . . ."[107]

என்பதில் அறியமுடிகிறது. தாய்க்குத் தன் குழந்தை முதியவனாகயிருந்தாலும் குழந்தையாகத் தெரிவது பெண்மையைப் போற்றுவதாக உள்ளது.

சுடுகாட்டை அறக்கோட்டமாக மாற்றுதல்

மனிதப் பண்புகளை உயர்த்திக் காட்டுவதில் தலையாயது அறம் எனும் பண்பு. விசயைத் தன் மகன் திருமணம் செய்த தத்தையை நோக்கி என் மகன் பிறந்த இடத்தை மேன்மைப்படுத்த அங்குக் கோயில் எழுப்புகிறேன் என்று கூறி அதை நிறைவேற்றுகிறாள். தான் துறவு பூண்ட நிலையில் வாழ்க்கையில் கண்ட உண்மைகளைக் கூறுகிறாள். தன் கணவன் அழிவுக்குக் காரணம் யாது என்பதனை,

"**கற்கிளை யழிந்து வெள்ளம் கடற்கவா யாங்குக் கற்றோர்**

சொற்கிளை யழிந்து வேந்தன் துணை முலை துறத்தில்

சொல்லால்

விற்சிளை கொண்டபோலும் புருவத்து விளங்குவேன் காண்
நற்சிளைப் பட்டு நாடும் நகரமும் காவல்விட்டான்"(108)

என நவில்கிறாள். துறவுக்கோலம் பூண்டு மகன் பிறந்த இடத்தில் கோயில் எழுப்பி, வாழ்வியல் உண்மைகளைக் கூறி செயல்படுத்தும் நிலையில் பெண்மையின் குணத்தையும் பெண்ணியப் போக்கையும் காணமுடிகிறது.

கோவிந்தையார்

கோவிந்தையார் நந்தகோன் என்பவனின் மகள்; பண்புமிக்கவள். கட்டியங்காரனுடைய ஆனிரைகளைப் பராமரிக்கும் பணியினை ஆயர்கள் மேற்கொண்டனர். அவர்களிடமிருந்து ஆனிரைகளை வேடவர்கள் கவர்ந்து சென்றுவிட்டனர். இச்செய்தியைக் கட்டியங்காரனிடம் ஆயர்கள் கூறினர். கட்டியங்காரன் சீற்றமடைந்து தனது மைத்துனன் மதனையும், அவனுடன் தம்மக்கள் நூற்றிருவரையும் அனுப்புகிறான். வேடவர்களின் வீரத்திற்கு இவர்கள் ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால் கட்டியங்காரன் மனவருந்தினான்.

ஆயர்களின் தலைவனான நந்தகோன் இச்செய்தியறிந்து ஊருக்குள் கட்டியங்காரன் ஆனிரைகளை யார் மீட்டுவருகின்றார்களோ அவர்களுக்கு என் அழகு மகள் கோவிந்தையாரை மணமுடித்து வைக்கின்றேன் என்று அறிவித்தான். சீவகன் சென்று வேடர்களை வென்று ஆனிரைகளை மீட்டுவருகின்றான். சீவகனுக்கு, கோவிந்தையாரை மணமுடிக்க நந்தகோன் விரும்புகிறான். சீவகன் தனது தோழன் பதுமுகனுக்குத் திருமணம் செய்து வைக்கின்றான். கோவிந்தையாரும் திருமணத்திற்கு விருப்பம் தெரிவித்து மணமுடிக்கிறாள்.

அடக்கம்

பெண்கள் பண்பில் உயர்ந்தவர்கள், செயலில் மென்மையுடையவர்கள். மகளை ஒரு வீரனுக்குத் திருமணம் முடித்தல் என்பது சங்ககாலச் சமூக வழக்கமாகும். ஆண்களின் வீரம் காளையடக்குதல், இளவட்டக்கல் தூக்குதல், போரிடல், பொருளீட்டல் போன்ற நிகழ்வுகளை வைத்து முடிவு செய்யப்படும். அதுபோன்று சீவகசிந்தாமணியில் நந்தகோன் தன் மகள் கோவிந்தையைக் கட்டியங்காரனின் ஆநிரைகளை வேடர்களிடமிருந்து மீட்ட வீரனான சீவகனுக்கு மணமுடிக்க நினைத்து ஏற்பாடுகளைச் செய்தான். சீவகன் தன் தோழன் பதுமுகனுக்கு மணமுடித்து வைக்க ஏற்பாடு செய்தான். இதையறிந்த நந்தகோன் மறுப்பேதும் கூறாமல் ஒப்புக்கொண்டான். கோவிந்தையார் சீவகன் மீது பற்றுடையவளாக இருந்த போதும் தன் பெற்றோரின் விருப்பப்படி பதுமுகனைத் திருமணம் செய்து கொண்டாள். இங்கு அவளின் அடக்கத்தையும், பெற்றோரை மதித்தல் என்ற பண்பையும் காணமுடிகிறது. அத்திருமண நிகழ்வை,

> **“தீம்பாற் கடலைத் திரை பொங்கக் கடைந்து தேள்**
> **தம்பாள் படுத்து உமிர்தோதாட மாலை வெய்த்தோன்**
> **அம்பாள் குடவர் மகளோ பெண் றரிவை நைய**
> **ஓம்பா வொழுக்கத் துணர் வெண் றில்னாயயிளாளே”**(109)

என்ற பாடல் புலப்படுத்தும். ஆடவரை மதித்தல் என்ற பெண்மைப் பண்பும் வெளிப்படுகிறது.

தொகுப்புரை

ஆய்வுக்குட்பட்ட காப்பியங்களில் துணைமை மாந்தர்கள் இடம் பெற்றிருக்கும் சூழல் முறைமை, காப்பியப் போக்கிற்கு அவர்களின் பங்களிப்பு, இன்றியமையாமை போன்றவை இவ்வியலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மாதவி ஆடற்கலையில் மேம்பட்டுச் சோழ வேந்தனால் பாராட்டப் பெற்று பரிசு பெற்றவள்.

கணிகையர் குலத்தில் பிறந்திருப்பினும் மாதவி அக்குல வழக்கத்திற்கு மாறாக ஒருவனையே உயிரென ஏற்று ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்க் கலாச்சாரத்தின்படி வாழ்ந்தாள்.

கோவலன் தன்னை விடுத்துப் பிரிந்தபோதும் முன்னை அன்பில் குறையாதிருந்தவள். மணிமேகலையைத் துறவு நெறிக்குள் உட்படுத்தி கணிகையரும் கற்பொழுக்கத்தோடு வாழ முடியும் என்பதை நிலைநிறுத்தியவள்.

கற்பு, அறம், ஒழுக்கம், பிறர் துன்பத்தில் பங்கெடுத்தல், ஆகிய நெறிகளில் தேவந்தி மேம்பட்டவளாகத் திகழ்கிறாள்.

துறவு நெறி நின்றொழுகும் கவுந்தியடிகள் பிறர் துன்பத்தைப் போக்கும் அருளுள்ளம் கொண்டவளாகவும், பெண்களின் பண்புகளை போற்றியுரைப்பவளாகவும் விளங்குகிறாள்.

கண்ணகியின் அழகினைப் புகழ்ந்துரைப்பதும், தெய்வமாக எண்ணுவதும் நுண்ணறிவுடைய மாதரியின் பண்புகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மாதவிக்குப் பணிப்பெண்ணாக விளங்கியவள் வயந்தமாலை. இவள் மாதவியின் துன்பத்தை நீக்குவதற்கு உறுதுணையாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

வேட்டுவப் பெண்ணான சாலினி தெய்வ வாக்குக் கூறும் பெண்ணாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

பாண்டிய நெடுஞ்செழியன் ஆடல் மகளிரை விரும்பினான். மாறாகப் பொருள் கொண்ட கோப்பெருந்தேவி, உள்ளத்தின் வெறுப்பை வெளிக்காட்டாமல் அவையடக்கமாகத் தலைவலியெனக் கூறித் தன் துயர் மறைத்து பெண்மையின் மென்மையை வெளிக்காட்டியது உய்த்துணரப்படுகிறது.

கணவன் இறந்தவுடன் உயிர் நீத்துத் தலைமைக் கற்பினள் என்ற சிறப்பைப் பெற்றவள் கோப்பெருந்தேவி.

வேண்மாள் கற்புத்திறமும், அறிவினுட்பமும் மிக்கவளாக விளங்குகிறாள்.

கூனி, சுதமதி ஆகிய இருபாத்திரங்கள் முறையே மாதவி மணிமேகலைக்கு உதவுபவர்களாக அமைகின்றனர். சுதமதி மணிமேகலையுடைய துன்பத்தைப் போக்குபவளாகவும், உதயகுமரனின் உள்ளத்திலுள்ள காமவேட்கையை நிலையாமைத் தன்மையைக் கூறி நீக்க முயல்பவளாகவும் காணப்படுகிறாள்.

கணவன் இறந்தானென மாறாகப் பொருள் கூறியது கேட்டு ஆதிரை தீயுள் புகுந்தாள். தீ அவளைத் தீண்டவில்லை, கற்பின் மேம்பாடே இதற்குக் காரணம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆதிரையின் கையில் முதல் தானத்தை அமுதசுரபியில் மணிமேகலை பெற்றாள். இது ஆதிரையின் கற்பு மேம்பாட்டையும், பிறர் துயர் நீக்குவதற்கு முதல் நிலையில் நிற்பதையும் வெளிப்படுத்தும்.

மணிமேகலையின் பண்புகளை இராசமாதேவி புகழ்ந்துரைப்பதால் அவள் தாய்மைப் பண்பு வெளிப்படுகிறது.

உதயகுமாரனின் விருப்பத்தை நிறைவேற்ற சித்திராபதி முயல்கிறாள். அம்முயற்சியின் தோல்வியைத் தழுவி மனம் மாறுகிறாள்.

ஆதிமந்தியின் கற்பு போற்றியுரைக்கப்பட்டுள்ளது. தாய்மையுணர்வு மிக்கவளாகவும், சுடுகாட்டை அறக்கோட்டமாக மாற்றுபவளாகவும் விசையை விளங்குகிறாள்.

அடக்கம் பெண்களுக்கு இன்றியமையாதது என்பது கோவிந்தையார் வழி உரைக்கப்பட்டுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. அன்னிதாமசு, (ப.ஆ.) சங்ககாலப் பெண்மை, ப.37.

2. கம்பராமாயணம், பா.1082.

3. அ.ந. சொக்கலிங்கம், குறள் கூறும் வாழ்க்கை நெறி, ப.90.

4. மைதிலி சிவராமன், பெண்ணுரிமை சில பார்வைகள், ப.67.

5. மா.பொ.சிவஞானம், சிலம்பில் சிறுபாத்திரங்கள், ப.37.

6. சிலப்பதிகாரம், 6: 110 -112.

7. மு.வரதராசன், மாதவி, ப.58.

8. சிலப்பதிகாரம், 7 : 10 -11.

9. மேலது, 8 : 131-132.

10. மேலது, 13 : 40-63.

11. மு.வரதராசன், மாதவி, ப.18.

12. சிலப்பதிகாரம், 15 : 24-29.

13. சாகுந்தலை, 41.

14. பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், உரைநடைக் கோவை, ப.43.

15. சிலப்பதிகாரம், 8: 56-63.

16. தொல்காப்பியம், பொருள். கற்பு, நூ.23.

17. திருக்குறள், 1321.

18. சிலப்பதிகாரம், 4: 31-34.

19. திருக்குறள், 1183.

20. சிலப்பதிகாரம், 12: 118.

21. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், ப.147.

22. திருக்குறள், 1318.

23. குறுந்தொகை, 339.

24. சிலப்பதிகாரம், 8: 102.

25. மேலது, 10: 40-43.

26. குறுந்தொகை, பா.3.

27. சிலப்பதிகாரம், 11: 88-89.

28. மணிமேகலை, 2: 38-41.

29. சிலப்பதிகாரம், 15: 40-41.

30. மேலது, 27: 104-108.

31. மேலது, 30: 29-31.

32. மேலது, 29: 43-44.

33. மேலது, 27: 55-57.

34. மேலது, 25: 22-24.

35. மு. வரதராசன், கண்ணகி, ப.44.

36. சிலப்பதிகாரம், 9: 54-56.

37. பட்டினப்பாலை, பா.3: 4.

38. சிலப்பதிகாரம், 9: 45-54.

39. மேலது, 20: 33-34.

40. மேலது, 16: 11-12.

41. மேலது, 19: 22-24.

42. மேலது, 29: 9-1-4.

43. மேலது, 30: 161-162.

44. மேலது, 10: 46-48.

45. எம்.ஏ.சுசீலா, பெண் இலக்கியம் வாசிப்பு, ப.63.

46. சிலப்பதிகாரம், 25: 18-23.

47. திருக்குறள், 243.

48. பழமொழி நானூறு, 230.

49. சிலப்பதிகாரம், 10: 98-100.

50. மேலது, 14: 17-20.

51. மேலது, 10: 94-95.

52. மேலது, 29: 196-197.

53. மேலது, 15: 137-144.

54. மேலது, 18: 50-51.

55. மேலது, 19: 18-19.

56. தொல்காப்பியம், பொருள். கற்பு. நூ.1155.

57. சிலப்பதிகாரம், 15: 131-136.

58. மேலது, 19: 27-29.

59. மேலது, 16: 23-27.

60. மேலது, 16: 50-51.

61. மேலது, 30: 108-111.

62. மேலது, 25: 39-42.

63. மணிமேகலை, 5: 12-13.

64. ம.பொ.சிவஞானம், சிலம்பில் துணைப் பாத்திரங்கள், ப.33.

65. சிலப்பதிகாரம், 15: 71-74.

66. அகநானூறு, பா.298.

67. சிலப்பதிகாரம், 19: 21-23.

68. மேலது, 20: 21-22.

69. மேலது, 18: 24-25.

70. மேலது, 12: 49-50.

71. மேலது, 16: 131-140.

72. மேலது, 20: 2-12.

73 மேலது, 13: 17-19.

74. மேலது, 13: 71.

75. புறநானூறு, பா.122.

76. இரா. பிரேமா, கற்புக்கலாச்சாரம், ப.37.

77. சிலப்பதிகாரம், 20: 78-93.

78. மேலது, 22: 42-45.

79. மேலது, 19: 118-121.

80. இரா. பிரேமா, கற்புக்கலாச்சாரம், ப.73.

81. சிலப்பதிகாரம், 26: 119-122.

82. மேலது, 26: 188-195.

83. மணிமேகலை, 10: 7-8.

84. திருக்குறள், 641.

85. மணிமேகலை, 8: 162-166.

86. மேலது, 8: 180-181.

87. மேலது, 9: 118-121.

88. மேலது, 13: 143-144.

89. மேலது, 14: 103-106.

90. மேலது, 15: 10: 93-99.

91. மேலது, 17: 53-60.

92. மேலது, 13: 35-43.

93. மேலது, 15: 14-15.

94. இரா. பிரேமா, கற்புக்கலாச்சாரம், ப.57.

95. மணிமேகலை, 17: 115.

96. சாமி சிதம்பரனார், குறளும் வாழ்க்கை நெறியும், ப.44.

97. மணிமேகலை, 13: 115-118.

98. மேலது, 19: 110-111.

99. மேலது, 20: 3-6.

100. மேலது, 15: 80-85.

101. மேலது, 22: 18-20.

102. மேலது, 23: 19-22.

103. மேலது, 25: 17-19.

104. மேலது, 22: 51-52.

105. சீவகசிந்தாமணி, பா. 1005.

106. மேலது, பா. 1319.

107. மேலது, பா. 1518 : 3-4.

108. மேலது, பா. 1553.

109. மேலது, பா. 2018.

இயல் - 4

அறக்கோட்பாடுகளும் பெண்ணியமும்

இயல்-4

அறக்கோட்பாடுகளும் பெண்ணியமும்

காலந்தோறும் சமுதாயத்தில் நடக்கும் நிகழ்வுகளை அவ்வவ்கால இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. அவ்வாறான இலக்கியங்களுள் சில ஆரம்ப காலம் முதல் இக்காலம் வரை அறத்திற்கு முதன்மை கொடுத்துள்ளன. தனிமனிதனையும், சமூதாயத்தையும் போற்றிப் பாதுகாக்கும் ஒழுக்க நெறியாக அறம் இருக்கின்றது. தனிமனிதனும் சமுதாயமும் சீராக இயங்க, நலமாக வாழ முன்னேற்றமடைய அறவாழ்வு இன்றியமையாததென்று முன்னோர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். அறம், கற்பு, தவம், துறவு, விருந்தோம்பல், நிலையாமை, கடவுற்கொள்கை, ஒழுக்கம் மற்றும் பிற பண்புகளின் வழியே அறங்கள் வெளிப்படுகின்றன. பெருங்காப்பியங்களில் பெண் மாந்தர்கள் வழி அறம் எவ்வாறு சுட்டப்பட்டுள்ளது என்பதை பெண்ணிய நோக்குடன் விரிவாகக் காண்பது இவ்வியலின் நோக்கமாகும்.

அறம் சொற்பொருள் விளக்கம்

மனிதன் தனக்குரிய கடமைகளைத் தவறாது செய்வதை அறம் என்பர். ஒவ்வொரு மனிதனும் தம் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஓர் ஒப்பற்ற பண்பு அறமாகும். அறம் வலிமைமிக்கது, நன்மை பயப்பது. "அறு என்னும் வினைச் சொல்லின் அடியாகப் பிறந்தது. இதற்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, தூண்டி வேறுபடுத்து என்ற பல வகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன"(1) என்பர்.

"மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அவற்றின் முழுநிறை வடிவமே அறம்"(2) என்று கூறவர். "பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையின் பயனாகிய அறியாமையை அறுத்தெறிவதே அறம்"(3) என்று ஆன்மீகம் விளக்கம் தருகிறது.

மனிதன் தீய வினையை அறுத்து ஒழுக்க நெறியுடன் வாழ்ந்து பிற மனிதர்களின் அறியாமையைப் போக்கி அவர்களுக்கு நற் செயல்களைச் செய்து நன்னெறியில் இட்டுச் சென்று, நல்வாழ்வு வாழ வைப்பதும், பிற உயிர்களிடத்தும் அன்பு காட்டி மனித நேயப் பண்புகளைப் பின்பற்றுவதும் அறமாகும்.

'அறம்' என்னும் சொல்லிற்குத் தமிழில் எட்டு வகையான பொருள்கள் வழங்கி வருகின்றன. பொதுவாக நற்பண்பு அல்லது ஒழுக்கம் என்னும் பொருளிலேயே தமிழ் இலக்கியங்களில் அறம் வழங்கப் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. "அறம் என்ற சொல் பொருளில் மிகவும் நெகிழ்ச்சியுடையது அதற்குப் பொருள் காணுதல் எளிதன்று. அறம் எனும் சொல் காலப்போக்கில் பல்வேறு பொருள்களை உணர்த்துவதாக அமைந்தது. பொருள் செறிவு வாய்ந்த சொல்லாகச் சிறப்புற்று விளங்குகிறது"(4) என்பர்.

மனித உயிர்களை நன்னெறியில் இட்டுச் செல்வது அறம். நல்லறத்தைக் கடைபிடித்து மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான். அறம் என்பதற்குக் கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "குடும்ப வாழ்வும், பெறுவாழ்வும் சீராக இயங்கி ஒருவர் கடைபிடிக்கும் சமயச் சார்பான அல்லது ஒழுக்கக் கண்ணோட்டத்துடன்

கூடிய நெறிமுறைகள் அல்லது கடமைகள்"[5] என்று பொருள் விளக்கம் தருகிறது. இது மனிதனுடைய மனம், வாக்கு, காமம் ஆகியவற்றை ஒழுங்குப்படுத்துவது.

இலக்கியங்களில் அறம்

மக்களின் உயர்ந்த நெறியாகக் காணப்படுகின்ற அறத்தை இலக்கியங்கள் தோன்றிய காலம் முதல் வெளிக்காட்டுவதை அறிய முடிகிறது. பண்டைய தமிழ் இலக்கியத்தில் நன்மை, நல்லது என்ற சொற்கள் அறமென்ற பொருளில் பல இடங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பது நோக்கற்பாலது.

அறம் மனிதனைப் பண்புகள், செயற்பாடுகள், ஒழுக்க நெறிகள் மூலம் நல்வழிப்படுத்தும் ஓர்ஆயுதம், அதனால் தான் இலக்கியங்களில் அறம் முதன்மையாக வைத்துப் போற்றப்படுகிறது. அவ்வாறான அறத்தைத் தொல்காப்பியம்,

"இன்பம் பொருளும் அறனுமென்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டங் காணுங்காலை"[6]

"அந்நிலை மருங்கின் அறமுதலாகிய
மும்முதற் பொருட்டு முரிய வென்ப"[7]

எனச் சிறப்பித்துக் கூறுகிறது. பொருள், இன்பம், வீடுபேறு மூன்றையும் ஒன்றாக அடைதற்கு அறத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதை எடுத்துக் கூறுகிறது.

தமிழர் புறநாகரிகத்தில் சிறந்து விளங்கியது மட்டுமின்றி அக நாகரிகமான பண்பாட்டு நிலையிலும் தலை சிறந்தவர்களாக விளங்கியுள்ளனர். அச்சிறப்புக்கு வழிவகுத்த அறத்தை நன்னூல் நூற்பாயிரம்,

"அறம் பொருளின்பம் வீடைதல் நூற்பயனே"[8]

என்று குறிப்பிடுகிறது.

சங்க இலக்கியப் புலவர்களும், சமய நூலாரும் அறத்திற்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளார்கள். மேன்மை பொருந்திய அறத்தைப் புறநானூறு,

"அறனும் பொருளும் இன்பம் மூன்றும்
ஆற்றும் பெரும நின் செல்வம்"[9]

"சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப் படுஉந் தோற்றம் போல"[10]

எனக் கூறுகின்றது.

அறம் குறித்த சிந்தனைகள் மேற்குறித்தவாறு இலக்கண, இலக்கிய நூல்களில் இடம்பெற்றுள்ளன. அறம் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது. பெருங்காப்பியங்களில் பெண்களே அறக்கோட்பாடுகளை அதிகமாக வலியுறுத்தியுள்ளார்கள். பெண்களுக்குரிய அறமாக, கற்புநெறி, தவம், துறவு, விருந்தோம்பல், போன்றவை சுட்டப்பட்டுள்ளன. தவிர பிற அறங்களிலும் இவர்கள் எவ்வாறு மேலோங்கியுள்ளார்கள் என்பதை பெருங்காப்பியங்கள் வழி ஆய்ந்து விளக்கப்படுகிறது.

சிலப்பதிகாரம்

மனிதப் பண்பினை உயர்த்திக் காட்டும் ஒழுக்க நெறி அறத்தின் ஒரு பகுதியாகச் சுட்டப்படுகிறது. அருளறம் எல்லோரிடத்தும் இருக்க வேண்டும் என்பது புலவர்களின் எண்ணம். "இல்லறத்தில் இருந்து ஆற்றும் அறங்களைப் போலத் துறவு மேற்கொண்டு ஆற்றக்கூடிய அறங்களுமுண்டு. துறந்தோர் முதற்கண் ஆற்ற வேண்டிய அறம் அன்பு, அருளை அன்பின் குழவி என்றே சொல்லலாம். அன்பின் வழிப்பிறக்கும் அருள், துறவிகள் போற்றிக்காக்க வேண்டிய முதல் அறமாகும்"(11) என்பர்.

வள்ளுவப் பெருந்தகை,

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்ன உலகம் புகழ்"(12)

என்று பிறவிப் பிணியை நீக்கி இன்ப உலகம் எய்துவதற்கு அருளுதவுவதை விளக்குகிறார்.

இளங்கோவடிகள் கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் மதுரையை நோக்கிச் செல்கின்றபோது கவுந்தியின் தோற்றம், அருள்மொழிகள், பெண்மையின் மென்மை போன்றவற்றை எடுத்துச் சொல்கிறார். அருள் மொழிக் கூறும் பண்பு சமணத்திற்குரிய பண்புகளுள் ஒன்று. அதன் வழி கவுந்தியடிகளின் புறத்தோற்றத்தை,

"தோமறு கடிஞையுஞ் சுவன்மே லறுவையும்
காவுந்தி யையைகைப் பீலியுங் கொண்டு
மொழிப் பொருட் தெய்வம் வழித்துணை யாகெனப்"(13)

என்று நாடுகாண் காதையில் குறிப்பிடுகிறார். பிச்சைப் பாத்திரம், தோளில் தொங்கிய உறி, மயில்தோகை, காவிஉடை, அவர் கூறிய அருள்மொழி

போன்றவற்றைக் கூறி மூவரும் பயணத்தைத் தொடங்கினர். இவற்றுள் ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரு சமணத்துறவி அருள்மொழிகூறி அவர்களுக்குணர்த்துவது சமதர்ம பெண்ணியத்தை வலியுறுத்துகிறது.

அருள்பண்பு எத்தகையது என்பதைத் திருக்குறளும்,

"நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்

தேரினும் அஃதே துணை"(14)

என்கிறது.

அருளை மேற்கொள்ளும் போது நன்முறையில் மேற்கொண்டு நடந்தால் துன்பம் எவ்வளவு ஆற்றல் மிக்கதாகயிருந்தாலும் இவ்வருள் துணையாக நிற்கும் என்பது பொருள். இவ்வறப்பண்பு கவுந்தியடிகளிடம் உள்ளதை,

"நெறியி னீங்கியோர் நீரல கூறினும்

அறியா மையென் றறியல் வேண்டும்"(15)

"மறத்துறை நீங்குமின் வல்வினை வாட்டும்

அறத்துறை மாக்கள் திறத்தின் சாற்றி"(16)

என்ற அடிகள் சுட்டுகின்றன. கோவலன், கவுந்தியடிகளிடம் நெறியில்லாமல் வாழ்ந்து வழி தவறிச் சென்று விட்டேன். இப்பொழுது வாழ வழிதேடிச் செல்கிறேன் என்றான். அதற்குக் கவுந்தியடிகள் மறச்செயலைவிட்டு அறச்செயல்கள் வழி நடந்தால் நன்மைகிட்டும் என்று கூறி அறவழிப்படுத்துகிறார். அறநெறிக் கோட்பாடு வாயிலாக ஓர் ஆண்மகனுக்கு அறிவுரை சொல்லி சமூகத்தில் அறப்புரட்சி செய்துள்ளாள் என்பதை அறியமுடிகிறது.

மணிமேகலை

மனிதப் பண்புகளில் உயர்ந்தது அறமாகும். இதைப் பின்பற்றுபவர்கள் எக்காலத்திற்கும் சிறப்பிற்குரியவர்களாவர். “அறமாவது மனம் பற்றியது; மாசில்லாத பண்பு பற்றியது. புற வெளிப்பாடுகள் எவ்வண்ணம் இருப்பினும் மூலமனமும் மூல நினைவும் தூய்மையாக இருக்கும் போதுதான் அறம் சிறக்கும். மனமாசுடன் எதைச் செய்தாலும் அறமில்லை. சுருங்கக் கூறின் மனத்தூய்மை அறமாகும்”(17) என்பர்.

தாம் செய்தவுதவிக்கு மாறாக அதேபோல் உதவி செய்வது அறமாகாது என்பதை,

“பிறக்கீவோர், தமக்கீப வென

வளைத்துரைத்தனன் என்க”(18)

என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

மணிமேகலை ஏழை மக்களின் கொடிய பசியைப் போக்குவதே உண்மையான அறம் என்கிறது. இத்தகைய அறத்தைச் செய்கின்றவர்கள் தான் உலகில் உண்மையான ஒழுக்க நெறியைக் கடைபிடிக்கின்றவர்கள் என்பது,

“ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்

ஆற்றா மக்கள் அரும்பசி களைவோர்

மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை”(19)

எனும் பாடலடிகள் வாயிலாக உணர்த்தப்பட்டுள்ளது.

மனத்தூய்மையுடன் துறவு நிலையில் செய்யக்கூடிய அறம் சிறக்கும். அவ்வறத்தை மணிமேகலை மேற்கொண்டாள். துறந்தார் முதற்கண் ஆற்ற வேண்டிய அறம் அருளாகும். துறவியும் கடைபிடிக்க வேண்டிய அறம் அன்பாகும். அந்நல்லறம் செய்தோர் இயல்பை மணிமேகலை,

"வித்தி நல்லறம் விளைந்தவன் பயன்
துய்ப்போர் தம்மனைத் துணிச்சித முத்து
வயிறுகாய் பெரும்பசி யலைத்தற் இரங்கி
வெயிலென முனியாது புயலென மடியாத
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்து முன்
அறங்கடை நில்லா தயர்வோர் பலரால்"(20)

எனக் குறிப்பிடுகிறாள். உலக வாழ்வு நிலையற்றது என்ற உண்மையுணர்ந்தவள் காலங்கடத்தாமல் நல்லறங்களைச் செய்வார்கள் என்பது புலனாகும்.

நல்வினையைச் செய்தவர்களே செல்வர்களாகப் பிறந்து சிறப்புறுவர். நல்லற நெறியைப் பின்பற்றி நடக்காதவர்கள் கந்தைத் துணியைக் கட்டியிருப்பர். வயிற்றைச் சுடுகின்ற பெரிய பசித் துன்பத்தால் பதைப்பார்கள். மழையென்றும் வெயிலென்றும் பார்க்காமல் செல்வர்களின் வீட்டு வாயிலுக்குச் செல்வார்கள். அவர்கள் இடும் பிச்சையை எதிர்பார்த்திருப்பார்கள் எனக் கூறுகிறாள். அறம் செய்தவர்களும், செய்யாதவர்களும் எவ்வாறு இருப்பார்கள் என்பதை அறவழியில் கூறுகிறாள். மக்களை நல்வழிப்படுத்துவதற்கும் இன்பமாக வாழ்வதற்கும் அறம் முக்கியமானது என்பதைச் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலை மூலம் சுட்டி அவளை மிதவாதப் பெண்ணியம் உடையவளாகக் காட்டியுள்ளார்.

சிறந்த அறம்

அறத்தில் சிறந்த அறம் எது என்பதை மணிமேகலை புண்ணியராசனிடம்,

"அறம் எனப்படுவது யாது கேட்பின்
மறவாது இதுகேள்; மண் உயிர்க்கெல்லாம்
உண்டியும் உடையும், உறையும் மல்லது
கண்டது இல்"(21)

என்று குறிப்பிடுகின்றாள். உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் உணவு, உடை, உறையுள் இவைகளைக் கொடுத்து உதவுவதுதான் சிறந்த அறமாகும்.

சிறைச்சாலைகளை அறச்சாலைகளாக மாற்றுதல்

மணிமேகலை காயசண்டிகை வடிவம் கொண்டு சம்பாபதியின் கோயிலிலிருந்த அமுதசுரபியைக் கையிலேந்திக் கொண்டு எங்கும் பசித்தவர்களுக்கு உணவளித்துச் சென்றாள்.

"அதன் அமர்ந்து செய்யாள் உரையும் முகன் அமர்ந்து
நல் விருந்து ஓம்புவான் இல்"(22)

எனும் குறள் நல்ல மனத்துடனும் இன்முகத்துடனும் விருந்து கொடுத்தல் சிறப்பாகும் என்கிறது.

மணிமேகலை நகரத்திலுள்ள சிறைச்சாலைகளில் புகுந்து அங்குத் தண்டிக்கப்பட்டுப் பசியால் வருந்துகின்றோரைப் பார்த்து அருளுடனும், இன்முகத்துடனும், மனமுருகி வரவேற்று அவர்களிடம் இனிய மொழிகள் பேசி அமுதசுரபியிலிருந்து யாவருக்கும் உணவளித்தாள்.

இந்நிகழ்வைப் பார்த்த காவலாளி அரசனிடம் சென்று இச்செய்தியை அறிவித்தான். அரசன் நீ யார்? என்ற கேட்க, என் பெயர் மணிமேகலை

என்கிறாள். அரசன் என் மக்களுக்குத் தீராப்பசியைத் தீர்க்க நான் என்ன செய்ய வேண்டும் என்று மணிமேகலையிடம் கேட்டான். அதற்கு மணிமேகலை, சிறைச் சாலையிலுள்ள கைதிகளையெல்லாம் அகற்றிவிட்டு அவற்றையெல்லாம் அறச்சாலைகளாக மாற்ற வேண்டும் என்கிறாள். அரசன் அவ்வாறே செய்து அவ்விடங்களைப் பல வகையான புண்ணியங்களும் நடத்தற்குரிய இடமாகச் செய்வித்தான். அதனைக் கண்டு மணிமேகலையும்,

> **"சிறையோர் கோட்டஞ் சீத்தரு ணெஞ்சத்**
> **தறவோர்க் காக்கு மதுவா ழியரென**
> **அருஞ்சிறை விட்டாங் காயிழை யுரைத்த**
> **பெருந்தவர் தம்மாற் பெரும்பொரு ளெய்தக்**
> **கறையோ ரில்லாச் சிறையோர் கோட்டம்**
> **அறவோர்க் காக்கின ரைசாள் வேந்தென்"**[23]

எனக்கூறி இன்புறுகிறாள். தண்டனை பெற்றவர்களின் பசிக்கு உணவளித்துச் சிறைச்சாலையை அறச்சாலைகளாக மாற்றிய ஒரு பெண்ணின் புரட்சி; தீவிரவாதப் பெண்ணியப் போக்காகக் காணப்படுகிறது.

வேந்தனும் போற்றும் அறவழி

கஞ்சுகன் எனுமொருவன் மன்னனிடம் சென்று இளமையில் ஒரு புதல்வியானவள் துறவறம் பூண்டு நாவலாந் தீவில் இருக்கிறாள். அவள் பெயர் மணிமேகலை என்கிறான். அது கேட்ட மன்னன் அவளைக் காணச் செல்கிறான். அங்கு அவளைப் பார்த்து என் நாட்டில் செங்கோல் வளைந்ததா? துறவோர் தவநெறியிலிருந்து பிழை செய்தார்களோ? மலர்க் கூந்தலையுடைய மகளிர் கற்புக் குறைந்ததாலோ? என் நாடெங்கும் வறுமை காணப்படுகிறது. அதை நினைத்து வருந்தும் போது என்முன்

ஒரு மாய உருவம் தோன்றி வருந்தாதே; உன் உயர்ந்த தவத்தினால் இங்கு ஒரு மங்கை வருவாள். அவள் கையில் பெருமை மிக்க அமுதசுரபி பாத்திரம் இருக்கும், அப்பாத்திரத்திலுள்ள உணவு அள்ள அள்ளக் குறையாது. அவளின் வழி இங்குள்ள பசிப்பிணி நீங்கும். அவ்வுருவம் கூறியது போல் நீ வந்துள்ளாய் என வேந்தன் அவளை வணங்கினான்.

அதற்கு மணிமேகலை, இளமையும் யாக்கையும் நம்மை விட்டு நீங்கிச் செல்வன. இல்வாழ்வில் பயனடைய வேண்டுமாயின் அறவோர் மகிழும் ஈதல், இசைபட வாழ்தல் என்பதற்கேற்ப அற நெறியிலிருந்து ஈதல் வேண்டும் என்று வேந்தனிடம் கூறி மக்களுக்குப் பசிப்பிணியைப் போக்குவதை,

"தங்கையின் ஏந்திய அமுத சுரபியோடு
தங்காது இப்பசித் தரும வனத்தே
வந்து தோன்றினாள் மாமழை போல் என
மந்திரச் சுற்றமொடு மன்னனும் விரும்பி
கந்திற் பாவை கட்டுரை எனலாம்"(24)

"வாய் ஆகின்றது என வந்துதித்து ஏத்தி
ஆய்விளை நல்லாள் தன்னுழைச் சென்று
செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்கு அவழ்குழார் கற்புக்கு முறைப்பட்டே
நலதகை நல்லாய் நல்லோடு எல்லாம்"(25)

என்கிறாள். ஒரு நாடும் நாட்டு மக்களும் குறைவின்றி வாழ வேண்டுமாயின் பசிப்பிணி இல்லாமலிருக்க வேண்டும். பசிப்பிணியுடன் இருந்தால் நாட்டில் அமைதி கெடும். பசிப்பிணியைப் போக்க வேந்தனுக்கு அறிவுறுத்தி

அறவழிப்படுத்தியது, பெண்மையின் தன்மையைக் காட்டி பெண்ணியத்தைப் போற்றியுள்ளது.

விசையை

விசையை சீவகனின் தாய். சீவகனைச் சுடுகாட்டில் பெற்றெடுக்கிறாள். சீவகன் நல்ல முறையில் வாழ்கிறான். விசையைத் தன்மகன் பிறந்த இடமான சுடுகாட்டை அறக்கோட்டமாக மாற்ற நினைக்கின்றாள். சீவகனைப் பெற்றெடுக்கும் போது அவள் வணங்கும் தெய்வங்கள் உதவவில்லை. இருப்பினும் அவள் கோபம் கொள்ளாமல் அத்தெய்வங்களை நினைத்துக் கோயிலெழுப்புகின்றாள்.

தான் துறவுக்கோலம் அடைந்த போது பெற்ற அனுபவங்களையும் வாழ்வில் கண்ட உண்மைகளையும் கூறுகின்றாள். தன் கணவன் அறநெறியிலிருந்து தவறி அழிந்தான் என்பதை,

> **"கற்சிறை யழிந்து வெள்ளம் கடற்கவியாவருக் கற்றோர்**
> **கொற்சிறை யழிந்து வேந்தன் துணை முலை துறத்தல் கொல்லாமல்**
> **விற்சிறை கொண்டபோதும் புருவத்து விளங்குவேற்காண்**
> **நற்சிறைப் பட்டு நாடும் நகரமும் காவல் விட்டான்"**(26)

எனும் இவ்வடிகள் உணர்த்துகின்றன. தெய்வம் உதவாவிட்டாலும் அத்தெய்வத்திற்குச் சுடுகாட்டில் கோயிலெழுப்பி அறத்தை வலியுறுத்தியது பெண்ணியத்தின் மேன்மையைக் காட்டுவதாகும்.

அருளறம்

ஒருவன் மற்றொருவனுக்கு அருள்மொழி கூறுதல் அருள் பண்பினால் மட்டுமே முடியும். அவ்வருள் பண்பினைப் பெற்றவுடன்

மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்கின்ற எண்ணம் தோன்றிவிடுகிறது. அவற்றினால் அறநெறியினையும் அறப்பண்புகளையும் அதனால் கிடைக்கும் இன்பத்தையும் உணரமுடியும்.

அறநெறிப்பண்புகளில் அருள் எனும் மனிதப்பண்பு சிறந்ததாகும். பிற உயிர்களிடத்தும் அன்பு காட்டி அருளுணர்வுடன் அவர்களை உபசரிப்பது ஒப்பற்றப் பண்பாகக் காணப்படுகிறது. அருளினால் கிடைக்கும் பொருட்களை ஈதல் வேண்டும் இச்செயலை

"தேனர் கடல் வளாகம் பொறுமையின்றி
வெண்குடை நிழற்றிய ஒரு யோற்கும்
ஒரு நாள் யாமத்தும் பகலுந் துஞ்சாண்
செல்வத்துப் பயனே யாதல்
துயப்பே பேனினே தப்புது பலவே"[27]

என்று அருள் நிலையில் வருகின்ற பொருளை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

இதனை வள்ளுவர்,

"அருட் செல்வந் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள"[28]

என்று குறிப்பிடுகின்றார்.

நம்நாட்டு மக்களுக்கு மட்டும் நல்ல அருள், நிலையான அறநெறிகளைச் செய்தால் போதாது. நாடுதோறும் சென்று நல்லறங்களைச் செய்தல் வேண்டும். அருள் பண்புகளை உணர்த்த வேண்டும் என்பதை வளையாபதி,

"ஆற்று மின்னரு ளாருயிர் மாட்டெலாந்
தூற்று மின்றைந் தோநளி நன்னமின்
மாற்று மின்கழி மாயமு மானமும்
போற்று மின்பொரு ளாவிவை கொண்டு நீர்"(29)

என இவ்வாறு குறிப்பிடுகின்றாள். மனிதன் உயிரினங்களிடத்து அருள் செய்பவராக இருக்க வேண்டும். அறங்களைத் தீவினைகள், வஞ்சனைகள் செய்யாமல் கூறுதல் வேண்டும். மனத்தூய்மையுடன் பின்பற்றி இன்புற்று வாழவேண்டுமென்று அறநெறிக் கொள்கைகளைப் பெண் எடுத்துக் கூறுவது பெண்மையைப் போற்றச் செய்கிறது.

உயிர்களிடத்து அருளுணர்வுடன் செய்யுமறம் அறமாகும். மற்றவை அறமாகாது என்பதை வள்ளுவர்,

"தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்"(30)

என்று குறிப்பிடுகிறார்.

செல்வம் இல்லாதவருடைய குலப்பெருமையும், பொறுமை இல்லாதவன் மேற்கொண்ட தவமும், நெஞ்சில் அருள் பண்பு இல்லாதவன் செய்த அறமும் இருளில் கண்ணில் இடப்பட்ட மை போன்றதாகும். இவையெல்லாம் நீங்கி செய்கின்ற அறம் மேலோங்கிப் அறமாக விளங்குவதை,

"பொருளில் சிலரும் பொறாமையில் நோன்பும்
அருளிலறது மனமச்சி லரசு
மிருளினு ளிட்ட விருண்மையாது வென்றே
மருளில் புலவர் மனங் கொண்டுரைப்ப"(31)

என்ற இப்பாடல் எடுத்துரைக்கின்றது. ஆட்டைக் கொன்று அகிம்சையைப் போதித்தல் போல நெஞ்சில் அருள் பண்பு இல்லாதவர் செய்யும் அறம் அறமாகாது என்று பெண் வழிக் கூறி அறத்தை அனைவரும் பின்பற்றக்கூடிய ஒரு தாராளப் பெண்ணிய நோக்கில் கூறியிருப்பது புலனாகிறது.

கற்பு

கண்ணகி

பெண்ணுக்குப் பெருமை தரும் தமிழ்க் காப்பியங்களில் சிலப்பதிகாரமும் ஒன்று. கண்ணகி புகாரில் கற்புக்கடம் பூண்ட அமைதிப் பெண்ணாகத் தோன்றி, மதுரையில் வீரத்தின் விளைநிலமாய், வஞ்சியில் வானுறையும் வாழ்வு பெறுகிறாள் என்பது புலப்படுகிறது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததினால் கண்ணகி, வானுறையும் தெய்வத்துள் வைத்துப் போற்றப்பட்டாள். கோவலனைச் செவ்வேள் என்றும், கண்ணகியை ஒருமாமணியாய் உலகில் தோன்றிய திருமாமணி என்றும் வெளிக்காட்டியுள்ளார்.

கற்பின் அறநெறி

கற்பு என்ற ஒழுக்க முறை பெண்களிடையே இருக்க வேண்டிய ஓர் ஒப்பற்ற பண்பாகக் கருதப்பட்டது. வின்சுலோ தமிழகராதி “கற்பு என்பதற்கு **மகளிர் கற்பு** என்றே பொருள் தருகிறது. கற்புடைமை, கற்பு நெறி என்பதற்கும் ‘Female Chastity and Virtue’ என்றே விளக்கமளித்துள்ளது. கற்பு என்றால் அது பெண்களுக்குரியது”(32) என்று இவ்வகராதி எடுத்துக்காட்டுகிறது.

இளங்கோவடிகள் குறிப்பிடும் பெண்ணிய நெறிகளுள் தலையாயது கற்பு நெறி. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்று பதிகம் குறிப்பிடுகிறது. "கண்ணகியைப் பத்தினி, மாபத்தினி, வீரபத்தினி, பலர் தொழு பத்தினி, பொருவரு பத்தினி, கடவுட் பத்தினி எனப் பலவாறு பாராட்டுவதன் மூலம் இந்நெறிக்குக் கொடுத்துள்ள முதன்மை விளங்கும்"(33) என்பர்.

பாரதியார் ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பைப் பொதுவில் வைப்போம் என்றார். இக்கருத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில், "கற்பு என்ற ஒரு மனிதக் கோட்பாட்டிற்குத் தெய்வீக மதிப்புக் கொடுத்து அதைப் பெண்கள் மட்டுமே கைக்கொள்ள வேண்டும். இக்கோட்பாட்டை ஆண் வர்க்கத்தினரின் அடக்குமுறை மற்றும் அறிவார்ந்த போக்கு என்று இக்கருத்தைப் பெண்கள் அப்படியே ஏற்றுக் கொண்டனர். இச்செயல் பெண் வர்க்கத்தின் அறியாமை மற்றும் அடிமைப் போக்கினை இனங்காட்டுகிறது"(34) என்கிறார் இரா.பிரேமா. இக்கூற்றின் படி, கற்பு என்பது பெண்கள் தங்கக் கூண்டிற்குள் அடைபட்டவர்களாக இருப்பதையே காட்டுகிறது.

சிலம்பில் கண்ணகி அவ்வகையான கற்பு நெறியுடன் படைக்கப்பட்டிருக்கிறாள் என்பதை,

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர் மன்றுங் கண்ணகியென் பாண் மன்னோ"(35)

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. தீதிலா வடமீனின் திறம் என்பதில்,

கற்பில் சிறந்த (விண்மீன்) அருந்ததியைப் போன்று கண்ணகி காணப்படுகிறாள். அருந்ததி வசிட்டரின் மனைவி. இவள் கற்பில் சிறந்தவள். இவள் கற்பு கண்ணகியின் கற்பொத்தது என்றும் கற்பில் கண்ணகி அருந்ததியைப் போன்றவள் என்றும் இளங்கோவடிகள் போற்றியதில் கண்ணகியைக் கற்புத் தெய்வமாக உணர்த்த விரும்புவது புலனாகும்.

கோப்பெருந்தேவி

கற்பு பெண்களின் ஒழுக்க நெறிகளில் முதன்மையாகக் கருதப்பட்டது. ஒரு பெண்ணுக்குக் கணவனே சமூக, பொருளாதார, கலாச்சாரப் பாதுகாப்பாக அமைய முடியும் என்று கற்புக் கோட்பாடு உணர்த்துகிறது. “பெண்ணுக்குக் கற்பு விதிமுறையில் தன் கணவர் ஏழேழு பிறவியிலும் தம்மைக் கைப்பிடிப்பர் என்ற அசையா நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். அடுத்த பிறவியிலும் அவனே தன் கணவனாக அமைதல் வேண்டும் என்ற ஆசையும் கொண்டிருப்பாள்”(36) என்பர்.

கற்பு தலைக்கற்பு, இடைக்கற்பு, கடைக்கற்பு என மூன்று வகையாகக் காணப்படுகிறது. கணவன் இறந்த மறுகணமே மனைவி இறத்தல் தலைக்கற்பாகும். அவ்வாறான தலைக்கற்புக்கு எடுத்துக்காட்டுடன் விளங்கியவர் பாண்டிய நெடுஞ்செழியனின் மனைவியான கோப்பெருந்தேவியாவாள். இவள் தன் கணவன் இறந்தவுடன் இறந்ததை,

“மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தன ணடுங்கிக்
கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவதில்லென்”(37)

"கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொற்செவியில்

உண்டளவே தோற்றா னுயிர்"[38]

இவ்வாறு மதுரைக்காண்டம் வழக்குரைக்காதையில் இடம்பெற்றுள்ளது. இதில் கோப்பெருந்தேவி தலைக்கற்புடையவள் என்பதும் ஒழுக்க நெறியில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பை வலியுறுத்துவதாகவும் அமைகிறது. இது பெண்மையின் ஒழுக்கமேன்மையை எடுத்துக் கூறுகிறது.

மணிமேகலை

மக்கள் பலதரப்பட்ட பண்புகளை உடையவர்கள். சிலர் குறிப்பிட்ட கொள்கைகளைக் கடைபிடித்து வாழ்வர். "மக்களாகப் பிறந்தவர்கள் நலமாகவும் வளமாகவும் வாழ்வதற்கும் பல உரிமைகளை இயல்பாகப் பெற்றிருக்கின்றனர். அதைப் போன்றே அவர்கள் சில கடமைகளையும் ஆற்ற வேண்டியவர்களாக இருக்கின்றனர்."[39]என்பர். மகளிர் கடமைகளில் தாய் தன்மகளை நல்வழிப்படுத்துவதும் ஒன்று. மாதவி தன்மகளை அறநெறியில் வாழவைப்பதற்குக் கற்பின் மேம்பாடுடைய கண்ணகியின் மகளென்று குறிப்பிடகிறாள். இதனை,

"மாபெரும் பத்தினிமகள் மணிமேகலை

அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்

திருந்தாச் செய்கை தீத்தொழிற்படா அள்"[40]

எனும் அடிகள் புலப்படுத்தும். மணிமேகலையைக் கற்புக்கரசியான கண்ணகியின் மகளென்று குறிப்பிடும் போது மணிமேகலை கற்பில் சிறந்தவளென்பதும் அறம் செய்வதற்கென்றே பிறந்தவள் என்பதும் புலனாகிறது.

தீவத்திலகை

கற்பு பெண்களுக்கு ஓர் ஒப்பற்ற அணியாகும். அவ்வாறான கற்பை,

"இம்மைச் செய்தது மறுமைக்காமெனும்
அறிவிலை வாணிகனா அயல்லன்"(41)

என்று புறநானூறு குறிப்பிடுகிறது. கற்புள்ள பெண்கள் எச்செயலை நினைத்தாலும் அச்செயல் நடந்து முடிந்துவிடும் என்ற கருத்தியல் தமிழகத்திலுண்டு. சாத்தனார் பெண்களின் கற்பைப் பற்றித் தீவத்திலகை வழி,

"மண்டிணி ஞாலத்து மழை வளந்தரூஉம்
பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகாஅர்
புக்கேன் பிறனுளம் புரிநூன் மார்பன்
முத்தீப் பேவை முறையெனக் கில்லென"(42)

எனும் பாடலடிகள் வாயிலாகக் குறிப்பிடுகிறார். கற்புள்ள பெண்கள் மழைபெய் என்றால் பெய்யும். இவர்கள் கணவனைத் தவிர வேறு எந்த ஆடவரையும் பாலியலில் நினைக்கமாட்டார்கள். இவ்வாறு கற்பு நிலைப் பெண்கள் செயல்திறன் எப்படிப்பட்டதென்று கூறி பெண்ணியத்தைப் போற்றியுள்ளார் சாத்தனார்.

ஆதிரை

மணிமேகலையில் குறிப்பிடத்தக்க பெண்பாத்திரம் ஆதிரை. இவளின் வாயிலாகச் சாத்தனார் அக்காலப் பெண்களின் நிலையைக் காட்டியுள்ளார். "கணவன் வியாபார நிமித்தம் வேற்று நாட்டுக்குச் செல்ல;

மனைவி அவன் வரும்வரை தன்னைக் கல்லாக்கிக் கொண்டாள். இச்செயல் பெண்கள் மனத்தில் கற்பு பற்றிய தீவிரக் கண்ணோட்டத்தை உருவாக்குகின்றன"[43] என்பதை உணரமுடிகிறது.

மணிமேகலைக் காப்பியத்தில் ஆதிரைக் கற்புக்கரசியாகப் போற்றப்படுகின்றாள். மணிமேகலை பெற்ற அமுதசுரபி பாத்திரத்தில் முதல் பிச்சை பெற்றவளாகக் காணப்படுகிறாள். ஆதிரையின் கணவன் சாதுவன் பொருள் தேடச்சென்று வெகு காலமாகியும் வரவில்லை. பின்பு ஒரு நாள் வந்தான். அவனை வெறுக்காமல் கணவனுடன் சேர்ந்து வாழ்வதே அறம் என நினைத்தாள். கணவனுடன் சேர்ந்து அறச்செயலை மேற்கொள்கிறாள். தீய எண்ணங்களுடன் சென்ற சாதுவன் திரும்பி வருகின்றபோது தூய்மையான மனிதனாக வருகிறான். இருவரும் சேர்ந்து நல்ல பல தானங்களைச் செய்கின்றார்கள். இதை,

"புனையா வோவியம் போல நிற்றலும்
தொழுதுவங் கொண்டு துயரறு கிளவியோ
அமுத சுரபியி னகன் சுரை நிறைதரப்
பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென
ஆதிரை யிட்டன னாருயிர் மருந்தென"[44]

இவ்வாறு எடுத்துரைக்கின்றார். நல்லறங்களையும் நல்ல தானங்களையும், கணவனுடன் சேர்ந்து செய்வதற்கு இவளின் கற்பு நெறி வழிவகுக்கிறது. கற்பின் வழி பெண்மையைப் போற்றி பிறபெண்களும் மேற்கொள்ளத் தக்க பாத்திரமாகத் தாராளப் பெண்ணியத்தைச் சார்ந்தவளாகக் காணப்படுகிறாள்.

தவம்

தவம் இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் என இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. "தவம் என்ற சொல்லுக்கும் எரித்தல் என்றும், துலங்குதல், தணல், திகழ்கரல், துறவறப் பயிற்சி என்பது பொருள்படுகிறது."(45)

துறவறத்திற்குத் தவம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இத்தவச் சிறப்பினை வள்ளுவர்,

"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்"(46)

எனக் குறிப்பிடுகின்றார்.

மணிமேகலை பிறந்தவுடன் கணிகையர்கள் பலர்கூடி பெயரிட வேண்டுமெனக் கூறினார்கள். அப்பொழுது கோவலன் மாதவியிடம் எனது குலதெய்வப் பெயரினை இடுக என்று கூற; அவ்வாறே மணிமேகலை எனப் பெயரிட்டாள். அன்று இரவில் மாதவியின் கணவில் மணிமேகலா தெய்வம் தோன்றி இவள் துறவுக்கென்றே பிறந்தவள் என்பதையும் தவ வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதையும்,

"காமன் கையறக் கடுஞ்ன வயறுக்கும்
மாசருந் தவக் கொடியின் றனை யென்றே"(49)

எனக் குறிப்பிட்டது. அவள் பிறந்த உடனே துறவு நிலைக்கு வழி கோலப்பட்டது.

மணிமேகலை தன் மகளைப்பற்றி குறிப்பிடும் போது இவள் தவத்திற்கென்றே பிறந்திருக்கிறாள் என்கிறாள்.

"அருந்தவம் படுத்த வல்ல வகியாவதும்

திருந்தாச் செய்கை தீத்தொழிற்படா அள்"(48)

என்ற பாடலடிகள் அதற்குச் சான்றாக அமையும். மாதவி தன் மகளைத் துறவு நிலைக்குக் கொண்டு சென்று தவ வாழ்வினை மேற்கொள்ளச் செய்வது அறக் கோட்பாடு சார்ந்த பெண்ணியச் சிந்தனையாகும்.

வளையாபதி

இக்காப்பியம் முழுவதும் கிடைக்கவில்லை. கிட்டிய சில பகுதிகள் பொதுவான அறக்கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றன. இதன் ஆசிரியர் வளையாபதி எனும் பெண் மாந்தரின் வழி அறக்கருத்துக்களை வலியுறுத்துகிறார்.

தவம்

மனித வாழ்க்கையில் தவம் துறவு நிலைக்குச் சமமாகக் கருதப்படுகின்றது.

"தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை

அஃதிலார் மேற்கொள் வது"(49)

என்பது வள்ளுவப் பெருந்தகை வாக்கு. தவம் முற்பிறவியில் செய்தாலும் இப்பிறவியிலும் தொடரும் என்று குறிப்பிடுகின்றார். யசோதரகாவியம் தவத்தின் சிறப்பை,

"பெருகிய கொலையும் பொய்யும் களபெரு பிறன் மணக்கள்

தெரிவினைச் செலவு சிந்தை பொருள் வயிற்றி குருபற்றும்

மருவிய மனத்து மீட்சி தமிவை யைந்தோ டொன்றி மென்குள்

ஒரு வினை புலென் தென்க ளொடு புதலொலுக்க"(50)

என்னும் அடிகள் வழி உணர்த்துகின்றது.

வளையாபதி, மக்கள் நல்ல தவங்களை மேற்கொண்டு நாடும், நாட்டுமக்களும் நல்வாழ்வு வாழ வேண்டுமென்கிறது. பிறருக்குதவுகின்ற மனப்பான்மை வேண்டும். அவ்வாறிருந்தால் தேவர்கள் உங்களைப் பாராட்டி அவர்களிருக்கும் இடத்திற்கே அழைப்பர். இதனை,

"தர நல்தவந் தாங்கித் தலைநின் முன்
ஊரு நாடு மூவத்த லொருதலை
வீரவேன்றி விறன் மிகு விண்ணவர்
சீரி னேத்திச் சிறப்பெதிர் கொள்பவே"[51]

எனும் இப்பாடல் எடுத்துக் கூறுகின்றது. தவத்தின் வழி அறத்தைச் செய்தல் வேண்டும் என்கிறது. பெண்கள் தவம் செய்தால் தேவரும் போற்றுவரென பெண்மையைத் தவத்தின் வாயிலாக வெளிக்காட்டுகின்றது.

இல்லறம் சிறக்கும் தவம்

நல்ல தவவாழ்வினை மேற்கொள்பவர்கள் இவ்வுலகத்தில் இல்லறத்துடன் இன்பமாகவும், சிறப்பாகவும் வாழ்வார்கள். இதனை வள்ளுவர்,

"தன்துயர் தாறைப் பெற்றுணை யோனையை
மன்னுயிர் ரெல்லாந் தொழும்"[52]

என்று குறிப்பிடுகின்றார். இக்கருத்தினைச் சைவ சமயநூலும்

"தேவமிடம் காலந்திக் காவனங்களின்றிச்
செய்ப தொன்று போல் செய்யா செயலாதலைச்
கூகில் படுமென மின்றி யுலா வளாற்ற
....

....

மடைத்தாது ஞானிகடா மரணடியை யகலார்"[53]

என்று தவத்தின் சிறப்பினைக் குறிப்பிடுகிறது.

அறநெறியில் பொருள் ஈட்டுதலும் பெண்களோடு புணர்ந்து இன்பம் பெறுதலும், தவ ஒழுக்கத்திற்கு இடையுறாகாது. பொருள்கள் மேல் பற்றில்லாதவனும் காமயின்பத்திற்கு அடிமையாகாமலும், உயிர்களுக்குத் தீங்கு செய்யாதவர்களும் செய்கின்ற தவமே மெய்யான தவமாகும் எனச் சுட்டியுள்ளது. இப்பண்புகளைச் செவ்வனே செய்கின்றவர்களின் இல்வாழ்க்கை மென்மேலும் சிறக்கும். இவர்கள் வீடுபேற்றினையும் அடைவார்கள். இக்கூற்றினை வளையாபதி,

"பொருளோடு போகம் புணர்ந்த தூரினும்
அறுதல் சான்ற விருந்தவஞ் செய்ய மின்
இருளில் கதிச் சென்றினி யாவன் வாரீர்
தெருள துளிறுந் தெகுண மினதுவே"[54]

என்று குறிப்பிடுகின்றாள். தவத்தின் சிறப்பால் இல்வாழ்வு சிறக்கும் என்று ஒரு பெண்ணின் கூற்றின் வாயிலாகப் பெண்ணியத்தைப் போற்றியுள்ளார் ஆசிரியர்.

தவமென்பது அறநெறியில் வலிமைமிக்க ஓர் ஆயுதம். தவம் செய்தவர்கள் நினைத்ததை அடைந்துள்ளார்கள் என்பதை இலக்கியங்கள் கூறுகின்றன. அத்தவத்தின் வலிமையை வள்ளுவப் பெருந்தகை,

"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்"[55]

என்று குறிப்பிடுகிறார். வளையாபதி தவத்தின் வலிமையை,

“தவத்தின் மேலுறை வாழ்வாதல் இங்கு

....

....

சிறத்தின் வானுறை வையகம் காட்டும் வாழ்வு”[56]

என்று கூறுகிறாள். தவ ஒழுக்கத்தின் வழி நடத்தல், பொருள்மேல் ஆசை கொள்ளாதிருத்தல், மனம், மொழி, உடம்பு இம்மூன்றையும் அடக்கி அறத்தோடு நிற்றல், விருப்பக் குணத்தை வெறுத்தல், எல்லா உயிரினங்களிடத்தும் அன்பு செலுத்துதல், பொய்யான பொருள்மீது ஆசை கொள்ளாமலிருத்தல் ஆகியவற்றைக் கடைபிடித்தால் தவத்தின் பயனை அடையலாம் என்று வளையாபதி கூறுகிறாள். பெண்கள் பயனடைவதற்குத் தவத்தின் வலிமையைக் கூறி தாராளப் பெண்ணியத்தை வலியுறுத்துவது ஈண்டு புலனாகும்.

தவத்தைப் பின்பற்றி அறநெறி மேற்கொண்டால் வீடுபேறு கிட்டும் என்றும் குறிப்பிடுகிறது. போகமும், பொருளும் தவமாகும். அத்தவத்தை,

“வேண்டிய வேண்டியாங் செய்தலாள் செய்தவம்

ஈண்டு முயலப்படும்”[57]

என்கிறார் வள்ளுவர்.

நல்ல தவப் பண்பினை உடையோருக்கு எல்லாப் பொருளும் கிட்டும். இல்லாதார் அப்பொருளை அடைய முடியாது. வீடு பேறு அடைவதற்குத் தவம் இன்றியமையாததாகும். இதனை,

“உய்த் தொன்றி யேர் தந்துறவு தாற்றவும்

....

....

தெய்த்துழக் தேகா னிடர் படுமாறே"[58]

என்று வளையாபதி பாடலடிகள் எடுத்துக் கூறும். தவம் பெண்மையின் ஒரு கூறு என்பதை எடுத்துரைக்கிறது.

துறவு

இன்ப, துன்பங்களைத் துறந்து எல்லாயுயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் துறவு நிலையாகும். துறவு நிலையில் இருந்து கொண்டு அறநெறியை வலியுறுத்துதல் சிறப்புடையதாகும். "இல்லறத்தில் வழுவாது வாழ்ந்து பிறகு வரும் பிறவியை நினைத்து அஞ்சி அதனை நீங்குதற்பொருட்டு மேற்கொள்ளப்படும் துறவு வாழ்க்கையே துறவறமாகும். இல்வாழ்வில் ஆற்றும் அறங்களைப் போல துறவு மேற்கொண்டார் ஆற்ற வேண்டிய அறங்களும் பல உண்டு"[59] என்பர் சொக்கலிங்கம்.

ஒருவனோ, ஒருத்தியோ தன்னலம் ஒழித்துப் பிறர் நலம் நாட வேண்டுமாயின் இல்வாழ்க்கையில் ஈடுபட வேண்டும். அவ்வாழ்வில் ஈடுபடும்போது தன்னலங் குறைந்து தன் குடும்பத்தில் கருத்தைச் செலுத்தத் தொடங்குவர். பிறகு மற்றவர்கள் நலத்திலும் நாட்டம் செல்லும். இவ்வாறான துறவு வாழ்க்கையை மாதவி மேற்கொண்டாள்.

மாதவி கோவலனுடன் இல்லற வாழ்க்கை வாழ்ந்தாள். இருவருக்கும் மணிமேகலை என்ற பெண் பிறந்தாள். கோவலன் மாதவியைப் பிரிந்த போதும் மாதவி அவனை மறக்காமல் வாழ்ந்தாள். கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தி கேட்ட மாதவி தன் குலவொழுக்கப்படி இன்பத்துடன் வாழ்ந்திருக்கலாம். கோவலனில்லாத இல்வாழ்க்கை வேண்டாமென துறவு மேற்கொண்டாள்.

“மங்கள மடந்தை மாதவி தன்னோடு

செம் பொன் மாரி செங்கையிற் பொழிய”[60]

“போதியின் கீழ் மாதவர் முன் வுண்ணியதா கைம்புரிந்த

மாதவி தன்னுறவுங் கேட்டாயோ தோழி”[61]

என்ற பகுதி விளக்கும். கணிகையர் குலப்பெண்ணாக இருந்தாலும் அறநெறியுடன் வாழவேண்டுமென உறுதி பூண்டாள். குலப் பண்பில் மாறுபட்டுத் துறவுபூண்டு வாழ்ந்ததைத் தீவிரவாதப் பெண்ணியப் போக்கைச் சார்ந்ததாகக் கருதலாம்.

கவுந்தியடிகள்

சிலப்பதிகாரத்தில் துணைமை மாந்தர்களுள் சிறப்பிடம் பெறுபவர். இவர் ஒரு சமணத் துறவி. மக்களை நல்வழிப்படுத்தும் அறநெறிக் கொள்கையுடன் காப்பியத்தில் காணப்படுகின்றார். “தக்க இன்ன தகாதென என்று ஒக்கவுணரும் உணர்வுடையோரே மனிதராவார். மனிதச் செயல்களைத் தரம் பிரித்தறிய முன்னோர் வகுத்தளித்த நெறி அறமாகும்”[62] அத்தர வரிசையில் புகார் காண்டம் இறுதியில் தொடங்கி மதுரைக் காண்டம் வரைக் காணப்படுகிறாள். கோவலன் கண்ணகி இருவரையும் மதுரைக்கு அழைத்துச் செல்லும் வழியில் அவர்களுக்கு நல்லறங்களைக் கூறுகிறார்.

துறவியென்பதை முதலில் வெளிப்படுத்துவது அவர்களின் உருவம், ஆடைத் தோற்றம், செம்மையான பேச்சு, குணம் போன்றவையாகும். இவ்வனைத்தும் கவுந்தியடிகளிடம் காணப்பட்டதை,

“இருங் கொடி நுசுப்போடு இணைந்தடி வருந்தி

....

………….. ……………. ……………. …………….

முதிராக் கிளவியின் முள் எயிறு இலங்க"[63]

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். முதிராக் கிளவி என்பதன் மூலம் ஓர் அனுபவம் வாய்ந்த துறவி என்பதை அறிய முடிகிறது. துறவு அறத்தின் அங்கமென்பதைப் பெண் துறவி வாயிலாக உணர்த்தி பெண்மையைப் போற்றியுள்ளார்.

மணிமேகலை

குடும்பம் மற்றும் சமுதாய முன்னேற்றத்தில், வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பவள் பெண். "பெண்களின் மன வளர்ச்சி, அவள் உருவாக்கும் செயல்பாடுகள், பண்புகள் வருங்கால சந்ததிக்கு உரமாகின்றது."[64]இதன்வழி பெண் வாழ்வில் துறவு போற்றுதற்குரியதாகும்.

மனிதப் பண்புகளில் தன் இன்பத்தைப் பெரிதாக நினைக்காமல் மற்றவர்களுக்காகத் தனது இன்பத்தைத் துறந்து ஆற்றும் செயல் மகத்தானது. மற்றவர்களிடம் அன்புகாட்டுதல், இழிகுணத்தை அகற்றுதல், உலகத்தோடு ஒட்டுதல், இரக்கம் காட்டுதல், வாய்மை பேசுதல் ஆகிய ஐந்தும் சான்றோர்களுக்குத் தீமை செய்யாத மன வலிமையாகும். இம்மகத்தான நோன்பு துறவு நிலையாகும். இதனை,

"ஈட்டலுந் துன்பமற் றீட்டிய பொன்பொருளைக்
காத்தது மாங்கே கடுந்துன்பம் - காத்தல்
குறைபடின் துன்பம் கெடின் துன்பம் ஒன்பக்
குறைபதி மற்றைப் பொருள்"[65]

என நாலடியார் துறவு நிலையைக் கூறுகிறது.

மணிமேகலையின் தாய் மாதவி கணிகையர் குலத்தில் தோன்றினாலும் தம்மகளைத் துறவு பூண வைத்துப் பெண்ணியப் புரட்சி செய்கிறாள். தன்மகளை,

> **"நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்**
> **மணிமே கலையை வான்றுய ருறுக்கும்**
> **கணிகையர் கோலங் காணா தொழிகெனக்**
> **கோதைக் தாமங் குழலொடு களைந்து**
> **போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும்"**(66)

எனக் குறிப்பிடுகின்றாள். இளமையில் ஒரு பெண்ணை அவளின் தாயே துறவு நிலைக்குக் கொண்டு செல்வது புரட்சியாகும். மாதவி தான் பிறந்த கணிகையர் குலத்திலிருந்து மீள வேண்டும் என்ற உள்நோக்கமும் புலப்படுகிறது. பெண்ணை வைத்து ஒரு பெண் புரட்சி செய்வது தீவிரவாதப் பெண்ணியம் சார்ந்ததாகும்.

சீவக சிந்தாமணி

சீவகன் தாயான விசையைத் தன் மகன் பிறந்த அறக்கோட்டத்தில் துறவு நிலையில் இருந்து கோயில் எழுப்புகிறாள். துறவு நிலை வாழ்வின் உண்மைகளைக் கூறி ஓர் அறப்பெண்ணாகயிருந்து சமதர்மப் பெண்ணியத்தை வலியுறுத்தியுள்ளாள்.

விருந்தோம்பல்

பெண்மை என்பதற்கு மென்மை, தாய்மை என்பது பொருள். பெண்கள் பொறுமையின் இருப்பிடம். மென்மைக் குணத்தாலேயே அவர்களுக்குப் பெண் என்ற பெயர் வந்ததெனலாம். தமதில்லம் வரும்

விருந்தினர்களை உபசரிப்பதில் இலக்கியம் தோன்றிய காலம் தொட்டுச் சிறப்பிடம் பெற்றுள்ளார்கள். “விருந்து என்னும் சொல் புதுமை என்னும் பொருள்படும். ஆதலின் புதிதாக வருபவரே விருந்தினர். இல்லம் நோக்கி வரும் விருந்தினர்க்கு இன்முகம் காட்டி இன்சொல் கூறி உண்டியும், உடையும், உறையுளும் தந்து உபசரிப்பதே விருந்தோம்பல்”(67) என்பர் சொக்கலிங்கம். இல்லறத்தார் ஆற்ற வேண்டிய இனிய கடமைகளுள் விருந்தோம்பலும் ஒன்றென இயம்புவர். விருந்தோம்பல் செய்வதன் நற்பயனை,

“இனைத்துணைத்து என்பது ஒன்றில்லை விருந்தின்
துணைத் துணை வேள்விப் பயன்”(68)

என்பார் வள்ளுவர்.

கண்ணகி இறுதி வரையில் தன் கணவன் தனக்குத் தீங்கு விளைவித்ததாகக் கருதவில்லை. தான் துன்புற்றதாகவும் கூறவில்லை. இல்லறத்தில் நல்லறமாகக் கருதப்படும் விருந்தோம்பலைத் தன் கணவனுடன் இருந்து செய்ய முடியவில்லையே என்று அவள் வருந்தியதை,

“அறவோர்க்கு அளித்தலு மந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னைநும்”(69)

எனும் இவ்வடிகள் மூலம் உணரமுடிகிறது. விருந்தோம்பல் பண்பினைக் கண்ணகியைப் போல பிற பெண்களும் பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்துவது சமதர்மப் பெண்ணிய நோக்காகும்.

தம்மில்லத்திற்கு வரும் விருந்தினரின் கால்களைக் கழுவி விருந்தோம்பியதை இலக்கியங்கள் சுட்டுகின்றன. பெரிய புராணத்தில் அப்பூதி நாயனார் திருநாவுக்கரசரைத் தன் மனைக்கு அழைத்து விருந்தளிப்பதற்கு முன் நாயனார் கால்களை நீரால் தூய்மை செய்தார். குவளையிலிருந்த மீதமுள்ள நீரைக் குடும்பத்தினர் உட்பட அனைவரின் தலைமேல் தெளித்துக் கொண்டார்கள். இதனை,

"முனைவரை உள் எழுத்தரு ளுவித்து
அவர்தான் முன் விளக்கும்
புனை மலர் நீர் தாங்கள் மேல் தெளித்து
உள்ளம் பூரித்தாள்"(70)

என்ற பாடல் சுட்டும்.

கோவலனும் கண்ணகியும் மதுரையை நோக்கி நடந்து செல்கின்ற பொழுது இளைப்பாறுகின்றார்கள். அவ்விடத்தில் ஆயர் மகளொருத்தி அழகாகப் பின்னிய ஓலைத் தடுக்கில் கோவலன் அமருமுன் கால்களைக் கழுவி அந்நீரைத் தொழுதாள். கோவலன் அமர்ந்த பின் தரையில் தண்ணீர் தெளித்துக் தடவி வட்டமிட்டு, ஈனா வாழையின் குருத்தை விரித்து அமுது படைத்தாள். இந்நிகழ்வை,

"கடிமலர் அங்கையின் காதலன் அடி நீர்
சுடுமண் மண்டையில் தொழுதனள் மாற்றி
மண்ணக மடந்தையை மயக் கொழுப்பினற் போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருந்தகம் விரித்திங்கு
அமுதம் உண்க அடிகள் ஈங்கென"(71)

என எடுத்துரைக்கிறார் ஆசிரியர். அக்காலத்தில் கணவன் கால்களைக் கழுவி உணவு படைத்தல் அறநெறிப் பண்பாகவும், பெண்களின் பண்புகளில் உயர்ந்ததாகவும் காணப்படுகிறது. இதன் வாயிலாகப் பெண்ணுக்குக் கொடுத்துள்ள முதன்மை வெளிப்படுகிறது.

மணிமேகலை

பெண்களுக்குரிய பண்புகளில் விருந்தோம்பல் சிறப்பிடம் பெறும். "மனித அறநெறிப் பண்புகளில் ஒன்று விருந்தோம்பலாகும். விருந்து என்ற சொல்லிற்குப் புதுமை என்று பொருள் கண்டுள்ளார்"[72] தொல்காப்பியர்.

இரவு நேரத்தில் விருந்தினர்கள் வந்த பிறகும் வேறு எவரேனும் வருவார்களா என்று எதிர்பார்த்து வேலைக்காரர்களை வாயிலுக்கு வெளியே பார்த்து வரச்சொல்வதும்; ஒருவரும் இல்லையென்று தெரிந்த பின்னரே வாயிற் கதவை அடைப்பது வழக்கம். இக்கருத்தை அரண் செய்யும் வகையில்,

"............. மாலைப்
பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளிரோ வெனவும்
வாரார் தோழி"[73]

என்ற குறுந்தொகைப் பாடல் அமைகிறது. இதன் வாயிலாகச் சங்க காலம் முதல் இக்காலம் வரை தமிழரின் விருந்தோம்பல் பண்பை அறிய முடிகிறது. இது மேலும் வளர்ந்து இப்பொழுது அன்ன தானமாகக் காணப்படுகிறது.

ஒரு மனிதன் தன் அன்றாடக் கடமையில் பசியென்று வந்தவர்களுக்கு உணவு வழங்க வேண்டும். "மக்களுக்கு உணவளிப்பதே சிறந்த தர்மம், உயர்ந்த சமூக ஊதியம், தேசத் தொண்டு, மக்கள் சமூகத்தை அமைதியுடன் வாழச் செய்யும்."(74) என்கிறார் சிதம்பரனார்.

புறநானூறு உணவு கொடுத்தோரை சிறந்த பண்பினராகக் குறிப்பிடுகிறது.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"(75)

என்ற அடி சான்றாக அமையும். மணிமேகலை உணவு அளிப்பதின் அவசியத்தை,

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"(76)

என்று குறிப்பிடுகிறாள். உயிருக்கு உணவு அடிப்படை. உணவினைக் கொடுப்பவர்கள் உயிர் கொடுத்தற்குச் சமமாகக் கருதப்படுவார்கள். பெண் வாயிலாகச் சமதர்மப் பெண்ணியப் போக்கையும் வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

காந்தி நகரத்தில் பஞ்சத்தால் மக்கள் பட்டினியாகயிருந்து உயிரிழந்தார்கள். அச்சூழலில் மணிமேகலை அந்நகருக்குச் சென்று தன் கையிலுள்ள அமுதசுரபி பாத்திரத்தின் வாயிலாக அனைவருக்கும் உணவளித்து உயிர் கொடுத்ததை,

"அங்கையின் ஏந்திய அமுத சுரபியை
வைத்து நின்று எல்லா உயிரும் வருக
பைத்து அரவு அல்குல் பாவைதன் கிளவியின்
மெய்த்தவ மூவ வறுபாடை மக்களில்

கானார், கேளார், கால்முடப்பட்டோர்

பேணா மாக்கள், பேசார் பணிந்தோர்

படிவ நோன்பியர் பசிநோய் உற்றோர்

....

....

சீர் பெற வித்திய வித்தின் விளைஅும்

பெருகியது எனைப் பெருவளம் தந்தது எனப்

வசித் தொழில் உதவி வளம் தந்தது எனப்

பசிப்பிணி தீர்த்த பானவியை ஏந்திச் செல்லும்”(77)

என்ற பாடலடிகள் நவிலுகின்றன. அமுத சுரபியை ‘உள்ளங்கையிலே ஏந்தி எல்லாவுயிர்களும் உணவுண்ண வருக என்று அழைப்பாள். பதினெட்டு மொழி பேசக் கூடியவள். காது கேட்காதவர்கள், ஊனமுற்றவர்கள், ஆதரவற்றவர்கள், வாய்பேசாதோர், நோயினால் வாடுகின்றவர்கள், தவக்கோலம் உடையவர்கள், பசி நோயினால் வருந்தியவர்கள், வறுமையுடையோர் போன்றவர்களுக்கு உணவளித்து உயிர் கொடுத்தாள். உணவு கொடுப்பதில் நாடு, மொழி, சமயம், இன வேறுபாடு பார்த்தல் கூடாது என்ற சமதர்மப் பெண்ணியக் கோட்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது.

முற்பிறவியில் மணிமேகலை இராகுலன் என்பவனுக்கு மனைவியாக இருந்தாள். சதுசக்கரன் என்னும் முனிவனை உபசரித்து உணவளித்தாள். அப்புண்ணிய நெறி அவளைத் தொடர்ந்து நின்று இறுதியில் அவள் முக்தி பெறுவதற்கு மூலமாக இருந்தது.

மணிமேகலை முற்பிறவியில் செய்த விருந்தோம்பல் பண்பு இப்பிறவியில் தொடர்கிறது என்பதை,

"பகையறு பாத்தியன் பாதம் பணிந்தாங்
கமர கேணின் றமரல மாயினும்
அந்தீந், தண்ணீ ரமுதொடு கொணர்கேம்
உண்டி யாமுன் குறிப்பின மென்றலும்
எம்மனை யுண்கே னீங்குக் கொணர்கென
அந்நா ளவனுண் டருளிய வவ்வறம்
நின்னாங் கொழியாது நின்பிறப் படுத்திடும்"[78]

என இவ்வடிகள் குறிப்பிடுகின்றன.

"இல்லறம் நடத்தும் கணவனும் மனைவியும், அன்புடையராயிருந்து தம் இல்லத்திற்கேனும், ஊருக்கேனும் புதிதாக வந்த உயர்ந்தோரையும், ஒத்தோரையும், அவர் தங்கும் பல நாட்களுக்கு ஏற்ப உறையும், சிறந்த உணவும் கொடுத்து உதவி செய்தல் விருந்தோம்பல் பண்பில் சிறப்பானதாகும்."[79] இந்நெறி நின்று முற்பிறவியில் ஒழுகினாள் மணிமேகலை.

மணிமேகலை அமுதசுரபி வாயிலாக உணவளிப்பதற்குக் காரணம், சென்ற பிறவியில் நான் விரும்பிய காதலன் உயிர்விட்டான். நானும் அவனுடன் தீயில் பாய்ந்து உச்சிப் பொழுதில் உயிர்துறக்கும் போது, என் முன் தோன்றிய சாதுசக்கர முனிவனைக் காணும்போது அம்முனிவனுக்கு முன் உணவளித்த நிகழ்வு மனதில் இருக்கும் நிலையில் உயிர் பிரிந்தது. அந்த நிலையில் இப்பிறவியில் உயிர்காக்கும் பாத்திரம் அமுதசுரபி என்னிடம் கிடைத்துள்ளது. பாத்திரத்தில் வரும் உணவினை அனைத்து உயிர்களுக்கும் கொடுக்கும் செயல் எனக்கு வந்தது என்கிறாள். இதனை,

"விட்ட பிறப்பில்யான் விரும்பிய காதலன்

திட்டி விடமுணச் செல்லயிர் போவுழி

உயிரோடு வேவே னுணர்வொழி காலத்து

வெயில்விளங் கமயத்து விளங்கித் தோன்றிய

சாது சக்கரன் றனையா னூட்டிய

காலம் போல்வதோர் கனாமயக் குள்ளேன்

ஆங்கதன் பயனே யாருயிர் மருந்தாய்

ஈங்கிப் பாத்திர மென்கைப் புகுந்தது"(80)

என்ற அடிகள் புலப்படுத்தும். முற்பிறவியில் உயிர்பிரியும் நிலையில் மனதில் நின்ற விருந்தோம்பல் பண்பு இப்பிறவியிலும் தொடர்கிறது என்கிறார் சாத்தனார். இவ்வறக்கோட்பாட்டைப் பெண்ணை முன் நிறுத்திக் கூறப்படுவதன் மூலம் பெண்களே அதிகமான அறநெறிப்பண்புகளைப் பின்பற்றியுள்ளார்கள் என்பது புலப்படும். இவ்விருந்தோம்பல் பண்பு சமதர்ம பெண்ணியம் சார்ந்ததாகும்.

தீவத்திலகை

கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது என்பது ஔவை வாக்கு. வறுமையில் இருக்கின்றவன் துன்புறுவான். பட்டினியாலிருப்பவன் பரிதவிப்பான். பசிப்பிணியென்பது ஒரு பாவி. அதைப் போலக் கொடுமை செய்வது வேறொன்றுமில்லை. தீமைகளையும், துன்பங்களையும் கடப்பதற்குத் தெப்பமாக உதவுவது கல்வி. பசிக் கொடுமையில் இருப்போர் அந்தக் கல்வியையும் கைவிடுவர். இதனை,

"பிறந்த குலமாயும் பேராண்மை மாயும்

சிறந்தாங் கல்வியு மாயும் ...."(81)

என நாலடியார் குறிப்பிடுகிறது. உயர்ந்த குடியில் பிறந்திருந்தாலும் அவர்களைப் பசி பற்றிக் கொண்டால் மனிதத்தன்மையே மாறிவிடும். துன்பங்களிலெல்லாம் கொடிய துன்பம் பிறரிடம் ஒன்றை இரங்கி வழிந்து கேட்பது. பசிப்பிணி இத்துன்பத்தைத் தரும். மனைவியுடன் சென்று பிறர் வீட்டு வாயிலில் பிச்சை கேட்கும்படி செய்துவிடும். இவ்வளவு கொடுமைகளைச் செய்யும் பசிப்பிணியை மணிமேகலை,

"குடிப்பிறப் பழிக்கும், விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும் புணை விடூஉம்
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்"(82)

என்று குறிப்பிடுகின்றாள். பசிப்பிணியை யார் போக்குகின்றார்களோ அவர் சமூகத்தில் நன்மதிப்புப் பெறுவர். விருந்தோம்பல் பண்பில் பசிப்பிணியின் கொடுமையைக் கூறி விளக்குகிறாள். சமூகத்தில் ஆண்கள் உயர்வாகக் கருதப்பட்டாலும் பெண்கள் தங்கள் செயல்களால் மேலோங்கி மென்மைக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள் என்பது இதன்வழிப் புலப்படும்.

வளையாபதி

தமிழ் மக்களிடையே இன்றளவிலும் பெரிதும் காணக்கூடிய ஒரு பண்பு விருந்தோம்பலாகும். பசித்தவர்களுக்கு உணவளித்து அறப்பயனை அடையுங்கள் எனப் பெரியோர் கூறுவர்.

துறவிகள் வீடுதோறும் சென்று உணவு கேட்டு வாங்குவார்கள், இரவில் அவ்வுணவை உண்பார்கள். எஞ்சிய உணவை மற்ற

துறவிகளுக்குப் பகிர்ந்து கொடுப்பார்கள். துறவிகளுக்குள்ளேயும் விருந்தோம்பல் பண்பு உள்ளதை ஆபுத்திரன் வரலாறு,

"ஐயக் கடிஞை லகயி ளேந்தி
மையது சிறப்பின் மனை தொறு மறுகிக்
காணர் கேளார் தான்போய் பட்டோர்
பேணுரில்லார் பனிறருங்குற் குற்றார்
யாவரும் வருக வென் றிசைத லூட்டி
....
....
சண்டை கொள்ளுங் காவலன் குணலின்"(83)

இவ்வாறு கூறுகிறது.

வளையாபதி, துறவியொருவன் சோற்றினைக் கையிலேந்தி வந்து அவற்றைப் பகுத்து மற்ற துறவிகளுக்குக் கொடுத்தானென்பதைக் கூறுகிறது. எத்தனைச் செல்வங்கள் இருந்தாலும் அவை உண்ணும் உணவுக்கு நிகராகாது என்பதை,

"றூற்றுள வாகத் தொகுத்து விரல் வைத்த
தெந்துக் கஃதென்னி னிறு வதன் காரணம்
அற்றமில் காணமென னப்பல வாயிலும்
துற்ற விழ் எவ்வாத் துணி வென் மாறே"(84)

எனக் குறிப்பிடுகிறாள். மனிதநேயப் பண்பான விருந்தோம்பல் துறவிகளிடமும் உண்டு என்று பெண் வழி அறத்தை வலியுறுத்தி பெண்மையைப் போற்றியுள்ளார் ஆசிரியர்.

நிலையாமை

மனித வாழ்வோ, உடம்போ நிலையில்லாதது, பிறவிப் பயனை அடைய வேண்டுமாயின் அறச் செயல்களைச் செய்ய வேண்டுமென நீதி இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

“உலகிலெதுவும் நிலையானது என்று மனது நினைப்பது மாயை. இந்த மாயை விலகி உண்மை எல்லோர் மனதிலும் உறைந்து விட்டால் எந்தச் சிக்கலும், பிரச்சினையும், அதனால் எழும் இன்னல்களும் இல்லை”(85) என்பர்.

இளமை இருக்கும் வரைதான் எல்லாம் என்று காலச் சூழல் எடுத்துக்காட்டுகிறது. உறங்கி எழுவதைப் போலவே காலம் கழியக்கூடியது. இவ்வாறான இளமை நிலையில்லாது என்பதை

“விரும்புவர் முன்னென்னை மெல்லியல் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக் கொண்ட நீர் போல்
அரும் பொத்த மென்முலை ஆயிலை யார்க்குக்
கரும் பொத்துக் காஞ்சிரங் காயும் ஒத்தேனே”(86)

என்று திருமந்திரம் விளக்குகிறது. இளமை போய்விட்டால் கரும்பாக இருந்த உறவு எட்டிக் காயாகிவிடும் என்பதையும் அறியமுடிகிறது.

உதயகுமாரன் மணிமேகலை மீது காதல் கொள்கிறான். உதயகுமாரனிடம் இவ்விளமை பொருந்திய அழகு நிலையில்லாதது என்பதை மணிமேகலை,

“நரைமூ தாட்டி யொருத்தியைக் காட்டித்
தண்ணறல் வண்ணந் திரிந்துவே றாகி

வெண்மண லாகிய கூந்தல் காணாய்

பிறைநுதல் வண்ணங் காணா யோநீ

....

....

பூவினுங் சாந்தினும் புலான் மறைத் தியாத்துத்

தூசினு மணியினுந் தொல்லோர் வகுத்த

வஞ்சந் தெரியாய் மன்னவன் மகனென"(87)

என நவில்கிறாள். மணிமேகலையின் மனத்திட்பம் இங்கு வெளிப்படுகிறது. மணிமேகலை உதயகுமாரனிடம் ஒரு வயதான மூதாட்டியைக் காண்பித்து, செங்கழுநீர் போன்ற கண்கள் இப்பொழுது சுருங்கி நீர் நிறைந்து வந்து கொண்டிருக்கிறது. இலவம் பஞ்சு இதழைப் போன்ற சிவந்திருந்த வாய் துறுநாற்றம் வீசக் கூடியதாகக் காணப்படுகிறது. பற்கள், தோள்கள், விரல்கள், நகங்கள், தொடை, கனைக்கால், பாதம் இவையெல்லாம் இளமையிலிருந்தது போல் முதுமையில் இராது. இவ்வாறு நிலையில்லாத இளமை மேல் விருப்பம் வேண்டாம் என்று நிலையாமையை உணர்த்துகிறாள். புலவர் ஒரு பெண் வாயிலாக இளமை நிலையில்லாதது என்று ஒரு ஆண்மகனுக்கு எடுத்துக் கூறி பெண்மையை உயர்த்தியுள்ளார் என்பது புலனாகிறது.

ஒரு பெண் மூலம் இளமை நிலையில்லாதது என்று ஒரு ஆண்மகனுக்கு எடுத்துக் கூறி பெண்மையை உயர்த்தியுள்ளாள் என்பது புலனாகிறது.

வாழ்க்கை நிலையாமை

மனிதப் பிறவி குழந்தையில் தொடங்கி முதுமையில் இறப்பது.

இவ்வாழ்க்கை நிலையில்லாதது என்று தெரிந்தும் சிலர் நிலையானது என நினைத்து தங்களுக்கென்று ஒரு பாரம்பரியத்தை ஏற்படுத்த நினைக்கின்றார்கள். இறப்பு ஒரு நாளில் வந்தே தீரும் அதற்குள் நாம் நிலையான அறத்தை மேற்கொள்ள வேண்டும். திருமூலர் உடலியல் **(Physiology)** நன்கு கற்றவர் என்பது அவரது பாக்களால் அறியக்கிடக்கும் உண்மையாகும். இருதயத் துடிப்பு நின்றுவிட்டால் **(Heart failure)** மக்கள் திடீரென இறப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். சிலர் இருதயம் அமைந்துள்ள மார்பின் இடதுபுறம் சிறிது வலிக்கின்றது எனக் கூறிச் சில நிமிடங்களுக்குள் உயிர் துறப்பதையும் பார்க்கின்றோம். இந்நிலையைத் திருமூலர், ஒருவன் நன்றாகச் சமைத்த உணவினை உண்டான்; தன் மனைவியுடன் சிறிது நேரம் உரையாடினான். பின்னர்த் தனது மார்பின் இடப்பக்கம் சிறிது வலிப்பதாகக் கூறினான். மாரடைப்பால் அவன் இறந்தான் என்றதனை,

> **"அடப் பண்ணி வைத்தார், அடிசிலை உண்டார்**
> **மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்**
> **இடப்பக்க மேசிறை நொந்திங் கென்றார்**
> **கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே"[88]**

திருமந்திரம் குறிப்பிடுகிறது. அதிகமாகச் செல்வம் சேர்த்து, மாடமாளிகைகள் பல கட்டி, மனைவி மக்களுடன் இன்புற்று வாழ்ந்தாலும் இறுதியில் ஒருநாள் இறந்து விடுவர்.

> **"கனவு காணும் வாழ்க்கை யாவும்**
> **கலைந்து போகும் மேகங்கள்**
> **துடுப்புக்கூட பாரம் என்று**

கரையைத் தேடும் ஓடங்கள்

....

பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி

வாழ்வில் இருப்பது மெய்தானே"[89]

என்று வைரமுத்து தனது கவிதை வழி நிலையாமையை எடுத்துரைக்கின்றார்.

மணிமேகலை பிறப்பு என்றிருந்தால் இறப்பு நிச்சயம் உண்டு. இடைப்பட்ட வாழ்வு மட்டும் எவ்வாறு நிலையானதாக இருக்குமென்ற கேள்வியுடன்; இவ்வாழ்வு நிலையில்லாதது என்பதை,

"தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்

ஈற்றிளம் பெண்டி ராற்றாப் பாலகர்

முதியோ ரென்னா னிளையோ ரென்னான்

கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவின்

அழல் வாய்ச் சுடலை தின்னக் கண்டும்

கழிபெருந் செல்வக் கள்ளாட்டு டயர்ந்து

மிக்க நல்லறம் விரும்பாது வாழும்

மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ"[90]

என்ற அடிகள் விளக்கும். இவ்வுலகில் பிறந்தது அனைத்தும் இறப்பது நிச்சயம். தவத்துறையிலே வாழும் மக்கள், செல்வந்தர்கள், இளம் பெண்கள், நடப்பதற்கு வலுவற்ற குழந்தைகள், முதியவர்கள் மற்றும் சில மக்கள் இறப்பதை காணமுடிகிறது. இறப்பு இளையவர், முதியவர் என்ற பாகுபாடு பார்க்காது. நிலையில்லாத உடம்பிலிருக்கும் உயிர் இருக்கும் வரை நல்லறங்களைச் செய்ய வேண்டுமென்று

வலியுறுத்தப்படுகிறது. வாழ்வு நிலையில்லாததென பெண் வழிப் பெண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

சுதமதி

இவ்வுலக வாழ்வில் உடம்பு. இளமை போன்றவை நிலையில்லாதவை. ஆனால் அந்நிலையில்லாத பொருளுக்கு, உலகில் மக்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். “மனிதன் நிலையில்லாததை அதிகமாக நேசிக்கின்றான். அவை அவனிடமிருந்து எளிதில் இல்லாமல் போய்விடும்”(91) என்று மேல்நாட்டு அறிஞர் கூறுகிறார்.

இவ்வறான நிலையாமையை,

“மறுவூர் குழலியும் மாடும் மனையும்
இறுவூர் ஒழிய இதனமை தேற்றிப்
பொறுவூர் புறஞ்சூடு காடாது நோக்கி
மறுவுர வாங்கியே வைத்தளன் றார்களே”(92)

என்று திருமந்திரப் பாடல் சுட்டுகிறது. வீடு, செல்வங்கள், உறவினர்கள் எல்லாம் நின்று உயிர் நீத்தவர் பாடையில் தூக்கி சுடுகாட்டில் வைத்துவிட்டுப் போவார்கள் அவ்வாறு இந்த உடம்பு நிலையில்லாதது என்கிறார்.

உதயகுமாரன் சுதமதியிடம் சென்று மணிமேகலை எங்கே என்று கேட்கின்றான். அதற்கு மணிமேகலை இவ்வுடம்பு முன்பு செய்த வினையால் பிறந்தது. நல்வினைச் செய்வதற்குக் காரணமாக இருப்பது. எப்பொழுதும் இளமையுடன் காணவியலாது என்பதை,

"வினையின் வந்தது வினைக்கு விளைவு ஆயது
புனை வினை நீங்கின் புலால் புறத்து இடுவது
மூப்பு விளிவு உடையது தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொற்கலம்
புற்று அடங்கு சுரவின் செற்றச் சேர்க்கை
அவலம், கவலை, கையறு, சுடுங்கல்
தவிலா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இது"(93)

என எடுத்துரைக்கின்றாள். யாக்கை நிலையில்லாதது என வாழ்வியல் உண்மைகளைப் பெண் வழி அறிவுறுத்துவது பெண்மையைச் சிறப்பிப்பதாகும்.

புத்தமதக் கொள்கை

உயிர்காக்கும் அறத்தில் புத்தமதக் கொள்கை சிறப்பிடம் பெறுகிறது. இம்மதத்தில் "ஆன்மா-உயிர் என்பது ஒரு தனிப்பொருள் அது தன் வினைக்கேற்றபடி பிறவி எடுக்கின்றது. நல்வினைக்கேற்றபடி நற்பிறப்பும் தீவினைக்கேற்றபடி தீய பிறப்பும் அடைகிறது. ஆதலால் மக்கள் நல்வினையத்தான் செய்ய வேண்டும்"(94) என வலியுறுத்துகிறது

மணிமேகலை இராசமாதேவியிடம் இவ்வுலகத்தில் உள்ளோர்க்குத் துன்பம் தருவது யாது எனில் கள்ளுண்டல், காமம், கொலை, பொய், களவு எனும் ஐந்து என்று கூறுகிறாள். இவற்றை யார் துறந்தாரோ அவர் இவ்வுலகத்தில் இன்பமடையவராவர். இதனைப் புத்தமதம் வெகுவாக வலியுறுத்துகின்றது. இவ்வறநெறிக் கருத்துக்களை மணிமேகலை,

"கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்
வள்ளக் களவுமென் நூரவோர் துறந்தவை"[95]
"செற்றஞ் செலுத்தோர் முற்ற வுணர்ந்தோர்
மல்லன் ஞாலத்து வாழ்வோரன் போர்
....
மகன் துயர் நெருப்பா மனம் விறகாக
அகஞ்சூடு வெந்தீ யாயிழை யவிப்பத்"[96]

என்று குறிப்பிடுகிறாள். வாழ்வில் துன்பமில்லாமல் சிறப்புற்று வாழ மேற்கூறியவற்றையெல்லாம் துறந்து வாழ வேண்டும் என்று புத்தமதக் கொள்கையை மணிமேகலை கூறுகிறது. மதக் கொள்கையைப் பெண்வழிக் கூறி அறம் செய்தலின் பயனையும் எடுத்துக்கூறி அவற்றை அனைவரும் பின்பற்றினால் இன்பமாக வாழலாம் என்று வாழ்வியலைக் கூறி பெண்ணியத்தை வெளிப்படுகிறார் ஆசிரியர்.

பண்புகள்

கண்ணகியும் பணிவும்

இல்லறம் இன்பமாகவும், செம்மையாகவும் இருக்க கணவன் மனைவியிருவரும் செந்நெறியுடன் விட்டுக் கொடுத்தல் இன்றியமையாதது. "தனிமனித வாழ்விலும் குடும்பம் மற்றும் சமூக வாழ்வில் இன்பத்தையும் சங்கடத்தை ஏற்படுத்தும் நிலையும் சமகால வாழ்வியலில் காணப்படுகிறது. இந்நிலையில் ஒழுக்கத்தையும், ஒருவனுக்கொருத்தியென்ற இல்லற நெறியையும் பின்பற்றுவது வாழ்வின் நெறியாகும்."[97] இல்லற நெறிக்குக் கணவனிடம் பணிவும், பரிவும் மனைவிக்கு இருக்க வேண்டும்.

சோலையில் கவுந்தியடிகளுடன் கண்ணகியும் கோவலனும் அமர்ந்திருந்த போது தீயவன் ஒருவனும், பரத்தையொருத்தியும் அங்கு வந்தனர். கண்ணகி, கோவலன் இருவரையும் இவர்கள் யாரென்று கவுந்தியடிகளிடம் கேட்டனர். என் பிள்ளைகளென்று கூறினார். உடனே அத்தீயோர் அண்ணனும், தங்கையும் அகமுடையானும், பெண்டாட்டியுமாய் இருப்பதுண்டோ? எனக் குறும்புடன் கிண்டல் செய்தனர். இத்தீய சொல்லினைக் கேட்டதும் கண்ணகி தன் காதுகளைப் பொத்திக் கொண்டு தன் கணவனாகிய கோவலன் பின்னே நடுங்கினாள் என்பதை,

"தீ மொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்

காதலன் முன்னோர்க் கண்ணகி நடுங்க""(98)

என்று எடுத்துரைக்கின்றார் ஆசிரியர். உயிரினும் சிறந்தது நாணம். அதனிற் சிறந்தது கற்பு என்பதினால், தீயசொல் கேட்டு கோவலன் நடுங்காமல் கண்ணகி மட்டும் நடுங்கியது சிந்தித்தற்குரியது. ஆடவரைக்காட்டிலும் பெண்ணுக்கு இழிவு, அச்சம் மிகுதியென்பதை இச்செயல் காட்டகிறது. அச்சூழலிலும் கணவனைப் பார்த்து நடுங்கியது கணவன் மீது கொண்டுள்ள பணிவுவைக் காட்டுகிறது. பிற பெண்களும் இவ்வாறிருக்க வேண்டும் என்ற அறத்தினை மிதவாதப் பெண்ணிய நோக்கில் கூறியிருப்பது புலனாகும்.

கணவன் சொற்படி கேட்டல்

மனைவி கணவன் சொற்படி கேட்டு நடத்தல் இல்லறத்திற்கு நன்று. "இல்வாழ்க்கை இன்பமுடையதாகவும், அறம் நிறைந்தாகவும் இருக்க வேண்டுமாயின், மனைவி மாட்சிமை பொருந்தியவளாக இருத்தல்

வேண்டும். கருத்தொருமித்தும் கணவன் செய்கின்ற செயல்கள் அனைத்திற்கும் கை கொடுப்பவளாக விளங்க வேண்டும்"(99) என்பர். இக்கருத்தினை வள்ளுவர்,

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டாள்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"(100)

என்கிறார். இல்லறம் சிறக்க மனைவி, கணவனுடன் இயைந்து இருக்க வேண்டுமென்பது கருத்து.

கோவலன், கண்ணகியைக் காட்டிலும், மேட்டிலும் நடக்குமாறு செய்து அவளுக்கு வாழ்க்கையிலும் இன்பம் தராமல் இருந்து விட்டோம் என்ற குற்றவுணர்வு அவனிடமிருந்தது. கண்ணகி அக்குற்றங்களை மறந்து கணவனுக்குப் பணிவிடை செய்வதைத் தன் கடமையாகக் கொண்டாள் என்பதை,

"உலக புகழும் ஒழுக்கம் துறந்தீர்கள் யான்
அவ்வாழ்வைக் குறித்து நொந்தேன் - ஆனால்
யான் தங்கள் குறிப்பு எதுவாயினும் அதன் வழி
ஒழுகும் குறிக்கோளுடையவள்"(101)

என்ற குறிப்பிடுகிறார் இளங்கோ. கண்ணகி தன் கணவனிடம் நீங்கள் எங்கு அழைத்தாலும் வருவேன். துன்பத்தைப் பற்றி தனக்குக் கவலையில்லை என்றும் கூறினாள். இதன் வாயிலாகக் கணவன் சொற்படி மனைவி நடக்க வேண்டுமென்ற அறத்தை உணர்த்துகின்றாள். இவ்வகையான செயற்பாடுகள் மிதவாதப் பெண்ணியத்தை வலியுறுத்துவதாகும்.

கண்ணகி கணவனைக் கடவுளாக நினைத்தல்

'கணவனே கண்கண்ட தெய்வம்' என்பது வழக்கு. கணவனைத் தெய்வமாகக் கருதக்கூடிய போக்கு இலக்கியங்களிலும் நடைமுறை வாழ்க்கையிலும் பின்பற்றப்படுகிறது. 'பத்தினிப் பெண், தெய்வம் தொழாஅள், கொழுநன் தொழுதேத்துவாள்' என்பது முதுமொழி.

கோவலன் மாதவியிடமிருந்த போது, கண்ணகி தீயக் கனாக்கண்டு வருந்திக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவள் தோழியான தேவந்தி நீ உன் கணவனை வெறுக்கவில்லை; முற்பிறப்பில் கணவனைக் காப்பதற்காகச் செய்ய வேண்டிய நோன்பைச் செய்யத் தவறினாய், அதன் விளைவே இது. இதிலிருந்து நீ காக்கப்பட வேண்டுமென்றால், சோம குண்டம், சூரிய குண்டம் என்ற இரு பொய் கைகால் முறையே நீராடி பின்பு, காமவேள் கோட்டம் சென்று வழிபாடு செய்தால் கணவனைப் பிரியாது கூடி வாழ்வாய் என்று கூறினாள். கண்ணகி அதனை ஏற்கவில்லை. மாறாக கணவனைத் தவிர கடவுளைக் கூட தொழுததில்லை என்கிறாள். இதனை,

"ஆடுலும் என்ற அணியிழைக்கு அவ் வாயிழையாள்
பீடன்று என இருந்த பின்னரே"(102)

இவ்வாறு கூறினாள். தன் கணவனையல்லாது பிற தெய்வங்களைத் தொழுதல் கற்புடைய மகளிர்க்கு இயலாது என்ற கருத்தால் அறியலாகிறது. இது மிதவாதப் பெண்ணியப் நோக்கை வலியுறுத்துகிறது.

மணிமேகலை

முற்பிறவி கணவனை வணங்குதல்

ஆரியப் பண்பாட்டில் கணவன் மனைவிக்கிடையிலுள்ள உறவில்

கணவனைத் தொழுதல் சிறந்த பண்பாகவும், அறக்கொள்கையாகவும் இருந்துள்ளது. கணவனைத் தொழுகின்றவர்கள் கற்பரசியாகக் கருதப்பட்டனர். கணவனையே தெய்வமாகக் கருதுவதால் மழை பெய் என்றால் பெய்துவிடும். இக்கூற்றைக் குறள்,

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"(103)

என்கிறது.

கணவனைத் தொழுதலை அறநெறியாகக் கொண்ட மணிமேகலை முற்பிறவியில் தன் கணவன் உதயகுமாரன் என்று தெரிந்தவுடன் அவனை வணங்குகிறாள்.

உதயகுமாரன் மணிமேகலையைக் காணச் செல்கிறான். மணிமேகலை துறவு பூண்டு அங்குப் பசித்தோருக்கு உணவளித்துக் கொண்டிருக்கின்றாள். உதயகுமாரன் நீ தவக்கோலம் பூண்டது யாது என வினவினான். அப்போது முற்பிறவியல் தனக்குக் கணவனாக இருந்த உதயனை வணங்குதல் முறையெனக் கருதி வணங்குகிறாள்.

"பிறந்தலு மூத்தலும் பிணிபட்டிரங்கலும்
இறத்தலு முடைய திடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை யாதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்"(104)

என்ற பாடலடிகள் வெளிக்காட்டுகின்றன. முற்பிறவியில் வாய்த்த கணவனை இப்பிறவியில் கண்டு வணங்குதல் பெண்ணுக்குரிய சிறப்பாகவும் அறநெறியாகவும் போற்றப்படுகிறது.

வளையாபதி

நல்லாசிரியர் என்பவர் நல்ல அறங்களைச் செய்யக் கூடியவராகவும், அறங்களை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறியவராகவும், ஒழுக்கப்பண்பு நிறைந்தவராகவும் இருத்தல் வேண்டும். அவ்வறான நல்லாசிரியர் செய்கின்ற அறத்தை,

"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்

....

குருடும் குருவும் குழிவிடுமாயே"(105)

என்று திருமந்திரம் குறிப்பிடுகிறது.

வளையாபதி அறிவிலார் அறிவில்லாதவர்க்கு அறம் கூறுதல் குருடன் குருடனுக்குச் செல்லும் வழியினைக் கூறுவதற்கு ஒப்பாகும். நல்ல அறங்களை அறிய முற்படுவோர் நல்லாசிரியர் வாயிலாகவே அறிதல் வேண்டும் அவ்வறான அறமே சிறப்புடைய அறமாகும் என்பதை,

"அந்தக னந்தகள் காது சொல எலாக்கு
முந்து செய் குற்றங் கொடுப்பான் முழுவது
நன் அறிவில்லன களியாதவார்
இன்புறு வீட்டில னறி சொல்லுமாறே"(106)

எனும் பாடலடிகள் மூலம் குறிப்பிடுகின்றாள். அறிவில்லாதவன் செய்கின்ற அறம் எத்தகையது எனவும், நல்லாசிரியர் வழி செய்யும் அறம் எத்தகையது என்பதை சமதர்மப் பெண்ணியக் கருத்தாக ஆசிரியர் வளையாபதி வழி குறிப்பிடுகிறார்.

தொகுப்புரை

இவ்வியலின் முன் பகுதியில் அறம் குறித்த விளக்கங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இலக்கியங்களில் அறம் குறித்த சிந்தனைகள் பயின்று வந்துள்ளமை புலப்படுத்தப்பட்டுள்ளது.

அறப்பண்புடைய கவுந்தியடிகள் கோவலன், கண்ணகி இருவரையும் அறவழிப்படுத்தி அந்நெறியில் சிறந்து விளங்கியமை உணர்த்தப்பட்டுள்ளது.

வறுமையில் வாடும் மக்களின் பசித்துயரை மணிமேகலை நீக்கி அந்நெறியில் மேன்மை பெற்று விளங்குகிறாள்.

சிறைச்சாலைகளை அறச்சாலைகளாக மாற்றி அவ்விடங்களிளெல்லாம் அறத்தை நிலைநாட்டியவளாக மணிமேகலை காணப்படுகின்றாள்.

இளமையும், யாக்கையும் நிலையில்லாதது, உலக மக்களுகுணர்த்தி அவர்களை நல்லறம் செய்வதற்கு மணிமேகலை தூண்டுகிறாள்.

அறவழிப்படாத மன்னன் ஆட்சி அடியோடு அழியும் என்பதை விசையை உணர்த்துகிறாள்.

உலககெங்கும் அறநெறிகளைப் பரப்புதல் வேண்டுமென்ற கோட்பாடுடையவளாக வளையாபதி பாத்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

உள்ளார்ந்த அன்பு வெளிப்பாட்டுடன் அறச் செயல்களைச் செய்தல் வேண்டுமென வளையாபதி வலியுறுத்துகிறாள்.

கற்பென்ற அறநெறியில் கண்ணகி, கோப்பெருந்தேவி, மணிமேகலை, தீவதிலகை, ஆதிரை, வளையாபதி ஆகியோர் சிறந்து விளங்குகின்றனர். இவர்களின் அறவாழ்க்கையைப் பிறர் கைக்கொள்ள வேண்டும். கைக்கொண்டால் சமூகத்தில் அறம் தலைக்கும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

துறவு நெறி வாழ்க்கையின் அறநெறியாக அமைந்துள்ளது. அந்நெறியினின்று சமூகத்தின் நன்மைக்கு வலிகோலியவர்கள் மாதவி, மணிமேகலை, கவுந்தியடிகள் ஆகியோராவர்.

வாழ்வின் உயரிய அறமாக விருந்தோம்பல் விளங்குகிறது. கணவனில்லாத நிலையில் அதனைச் சிறப்புறச் செய்ய முடியவில்லையே எனக் கண்ணகி வருந்துகிறாள்.

விருந்தோம்பலில் கண்ணகி, மணிமேகலை, தீவதிலகை, வளையாபதி ஆகியோர் சிறந்து விளங்குகின்றனர்.

இளமை நிலையில்லாதது. ஆகவே அது நிலையான பொழுதே நல்லறம் பற்பல புரிதல் வேண்டுமென மணிமேகலை உதயகுமாரனுக்கு அறிவுறுத்துவதன் மூலம் புலனாகிறது.

பணிவு, கணவன் சொற்படிக் கேட்டல், கணவனைக் கண்கண்ட தெய்வமாக நினைத்தலாகிய பண்புகளை அறநெறிகளாகக் கொண்டு கண்ணகி கற்புக்கடம் பூண்டவளாக விளங்கியது அறியலாகிறது.

இதன் வாயிலாக அறக்கோட்பாடுகளில் பெண்களே சிறப்பு வாய்ந்தவர்களாக காப்பியக் காலகட்டத்தில் திகழ்ந்துள்ளார்கள் என்பதும், பெண்ணியத்தை மேலோங்கச் செய்ய வேண்டும் என்ற நிலையும் காணப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. திருக்குறள் நீதி இலக்கியம், ஆய்வுக்கோவை, தொகுதி-2,ப.17.
2. மேலது, ப.18.
3. சு. சிவகாமசுந்தரி, வள்ளலார், ப.58.
4. தாயம்மாள் அறவாணன் - பெண் இன்று நேற்று அன்று, ப.39.
5. தமிழகராதி, ப.34.
6. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா.23.
7. மேலது, ப.27.
8. நன்னூற்பாயிரம் -பா.10.
9. புறநானூறு, 28 : 4-6
10. மேலது, 31 : 4-5
11. தாயம்மாள் அறவாணன், பெண் பதிவுகள், ப.29.
12. திருக்குறள், பா. 257.
13. சிலப்பதிகாரம், 10 : 98-100.
14. திருக்குறள், பா. 242.
15. தா. ஈசுவரப்பிள்ளை, மணிமேகலை சமுதாயப் பார்வை, ப.39.
16. புறநானூறு - பா-18 : 3-5
17. தா. ஈசுவரப்பிள்ளை, மணிமேகலை சமுதாயப்பார்வை, ப.44.
18. புறநானூறு, 18 : 4 - 5.
19. மணிமேகலை, 11 : 92 - 94.
20. மேலது, 11 : 108 - 113.
21. மேலது, 12 : 77 - 80.
22. திருக்குறள், பா.84.

23. மணிமேகலை, 19 : 157 - 162.

24. மேலது, 11 : 45 - 49.

25. மேலது, 12 : 72 - 76.

26. சீவகசிந்தாமணி, பா.810.

27. புறநானூறு, 18: 7 - 9.

28. திருக்குறள், பா.241.

29. வளையாபதி, பா.23.

30. திருக்குறள், பா.249.

31. வளையாபதி. பா.19.

32. தமிழகராதி, ப.73.

33. நக்கீரன், பாராட்டுக்குரியவள் மாதவியே, ப.7.

34. பிரேமா, கற்புக்கலாச்சாரம், ப.37.

35. சிலப்பதிகாரம், 1 : 26 - 29.

36. இரா. பிரேமா - பெண்ணியம், ப.58.

37. சிலப்பதிகாரம், 18 : 78 - 80.

38. மேலது, 4 - 5.

39. இரா. பிரேமா - பெண்ணிய அணுகுமுறைகள், ப.45.

40. மணிமேகலை, 5 : 54 - 56.

41. புறநானூறு, 134 : 6 - 7.

42. மணிமேகலை, 22 : 45 - 48.

43. இரா. பிரேமா, கற்புக்கலாச்சாரம், ப.64.

44. மணிமேகலை, 16 : 131 - 135.

45. அ.ந.சொக்கலிங்கம், குறள் கூறும் வாழ்க்கை நெறி, ப.53.

46. திருக்குறள், பா.264.

47. மணிமேகலை, 15 : 121 - 122.

48. மேலது, 15 : 128 - 129.

49. திருக்குறள், பா.353.

50. வளையாபதி, பா.12.

51. மேலது, 16.

52. திருக்குறள், 273.

53. திருவாசகம், பா.17.

54. வளையாபதி, பா.15.

55. திருக்குறள், 264.

56. வளையாபதி, 13.

57. திருக்குறள், 265.

58. வளையாபதி, பா.8.

59. அ.ந.சொக்கலிங்கம், குறள் கூறும் வாழ்க்கை நெறி, ப.43.

60. சிலப்பதிகாரம், 15 : 40 - 41.

61. மேலது, 15 : 77 - 78.

62. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு, மக்களும் பண்பாடும், ப.146.

63. சிலப்பதிகாரம், 10 : 77 - 80.

64. மா.சாலமன், சித்து, பெண்ணியம் போட்ட பதியங்கள், ப.37.

65. நாலடியார், பா.280.

66. சு. சிவகாமசுந்தரி, பெண்களும் பிரச்சனைகளும், ப.53.

67. அன்னிதாமசு (ப.ஆ.), சங்ககாலப் பெண்மை, ப.73.

68. திருக்குறள், பா.87.

69. சிலப்பதிகாரம், 16 : 71 - 73.

70. திருவாசகம், பா.57.

71. சிலப்பதிகாரம், 16 : 38 - 43.

72. அ.ந.சொக்கலிங்கம், குறள் கூறும் வாழ்க்கை நெறி, ப.38.

73. குறுந்தொகை, பா.118 : 2 - 5.

74. சாமி சிதம்பரனார், மணிமேகலை காட்டும் மனித வாழ்வு, ப.58

75. புறநானூறு, 14: 15.

76. மணிமேகலை, 11 : 95 - 96.

77. மேலது, 28 : 218 - 235.

78. மேலது, 10 : 35 - 41.

79. எம்.ஏ. சுசிலா, பெண் இலக்கியம் வாசிப்பு, ப.63.

80. மணிமேகலை, 11 : 90 - 106.

81. நாலடியார், பா.285.

82. மணிமேகலை, 11 : 76 - 80.

83. தி. பாக்கியமுத்து, ஆபுத்திரன் வரலாறு உரைவளம், ப.58.

84. வளையாபதி, பா.7.

85. ர.விஜயலட்சுமி, தமிழக மகளிர், ப.47.

86. திருமந்திரம், பா.179.

87. மணிமேகலை, 20 : 40 - 69.

88. திருமந்திரம், பா.147.

89. வைரமுத்து, திரைப்படப்பாடல் தொகுதி-1, ப.43.

90. மணிமேகலை, 6 : 97 - 104.

91. மைதிலி சிவராமன், பெண்ணுரிமை சில பார்வைகள், ப.22.

92. திருமந்திரம், பா.154.

93. மணிமேகலை, 16 : 88 - 95.

94. சு.சிவகாமசுந்தரி, வள்ளலார், 68.

95. மணிமேகலை, 24 : 77 - 78.

96. மேலது, 24 : 91 - 95.

97. க. பரிமளம், இந்துப் பெண்ணியம், ப.63.

98. சிலப்பதிகாரம், 24 : 91 - 95.

99. இராஜம் கிருஷ்ணன், காலந்தோறும் பெண், ப.29.

100. திருக்குறள், பா.51.

101. சிலப்பதிகாரம், 16 : 104 - 107.

102. மேலது, 12 : 13 - 14.

103. திருக்குறள், பா.55.

104. மணிமேகலை, 18 : 136 - 139.

105. திருமந்திரம், பா.79.

106. வளையாபதி, பா.3.

முடிவுரை

முடிவுரை

இலக்கியங்கள் சமூக இயங்கு நிலைகளின் விளைச்சல்கள். குறிப்பிட்ட காலத்தில் தோன்றும் இலக்கியங்கள் அக்காலச் சமூகத்தின் பிரதியாகவும் ஆவணமாகவும் திகழ்கின்றன.

தமிழ் இலக்கியப் பரப்பில் தனித்தனிப் பாடல்களான சங்க இலக்கியங்களுக்குப் பின் முழுமையான பெரும் வடிவமாகத் தோற்றம் பெற்ற காப்பியங்கள் சமயச் சூழலில் சமூக இயக்கத்தை விரிவாக விளக்குகின்றன.

இக்காப்பியங்கள் பேரரசுகள் ஆட்சி செய்த காலங்களில் தோற்றம் பெற்றதால் முடிமக்கள், குடிமக்கள் என இரு பிரிவினரைப் பற்றிப் பேசுகின்றன. சமூகத்தின் நிறுவனங்கள் பலவற்றுள் குடும்பம் முதன்மையானது. அக்குடும்பம் ஆண் பெண் இணைவினால் உருவாவது. பெண்ணே குடும்பத்தின் உற்பத்திக்கும் வளமைக்கும் அடித்தளமாக அமைகிறாள். ஆண் பெண் இருவரும் இணைந்த அன்பு வாழ்க்கை அன்புறு காமமாகக் கருதப்பட்டது. இல்லறப் பெருமையின் அடிப்படையாகப் பெண்ணின் அன்பும், கற்பும் கொள்ளப்பட்டன.

காப்பியங்கள் அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனும் நான்கு உறுதிப் பொருள்களைத் தன்னிகரில்லாத் தலைவனைக் கொண்டு சுட்டும் நிலையில் பெண்களையும் பலவாறு வெளிப்படுத்துகின்றன.

உலகளவில் கல்வி, நவீனப் பணிச்சூழல், அதனால் கிட்டிய பொருளாதார மற்றும் கருத்துச் சுதந்திரத்தினால் பெண்கள் விழிப்புணர்வு பெற்றுத் தங்களுக்கென உரிமைகளையும், தேவைகளையும் மீட்டெடுப்பதில் தீவிரம் காட்டி வருகின்றனர். இச்சிந்தனைகளைப் பெண்ணியக் கோட்பாடுகளாக இயக்கங்கள் வழி பிரகடனப்படுத்துவதால்

அவ்வியக்கம் சார்ந்த கருத்தாடல்கள் இலக்கியங்களிலும் பிரதிபலிக்கின்றன.

தற்காலத் தமிழிலக்கியச் சூழலில் பெண்ணியமும், தலித்தியமும் படைப்பாளர்கள் மற்றும் திறனாய்வாளர்களால் பெரிதும் பேசப்படுகின்றன.

இக்காலப் பெண்ணியச் சிந்தனைகளை இருவேறு காலங்களில் எழுந்த ஐம்பெரும் காப்பியங்களில் இவ்வாய்வு பொருத்திப் பார்த்துள்ளது.

பெண்ணிய ஆய்வு என்ற நிலையில் பெண்ணியம் குறித்த இலக்கண வரையறைகள், சிந்தனைகள், ஆய்வின் தொடக்கத்தில் புரிதல் நிலையில் தரப்பட்டுள்ளன. மேல்நாடுகளில் தோன்றிய பெண்ணியச் சிந்தனைகள், இயக்கங்கள் குறித்தும் இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் இவை பரவி வளர்ந்த சூழலும் விளக்கப்பட்டுள்ளன.

பெண்ணிய வகைகள் பற்றியும், அவற்றைப் பேசும் திறனாய்வாளர்கள் குறித்தும் சுட்டுப்பட்டுள்ளது. தமிழ்ச் சூழலில் காலந்தோறும் பெண்ணிய நிலைகள் இலக்கியங்களில் வெளிப்படுவதையும், ஆய்வு நோக்கில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

பெருங்காப்பியத்தின் மைய நோக்கு தன்னிகரில்லாத் தலைமை மாந்தர் வழி அறக்கருத்துக்களைச் சுட்டுதலேயாகும்.

ஐம்பெரும் காப்பியங்களில் கண்ணகி, மணிமேகலை, காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை, வளையாபதி, குண்டகேசி ஆகிய பன்னிருவரும் தலைமை மாந்தர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமை உரிய சான்றுகளுடன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

ஆண்கள் மட்டுமே தன்னிகரில்லாத் தலைவனாக திகழவேண்டும் என்பதல்ல; பெண்களும் தங்கள் நற்பண்புகளாலும், செயல்களாலும் தலைமை மாந்தர்களாக விளங்கலாம் என்பதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

குடும்பத்தில் அனைத்து நிலைகளிலும் பெண்கள் ஆண்களுக்குத் துணைசெய்வதும், அதே வேளையில் தங்களின் தனித்தன்மைகளை இழக்காதிருத்தலும் காப்பியங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

குடும்பம் மற்றும் சமூகம் சீராகவும், அமைதியாகவும் இயங்க பெண்கள் நல்கிய பங்களிப்பு காப்பியங்கள் வழி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பெண்மையின் நெறிகளான தாய்மை, பொறுமை, கற்பு, அடக்கம், விருந்தோம்பல், உதவும் மனப்பான்மை போன்ற பண்புகள் காப்பியத் தலைமை மாந்தர்களிடம் இருந்தமை சான்றுகளுடன் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஆண்களுக்கு நிகராக பெண்களும் காப்பியங்களில் தலைமை மாந்தர்களாக வெளிப்படும் நிலைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இலக்கியங்களில் இடம்பெறும் மாந்தர்களை மையக் கருத்தை வெளிப்படுத்தும் தன்மை கொண்டு தலைமை மாந்தர், துணைமை மாந்தர்கள் என இரு நிலைகளில் ஆய்வு நிலையில் கண்டறிவது இன்றியமையாததாகும்.

காப்பியங்களில் பெண் தலைமை மாந்தர்களின் செயல்களுக்குப் பெண் துணைமை மாந்தர்கள் எவ்வாறெல்லாம் துணை செய்கிறார்கள்,

அவர்கள் பெறுமிடங்கள் யாவை என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மாதவி, தேவந்தி, கவுந்தியடிகள், மாதரி, வயந்தமாலை, சாலினி, கோப்பெருந்தேவி, வேண்மாள், கூனி, சுதமதி, காயசண்டிகை, ஆதிரை, இராசமாதேவி, சித்திரபதி, விசையை, கோவிந்தையார், போன்ற பெண் துணைமை மாந்தர்கள் தலைமை மாந்தர்களின் இயங்கு நிலைக்குத் துணைசெய்வதும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

துணைமை மாந்தர்களிடம் உள்ள பெண்ணியத் தன்மைகளும், அவை பெண்ணியத்திற்குத் துணைசெய்வதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

காப்பியங்களின் தலையாய நோக்கு அறம் உணர்த்துதலாகும். அதனைச் சமய நோக்கில் வெளிக்காட்டுவதற்குப் பெண்கள் பயன்படுத்தப்பட்டுள்ள சூழல்களாலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காப்பியங்களில் அறம் எனும் நிலையில் அறம் குறித்த இலக்கண வரையறை சுட்டப்பட்டுள்ளது.

சமயம் சார்ந்த அறக்கோட்பாடுகளை அவ்வவ் சமயப் பெண்களின் வழி பரப்புதலை அறக்கோட்பாடுகளும், பெண்ணியமும் எனும் பகுதியில் விரிவாகச் சுட்டப்பட்டுள்ளது.

சமயம் சார்ந்த அறங்களை ஆண்களின்றும் பெண்களே விரிவாகப் பரப்புதலைக் காப்பியங்கள் வழி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

தற்காலப் பெண்ணியக் கோட்பாடுகள் காப்பியங்களில் அறம் வழியுறுத்தல் எனும் நிலையில் பெண்கள் வழி இடம்பெற்றிருப்பது ஒப்பிட்டு நோக்கப் பெற்றுள்ளது.

கண்ணகி மிதவாதப் பெண்ணிய நிலையிலிருந்து தன் கணவன் கொலை செய்யப்பட்ட சூழலில் தன் மார்பகத்தைத் திருகி எறிந்து மதுரையை எரியூட்டி தீவிரவாதப் பெண்ணிய நிலைக்கு மாறுகிறாள். இது இவளை கடவுள் நிலைக்கு உயர்த்துகிறது.

மணிமேகலை தனது பொறுமை மற்றும் துறவறம் போன்றவற்றால் சமதர்மப் பெண்ணியத்தைச் சார்ந்தவளாக வெளிப்படுகிறாள்.

சீவக சிந்தாமணியில் வரும் எண்மரும் பண்புகளாலும், சாதாரணப் பெண்கள் மேற்கொள்ளும் செயல்களாலும் சமதர்மப் பெண்ணியத்தைச் சார்ந்தவர்களாக வெளிப்படுகிறார்கள்.

வளையாபதியும் சமதர்மப் பெண்ணியம் கொண்டவளாகவே காணப்படுகிறாள். குண்டகேசியில் வரும் குண்டலகேசி தன்னைக் கொல்லவரும் கணவனைக் கொல்வதன் மூலமாகத் தீவிரவாதப் பெண்ணியத்தைச் சார்ந்தவளாகக் காணப்படுகிறாள்.

மாதவி தான் கணிகையர் குலத்தில் பிறந்தும் தன்னுயிரனைய காதலன் இறந்துபட்டதைக் கேள்வியுற்று மிகுந்த வருத்தப்பட்டாளே ஒழிய; ஆவேசமோ, பதட்டமோ கொள்ளாமல் இருந்தது மிதவாதப் பெண்ணியம் சார்ந்ததாகும்.

தேவந்தி, கவுந்தியடிகள், வயந்தமாலை, சாலினி, வேண்மாள், கூனி, சுதமதி, காயசண்டிகை, சித்திராபதி, விசையை, ஆதிமந்தி, கோவிந்தையார் இவர்கள் தங்கள் செயல்களால், பண்புகளால் சமதர்மப் பெண்ணியமாக வாழ்ந்துள்ளார்கள்.

மாதரி, கோப்பெருந்தேவி, ஆதிரை, இராசமாதேவி போன்றவர்கள் தங்கள் குண நலன்களால் மிதவாதப் பெண்ணியமாக வெளிப்படுகிறார்கள்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஓரினக் கலவிப் பெண்ணியக் கோட்பாடுகள் காணப்படவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இருவேறு காலகட்டங்களில் இருந்த அரசுகள் மற்றும் பொதுமக்கள் வாழ்வியலை ஐம்பெரும் காப்பியங்கள் விவரிக்கும் சூழலில் அக்காலக் கட்டங்களில் வாழ்ந்த பெண்களின் நிலைகளைப் பெண்ணியச் சிந்தனைகள் எனும் அடிப்படையில் இவ்வாய்வு தெளிவு படுத்தியுள்ளது.

சமயம் சார்ந்த அறக்கோட்பாடுகளை வலியுறுத்த ஐம்பெருங் காப்பியப் புலவர்கள் பெண் பாத்திரங்களைப் படைத்துள்ளனர். எனவே மேல் நாட்டுப் பெண்ணியக் கோட்பாடுகள் மூன்றைத் தவிர ஐம்பெருங் காப்பியங்களில் கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றால் ஏனையவை பொருந்தி வரவில்லை என்பது பெறப்படுகிறது.

துணைநூற்பட்டியல்

துணைநூற் பட்டியல்

முதன்மைச் சான்றாதாரங்கள்

1. சாமிநாதையர், உ.வே. (தொ.ஆ) சிலப்பதிகாரம் மூலமும் உரையும், (அடியார்க்கு நல்லார் உரை) உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை. முதற்பதிப்பு 1892.

2. மேலது, மணிமேகலை மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை. முதற்பதிப்பு 1892.

3. சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ) சீவக சிந்தாமணி மூலமும் உரையும் திருநெல்வேலி சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. முதற்பதிப்பு 1959.

4. மேலது, வளையாபதி, குண்டலகேசி, உதயணகுமார காவியம், மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை. இரண்டாம் பதிப்பு 1970.

துணைமைச் சான்றாதாரங்கள்

1. அந்தோணி டேவிட் நாதன்., அ. புதுக்கவிதையில் மனிதம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை - 5. முதற்பதிப்பு 2000.

2. அன்னிதாமசு., (ப.ஆ.) தமிழக மகளிரியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 13. முதற்பதிப்பு 2000.

3. மேலது, சங்ககாலப் பெண்மை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். முதற்பதிப்பு 2004.

4. இளவரசு, சோம., பெண்கள் படைப்புத்திறன், காவ்யா பதிப்பகம், பெங்களூர். முதற்பதிப்பு 1977.

5. இராமலிங்கம், மா., நாவல் இலக்கியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -13. முதற்பதிப்பு 1990.

6. இராமநாதப்பிள்ளை., ப. (ப.ஆ) திருமந்திரம், திருநெல்வேலி சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 17. முதற்பதிப்பு 1942.

7. ஈஸ்வரப்பிள்ளை., தா. மணிமேகலை சமுதாயப் பார்வை,
ஐந்திணைப் பதிப்பகம்,
சென்னை.
முதற்பதிப்பு 2003.

8. ஓஷோ. பெண் விடுதலை,
பாரி நிலையம்,
சென்னை.
முதற்பதிப்பு 1995.

9. கதிர் மகாதேவன், மோகன், இரா., பெண்ணியம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
வெளியீடு,
மதுரை,
முதற்பதிப்பு 1994.

10. கதிரேசச் செட்டியார்., மு. (உ.ஆ) திருவாசகம்,
கழக வெளியீடு,
சென்னை - 1.
1977.

11. கண்ணதாசன், கண்ணதாசன் கவிதைகள்,
தொகுதி -2
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.
1991.

12. கமலி., தி. பெண்ணியக் கலை,
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்,
சென்னை.
2000.

13. கம்பர் — கம்பராமாயணம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அனுராதா அச்சகம், சென்னை - 21. 1970.

14. கல்யாணசுந்தரம். — பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை. முதற்பதிப்பு 1965.

15. கல்யாணசுந்தரனார்., திரு.வி. — பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, புனித நிலையம், சென்னை - 98. முதற்பதிப்பு 1967.

16. குமாரசாமி., சி.என். — பெண்ணிய நோக்கில் பாரதி, தமிழ் புத்தகாலயம், சென்னை -17. முதற்பதிப்பு 2001.

17. குருநாதன்., இராம. (தொ.ஆ) — பெண்ணியம், கலைஞன் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு 2001.

18. கோபாலகிருஷ்ணச்சாரியார். (உ.ஆ) — நன்னூற்பாயிரம், குவை பப்ளிகேஷனஸ், சென்னை. முதற்பதிப்பு 1976.

19. கோவிந்தராச முதலியார். கா.ர. (உ.ஆ)
நம்பியகப் பொருள்,
கழக வெளியீடு,
சென்னை.
முதற்பதிப்பு 1948.

20. சரளா ராஜகோபாலன்.
காப்பிய மகளிர்,
ஒளிப் பதிப்பகம்,
சென்னை -18.
முதற்பதிப்பு 1993.

21. சாமிநாதையர்.,உ.வே. (தொ.ஆ)
குறுந்தகை மூலமும் உரையும்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
வெளியீடு,
சென்னை.
1952.

22. சாலமன் சித்து., மா.
பெண்ணியம் போட்ட பதியங்கள்,
கிரியேட் வெளியீடு,
மதுரை.
முதற்பதிப்பு 1997.

23. சாளை இளந்திரையன்,
பெண் படைப்பில் பெண்,
மருதா பதிப்பகம்,
சென்னை.
முதற்பதிப்பு 2001.

24. சிவகாமசுந்தரி.
பெண்களும் பிரச்சனைகளும்,
பாவை பப்ளிகேஷன்ஸ்,
சென்னை.
மு.ப.1998.

25. சிதம்பரனார்., சாமி. மணிமேகலை காட்டும் மனித வாழ்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு 1996.

26. சிவஞானம்., ம.பொ. சிலம்பில் சிறு பாத்திரங்கள், பாரி நிலையம், சென்னை. மறுபதிப்பு 1998.

27. சீனிவாசன்., பெ. இளங்கோவின் பாத்திரப்படைப்பு, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை. முதற்பதிப்பு 1990.

28. சுசீலா., எம்.ஏ. பெண் இலக்கியம் வாசிப்பு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. முதற்பதிப்பு 2001.

29. மேலது, விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. முதற்பதிப்பு 1995.

30. சுந்தரசண்முகனார், சிலம்போ சிலம்பு, வானதி பதிப்பகம், சென்னை -17. முதற்பதிப்பு 1992.

31. சுப்பிரமணியன்., ச.வே. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 1998.

32. செல்வி திருச்சந்திரன், தமிழ் வரலாற்றுப் படிமங்கள், சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு, குமரன் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு 1997.

33. செல்வராசு., நா. (தொ.ஆ) சங்க இலக்கியம், சமூக மானுடவியல் ஆய்வுக் கட்டுரைகள், அனிச்சம் இலக்கிய வட்டம், புதுச்சேரி. 1996.

34. சொக்கலிங்கம்., அ.ந. குறள் கூறும் வாழ்க்கை நெறி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு 1995.

35. சோமசுந்தரனார்., பொ.வே. நற்றிணை, கழக வெளியீடு, சென்னை. 1952.

36. மேலது, பெருங்கதை,
கழக வெளியீடு,
சென்னை.
1962.

37. மேலது, ஐங்குறுநூறு,
கழக வெளியீடு,
சென்னை.
1970.

38. மேலது, புறநானூறு மூலமும் உரையும்,
கழக வெளியீடு,
சென்னை.
1996.

39. மேலது, பெரும்பாணாற்றுப்படை மூலமும் உரையும்,
கழக வெளியீடு,
சென்னை.
1999.

40. மேலது, பட்டினப்பாலை மூலமும் உரையும்,
கழக வெளியீடு,
சென்னை.
மறுபதிப்பு 2001.

41. தண்டியாசிரியர், தண்டியலங்காரம்,
கழக வெளியீடு,
சென்னை.
1988.

42. தாயம்மாள் அறவாணன். பெண் பதிவுகள்,
பச்சைப் பசேல் வெளியீடு,
சென்னை -29.
முதற்பதிப்பு 2003.

43. திவாகர முனிவர் தீவாகரம் நிகண்டு,
கழக வெளியீடு,
சென்னை.
1958.

44. தேவதத்தா பெண்கள் படைப்பில் பெண்கள்,
அன்னை தெரசா மகளிர்
பல்கலைக்கழகம்,
கழக வெளியீடு.
கொடைக்கானல்.
1986.

45. தேவநேயப் பாவாணர்., நா. திருக்குறள் தமிழ் மரபுரை,
ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்,
சென்னை -17.
2000.

46. நக்கீரன் பாராட்டுக்குரியவள் மாதவியே,
வள்ளி பதிப்பகம்,
மன்னார்குடி.
முதற்பதிப்பு 1990.

47. நச்சினார்க்கினியர்,(உ.ஆ) தொல்காப்பியம் பொருளதிகாரம்,
தமிழ்மணி பதிப்பகம்,
சென்னை -17.
2003.

48. மேலது, | கலித்தொகை மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை. மறுபதிப்பு 1999.

49. நாலடியார் | நாலடியார், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. மறுபதிப்பு 1998.

50. பரிமளம்., க. | இந்துப் பெண்ணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. முதற்பதிப்பு 1997.

51. பழனியப்பன்., சாமி, | பாட்டுக்கொரு புலவன், கிரியேட் வெளியீடு, மதுரை. முதற்பதிப்பு 1997.

52. பாக்கியமுத்து., தி. | இலக்கியத்தில் பெண்கள், கிருஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை. முதற்பதிப்பு 1976.

53. பாரதி | பெண் வார்ப்பும் வளர்ப்பும், பூஞ்சோலை பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு 1993.

54. பாரதிதாசன் — பாரதிதாசன் கவிதைகள்,
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.
1993.

55. பாரதியார் — பாரதியார் கவிதைகள்,
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.
1993.

56. பிரேமா., இரா, — பெண்ணியம்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை -13.
முதற்பதிப்பு 1998.

57. மேலது, — பெண்ணிய அணுகுமுறைகள்,
தமிழ் புத்தகாலயம்,
சென்னை - 17.
முதற்பதிப்பு 1998.

58. பிள்ளை., கே.கே, — தமிழக வரலாறு மக்கள் பண்பாடும்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 13.
மறுபதிப்பு 2004.

59. பெரியார், ஈ.வே.ரா., — பெண் ஏன் அடிமையானாள்?,
பெரியார் சுயமரியாதைப் பிரச்சார
நிறுவன வெளியீடு,
சென்னை.
முதற்பதிப்பு 1989.

60. மறைமலை., சி.இ, | பெண்ணியத் திறனாய்வு,
தமிழ்ப் புத்தகாலயம்,
சென்னை.
முதற்பதிப்பு 1998.

61. மாணிக்கம்., வ.சுப, | தமிழ்க் காதல்,
பாரிநிலையம்,
சென்னை.
முதற்பதிப்பு 1962.

62. முத்துச் சிதம்பரம்., க, | பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்,
தமிழ்ப் புத்தகாலயம்,
சென்னை.
முதற்பதிப்பு 1995.

63. மைதிலி சிவராமன், | பெண்ணுரிமை சில பார்வைகள்,
தமிழ்ப் புத்தகாலயம்,
சென்னை.
முதற்பதிப்பு 1997.

64. ராஜம் கிருஷ்ணன், | காலந்தோறும் பெண்,
நேஷனல் புக் டிரஸ்ட்,
புது தில்லி,
முதற்பதிப்பு 1994.

65. மேலது, | ராஜம் கிருஷ்ணன் நாவல்கள்,
நேஷனல் புக் டிரஸ்ட்,
புது தில்லி,
முதற்பதிப்பு 1994.

66. வரதராசன்., மு, மாதவி,
தாயக வெளியீடு,
பாரி நிலையம்,
சென்னை.
1990.

67. விஜயலெட்சுமி., ர, தமிழக மகளிர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.
முதற்பதிப்பு 1997.

68. வெங்கடராமன்., சு, எண்பதுகளில் தமிழ்ப்
புனைகதையில் பெண்ணியம்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.
முதற்பதிப்பு 1993.

69. வைரமுத்து, சிகரங்களை நோக்கி,
சூரியா லிட்டிரேச்சர் (பி) லிட்.,
சென்னை -24.
முதற்பதிப்பு 1991.

70. மேலது, வைரமுத்து திரைப்படப் பாடல்
தொகுதி,
சூரியா லிட்டிரேச்சர் (பி) லிட்.,
சென்னை - 24.
முதற்பதிப்பு 1990.

71. ஜானகி ராமன், அம்மா வந்தாள்,
பாரதி புத்தகாலயம்,
சென்னை.
முதற்பதிப்பு 2005.

ஆய்வுக்கோவை

1. மருதநாயகம்., க. (தொ.ஆ) நீதி இலக்கியம் திருக்குறள், ஆய்வுக்கோவை இரண்டாம் தொகுதி, பாரி நிலையம், சென்னை. 1994.

ஆய்வுக் கட்டுரைகள்

1. கலைச்செல்வி., அ. பெண்ணிய நோக்கில் சமூகக் கதைப்பாடல்கள், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற் புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.

அகராதிகள்

1. கௌரி மாரீஸ்வரி, தமிழகராதி, சாரதா பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு 2003.

2. சிங்காரவேலு முதலியார், (ப.ஆ) ஆக்ஸ்போர்டு அகராதி, தமிழ் இலக்கிய கலைக்களஞ்சியம், ஆசிய கல்வி நிறுவனம், புது தில்லி. 1983.